சமூக உரிமை நடைமுறைச் சட்டத் தொகுப்பு

(1908ஆம் ஆண்டு 5ஆவது சட்டம்)

ம. பிரான்சிஸ் ராயன்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க.வெ.) வரிசை எண்—593

சமூக உரிமை நடைமுறைச் சட்டத் தொகுப்பு

(1908ஆம் ஆண்டு 5ஆவது சட்டம்)

ஆசிரியர்

ம. பிரான்சிஸ் ராயன், பி.ஏ.,பி.எல்.,
பகுதிநேர விரிவுரையாளர்,
சட்டக்கல்லூரி,
சென்னை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—December, 1974

T.N.T.B.S. (C.P.) No. 59

© Tamilnadu Textbook Society

THE CODE OF CIVIL PROCEDURE
(Act V of 1908)

M. FRANCIS RAYAN

Price Rs. **5.55**

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

Printed by :
Kulandai Printers
Madras-33

அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்
(தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினான்காண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவந்தனர். 1968ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புகுமுக வகுப்பிலும் (P.U.C.), 1969ஆம் ஆண்டிலிருந்து பட்டப் படிப்பு வகுப்புகளிலும் அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித்தர முன் வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மன நிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ்வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்க்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகம் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெரு முயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், தத்துவம், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வாணியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இருவகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான **'சமூக உரிமை நடைமுறைச் சட்டத் தொகுப்பு'** என்ற இந் நூல் தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனத்தின் **593**ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க்குழுவின் சார்பில் வெளியான **35** நூல்களையும் சேர்த்து இதுவரை **628** நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின் கீழ் வெளியிடப் படுகிறது.

உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும். அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரியதாகுக.

இரா. நெடுஞ்செழியன்

பொருளடக்கம்

		பக்கம்
1.	முன்னுரை ...	1
2.	பூர்வாங்கப் பகுதி (Preliminary) (பிரிவுகள் 1 முதல் 8 வரை) ...	4
3.	பொதுவான வழக்குகள் (Suit in General) (பிரிவுகள் 9 முதல் 35A வரை) ...	13
4.	இடைப்பட்ட நடவடிக்கைகள் (Incidental Proceedings) ...	43
5.	சிறப்பு நடவடிக்கைகள் (Special Proceedings) (பொதுக் காரியங்கள் சம்பந்தப்பட்டவை) ...	56
6.	கூடுதல் நடவடிக்கைகள் (Supplemental Proceedings) (பிரிவுகள் 94, 95) ...	59
7.	மேல் வழக்குகள் (Appeals) (பிரிவுகள் 96 முதல் 112 வரை) ...	61
8.	மேற்கோள் விசாரணை (Reference) மறு ஆய்வு (Review) சீராய்வு (Revision) (பிரிவுகள் 113 முதல் 115 வரை) ...	86
9.	விதிகள் (Rules) (பிரிவுகள் 121 முதல் 131 வரை) ...	91
10.	பலதரப்பட்ட நடவடிக்கைகள் (Miscellaneous Proceedings) ...	94
11.	வக்கில்லாதவர்கள் வழக்குகள் (Pauper Suits) ...	111
12.	அசையாச் சொத்துகளின் அடைமானம் சம்பந்தமான வழக்குகள் (Mortgage Suits) ...	118
13.	மாற்றுமுறை யாவணம் சுருக்கு நடைமுறை (Summary Proceedure on Negotiable Instruments) ...	121
14.	தீர்ப்பிற்கு முன் கைது செய்தல், பொருளை ஜப்தி செய்தல் (Arrest, before judgement and Attachment before judgement) ...	124

பக்கம்

15. தற்காலத் தடை, செயல் ஆணைகள், இடைக் கால ஆணைகள் (Stays Temporary injuctions and Interlocutory Orders) ... 129

16. உடைமைக் காப்பாளர்களை நியமித்தல் (Appointment of Receivers) ... 133

17. நிறைவேற்றல் (Execution) ... 136

18. மேற்கோள் நூற்பட்டியல் ... 193

19. கலைச்சொற்கள் ... 194

(குறிப்பு:- பிரிவுகளுடன் சம்பந்தப்பட்ட கட்டளைகளும் விதிகளும் குறிக்கப்பட்டுள்ளன.)

தீர்ப்புகளின் பட்டியல்

(List of Cases)

பக்கம்

1 Union of India *Vs.* Sri Ladulal AIR 1963 S.C. 1681. ... 21

2 Rajaratnam *Vs.* Muthusamy 1958 (1) M.L.J. 194 ... 21

3 Ledgard *Vs.* Bull (1887) 13 I.A. 134=9 Act 191 ... 22

4 Meenakshi Naidu. *Vs.* Subramania Sastri (1887) I4. 1.A. 160= 11. Mad. 26 ... 22

5 Setrucherla *Vs.* Maharaja of Jaipore (1919) 46, 1.A. 151 = 42 Mad. 813 ... 22

6 Kiran Singh *Vs.* Chaman Paswan. AIR 1954 S.C. 340=1954. S.C.J. 514 ... 23

7 Zamindar of Ettayapuram *Vs.* Chidambaram. (1920) 40 Madras. 675 ... 23

8 Srinivasa *Vs.* O. A. (1915) 38 Mad. 21 ... 26

9 Bank of Bengal *Vs.* Currie & Co., (1869) 3 B.L.R. 396 ... 31

10 Punjab National Bank *Vs.* Sri Ram Kenwar AIR 1957 S.C. 276. ... 41

11 Kowri Naramma *Vs*. Kowri Kottamma.
AIR 1966 A.P. 28. ... 41

12 T. S. Swaminathan *Vs*. Official Receiver
of West Tanjore AIR 1957 S.C. 577 ... 41

13 Shyam Sunder Serey *Vs*. Union of India
AIR 1965 Cal 281 ... 41

14 Kaitan minerals *Vs*. Sales Tax Appellate
Tribunel AIR 1963 Mysore 141 ... 42

15 Natesan *Vs*. Surya = 1957 (2) M.L.J. 586 ... 42

16 Benares Ice Factory *Vs*. Shukla
AIR 1961 Cal 422 ... 138

17. Arumugha Gounder *Vs*. Marappa Gounder
1972 (17 M. L. J. S. N. P. 33) ... 149

1. முன்னுரை

சமூக உரிமை நடைமுறைச் சட்டத் தொகுப்பு

1908ஆம் ஆண்டு 5ஆவது சட்டம்

சமூக உரிமை நீதிமன்ற நடைமுறைச் சட்டங்களை ஒன்றிணைக்கவும் திருத்தவுமான சட்டம்.

முன்னுரை

இந்த நடைமுறைச் சட்டத்தை இரண்டு முக்கிய பாகமாகப் பிரிக்கலாம். ஒன்று, தன்னிலையான பாகம் (Substantive Part). மற்றொன்று, ஒழுங்கு முறையை வகைப்படுத்தும் கட்டளைகளும் துணைக் கட்டளைகளும் விதிகளும் ஆகும். முதல் பாகம் ஒன்று முதல் 158 பிரிவுகளைக் கொண்டது. இரண்டாவது பாகம் 51 கட்டளைகளைக் கொண்டது.

முதல் பாகம் தன்னிலையானது மட்டுமன்று, அடிப்படையானது; அதனோடு எளிதில் மாற்றொண்ணாததும் ஆகும். அதிலிருந்துதான் நீதிமன்றங்கள் அதிகாரத்தையும் அதிகார வரம்பையும் பெறுகின்றன. முதல் பாகத்திலுள்ள சட்டப் பிரிவுகளை மாற்றவோ, திருத்தவோ, நீக்கவோ சட்ட மன்றத்திற்குத் தான் அதிகாரம் உண்டு. அந்த அளவில் இதை எளிதில் மாற்ற முடியாத பகுதியாகக் கொள்ளலாம்.

இரண்டாம் பாகம் 51 கட்டளைகளைக் கொண்டது; எளிதில் மாற்றப்படும் தன்மை கொண்டது. காரணம், உயர்நீதி மன்றங்கள் அவற்றின் கீழ்மட்ட நீதிமன்றங்களின் ஒழுங்கு முறைகளை வகைப்படுத்துவதில் ஏற்படும் சங்கடமான சூழ்நிலையைக் கருதியும், உயர்நீதிமன்றங்களின் நடைமுறையில் காணப்படும் சிரமம் அல்லது வேலைப்பளுவைக் குறைக்கவும் எளிதாக்கவும் கருதி இரண்டாம் பாகத்தில் அடங்கிய கட்டளைகளையும், விதிகளையும் திருத்தவோ, மாற்றியமைக்கவோ, நீக்கிவிடவோ, ஒரு

குழுவை அமைத்து, அதற்கான பரிந்துரையை, மாநில அரசுக்கு அனுப்பி ஒப்புதல் பெற்று, மேற்குறிப்பிட்ட திருத்தத்தைச் செய்ய முடியும். இதுபற்றிய அதிகாரமும். விளக்கமும் முதல் பாகம் பிரிவுகள் 121 முதல் 131 முடியக் காணலாம்.

நீதிமன்ற நடைமுறை பரிபாலிக்கப்பட இந்த இரண்டு பாகங்களையும் ஒருங்கிணைத்தே ஒழுகவேண்டும். இவை இரண்டு பாகங்கள் தவிர, இந்தச் சட்டத் தொகுப்பைச் சற்று உன்னிப் பாகக் கவனிப்போமானால் இன்னொரு பிரிவையும் நாம் காண இய லும்; அதுதான் செயலாக்கும் சட்டப் பகுதி. அவை கீழ்க் காணும் 36 முதல் 74 முடிய உள்ள பிரிவுகளிலும் கட்டளை 21-லும் காணக்கிடக்கின்றன. இதை இங்கே குறிப்பிடுவதில் ஒரு முக்கிய தத்துவம் உண்டு. இந்த இடத்தில்தான் குற்றச் சட்டங்கள் பரி பாலிக்கப்படுவதிலும், சமூக உரிமைச் சட்டங்கள் பரிபாலிக்கப் படுவதிலும் ஒரு பெரிய வித்தியாசத்தை நாம் காண்கிறோம். குற்றச் சட்டத்தில் விசாரணை முடிந்து தீர்ப்பு வழங்கப்பட்ட வுடன் அது செயலாக்கப்படுகின்றது, அல்லது நடைமுறைக்கு வருகின்றது. உதாரணமாக, ஒருவனுக்கு ஒரு குற்றத்திற்குத் தண்டனையாக, ஒரு மாதம் சிறைத் தண்டனை விதிப்பதாக வைத் துக் கொண்டால், தண்டனை நீதிமன்றத்தில் கூறியவுடன் அது அமலாக்கப்படுகின்றது. ஆனால் சமூக உரிமைச் சட்டத்தின்படி நீதிமன்றம், ஒருவன் மற்றொருவனுக்கு ரூபாய் 1000/- தரவேண் டும். அதுவும் 6 மாதத்திற்குள் தரவேண்டும் என்று தீர்ப்பளித்து விட்டால் அதை மற்றவன் கொடுக்கவேண்டும். கொடுக்கவில்லை யென்றால், நீதிமன்றத் தீர்ப்பை அமலாக்க அவன் தனியாக விண்ணப்பிக்கவேண்டும். அந்த விண்ணப்பத்தின் பேரில்தான் மறு நடவடிக்கை நீதிமன்றத்தில் தொடரும். அப்பொழுது தாவா இருந்தால் மறுபடியும் விசாரணை ஏற்படலாம்.

இச் சட்டத்தின் வரலாறு

1859ஆம் ஆண்டுக்கு முன்பு இது போன்று வகுக்கப்பட்ட நடைமுறைச் சட்டம் நம் நாட்டிலிருந்ததில்லை. ஆனால், மாநில நகரங்களான சென்னை, கல்கத்தா, பம்பாய் போன்ற இடங்களில் உள்ள நீதிமன்றங்களில் தனித்தனி நடைமுறைச் சட்டங்களையும் மேற்குறிப்பிட்ட மாநில நகரங்கள் தவிர, மற்ற மாநிலங்களி லுள்ள ஏனைய நீதிமன்றங்கள் தனிப்பட்ட முறையிலான நடை முறைச் சட்டங்களையும் பயன்படுத்திவந்தன என்பது குறிப் பிடத் தக்கதாகும். இதுபோன்ற இரு நடைமுறைச் சட்டங்களை வகுத்துத் தொகுத்து மாநில நகரங்களிலிருக்கும் நீதிமன்றங்களுக் கும் மாநிலத்தின் புறப்பகுதியிலுள்ள நீதிமன்றங்களுக்கும் ஒரே

மாதிரியான நடைமுறைச்சட்டம் உருவாக்கக் கருதி 1859-ல் முதல் சமூக உரிமை நடைமுறைச் சட்டம் (First Civil Procedure Code) (Act VIII of 1859) உருவாக்கப்பட்டது. 1859-ல் முதல் நடைமுறைச் சட்டம் அமலாக்கப்பட்டபோதிலும் மாநில முக்கிய நகரங்களான சென்னை, கல்கத்தா, பம்பாய் ஆகிய நகரங்களில் உள்ள உச்சி நீதிமன்றங்கள் (Supreme Court) சுத்தர் திவானி அடலாட் (Suddar Diwani Adalats) என்று வழங்கப்படும் நீதிமன்றங்கள் அவற்றுக்கென்று தனி நடைமுறைச் சட்டங்களைப் பின்பற்றின. ஆனால், 1862-ல் மேற்குறிப்பிட்ட மாநில மாநகரங்களில் இருந்துவந்த உச்சி நீதிமன்றங்களும், சுத்தர் திவானி அடலாட் என்ற நீதிமன்றங்களும் 1861ஆம் வருட உயர்நீதிமன்றச் சட்டத்தின்மூலம் ஒழிக்கப்பட்டன. அதற்கிணங்க மாநில மாநகரங்களான சென்னை, பம்பாய், கல்கத்தாவில் உயர்நீதிமன்றங்கள் நிறுவப்பட்டன.

1859ஆம் வருட நடைமுறைச் சட்டம் திருப்திகரமாக இல்லாத காரணத்தால் 1860, 1861, 1871ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டது. பிறகு இரண்டாவது, சமூக உரிமை நடைமுறைச் சட்டம் 1877-ல் உருவாக்கப்பட்டது. பின் அந்தச் சட்டமும் நீக்கப்பட்டு 1882-ல் திரும்பவும் ஒரு நடைமுறைச் சட்டம் உருப்பெற்றது. இந்தச் சட்டத்திலும் குறை பல இருந்து நீக்கப்படவேண்டியிருந்ததால் இப்போதைய 1908ஆம் ஆண்டு நடைமுறைச் சட்டம் ஆக்கப்பட்டு 1882ஆம் ஆண்டு நடைமுறைச் சட்டம் நீக்கப்பட்டது.

2. பூர்வாங்கப் பகுதி

(பிரிவுகள் 1 முதல் 8 வரை)

இச் சட்டத் தொகுப்பின் நோக்கம்

இந்தச் சட்டம், சொற்களின் பொருளை வரையறை செய்யவும், வகைப்படுத்தவும், திருத்தவும், முந்திய நடைமுறைச் சட்டங்களை ஒன்றிணைக்கவும் வகை செய்கின்றது.

இந்தச் சட்டத்தில் இடம் பெறாத சூழ்நிலைகளை நீதிமன்றங்கள் ஆங்கிலப் பொதுச் சட்டக் கொள்கைகளான (British Common Law Principles) நீதி, நேர்மை, மனச்சாட்சி (Equity, Justice and Good Conscience) என்ற கொள்கை அடிப்படையில் நிர்ணயிக்கவேண்டும். இதற்கான சட்ட விதி 151ஆம் பிரிவில் காணக்கிடக்கின்றது. இந்நிலை காரணமாக இது இந்தியக் குற்றவியல் சட்டம் (Indian Penal Code) போன்ற முற்றுப் பெற்ற ஒரு முழுமையான சட்டத் தொகுப்பு என்று கொள்வதற்கில்லை.

இச் சட்டத்தின் பயன் (Scope of this Act)

இச் சட்டத் தொகுப்பு இந்திய உச்சி நீதிமன்றம், மற்றும் மாநிலங்களிலுள்ள உயர் நீதிமன்றங்கள், அதற்கடுத்துள்ள மாவட்ட நீதிமன்றங்கள், துணை மாவட்ட நீதிமன்றங்கள், மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள் ஆகியவற்றின் சமூக உரிமைக்கான நடைமுறைகளை அதன்மூலம் அதிகார வரம்பிலான மூல முதல் வழக்குகளை நடத்துவதற்குரிய அதிகார எல்லையையும் மேல் வழக்குகளையும் நடத்துவதற்குரிய அதிகார எல்லையையும் வகைப்படுத்துகின்றது.

பொருளின் பண்பு விளக்கம் (Definitions)

இச் சட்டத்தின் 2ஆம் பிரிவில் சில முக்கியமான நடைமுறைச் சட்டச் சொற்கள் விளக்கப்பட்டிருக்கின்றன. அவை வருமாறு :

சட்டத் தொகுப்பு (Code)

சட்டத் தொகுப்பு என்பது தன்னிலேப் பாகமான 158 பிரிவு களோடு இரண்டாம் பிரிவான 51 கட்டளைகளேயும் குறிக்கும்.

தீர்ப்பாணை (Decree)

தீர்ப்பாணை என்பது நடைமுறையில் தெரிவிக்கப்படுகின்ற தீர்ப்பு. அது கட்சிக்காரர்களின் உரிமைகளைத் தீர்மானமாக முடிவு செய்வது. அது முன்னோடித் தீர்ப்பாணை (Preliminary decree), முடிவுத் தீர்ப்பாணை (Final decree) என இருவகைப்படும். முன்னோடித் தீர்ப்பாணை, கணக்குக்கான வழக்கு (Suit for Accounts), கூட்டு வியாபாரம் சம்பந்தமான வழக்கு (Suit for Partnership), பாகப் பிரிவினை வழக்கு (Suit for Partition), அடைமானம் சம்பந்தமான வழக்கு (Suit on Mortgages) முதலியவைகளில் கூறப்படும். அதனைத் தொடர்ந்து இறுதித் தீர்ப்பாணை வழக்கின் முடிவில் கூறப்படும் முன்னோடித் தீர்ப் பாணை வழக்கின் இடையே வழங்கப்படும்.

அதேபோல் வழக்குரை நிராகரிக்கப்படுமானாலும், அந் நிரா கரிப்பு (rejection) தீர்ப்பாணையாகக் கருதப்படும். 47ஆவது 144ஆவது பிரிவுகளின்படி அளிக்கப்படும் தீர்ப்புகளும் தீர்ப்பாணை வடிவம் பெறும்.

வாதி (Plaintiff) நீதிமன்றத்திற்கு வராததால் வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டாலும், அவ்வாறு தள்ளுபடி செய்து கூறும் (dismiss) அந்தத் தீர்ப்பும் தீர்ப்பாணை வடிவம் பெறும்.

மாவட்டம் (District)

மாவட்டம் என்பது ஒரு வட்டார எல்லையைக் குறிக்கும். சாதாரணமாக, சமூக உரிமை நீதிமன்ற அசல் அதிகார வரம்பை யும் குறிக்கும்.

வெளிநாட்டு நீதிமன்றம் (Foreign Court)

மைய அரசின் அதிகாரத்தில் இல்லாத வெளிநாட்டில் இருக் கும் நீதிமன்றங்களைக் குறிக்கும்.

அரசு வழக்கறிஞர் (Government Pleader)

மாநில அரசால் நியமிக்கப்பட்ட வழக்கறிஞர்கள்; இந்தச் சட்டத் தொகுப்பின்கீழ் அரசு ஆணைப்படி செயல்புரியும வழக்கறிஞர்களைக் குறிக்கும்.

உயர் நீதிமன்றம் (High Court)

'உயர் நீதிமன்றம்' என்பது அந்தமான் நிக்கோபார் தீவுகளைப் பொறுத்தவரை கல்கத்தா உயர் நீதிமன்றத்தைக் குறிக்கும். மற்றப்படி, ஒவ்வொரு மாநிலத்திற்கும் சாதாரணமாக ஒரு உயர் நீதிமன்றம் ஏற்படுத்தப்பட்டிருக்கும்.

இந்தியா (India)

'இந்தியா' என்பது பிரிவுகள் 1, 29, 43, 44, 78, 79, 82, 83, 87A ஆகியவைகளைத் தவிர மற்றப் பிரிவுகளுக்கு ஜம்மு, காஷ்மீர்ப் பகுதிகளையும் உள்ளடக்கியதாகும்.

நீதிபதி (Judge)

இச் சட்டத் தொகுப்பின்படி நீதிபதி என்பவர் ஒரு சமூக உரிமை நீதிமன்றத் தலைமை தாங்கும் அதிகாரி அல்லது ஆணையாளர்.

தீர்ப்பு (Judgement)

தீர்ப்பாணைகளுக்கான (Decree) காரணங்கள் அடங்கிய விவரம் (Statement).

தீர்ப்புக்கு ஆளானவன் அல்லது தீர்ப்புக் கடனாளி (Judgement debtor)

இது ஒருவனுக்கு எதிராக நிறைவேற்றப்படக்கூடிய தீர்ப்பாணை இருக்கின்றது என்பதைக் குறிக்கும். யாருக்கு எதிராகத் தீர்ப்பாணை வழங்கப்பட்டிருக்கின்றதோ, அவர்தாம் தீர்ப்புக் கடனாளி (Judgement debtor).

சட்டப்படியான சொத்துப் பிரதிநிதி (Legal representative)

இது இறந்தவனின் சொத்துகளைச் சட்டப்படி பிரதிநிதித்துவம் செய்பவனையும், இறந்தவனின் சொத்தை அனுபவிப்பவனையும், இறந்தவன் சார்பாக வழக்குத் தொடரப்பட்டவனையும், தொடரக்கூடியவனையும், ஒருவன் இறந்த பிறகு அவனுடைய சொத்துகள் வந்தடைபவனையும் குறிக்கும்.

தவருன பலன் (Mesne profits)

இது தவறுதலாக ஒரு சொத்தை ஒருவன் அனுபவிப்பதில் அவனுக்குக் கிடைக்கும் பலன் அல்லது ஆதாயம். அது நேரடியாகப் பெறப்பட்டதும் அல்லது இவ்வளவு பலன் இவன் அனுபவித்திருப்பான் என்று சாதாரணமாகக் கணிக்கக்கூடியதுமாகும். மேலும் அதனோடு சேர்க்கப்படும் வட்டியையும் குறிப்பதாகும். ஆனல், தவறுதலாக ஒருவன் அனுபவிக்கும் சொத்தை அவனுடைய சொந்த உழைப்பால் அதிகப் பலன் அல்லது இலாப ஈட்டந் தருவதாய்ச் செய்திருந்தால் அம்முன்னேற்றம் காரணமாக மேற்கொண்டு அவனுக்குக் கிடைக்கப்பெற்ற இலாபம் அல்லது பலன் அதனுள் அடங்காது.

அசையும் சொத்து (Moveable property)

இது வளரும் பயிரையும் குறிப்பதாகும்.

ஆணை (Order)

சமூக உரிமை நீதிமன்ற முடிவை ஒரு குறிப்பிட்ட வடிவில் ஆக்கித் தருவதாகும். ஆனல் அது தீர்ப்பாணையாகாது. மேற்குறிப்பிட்டவை முக்கியமான பொருள், பண்பு விளக்கங்களாகும்.

தரம் வாரியாக நீதிமன்றங்கள் (பிரிவு 3)

இந்தச் சட்டத் தொகுப்பின்கீழ் நீதிமன்றங்கள் கீழ்க்கண்டவாறு தரம் பிரிக்கப்படுகின்றன.

உயர்நீதிமன்றத்திற்குக் கீழ்ப்பட்டது மாவட்ட நீதிமன்றங்கள். அதுபோல மாவட்ட நீதிமன்றங்களுக்குக் கீழ்ப்பட்ட நீதிமன்றங்கள், மாவட்ட நீதிமன்றத்திற் குட்பட்டவை யாகும். ஆனல் சிறு காரண நீதிமன்றம் (Small Causes Court) நேரடியாக உயர்நீதிமன்றத்திற்குட்பட்டது.

அதிகார எல்லை (Jurisdiction)

நீதிமன்றங்களின் அதிகார எல்லையை இரண்டு கூறுகளாய்ப் பிரிக்கலாம். ஒன்று நிதிவழி அதிகார எல்லை (Pecuniary Jurisdiction); மற்ருென்று வட்டார அதிகார எல்லை (Territorial Jurisdiction). ஒவ்வொரு நீதிமன்றமும் இந்த இரண்டு தரப்பட்ட அதிகார எல்லைக்குள்தான் இயங்க வேண்டும். இந்த இரண்டு அதிகார எல்லையைத் தாண்டி எந்த ஒரு வழக்கும் அந்தக் குறிப்

பிட்ட நீதிமன்றத்தின் விசாரணைக்கு உட்பட்டதன்று. இவ்விதமாக நடைமுறையிலிருக்கும் அதிகார எல்லை வரையறுக்கப்பட்ட அதிகார எல்லை (Limited Jurisdiction) என்று வழங்கப்படுகின்றது. வரையறுக்கப்படாத அதிகார எல்லையை வரம்பில்லா அதிகாரம் என்று கூறலாம். கீழ்க்கண்ட சான்றுகள் அதிகார எல்லையை மிகத் தெளிவாக்கும் என்பதில் ஐயமில்லை.

சாதாரணமாக நம் நீதிமன்றங்கள் தரம் பிரிக்கப்பட்டவழிப்படி அதிகார எல்லையும் அவற்றுக்கு வகுக்கப்பட்டிருக்கின்றது.

மிக அடிமட்ட நீதிமன்றமாக விளங்கும் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் (District Munsiff's Court) நிதிவழி அதிகார எல்லையாக ரூ. 5000 வரையும் வட்டார அதிகார எல்லையாக இரண்டு, மூன்று அல்லது நான்கு தாலுக்காக்களைக் கொண்டதாகவும் அமைக்கப்பட்டிருக்கின்றது. மேற்குறிப்பிட்ட நிதி அல்லது தொகையான ரூ. 5000/-க்கு உட்பட்ட எந்த வழக்காலும் அதாவது அசையும் சொத்து அல்லது அசையாத சொத்து அல்லது மானநட்டம் பொருள் நட்டம் போன்றதும் வேறு பல வழக்குகளும் அந்தக் குறிப்பிட்ட மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் தான் தாக்கல் செய்யப்பட வேண்டும். இந்த அதிகார எல்லை வழக்கின் நிதித்தரத்தைப் பொறுத்தது மட்டுமன்று. வழக்கு சம்பந்தப்பட்ட அசையும் பொருள் அல்லது அசையாப் பொருள் அந்த எல்லைக்குள் இருப்பதைப் பொறுத்தும், அதனோடு வழக்குக்கான காரணம் (cause of action) அந்தக் குறிப்பிட்ட எல்லைக்குள் எழுந்திருக்க வேண்டும் என்பதோடு வழக்கில் சம்பந்தப்பட்ட பிரதிவாதி (Defendent) அந்தக் குறிப்பிட்ட எல்லைக்குள் சாதாரணமாக வாழ்ந்து வருபவனாகவோ, தொழில் செய்து வாழ்பவனாகவோ சம்பளத்திற்கு வேலை செய்பவனாகவோ இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது.

மாவட்ட முன்சீப் நீதிமன்றங்களுக்கு அடுத்தபடியாக மாவட்டத் துணை நீதிமன்றங்களின் (Sub Court of the Subordinate Judge) வட்டார அதிகார எல்லையாக மாவட்டத்தில் ஒரு பகுதியும், நிதிநிலை அதிகார எல்லையாக ரூ. 5000/- முதல் ரூபாய் 10,000/- வரை என்று வரையறுக்கப்பட்டுள்ளது. எனவே ரூபாய் 5000/-க்கு மேற்பட்ட வழக்குகளை விசாரிக்க மாவட்ட முன்சீப் நீதிமன்றங்களுக்கு அதிகாரம் கிடையாது. தவறுதலாக அதிகாரம் செலுத்தப்பட்டால் அது செல்லுபடியாகாது. இதே போன்று வட்டார அதிகார எல்லை என்பது வழக்கு சம்பந்தப்பட்ட சொத்து இருக்கும் இடம், வழக்கு சம்பந்தப்பட்ட

காரணம் எழுந்த இடம், வழக்கில் பிரதிவாதி வாழ்ந்து வரும் இடம் ஆகியவை வட்டார அதிகாரத்திற்குள் அடங்கியனவாக இருக்க வேண்டும். இந்தத் துணை நீதிமன்றங்களுக்கு (Sub Court) நிதிநிலை அதிகார வரம்பு ரூபாய் 5,000/, முதல் ரூபாய் 10,000/- வரை என்று வரையறுக்கப்பட்டாலும் ரூபாய் 5000/-க்குக் குறைவான வழக்கை மாவட்டத் துணை நீதிமன்றங்கள் தவறுதலாக விசாரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டால் அந்த அதிகாரம் தவறாகச் செலுத்தப்பட்ட அதிகாரம் என்றாலும் அது செல்லுபடியாகும் அதிகாரமாகக் கருதப்படும். ஆனால் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் ரூபாய் 5000/-க்கு மேற்பட்ட வழக்குகளை விசாரணை செய்து முடிவெடுத்தால் அந்த அதிகாரம் பூரணமாகச் செல்லுபடியாகாது (void).

அதற்கு அடுத்தபடியாக மாவட்ட நீதிமன்றங்கள் வருகின்றன. இந்த நீதிமன்றங்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தலைமையாக இருப்பதோடு அந்தந்த மாவட்ட ஏனைய நீதிமன்றங்களின் அலுவல்களையும் மேற்பார்த்துக் கொள்ளுகின்றன. மாவட்ட நீதிமன்றத்தின், நிதிநிலை அதிகாரத்திற்கு எல்லையில்லை. ஆனால் ரூபாய் 10,000/-க்கு மேற்பட்ட வழக்குகளைத்தான் இந்த நீதிமன்றங்கள் கவனிக்கின்றன. ஆனால், வட்டார அதிகார எல்லை மாவட்டமாக நிர்ணயிக்கப்படுகிறது. அந்தக் குறிப்பிட்ட மாவட்ட எல்லையைக் கடந்து அந்தந்த மாவட்ட நீதிமன்றங்கள் அதிகாரத்தைச் செலுத்த முடியாது.

மாவட்டங்களில் இயங்கும் நீதிமன்றங்களைக் கண்ட நாம், மாநில மாநகரங்களான சென்னை, கல்கத்தா, பம்பாய் போன்ற நகரங்களில் செயல்படும் நீதிமன்றங்களைக் கவனிப்போம்.

இந்த மாநில மாநகரங்கள் தனித்தனியே ஒரு மாவட்டமாகக் கருதப்படுகின்றன. எனவே, இங்குள்ள நீதிமன்றத்தின் வட்டார அதிகார எல்லை நகர எல்லையே. நிதிநிலை அதிகார எல்லை கீழ்க் கண்டபடி வகுக்கப்பட்டிருக்கின்றது

ஒரு விளக்கத்திற்காகச் சென்னையை மட்டும் எடுத்துக் கொள்வோமானால், இங்கே உயர்நீதிமன்றம் தன்னுடைய அசல் அதிகார வரம்பில் சில வழக்குகளை நேரிடையாக விசாரிக்கும் அதிகாரம் பெற்றது. கீழ்பட்டத்தில் இரண்டு தரப்பட்ட நீதிமன்றங்கள் இருக்கின்றன. ஒன்று சிறு காரண நீதிமன்றம் (Small Causes Court). மற்றது நகரச் சமூக உரிமை நீதிமன்றம் (City Civil Court). சிறு காரண நீதிமன்றத்தின் வட்டார எல்லை

சென்னை நகர எல்லைக்குள் பரந்து கிடக்கின்றது. ஆனால் நிதிநிலை அதிகார வரம்பு ரூபாய் 2000/- ஆக வரையறுக்கப்பட்டுள்ளது. அதனோடு அந்த அதிகார வரம்பு, அசையும் பொருள்கள் மீது மட்டும் (Moveable) செலுத்தத் தக்கது. அசையாப் பொருள்கள் மீது செலுத்தத் தக்கதன்று. இந்தச் சிறு காரண நீதிமன்றம் தனித்தன்மை வாய்ந்தது. 1882ஆம் ஆண்டு மாநிலச் சிறு காரண நீதிமன்றச் சட்டத்தின்கீழ்த் தனித்துச் செயல்படுகின்றது. நகரச் சமூக உரிமை நீதிமன்றம் (City Civil Court) ரூபாய் 50,000/- வரை அசையாச் சொத்து சம்பந்தப்பட்ட வழக்குகளுக்கு நிதிநிலை அதிகார வரம்பு கொண்டது. அசையும் சொத்து சம்பந்தப்பட்ட வழக்குகளுக்கு ரூபாய் 1000/- க்கு மேற்பட்ட தொகைக்கான வழக்குகள் மட்டுமே நகரச் சமூக உரிமை நீதிமன்றத்தின் விசாரணைக்கு உட்பட்டதாகும். அசையும் சொத்து சம்பந்தப்பட்ட ரூபாய் 1000-க்கு மேற்பட்ட, ஆனால் ரூபாய் 2000- வரையுள்ள நிதி நிலை அதிகார வரம்பு, சிறு காரண நீதிமன்றத்திற்கும் நகரச் சமூக உரிமை நீதிமன்றத்திற்கும் உரியதாகும். வழக்காளர் இந்த இரண்டில் எந்த நீதிமன்றத்தையும் நாடலாம்.

அதே போல, தடை விதிக்கக் கோரும் வழக்கு (Injunction Suits), அல்லது ஒப்பந்தத்தைச் செயலாக்கக் கோரும் வழக்கு Suit for Specific Performance of the Contract), பாகப்பிரிவினை வழக்கு(Suit for Partition) போன்றவை சிறு காரண நீதிமன்றத்தில் தொடுக்கப்பட முடியாதவை. அவை நகரச் சமூக உரிமை நீதிமன்றத்தில் மட்டுமே தொடரப்பட வேண்டியவை என்பது குறிப்பிடத்தக்கது.

நகரச் சமூக உரிமை நீதிமன்றத்தை அடுத்து உயர்நீதிமன்றம் செலுத்தும் அதிகார வரம்பினை நோக்குவோம். முதல் கட்டமாக, அசல் நிதிநிலை அதிகார வரம்பு நகர எல்லைக்குட்பட்டதாக ரூபாய் 50,000-க்கு மேல் எல்லையற்றதாகும். அஃதன்றி அசல் திருமண அதிகார வரம்பு (Original Matrimonial Jurisdiction) 1869ஆம் வருட இந்தியத் திருமண ரத்துச் சட்டம் Indian Diverce Act 1869) படியும், அசல் நொடிப்பு அதிகார வரம்பு (Original Insolvency Jurisdiction) மாநில நகரங்கள் நொடிப்புச் சட்டம் 1909 (The Presidency Towns Insolvency Act, 1909) படியும் உயர் நீதிமன்றம் செலுத்தத் தக்கது.

மேல் வழக்கு அதிகார வரம்பும், உயர் நீதிமன்றம் கொண்டிருக்கின்றது.

முதல் மேல் வழக்கு அதிகார வரம்பு 96ஆவது பிரிவின்படி செலுத்தப்படுகின்றது. இரண்டாம் மேல் வழக்கு அதிகார வரம்பும் 100ஆவது பிரிவின்படி செலுத்தப்படுகின்றது. உதாரணமாக, முதல் மேல் வழக்கு மாவட்ட அல்லது துணை மாவட்ட நீதிமன்றத்தின் தீர்ப்பிற்குப் பிறகு உயர் நீதிமன்றத்துக்குக் கொண்டு வரப்படலாம். அதேபோல் மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் அசல் வழக்காகத் தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பை எதிர்த்து முதல் மேல் வழக்காக மாவட்டத் துணை நீதிமன்றத்தில் தொடரப்பட்டதில் வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து இரண்டாவது மேல் வழக்காக உயர்நீதிமன்றத்திற்கு எடுத்து வரப்படலாம். துணை நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்பட்ட மேல் வழக்குத் தீர்ப்பை எதிர்த்தும் உயர் நீதிமன்றத்தில் இரண்டாவது மேல் வழக்குப் போடப்படலாம். இந்த இரண்டாவது மேல் வழக்கின் மீதான அதிகார வரம்பு உயர் நீதிமன்றத்திற்கு மட்டுமே உண்டு. உயர் நீதிமன்றத்திற்குக் கீழ் மட்டத்திலுள்ள எந்த நீதிமன்றத்திற்கும் இவ் அதிகாரம் அளிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

இந்த இரண்டாவது மேல் வழக்கு விசாரிக்கத் தகுந்த அதிகார வரம்போடு உயர் நீதிமன்றங்கள் சீராக்கும் அதிகார வரம்பும் (Revisional Jurisdiction) கொண்டவை. கீழ்மட்ட நீதிமன்றம் எதுவானலும் மேல் வழக்குகளுக்குப் பாத்தியதையில்லாத கட்டளைகளை (Orders) எதிர்த்துச் சீராக்கும் வகையில் உயர்நீதிமன்றத்திற்குக் கொண்டுவரப்படுகின்ற மனுக்களை விசாரித்து அந்தக் கட்டளைகளின் குறைகளைச் சீராக்கும் அதிகாரம் உயர்நீதிமன்றத்திற்குப் பிரிவு 115-ல் தரப்பட்டிருக்கின்றது.

பலதரப்பட்ட அதிகார வரம்பு

நம் நாட்டின் நீதிமன்றங்கள் மொத்தத்தில் செலுத்துகின்ற அதிகார வரம்பைக் கீழ்க்கண்டவாறு பல்வேறு வகையாகப் பிரிக்கலாம்.

1. **அசல் அதிகார வரம்பு (Original Jurisdiction) :** இந்த அதிகார வரம்பில் அசலாகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேர்முக விசாரணைக்கு உட்பட்டவை. அநேகமாக எல்லாத்தரப்பட்ட நீதிமன்றங்களும் இந்த அசல் அதிகார வரம்பு கொண்டிருக்கின்றன. ஆனல் அது அதற்குரிய நிதிநிலை அதிகார வரம்புக்கும், வட்டார அதிகார வரம்புக்கும் கட்டுப்பட்டுச் செயல்படும்.

2. மேல் வழக்கு அதிகார வரம்பு (Appellate Jurisdiction) : இந்த அதிகார வரம்பைச் செலுத்துவதில் மேல் வழக்காக விசாரணை நீதிமன்றத்தீர்ப்பை (Trial Court) எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்டவற்றை ஆய்ந்து முடிவு கூறவேண்டும். மேல் வழக்கை ஆய்வதில் நேரடி விசாரணையில்லாததால், ஏற்கெனவே எடுக்கப்பட்ட சாட்சியங்களைப் பாராட்டி, அதனடிப்படையில் முடிவு கூறப்படும். இந்த அதிகாரம் பிரிவு 96-ல் தரப்பட்டிருக்கின்றது. இதை அடுத்து இரண்டாவது மேல் வழக்குக்கான அதிகார வரம்பு உயர்நீதிமன்றத்திற்கு மட்டுமே தரப்பட்டிருக்கின்றது (பிரிவு 100-ன் கீழ்).

இந்திய உச்சி நீதிமன்றத்தின் அசல் அதிகார வரம்பு மேல் வழக்கு விசாரணை அதிகார வரம்புகள் குறித்து இந்தச் சட்டத் தொகுப்பில் பிரிவுகள் 109, 110-ல் குறிக்கப்பட்டிருப்பதுபோல் இந்திய அரசியல் சட்டத்தில் 132, 133, 136 ஆவது விதிகளில் கூறப்பட்டிருக்கின்றது. அது குறித்துப் பின் பகுதியில் விரிவாகப் பார்க்கலாம்.

3. பொதுவான வழக்குகள்

இச்சட்டத் தொகுப்பின்கீழ் விசாரணைக்குரிய வழக்குகள்

பிரிவு 9-ல் கூறப்பட்டிருப்பது போல இந்தச் சட்டத் தொகுப்பின்கீழ் இயங்கும் சமூக உரிமை நீதிமன்றங்கள், சமூக உரிமை சம்பந்தப்பட்ட எல்லா வழக்குகளையும் விசாரித்து முடிவு கூறக் கடமைப்பட்டவை. சமூக உரிமை வழக்குகள் நாட்டு மக்களின் உரிமைகளைச் சார்ந்தனவாக இருத்தல் வேண்டும். குறிப்பாக ஒரு விவகாரத்தில் குலத்தைப் பற்றிய கேள்விதான் முக்கியமாக முடிவாக வேண்டியிருந்தால் அது சமூக உரிமையாகக் கருதப் படுவதில்லையாதலால் சமூக உரிமை நீதிமன்றங்கள் அது போன்ற வழக்குகளை விசாரிக்க மாட்டா. வெறும் குலம், அல்லது சமூகத்தைப்பற்றிக் காரண காரியமாக இருந்தால் இந்நீதிமன்றங்கள் அது பற்றிய விசாரணையை மேற்கொண்டு அதன் அருமையான காலத்தை வீணாக்க முடியாது. அது கூடவும் கூடாது. அது போன்றே மதச் சடங்கு பற்றிய கேள்விகளும் இந் நீதிமன்றங்களில் விசாரணைக்குரியதல்ல. காரணம், அது சமூக உரிமைகள் இல்லை என்பதால்தான்.

அதே நேரத்தில் ஒருவர் ஒரு சமூகப் பதவிக்குரியவர் என்ற கேள்வி நிர்ணயிக்கப்பட வேண்டியிருந்தால் இந்தச் சமூக உரிமை நீதிமன்றங்கள் விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளும் அதிகார வரம்பினைப் பெற்றிருக்கின்றன. ஏனென்றால், இந்தக் கேள்வியில் ஒரு தனி நபரின் உரிமை சம்பந்தப்பட்டிருக்கின்றது. மேலும் அந்தச் சமூக, அல்லது வேறு பதவி குறித்த கேள்வியால் அந்தத் தனி நபருக்குக் கொடுக்கப்படும் சம்பளம் வருவாய் முதலிய துணைக் கேள்விகளும் முடிவாக்கப்பட வேண்டுமானால், உறுதியாக அது தனியொருவரின் உரிமையைப் பின்னணியாகக் கொண்டது. எனவே, இந் நீதிமன்றங்கள் அது பற்றி விசாரிக்க அதிகார வரம்பினைக் கொண்டன எனலாம்.

அதுபோல, மணவாழ்க்கையுரிமை திரும்பக்கேட்டு (Suit for Restitution of C njugal Rights) வழக்குப் போடுதல் தனியொருவரின் சமூக உரிமை சம்பந்தப்பட்டிருப்பதால், இந்நீதிமன்றங்கள் அதனை விசாரிக்கும் அதிகார வரம்பு கொண்டவையே.

மேலும், சொத்துபற்றிய வழக்குகள் சமூக உரிமை நீதி மன்றங்களில் நடத்தப்பட வேண்டியவை ஆதலால் இந்நீதி மன்றங்கள் சொத்துபற்றிய காரணங்களை விசாரணைக்காக ஈர்க்கும் சக்தி கொண்டவை. காரணம் அவற்றில் தனியொருவரின் உரிமைதான் முக்கியமான கேள்வியாக இருக்கின்றது.

இவை போன்றவை தவிர ஏனைய வழக்குகள் இந் நீதிமன்றங்களில் விசாரிக்கப்படமாட்டா.

ஒரே காரணமான வழக்கு இரண்டு நடைபெறத் தடை (Res sub judice)

பிரிவு 10-ன் படி, ஒரு நீதிமன்றத்தில், ஒரு வழக்கு நடைபெறுமானால், அந்த வழக்கின் முக்கிய கேள்வி அல்லது அவ்வழக்குத் தீர்த்து வைக்க வேண்டிய பிரச்சினை நேரடியாகவோ, பெரும்பான்மையாகவோ தீர்க்கப்படும் நிலையில் அதே கேள்வியையும் அதே பிரச்சினையையும் தீர்க்க இன்னொரு வழக்கு நம் நாட்டின் வேறெந்தப் பகுதியிலும் உள்ள நீதிமன்றத்தில், உச்சி நீதிமன்றம் உள்பட நடைபெறக்கூடாது என்று தடையுண்டு. இது முற்றிலும் நடைமுறையை வகைப்படுத்தும் சட்டம். இதன் நோக்கம் இரண்டு நீதிமன்றங்கள் ஒரே காரியத்தைப்பற்றி இரண்டு வகையாகத் தீர்ப்பளிப்பதைத் தடுப்பதாகும்.

ஆனால் ஒரே காரணம் நம் நாட்டின் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுவதைக்கொண்டு, அதே காரணம் வெளிநாட்டின் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுவது தடுக்கப்படக்கூடாது.

தீர்ப்பளிக்கப்பட்ட காரியம் (Res Judicata)

இச்சட்டத் தொகுப்பின் 11 ஆவது பிரிவில் குறிப்பிட்டபடி ஏற்கெனவே தகுதியான நீதிமன்றத்தில் நேரடியாகவோ, கணிசமாகவோ (Substantial) ஒரு வழக்கின் பகுதியோ, குறிப்பிட்ட ஒரு பிரச்சினையோ (Issue) ஒரே கட்சிக்காரர்களிடையே தீர்க்கப்பட்டு விட்டால் அந்த வழக்கோ, குறிப்பிட்ட அந்த வழக்கிலடங்கிய பிரச்சினையோ, அந்தக் கட்சிக்காரர்களிடையே, பின்

தோன்றும் எந்த வழக்கிலும் திரும்பவும் தகுதியான எந்த நீதி மன்றத் தீர்ப்புக்கும் ஆளாகக்கூடாது. கட்சிக்காரர்கள் என்பது வழக்குநடத்தும் அவர்களையும் அவர்கள் சார்பாக நின்று வழக்கை நடாத்துகின்ற பின்தோன்றல்களையும் குறிக்கும்.

முதல் விளக்கமாக, 'முந்தின வழக்கு' என்பது மேற்குறிப்பிட்ட இரண்டு வழக்குகளில் முதலில் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பதைக் குறிக்கும்.

இரண்டாவதாக, நீதிமன்றத்தின் தகுதியை நிர்ணயிப்பது. அதாவது அந்தக் குறிப்பிட்ட நீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகு மேல் வழக்குக்கான உரிமையைப் பொறுத்தது.

மூன்றாவதாக, மேற் குறிப்பிட்ட முந்தின வழக்கில் ஒரு காரியம் ஒரு தரப்பால் சொல்லப்பட்டு, மற்றத் தரப்பால் நேரடியாகவோ மறைமுகமாகவோ, மறுக்கப்பட்டோ, ஒத்துக் கொள்ளப்பட்டோ இருக்கவேண்டும்.

நான்காவதாக, எந்த ஒரு குறிப்பிட்ட காரியமும் வழக்கின் சாராம்சப்படி எடுத்துரைக்கப்பட்டிருக்கவேண்டும். ஒன்று, வழக்கை நிலைநிறுத்துவதற்கோ, வீழ்த்துவதற்கோ, எந்த ஒரு தரப்பாலும், அந்தக் காரியம் தீர்க்கப்பட்ட காரியமாகக் கருதப் பட வேண்டும்.

ஐந்தாவதாக, வழக்குரையில் நீதி வழங்கக் கோரிக் கேட்டுக் கொள்ளப்பட்ட காரியம், வழக்கிறுதியில் கொடுக்கப் படாமலிருந்தால் அதை நீதிமன்றம் மறுத்துவிட்டதாகக் கொள்ள வேண்டும்.

ஆறுவதாக, பலரும் தங்களுடைய பொது உரிமைக்காகவோ, தனிப்பட்ட உரிமைக்காகவோ பொதுவாக வழக்காடினால் அந்த உரிமையில் அவர்களுக்கு அக்கறை இருக்குமானால் அவர்களுக்காகப் பிரதிநிதித்துவ முறையில் போடப்பட்ட வழக்கில் கட்டளை 1 விதி 8-ல் (Order 1, Rule 8) வழங்கப்பட்ட தீர்ப்பு அந்த எல்லோரையும் கட்டுப்படுத்தும் என்று கொள்ளவேண்டும்.

இந்த 11ஆவது பிரிவை 10ஆவது பிரிவோடு ஒப்பிட்டுப் பார்ப்போமானால் முந்தியதில் வழக்குகள் நடைமுறையில் இருப்பதையும், பிந்தியதில் வழக்கு ஒன்று ஏற்கெனவே முடிந்து தீர்ப்புளிக்கப்பட்டதையும் காணலாம்.

தீர்ப்பளிக்கப்பட்ட காரியம் (Res Judicata) என்பதைக் கீழ்க்காணும் உதாரணத்துடன் விளக்குவது பொருத்தமானது. இராமசாமி என்பவர் கணேசன் என்பவர் மீது உடன்படிக்கை ஒன்றை மீறியதாக வழக்குப் போட்டு ஒரு குறிப்பிட்ட தொகையை நட்ட ஈடாகக் கேட்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அந்த வழக்குத் தள்ளுபடியாகி விட்டது என்றால், திரும்பவும் அதே நீதி மன்றத்திலோ, அல்லது தகுதியான வேறெந்த ஒரு நீதிமன்றத் திலோ, இராமசாமி என்பவர் கணேசன் மீது அதே காரணத்தில் உடன்படிக்கையை மீறியதற்காக நட்ட ஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்ய முடியாது. காரணம் 'தீர்ப்பளிக்கப்பட்ட காரியம்' அல்லது 'முன் தீர்ப்பின் தடை' என்ற சட்டக் கொள்கை அதைத் தடைசெய்கின்றது.

இந்தத் திட்டமான சட்டத்தின் அடிப்படையில் இரண்டு கருத்துகளைச் சொல்லலாம். ஒன்று, ஒரே காரண காரியத்திற்காக ஒருவன் இரண்டு முறை நீதிமன்றத் தீர்ப்புக்கு ஆளாகவேண்டிய தில்லை. ஏனென்றால், இரண்டு முறை, மூன்று முறை, ஒரே ஆள் ஒரே காரணத்துக்காக வழக்குக்கு ஆளாகலாம் என்பது தீராத தொல்லையில் முடியும்.

மற்றொன்று, இந்தக் கருத்தின் அடிப்படையில் பேல்வரிச் சட்டமாகக் கொள்ள வேண்டியது, எந்த ஒரு வழக்குக்கும் முடிவு ஒன்று உண்டு என்பதாகும். அந்த முடிவு தவறோ, சரியோ, என்பதன்று பிரச்சினை. அப்படி முடிவை ஒப்புக் கொள்ளாவிடில் எந்தத் தீர்ப்பையும் தவறானது என்று வாதாடி மறுவழக்குப் போட அனுமதித்தால் வழக்குகளுக்கு முடிவே இராது.

இந்தச் சட்டத்திற்கு ஒரு சில விதிவிலக்குகள் இருக்கின்றன. வழக்கில் ஒரு கட்சிக்காரர் தம்மை எதிர்த்து வழங்கப்பட்ட தீர்ப்பு 1872ஆம் ஆண்டு இந்தியச் சான்றுச் சட்டம் 44 ஆவது பிரிவின் படி (The Indian Evidence Act, 1872, Section 44) மற்றக் கட்சிக் காரரின் சூது சூழ்ச்சியால் பெற்ற தீர்ப்பு, அல்லது தீர்ப்பை வழங்கிய அந்தக் குறிப்பிட்ட நீதிமன்றம் தகுதியற்றது (incompetent) என்பதைக் காரணமாகக் கூறி அந்த வழக்கின் தீர்ப்பை நிராகரிக்கக் கோரி மறு வழக்குப் போடலாம்.

அதுபோல இந்தத் 'தீர்ப்பளிக்கப்பட்ட காரியம்' என்ற சட்ட ஒழுங்கு பின் இயற்றப்பட்ட சட்டத்திற்கு எதிராகப் பயன்படுத்த முடியாது. காரணம், பின் ஏற்பட்ட சட்டத்தினால் முந்தின கட்சிக்காரர்களின் உரிமைகள் மாற்றப்பட்டிருக்கலாம்.

அடுத்தபடியாக, 'தீர்ப்பளிக்கப்பட்ட காரியம்' அல்லது 'முன் தீர்ப்பின் தடை' என்ற சட்டப் பாதுகாப்பை ஒரு கட்சிக்காரர், மற்றவர்க்குத் தெரிந்தோ, தெரியாமலோ, விட்டுக் கொடுத்திருந்தால் (Waive) மறு வழக்குத் தடையின்றி நடைபெற வாய்ப்பிருக்கின்றது. அப்படி விட்டுக் கொடுக்கப்படுமானால் மேல் வழக்குகளில் (Appeals) இந்தச் சட்ட ஒழுங்கை அவர் தமக்குச் சாதகமாக்கிக் கொள்ள முடியாது.

வழக்குத் தொடர வேண்டிய இடம்

நாம் வழக்குத் தொடர்வதற்கு முன் எந்நீதி மன்றத்தில் அந்த வழக்கைத் தொடர வேண்டும் என்பதை நிர்ணயித்துக் கொள்ளவேண்டும். இந்தச் சட்டத் தொகுப்பின் பிரிவுகள் 16, 17, 18, 19, 20-ஆகியவற்றில் இந்நிலை பற்றிக் குறிப்பிடப் பட்டிருக்கின்றது. அதன்படி தொடரப்படும் வழக்கு எந்த இடத்தில் உள்ள நீதிமன்றத்தில் என்று கணிப்பதற்கு நீதிமன்றங்களின் நிதிநிலை அதிகார வரம்பு, வட்டார அதிகார வரம்பு, அதனோடு வழக்கு அசையாச் சொத்தைப் பற்றியதாக இருந்தால் அல்லது மற்றவருக்குச் செய்த தீமைக்காக நட்ட ஈடு கோரும் வழக்காயிருந்தால், அன்றி அசையும் பொருளைப் பற்றியதாயிருந்தால், அல்லது அதற்கு ஆன சேதம் பற்றிய வழக்காயிருந்தால் அவைகளின் தன்மையைப் பொறுத்து வழக்காடும் நீதிமன்றத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

நிதிநிலை, மற்றும் வட்டார அதிகார வரம்புக்கு உட்பட்டு அசையாச் சொத்துகளைப் பற்றிய வழக்குகள் அந்தச் சொத்துகள் இருக்கும் இடத்தில் எந்த நீதிமன்றத்திக்கு வட்டார, நிதிநிலை அதிகார வரம்பு இருக்கின்றதோ, அந்த நீதிமன்றந்தான் வழக்கைக் கவர முடியும்.

அவற்றுள் ஒன்று, அசையாச் சொத்தைத் திரும்பப் பெறவும், திரும்பப் பெறும் போது, வாடகைப் பாக்கியையும் சொத்தின் இலாபத்தோடும் பெறுதலுக்கான வழக்கு.

இரண்டாவதாக, அசையாச் சொத்தைப் பாகப் பிரிவினை செய்யக்கோரும் வழக்கு.

மூன்றாவதாக, அசையாத் சொத்தை அடைமானம் வைத்தது சம்பந்தமான, அந்தச் சொத்தை மீட்பதற்கான, விற்பதற்கான, அடைமான மீட்புரிமையைத் தடைசெய்வதற்கான வழக்குகள்.

நான்காவதாக, அசையாச் சொத்தின் மீதுள்ள உரிமையோ, அக்கறையோ (Interest) பற்றிய வழக்கு.

ஐந்தாவதாக, அசையாச் சொத்துக்கு இணைக்கப்பட்ட நட்டத்திற்கு ஈடு கேட்டுத் தொடரப்படும் வழக்கு.

ஆறுவதாக, நீதிமன்றத்தின் ஜப்தியின் கீழ் உள்ள அசையும் பொருளைத் திரும்பப் பெறுவதற்கான வழக்கு முதலியவை. அந்தச் சொத்து இருக்கும் இடத்தின்மீது நிதிநிலை வட்டார அதிகார வரம்பு செலுத்தும் நீதிமன்றங்களில்தான் வழக்குத் தொடரப்பட வேண்டும்.

ஆனால் அசையாச் சொத்துக்கு இணைக்கப்பட்ட நட்டத்திற்கு ஈடு கேட்டு, அது சம்பந்தப்பட்ட பிரதிவாதியோ, அவர்பிரதி நிதியோ இருக்கும் இடத்தில் வழக்குப் போட்டால் அதன்மீது பிரதிவாதியோ, அவர் பிரதிநிதியோ, நீதிமன்றத்தின் கட்டளைக்குக் கட்டுப்படுவதன் மூலம் கோரப்படும் பலன் (Relief) கிடைக்குமானால் பிரதிவாதி வாழும் அல்லது தொழில் செய்யும் இடத்திலுள்ள, நிதிநிலை வட்டார அதிகார வரம்புக்குட்பட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடரலாம்.

சொத்து என்பது நம் நாட்டில் உள்ள சொத்தை மட்டுமே குறிப்பதாகும்.

அசையாச் சொத்துக்கு இணைக்கப்படும் தீங்காக எல்லை மீறுதல் (Trespass), தொல்லை தருதல் (Nuisance), வசதியுரிமை மீறுதல் (Infrigement of Easement) முதலியவற்றைக் குறிக்கும்

அசையும் சொத்து என்பது அதனுடைய சொந்தக் காரனுடனேயே இருக்கும் என்று கருதப்படும்.

இரண்டு இடங்களில் வழக்குத் தொடரலாம் என்றிருந்தால் வழக்குத் தொடருகின்ற இடத்தைத் தேர்ந்தெடுத்துக்கொள்வது வாதியின் விருப்பத்தைப் பொறுத்தது. ஒருவரின் அசையாச் சொத்துகள் பல்வேறு இடங்களில் இருக்குமானால் அதைப்பற்றிய வழக்கு, அச்சொத்துக்கு ஏற்பட்ட நட்ட ஈட்டுக்கான வழக்குப் போன்றது ஆதலால், அந்தச் சொத்துகள் இருக்கும் ஏதாவது ஓர் இடத்தில் தொடரலாம். ஆனால், வழக்குச் சம்பந்தப்பட்ட முழுக்காரணமும், அந் நீதிமன்ற நிதிநிலை அதிகார வரம்பிற்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும். இது 17 ஆவது பிரிவில் கூறப்பட்டிருக்கிறது.

இந்த சட்டத் தொகுப்பில் 18ஆம் பிரிவில் ஓர் அசையாச் சொத்தை அது எந்த வட்டார அதிகார வரம்புக்குட்பட்டது என்று நிர்ணயிக்க முடியாதிருந்தால், ஏதாவது ஒரு நீதிமன்றம் அவ்வாறு நிர்ணயிக்க முடியாதபடி சந்தேகம் இருப்பதற்கான காரணத்தைக் குறித்துக் கொண்டு அந்த வழக்கை விசாரித்து முடிவெடுக்கலாம்.

இதுபோல யாராவது ஒருவருக்குத் தீங்கிழைக்கப்பட்டால் அதற்கான நட்ட ஈடு கேட்டு வழக்குத் தொடருதல். அதேனு அசையும் சொத்திற்குத் தீங்கு இழைக்கப்பட்டதின் காரணமாக நட்ட ஈடு கோரும் வழக்கும், அந்தத் தீங்கு இழைக்கப்பட்ட இடத்திலோ பிரதிவாதி வாழ்கின்ற அல்லது தொழில் செய்கின்ற, அல்லது வேலை செய்கின்ற இடத்திலோ வழக்குப் போடலாம். அப்படி எந்த நீதிமன்றத்தில் வழக்குப் போடுதல் என்பது வாதியின் விருப்பத்தைப் பொறுத்தது.

எடுத்துக் காட்டாக, அருணாசலம் என்பவர் டில்லியில் வசிக்கின்றார்; செல்வம் என்பவரைக் கல்கத்தாவில் அடித்து விடுகின்றார். இதற்கான நட்ட ஈடு கோரும் வழக்கைச் செல்வம் என்பவர் டில்லியிலோ, கல்கத்தாவிலோ போடலாம்.

மற்றொன்று, ஆறுமுகம் என்பவர் டில்லியில் வாழ்ந்து வருகின்றார். பாலன் என்பவரைப் பற்றி மானபங்கமாக எழுதிக் கல்கத்தாவில் பிரசுரிக்கின்றார். பாலன் கல்கத்தாவிலோ, டில்லியிலோ, நட்ட ஈடு கோரி வழக்குப் போடலாம்.

ஏனைய வழக்குகளை வழக்குக்கான காரணம் நடந்த இடத்திலோ, பிரதிவாதி வாழ்கின்ற இடத்திலோ, அவர் தொழில் புரியும் இடத்திலோ, சம்பளத்திற்குப் பணிபுரியும் இடத்திலோ தொடரலாம் என்பதாகப் பிரிவு 20-ல் கூறப் பட்டிருக்கின்றது.

பல பிரதிவாதிகள் இருக்கும் சந்தர்ப்பத்தில் எவரேனும் ஒரு பிரதிவாதி வாழும், தொழில் புரியும், அல்லது சம்பளத்திற்குப் பணிபுரியும் இடத்தில் வழக்குத் தொடரலாம். பல பிரதிவாதிகள் இருக்கும் தருணத்தில் ஒரு பிரதிவாதி வாழும், தொழில் புரியும், அல்லது சம்பளத்திற்குப் பணிபுரியும் இடத்தில் வழக்கைத் தொடரும் போது மற்றப் பிரதிவாதிகளின் சம்மதம் தேவை. அல்லது வழக்குத் தொடரும் நீதிமன்றம் வேறு இடங்களில் இருக்கும் பிரதிவாதிகளையும் இந்த வழக்கில் சேர்ப்பதற்கு அனுமதி (Leave) வழங்க வேண்டும்.

அது மட்டுமன்று; வழக்குக்கான காரணத்தின் ஒரு பகுதி நடந்த இடத்திலும் வழக்குத் தொடரலாம்.

முதல் விளக்கமாக, ஒருவர் ஓரிடத்தில் நிரந்தரமாக வசிக்கின்றார். இன்னோரிடத்தில் தாற்காலிகமாக அவர் வசித்து வருவதாக வைத்துக் கொண்டால், இரண்டு இடங்களிலும் அவர் வாழ்ந்து வருவதாகக் கொள்ளப்படும். எனவே தாற்காலிகமாக அவர் வசித்து வரும் இடத்தில் வழக்குக் காரணம் எழுந்தால் அந்த இடத்திலும் வழக்கைத் தொடரலாம்.

இரண்டாவதாக, கூட்டு நிறுவனம் (Corporation) மீதான வழக்குகளை இந்தியாவில் அதனுடைய பிரதான அலுவலகம் இருக்கும் இடத்திலும் வழக்குக்கான காரணம் நடந்த இடத்திலும், அந்தக் கூட்டு நிறுவனத்தின் துணை அலுவலகம் இருக்கும் இடத்திலும் தொடரலாம்.

எடுத்துக் காட்டாக, கீழ்க்கண்ட இரண்டு விளக்கங்கள் தரப்பட்டிருக்கின்றன:

ஒன்று, ஆறுமுகம் என்ற வியாபாரி கல்கத்தாவிலிருக்கின்றார். பார்த்திபன் என்பவர் டில்லியில் வியாபாரம் செய்கின்றார். பார்த்திபன் தன்னுடைய பதிலாளைக்கொண்டு (Agent) ஆறுமுகத்தின் பொருள்களை வாங்குகின்றார். அதனோடு பார்த்திபன் ஆறுமுகத்தை, தன்னால் வாங்கப்பட்ட பொருளைக் கிழக்குப் பிராந்திய ரயிலில் ஒப்படைக்கக் கேட்டுக் கொண்டார். அதற்கிணங்க ஆறுமுகம் கல்கத்தாவில் குறிப்பிட்ட ரயில் துறையில் கொடுக்கின்றார். இது தொடர்பான வழக்கை ஆறுமுகம் டில்லியிலோ, கல்கத்தாவிலோ தொடரலாம்.

இரண்டாவதாக, 'அ' என்பவர் சிம்லாவில் வசிக்கின்றார். 'இ' என்பவர் கல்கத்தாவிலும், 'உ' என்பவர் டில்லியிலும் வசிக்கின்றார்கள். அ. இ. உ. என்ற மூவரும் காசியில் இருக்க, 'இ' யும் 'உ' வும் சேர்ந்து வாக்குறுதிக் கடன் சீட்டு (Promissory Note) கேட்ட மாத்திரத்தில் பணம் திரும்பக் கொடுக்கும்படியாக 'அ' வுக்கு எழுதிக் கொடுக்கின்றார்கள். இந்த வாக்குறுதிக் கடன் சீட்டுச் சம்பந்தமாகப் பணம் திரும்பிப்பெற, 'அ' என்பவர் 'இ,' 'உ' என்பவர்கள் மீது காசியிலும் வழக்குத் தொடரலாம்; ஏனென்றால் வழக்குக்கான காரணம் அங்கு எழுந்துள்ளது. மேலும் 'இ', 'உ' பேரில் கல்கத்தாவிலும் வழக்குத் தொடரலாம்; ஏனென்றால் அங்கு 'இ' வசிக்கின்றார். அது மட்டுமன்றி டில்லியிலும் வழக்குத் தொடரலாம். ஏனென்றால் அங்கு 'உ' வசிக்

கின்றார். கல்கத்தாவிலோ டில்லியிலோ வழக்குப் போட்டு, அந்த இடத்தில் வசிக்காத பிரதிவாதிகள் அதனை எதிர்த்தால், குறிப்பிட்ட நீதி மன்றத்தின் அனுமதியோடு வழக்குத் தடையின்றி நடைபெறலாம்.

இந்தப் பிரிவின் அடிப்படைக் கொள்கை என்னவென்றால் பிரதிவாதி அளவுக்கு மிஞ்சிய சிரமில்லாமல் வழக்கில் எதிர் வழக்காட வகை செய்ய வேண்டுமென்பதாகும்.
எடுத்துக்காட்டு:

Union of India Vs Sri Ladulal
AIR 1963 S. C. 1681.

வெளி நாட்டு நீதிமன்றத் தீர்ப்பின் பேரில் போடப்படும் வழக்கும் பிரதிவாதி இருக்கும் இடத்தில் அல்லது தொழில், வேலை செய்யும் இடத்தில்தான் போடவேண்டும். பிரதிவாதியின் அசையாச்சொத்து இருக்கும் இடத்தில் மட்டும் வழக்குப் போட முடியாது. கீழ்க்கண்ட சென்னை உயர் நீதிமன்றத் தீர்ப்பே அதற்குச் சான்று பகரும்.

Rajaratnam Vs Muthusamy
1958 (1) M. L. J. 194.

இந்தச் சட்டத் தொகுப்பின் 21ஆம் பிரிவின்படி நீதிமன்றத்தின் வட்டார அதிகார வரம்பு இருக்கின்றதா, இல்லையா என்று முடிவு செய்ய அசல் நீதிமன்றம் தவறி விட்டால், பின்பு மேல் வழக்கு நீதிமன்றத்திலோ (Appellate Court), சீராய்வு செய்யும் நீதிமன்றத்திலோ (Revisional Court) அந்த அதிகார வரம்பைப் பற்றி நிர்ணயம் செய்யுமாறு கேட்கலாம்.

ஆனால் ஒரு நீதி மன்றத்திற்கு அறவே அதிகார வரம்பு இல்லை என்ற நிலையை, எந்த நீதிமன்றத்திலும், அதாவது அசல், மேல் நீதிமன்றம் ஆகியவற்றின் விசாரணையின் போது எடுத்துக் காட்டி, அதிகார வரம்பேதுமில்லா நீதிமன்றம் தந்த தீர்ப்புச் செல்லுபடியாகாமல் செய்யலாம். தன்னிலேயே, அதிகார வரம்பே இல்லாத நீதிமன்றம், வாதி, பிரதிவாதி இருவரும் அந்த நீதிமன்றத்தின் அதிகாரத்திற்குக் கட்டுப்படுவதாக ஒப்புக் கொண்டாலும் அந் நீதிமன்றம் அதிகாரம் எதையும் பெறாது. ஆகவே, அதிகார வரம்பு என்பது கட்சிக்காரர்கள் விட்டுக் கொடுப்பதால் நீதிமன்றத்தில் நிலவி விடாது என்பது திண்ணம்.
எடுத்துக் காட்டுகள்:

(1) Ledgard Vs Bull
(1887) 13 I. A. 134=9. All. 191.

(2) Meenakshi Naidu Vs Subramania Sastri
(1887) 14 I. A. 160=11 Mad. 26.

ஒரு நீதிமன்றம் தன்னிலேயே அதிகார வரம்பேதும் பெற்றிருக்கவில்லை என்றால், ஆரம்பத்தில் அல்லது வழக்கு நடை பெற்றுக் கொண்டிருக்கும்போது நீதிமன்றத்தின் அதிகார வரம்பின்மையைச் சுட்டிக்காட்டி எதிர்ப்புத் தெரிவிக்காமல் அசல் மேல் நீதிமன்றத்தில் விடுபட்டுப்போயினும், உச்சி நீதிமன்றத்தில், அந்த நீதிமன்றத்தின் அதிகார வரம்பின்மையைக் காரணமாக வைத்து அத்தீர்ப்பு இல்லாத ஒன்றாக ஆக்கப்படலாம். எடுத்துக்காட்டு:

Setrucherla Vs Maharaja of Jaipure.
1919, 46, I. A. 151=42 Mad. 813.

இந்த வழக்கு, அசையாச் சொத்து அடைமானம் வைக்கப் பட்டது சம்பந்தமானது. ஒரு பகுதிச் சொத்துகள் விசாகப் பட்டணத்திலும் மற்றவை குறிப்பிட்ட மாவட்டத்திலும் இருந்தன (Scheduled District) அந்த மாவட்டமோ இந்தச் சட்டத்தொகுப்புப் பிரிவு 1-ன் விளக்கப் பகுதியில் விதிவிலக்களிக் கப்பட்டிருக்கின்றது. எனவே, மற்றப்பகுதிச் சொத்து இச் சட்டத் தொகுப்பின்கீழ் வரவில்லை. ஆதலால், குறிப்பிட்ட நீதிமன்றத்திற்கு அந்த மற்றப்பகுதிச் சொத்துகளின் மீது அதிகார வரம்பு எதுவும் கிடையாது என்று எதிர்ப்புத் தெரிவிக் கப்பட்டது. ஆனால், நீதிமன்றம் பிரிவு 21-ல் அந்த எதிர்ப்பை நிராகரித்து விட்டது. ஆனால், பிரிவு கவுன்சில் (Privy Council) என்ற இங்கிலாந்தில் உள்ள இன்றைய இந்தியாவின் உச்சி நீதிமன்றம் அந்த எதிர்ப்பை ஏற்றுக்கொண்டு, கீழ் நீதிமன்றத் தீர்ப்பை நேர்மாறாக்கியது. இந்தச் சட்டத் தொகுப்பின்படியே ஒரு வட்டாரத்தின் மீது நீதி மன்றத்திற்கு அதிகார வரம்பு வழங் கப்படாமலிருக்கும்போது அதன்மீது செலுத்தப்படும் அதிகாரம் பயனற்றது. இன்னும் கொஞ்சம் விரிவாகச் சொல்லப்போனால் வெளிநாட்டில் நம் சட்டம் அதிகார வரம்பேதும் இல்லா நிலையில் இருப்பது போலத்தான் நம் நாட்டின் ஒரு பகுதியில் நீதிமன்ற அதிகார வரம்பு, சட்டப்படி மறுக்கப்பட்டிருப்பதும் ஒப்பாகும்.

ஆனால், சாதாரணமாகச் சட்ட மறுப்பு இல்லாத நிலையில் வட்டார சம்பந்தமான அல்லது நிதிநிலை சம்பந்தமான நுட்பக்

குறைபாடுகள் (Technical depects) அசல் நீதிமன்றத்தில் எதிர்க் கப்படவில்லையானால், மறுபடியும் மேல் வழக்கு மட்டத்தில் மறுக்கப்பட முடியாத ஒன்றாகும். உதாரணமாக, 'அ' நீதிமன் றத்தில் நடத்த வேண்டிய வழக்கு ஒன்று 'இ' நீதிமன்றத்தில் நடத்தப்படுகிறது என்று வைத்துக் கொள்வோம். வட்டார அதிகார வரம்பைத் தாண்டிய அந்த நிலையில் அது நுட்பக் குறைபாடு என்று கருதப்படும். ஆனால், அசல் நீதிமன்றத்தில் அதற்கு மறுப்புத் தெரிவித்தால் எந்த நீதிமன்றம் வட்டார அதிகாரத்தைப் பெற்றிருக் கின்றதோ, அந்த நீதிமன்றம் மட்டுமே அந்த வழக்கை விசாரித்தக்கத் தகுதி பெற்றதாகும். அதற்கு மாறாக 'இ' நீதிமன்றத்தில் வழக்கை, விசாரணைக்கு எடுக்கும் போது, மாற்றுக் கட்சியால் எதிர்ப்புத் தெரிவிக்கப் படாமல் விடுபட்டு விசாரணை முடிந்து தீர்ப்பளிக்கப்பட்டு விட்டால், பிறகு மேல் வழக்கு மன்றத்தில் எதிர்ப்புத் தெரிவிக்கக் கட்சிக்காரர்களுக்கு உரிமையில்லை. காரணம், அந்த உரிமையை அவர்கள் விட்டுக் கொடுத்து விட்டதாகக் கொள்ளப்படும்.

அதுபோலவே, நிதிநிலை அதிகார வரம்பிலும், நுட்பமான குறை காணப்பட்டு, அந்தக் குறை விசாரணை நீதி மன்றத்தில் (Trial Court) ஆட்சேபிக்கப் படவில்லையானால் அந்தக் குறை பாட்டைப் பற்றி மீண்டும் மேல் வழக்கு மன்றத்தில் எழுப்புகின்ற உரிமையைக் கட்சிக்காரர்கள் இழந்து விடுகின்றார்கள். அந்த உரிமை விட்டுக்கொடுக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றது.

ஆனால் இந்த நுட்பக் குறைபாட்டினால் அநீதி விளைந்திருந் தால், அல்லது நியாயம் வழங்கத் தவறியிருந்தால் அந்த விசாரணை நீதி மன்றத்தீர்ப்பு மேல் மட்டத்தில் மாற்றியமைக்கப்படும். எடுத்துக் காட்டுகள் :

1. **Kiron Singh Vs Chaman Paswan.**
   AIR 19'4 S.C. 340 — 1954. S.C. J. 514.

2. **Zamindar of Ettaiyapuram Vs. Chidambaram**
   (1920) 40 Madras. 675.

பொதுவாக ஒரு வழக்கைப் பல நீதிமன்றங்களில் தொடர முடியும் என்ற நிலையில் எந் நீதிமன்றத்தில் தொடருவது என்பது வாதியின் விருப்பத்தைப் பொறுத்தது. ஒன்றுக்கு மேற்பட்ட நீதி மன்றங்களில் வழக்குத் தொடரலாம் என்றிருக்கும்போது ஒரு நீதி

மன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருக்குமானால், அந்த நீதிமன்றத்திலிருந்து வேறு நீதிமன்றத்திற்கு மேற்படி வழக்கை மாற்றப் பிரதிவாதி மற்ற எல்லாக் கட்சிக்காரர்களுக்கும் அறிவிப்புக் கொடுத்து விட்டு மனுச் செய்து கொள்ளலாம். அந்த மனுவின் பேரில் ஏனைய கட்சிக்காரர்களின் எதிர்ப்பு, மாற்றுக் கருத்துகளை விசாரித்து அந்த மனுவின் பேரில் நீதிமன்றம் குறிப்பிட்ட வழக்கை வேறு நீதிமன்றத்திற்கு மாற்றுவதா, வேண்டாமா என்று முடிவு கூறும்.

இது போன்ற பிரதிவாதியின் மனுவில் சாதாரணமாக வழக்கை மாற்றுவது மிகவும் சிரத்தையோடு கையாளப்பட வேண்டிய காரியம் ஆகும். ஏனென்றால், வழக்கைத் தொடர்வது எந்த நீதிமன்றத்தில் தொடரலாம் என்று தேர்ந்தெடுக்கும் சலுகை வாதிக்கு மட்டும் அளிக்கப்படுவதால், வழக்கைத் தொடரப்பட்ட ஒரு நீதிமன்றத்திலிருந்து மற்றொன்றுக்கு மாற்றுவதானால், நீதியின் காரணமாக, அல்லது நீதி சம்பந்தமான வலுவான காரணங்களுக்காகவே இருக்கவேண்டுமே தவிர, மிகச் சாதாரணக் காரணத்திற்காக இருக்கக்கூடாது.

அப்படிப் பிரதிவாதி ஒரு வழக்கை ஒரு நீதிமன்றத்திலிருந்து இன்னொரு நீதிமன்றத்திற்கு மாற்ற வேண்டும் என்று கோரும் மனுவை எந்த நீதிமன்றத்தில் கொடுக்க முடியும் என்று பார்ப்போம். ஒன்றுக்கு மேற்பட்ட நீதிமன்றங்கள் அந்த வழக்கை ஏற்றுக் கொள்ளக்கூடிய தகுதி பெற்றிருந்தால், அந்த நீதிமன்றங்களிலிருந்து, மேல் வழக்கை (Appeal) ஏற்றுக் கொள்ளும் பொது மேல் நீதிமன்றம் (Common Appellate Court) வழக்கை மாற்றுவதற்கான மனுவை விசாரிக்கத் தகுதி படைத்தது. எனவே, அந்த நீதிமன்றத்தில் பிரதிவாதியின் மனு தாக்கல் செய்யப்படலாம்.

வழக்கை விசாரிக்கும் நீதிமன்றம், அதே வழக்கை விசாரிக்கத் தகுதி பெற்ற ஏனைய நீதிமன்றங்கள் இரண்டுக்கும் மேற்பட்ட நீதிமன்றங்களுக்குக் கீழ் இயங்கினால், அந்த மேல் நீதிமன்றங்களுக்கு மேலுள்ள உயர்நீதிமன்றத்தில் வழக்கை மாற்றுவதற்கான மனுக்கொடுக்கலாம்.

அதே வழக்கை விசாரிக்கத் தகுதி பெற்ற நீதிமன்றங்கள், உயர்நீதிமன்றங்களின் கீழ்ப் பல இயங்கினால், வழக்கு எந்த நீதிமன்றத்தில் இருக்கின்றதோ, அந்த நீதிமன்றத்திற்கு நேர்மேலுள்ள உயர் நீதிமன்றம் மட்டுமே அந்த வழக்கை வேறு நீதிமன்றத்திற்கு மாற்றக் கோரும் மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளத் தகுதி பெற்றதாகும்.

இது தவிர, ஒரு வழக்கை ஒரு நீதிமன்றத்திலிருந்து வேறு ஒரு நீதிமன்றத்திற்கு மாற்றும் அதிகாரம் உயர் நீதிமன்றத்திற்கும் உண்டு மேற்படி அதிகாரம் இச் சட்ட தொகுப்பின் 24ஆவது பிரிவில் தரப்பட்டிருக்கின்றது. இது, வழக்கை வேறு நீதிமன்றத்திற்கு மாற்றக் கோரியவரின் மனுவில் அது பற்றிய அறிவிப்பு, இதர எல்லாக் கட்சிக்காரர்களுக்கும் கொடுக்கப்பட்டு, அவர்களுடைய ஆட்சேபணைகளைக் கேட்டறிந்து, அவர்கள் அந்த மனுமீது தாங்கள் நேரடியாக விசாரிக்கப்பட வேண்டுமென்றால் அதன்படி நேர் விசாரணை செய்து, அந்த மனு பற்றி முடிவு செய்யும் அதிகாரம் ஆகும். இஃதன்றி, உயர் நீதி மன்றமும் மாவட்ட நீதிமன்றமும், தன்னிச்சையாக (Suo Mohu) யாரும் கேட்டுக்கொள்ளாத போதும் ஒரு நீதிமன்றத்திலிருக்கின்ற வழக்கை மற்றொரு நீதிமன்றத்திற்கு மாற்றும் அதிகாரத்தை கொண்டிருக்கின்றன.

அப்படி மாற்றப்படக்கூடிய வழக்கு எந்த விசாரணை நிலையிலிருந்தாலும் சரி, அது அசல் வழக்காகவும் இருக்கலாம் அல்லது மேல் வழக்காகவும் (Appeal) இருக்கலாம் அல்லது இடைப்பட்ட எத்தகைய மனு அல்லது நடவடிக்கையாகவும் இருக்கலாம். அத்தனையும் ஒரு நீதிமன்றத்தின் விசாரணையிலிருந்து மற்றொரு நீதி மன்றத்திற்கு மாற்றப்படக்கூடியவை.

இந்த அதிகாரம் மாற்றிக்கொள்வதோடு, நில்லாமல் அந்த வழக்கையோ, மேல் வழக்கையோ, அல்லது இடைப்பட்ட எந்த நடவடிக்கையையோ (Proceedings), உயர் நீதிமன்றமோ, அல்லது மாவட்ட நீதிமன்றமோ, தன்னிடமே கொண்டு வரச் செய்து, அந்த வழக்கை விசாரித்து முடித்து விடலாம். அவ்வாறின்றித் தனக்குக் கீழ்ப்பட்ட அதிகார வரம்பு படைத்த வேறு எந்த நீதிமன்றத்திற்கும் மாற்றி, அங்கு வழக்கை நடத்தி முடிக்கச் சொல்லலாம். மேலும் மாற்றப்பட்ட வழக்கையோ, மேல் வழக்கையோ, அல்லது ஏனைய நடவடிக்கையையோ, திரும்பவும் முன்பு விசாரணை செய்த நீதிமன்ற விசாரணைக்கு அனுப்ப ஆணையிடும் அதிகாரமும் அவை பெற்றவை. அவ்வாறு ஒரு நீதிமன்றத்திலிருந்து மற்ற நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்ட வழக்குகள், மாற்றல் உத்தரவில் கொடுக்கப்பட்ட ஆலோசனைப்படி மாற்றப்பட்ட வழக்கு விட்ட இடத்திலிருந்தோ அவ்வழக்கில் புதிதாக மறு விசாரணையோ தொடரலாம்.

இந்தச் சட்டப் பிரிவின்படி கூடுதல் நீதிபதிகளும் (Additional Judges), துணை நீதிபதிகளும் (Assistant Judges) மாவட்ட நீதி பதிகளுக்குக் கீழ்ப்பட்டவர்களாகக் கருதப்படுகின்றார்கள்.

இந்த சட்டப்பிரிவின் கீழ், சிறு காரண நீதிமன்றத்திலிருந்து வேறு நீதிமன்றத்திற்கு எந்த வழக்கும் மாற்றப்பட்டால் அந்நீதிமன்றம் சிறு காரண நீதிமன்றமாக அந்த வழக்கைப் பொறுத்த மட்டில் கருதப்படும்.

வழக்கை ஒரு நீதிமன்றத்திலிருந்து மற்றொரு நீதிமன்றத்திற்கு மாவட்ட நீதிமன்றமோ, உயர்நீதிமன்றமோ, தன்னிச்சையாக மாற்றினால், அவ்விதம் மாற்றும் போது, கட்சிக்காரர்கள் ஆட்சேபனை கூறி நிறுத்த முடியாது. அது தவிர மற்றக் கட்சிக்காரர்களுக்கு நீதிமன்றம் அறிவிப்புக் கொடுக்க வேண்டிய கட்டாயமும் கிடையாது.

இவ்விதமாக ஒரு வழக்கை, ஒரு நீதிமன்றத்திலிருந்து மற்றொரு நீதிமன்றத்திற்கு மாற்றும் போது மிக முக்கியமாகக் கவனிக்க வேண்டியது, மற்ற நீதிமன்றம் அந்தக் குறிப்பிட்ட வழக்கை விசாரிக்கத் தகுந்த அதிகார வரம்பைக் கொண்டதாக இருக்க வேண்டும் என்பதுதான். அதிகார வரம்பில்லாத நீதிமன்றத்திற்கு வழக்கை மாற்றக் கூடாது. அவ்விதமாக மாற்றுவதால் மட்டும் அந்நீதிமன்றம் அதிகாரத்தைப் பெற்று விடாது. எடுத்துக்காட்டு :

Srinivasa Vs. O. A. (1915) 38 mad. 21.

வழக்கை நிறுவுதல் (Institution of Suit)

பிராது (Plant) கொடுப்பதன் மூலம், அல்லது வேறு எந்த வகையில் வழக்கு நிறுவவேண்டும் என்று சட்டம் வரையறுக்கின்றதோ அந்த வகையில் நிறுவப்படும். ஆனால், இப்போது பிராது தாக்கல் செய்வது என்கிற முறைதான் வழக்கிலிருக்கின்றது.

வழக்கை நிறுவதிலிருந்து அதை எப்படி நடத்துவது என்ற நடைமுறையை வகுக்கும் இன்றியமையாத சட்டக் கோட்பாடுகள் 26 முதல் 35 A பிரிவுகளில் தரப்பட்டிருக்கின்றன. ஆனால், வழக்கை நடாத்தும் வகைப்பற்றிய விதிமுறைகள் 4 ஆவது 7 ஆவது கட்டளைகளிலும் அதன்கீழ் உள்ள விதிகளிலும் உள்ளன.

பிராது என்பது எப்படி இருக்க வேண்டும் என்ற வரன்முறையுண்டு. அதன்படி பிராது 7 ஆவது கட்டளையில் உள்ள 1 ஆவது விதிப்படி தயார் செய்யப்படுதல் வேண்டும். பிராது அல்லது வழக்குரை கீழ்க் கண்டசாராம்சங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

எந் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப் படுகின்றதோ, முதலில் அந் நீதிமன்றத்தின் பெயர் இடம் பெறுதல் வேண்டும். அடுத்து, வழக்கின் எண் குறிப்பிடப்படல் வேண்டும், எடுத்துக் காட்டாக, அசல் வழக்கு எண் 1973 என்று வழக்குத் தொடரப் படும் ஆண்டும் குறிப்பிடப்பட வேண்டும். காரணம் ஒவ்வொரு வழக்குக்கும் வரிசைப்படி எண் வழங்கப்படுகின்றது. அந்த எண் ஒவ்வோர் ஆண்டும் அதற்கென்று, உள்ள ஒரு வழக்குப் பதிவுப் புத்தகத்தில் பதியப்பட்டு, வாதி, பிரதிவாதிகளின் பெயர்களோடு என்ன காரணத்திற்காக வழக்குப் போடப்பட்டிருக்கின்றது என்ற சிறு குறிப்பும் அதில் இருக்கும். அதையடுத்து முதலில் வாதியின் பெயர், அதற்கு நேரே 'வாதி' என்று குறிக்க வேண்டும். அதற்குக் கீழ் 'எதிராக' (Versus) என்று எழுத வேண்டும். அடுத்துப் பிரதிவாதியின் பெயர் எழுதி அதற்கு நேரே பிரதிவாதி என்று குறிக்க வேண்டும். அடுத்தாற் போல் எந்தச் சட்டப் பிரிவின்கீழ் வழக்குரை தாக்கல் செய்யப்படுகின்றது என்பதைக் குறிக்கவேண்டும். வழக்குரைக் கட்டளை ஏழு, விதி ஒன்றின் கீழ்த் தாக்கல் செய்யப்பட்டது என்று குறிக்க வேண்டும்.

மேற் குறிப்பிட்ட சட்டக்காரணக் குறிப்பு (Cause tittle) முடிந்து வழக்குரைப் பகுதி தொடங்கும் முதல் கட்டமாக வாதியின் பெயர், அல்லது மேலே குறிப்பிட்ட வாதி என்று எழுதி அவருடைய தந்தையின் பெயர், வயது, அவர் மதம், வசிக்கும் இடம் முதலிய விவரக் குறிப்புகள் கொடுக்கவேண்டும். ஏனென்றால், நீதிமன்றத்திலிருந்து வாதிக்கு ஏதாவது அறிவிப்புக் கொடுக்க வேண்டுமானால் இந்த விளக்கக் குறிப்பு மிகவும் அவசியமாகின்றது.

அதுபோலவே, அடுத்த அடியில் பிரதிவாதியின் பெயர் அல்லது மேலே குறிப்பிட்ட பிரதிவாதி என்று தொடங்கி, அவருடைய தந்தையின் பெயர் (தெரிந்திருந்தால் அதைக்,) குறிப்பிடவேண்டும். திருமணமான பெண்ணாக இருந்தால் அவரது கணவன் பெயரைக் குறித்து, சுமாரான வயது, மதம், வசிக்கும் இடம் என்பன கூறி நீதிமன்ற அறிவிப்பு, அல்லது அழைப்பாணை அனுப்புவதற்கு மேற்குறிப்பிட்ட முகவரி என்பதாகக் குறிக்க வேண்டும்.

வாதியோ, பிரதிவாயோ, வயது வராதவர் (minor) ஆக இருப்பின், அன்றி மனக் கோளாறு உள்ளவராக இருப்பின், அது பற்றிய குறிப்பும், அதில் வயது வராதவருடைய சுமாரான வயது என்னவென்ற குறிப்பும், அவருக்காக வழக்காடும் பாதுகாப்பாளர் (guardion) பெயரும் இடம் பெறுதல் வேண்டும்.

அடுத்தபடியாக, வழக்குக்கான காரண காரியங்களைத் தெளிவாக விளக்கி, பத்திபத்தியாகப் (Paragraph) பிரித்து எழுதி வழக்குக்கான காரணம் எப்பொழுது எழுந்தது என்றும் குறிக்க, வேண்டும். இது முக்கியம். ஏனென்றால் வழக்குகள் ஒரு குறிப்பிட்ட காலத்தில் நிறுவப்படவேண்டும் என்ற இந்திய வரையறைச்சட்டம், 1963-ன்படி (Indian Lmitation Act 1963) எந்த வழக்கும் வழக்குக்கான காரணம் எழுந்த அல்லது தெரிய வந்த குறிப்பிட்ட காலத்திற்குள் நிறுவப் படல் வேண்டும்.

பிறகு வழக்குத் தொடர்ந்த நீதிமன்றத்திற்கு நிதி நிலை அதிகார வரம்பும், வட்டார அதிகார வரம்பும் உண்டு என்று காண்பிப்பதற்கான அறிவித்தல் இருக்க வேண்டும்.

பின், வழக்கின் வாயிலாகக் கோரும் நிவாரணம் குறிக்கப் படுதல் வேண்டும்.

அதை அடுத்து வழக்கின் நிதி நிலை நிவாரணம் பற்றிய குறிப்பும் நிவாரணம் கோரிய அந்த தொகைக்காகக் கட்டியிருக்கின்ற நீதி மன்றக் கட்டணம் (Court fees) பற்றிய குறிப்பும் இருத்தல் வேண்டும். நிதி நிலை நிவாரணம் பற்றிய குறிப்பு, நீதி மன்ற அதிகார வரம்பைக்காட்டுகின்ற காரணத்திற்காகவும் ஆகும்.

பிறகு இடத்தின் பெயர் குறிப்பிட்டு வாதி கையெழுத்திட்டு, எந்த நாள், மாதம், ஆண்டு என்ற குறிப்பும் இருத்தல் வேண்டும்,

அடுத்தபடியாகச் சரிபார்த்தல் (Verification). அதன்படி மேற்குறிப்பிட்ட வழக்குரையில் (Plaint) கூறப்பட்டிருக்கின்ற அத்தனையும் எனக்குத் தெரிந்தவரை உண்மை என்று மொழிந்து அதனடியில் வாதி கையெழுத்திடவேண்டும்.

இந்த முறைப்படி தயார் செய்யப்பட்ட வழக்குரையை நீதிமன்ற அலுவல் நேரத்தில் தாக்கல் செய்தல் வேண்டும். இந்த வழக்குரையுடன், நீதிமன்றக் கட்டணம் பிரதிவாதிக்கு அனுப்ப வேண்டிய அறிவிப்பு, அழைப்புக்கட்டளைக்கான கட்டணம் கட்டியிருக்க வேண்டும். அவ்விதம் எல்லாவகையிலும் வழக்குரை சரியாக இருந்தால் அதற்கு வரிசைப்படி ஓர் எண் வழங்கப்பட்டு அந்த வழக்கின் எண்ணும் அது பற்றிய சிறு குறிப்பும், அந்த ஆண்டு நிறுவப்பட்ட வழக்குகள் அடங்கிய பதிவேட்டில் பதிவு செய்யப்படும். பின்பு, பிரதிவாதிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, ஒரு குறிப்பிட்ட நாளில் பிரதிவாதி

நீதிமன்றம் வந்து வழக்குரையில் குறிப்பிட்டுள்ள காரண காரியங்கள் பற்றிய அவருடைய கருத்துகளை எழுத்து மூலமாகத் தரவேண்டும். பிறகு வழக்கு விசாரணை தொடங்குகின்றது.

வழக்கில், கோரப்பட்ட நிவாரணம் பணமாக இருந்தால் எவ்வளவு என்பது திட்டவட்டமாகக் குறிக்கப்பட வேண்டும்.

நிவாரணம் தவறான பலன் "mesne Profits" கேட்டு அல்லது முடிக்கப்படாத கணக்கிலிருந்து கிடைக்க வேண்டிய, அறுதியிட்டுக் கூற முடியாத பணமாக இருந்தால், சுமாராக இவ்வளவு பணம் என்று வழக்குரையில் குறித்தல் வேண்டும்.

வழக்கு, அசையாச் சொத்துப் பற்றியதாக இருந்தால் அதன் விவரம் குறிக்க வேண்டும். அடையாளங்கள் நாற்புறமுள்ள எல்லைக்குறிப்பும், நிலவர ஏற்பாடு (Settlement), எண், நில அளவீடு எண் (Survey Number) முதலியவைகளும் சொத்தின் விவரமாகக் (Schedule) வழக்குரையின்கீழ்க் கொடுக்க வேண்டும்.

பிரதிவாதி, பிரதிநிதித்துவ முறையில் (Representative Suit) வழக்குத்தொடர்ந்தால் அந்தத் தகுதியையும், அதனோடு பிரதிவாதி, பிரதிநிதித்துவ முறையில் வழக்குத்தொடரப்பட்டால் அது பற்றிய குறிப்பும் வழக்குரையில் இருத்தல் வேண்டும்.

வழக்குரையில் பிரதிவாதி எந்த வகையில் நிவாரணக் கோரிக்கைக்குக் கட்டுப்பட்டவர் (Liable) என்பதையும் வழக்கின் காரணத்தில் அக்கறையுடையவர் (Interest) என்பதையும் திட்டவட்டமாகக் குறித்திட வேண்டும்.

நீதிமன்றம் வழக்குரையை எந்த நிலையிலும் திருப்பலாம் (Return). காரணம், வேறு நீதிமன்றத்தில்தான் வழக்குத் தொடரப்படல் வேண்டுமென்ற நிலையில் அந்த நீதிமன்றத்தில் வழக்குரையைத் தாக்கல் செய்வதற்காக. அவ்வாறு வழக்குரை திருப்பப்படும் போது (Returned) நீதிபதி திருப்புவதற்கான காரணத்தைக் குறிக்க வேண்டும். மேலும் எந்த நாளில் வழக்குரை அங்குத் தாக்கல் செய்யப்பட்டது. என்றும், பிராது திருப்பப்பட்டது என்றும் குறித்தல் வேண்டும்.

நீதிமன்றம் கீழ்க்கண்ட காரணங்களுக்காக ஒரு வழக்குரையை நிராகரிக்கலாம் (Reject)

1. வழக்குரை வழக்குக்கான காரணத்தை வெளியிடாமலிருந்தாலும்,

2. வழக்கின் நிவாரணத்தைக் குறைத்து மதிப்பிட்டிருப்பது காணப்பட்டுச் சரியான மதிப்பீடு கொடுக்கும்படி கேட்டும், குறிப்பிட்ட கால வரையறையில் அவ்விதம் வாதி செய்யத் தவறினாலும்,

3. அதுபோல, சரியான மதிப்பீடு கொடுத்தபோதிலும் அந்த மதிப்பீட்டிற்கான நீதிமன்றக் கட்டணம் (Court fees) கட்ட வில்லையானால், அல்லது குறைவான நீதிமன்றக் கட்டணத்தைச் சரிக்கட்ட அவகாசம் கொடுத்தும் அதன்படி செய்யவில்லை யானாலும்,

4. குறிப்பிட்ட வழக்கு ஏதாவது ஒரு சட்டப்படி தடை செய்யப்பட்டிருந்தாலும் நிராகரிக்கலாம்.

அவ்வாறு வழக்குரை நிராகரிக்கப்படும் போது நீதிபதி அதற்கான காரணங்களைக் குறித்திடல் வேண்டும்.

அவ்விதம் நிராகரிக்கப்பட்டதால் மட்டும், வாதி அதே காரணகாரியத்தின் நிமித்தம் வேறு வழக்குரை தாக்கல் செய்யத் தடையேதுமில்லை.

விதி 14-ன்படி வழக்கின் எழுத்தாதாரங்கள் (documents) வழக்குரையோடு காட்டல் வேண்டும். அதனோடு அதன் அசல் அல்லது நகலைத் தாக்கல்செய்யவும் வேண்டும்.

மேலும், வழக்கை நிரூபிக்கத்தக்க எழுத்தாதாரங்கள் பற்றிய குறிப்பும் வழக்குரையில் இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட ஒழுங்கு முறைப்படி வழக்கு நிறுவப்படு கின்றது· அதைத் தொடர்ந்து வழக்கின் பிரதிவாதிக்கு அறிவிப்பு, அவருடைய பதில், அதன்பின் விசாரணை, இறுதியில் தீர்ப்பு.

பிரதிவாதிக்கு அழைப்பாணை (Summens to the Defendant)

வழக்கு நிறுவப்பட்டு எல்லா வகையிலும் சரியாக இருந்தால் அது ஏற்றுக் கொள்ளப்பட்டு (அதாவது காலவரையறைக்குட் பட்டு, தகுந்த நீதிமன்றக் கட்டணத்தைக் (Court fees) கட்டுதல், மற்று நடப்புச் சட்டப்படி அமைதல் ஆனவகையிலும் பிறகு பிரதிவாதிக்கு அழைப்பாணை அனுப்பப்படும். அதற்கிணங்கப் பிரதிவாதி நீதிமன்றத்தில் ஒரு குறிப்பிட்ட நாளில் வரவும், வந்து வழக்குரையில் கூறப்பட்டவைகளுக்கு முகாந்திரம்

கொடுக்கவும் வேண்டும். இந்த அழைப்பாணை நீதிமன்றத்தில் அதற்கென்று நியமிக்கப்பட்டுள்ள அலுவலர் மூலமோ, பதிவுத் தபால் மூலமோ, வழக்கத்தில் உள்ளபடி, பிரதிவாதிக்குச் சார்பு செய்யப்படும். அந்த அழைப்பாணையோடு வழக்குரையின் நகலும் அனுப்பப்படும்.

அந்த அழைப்பாணைப்படி பிரதிவாதி நீதிமன்றத்திற்கு ஒரு குறிப்பிட்ட நாளில் வந்து வழக்குக்குப் பதிலுரைக்க வேண்டும், அல்லது அவருக்குப் பதிலாக அவரால் நியமிக்கப் பட்டு, வழக்குச்சம்பந்தமாகக் கேட்கும் கேள்விகளுக்குப் பதிலுரைக்கத் தகுந்தவர் அல்லது பிரதிவாதியின் வழக்குரைஞர் ஆகிய இந்த மூவரில் யாராவது ஒருவர் நீதிமன்றத்தில் வழக்கைக் கூப்பிடும் போது, முன்வந்து முகாந்திரம் சொல்ல வேண்டும். வழக்குச் சம்பந்தமான அழைப்பாணை பிரதிவாதிக்குச் சார்பு செய்யப்பட்டிருந்து அதுபற்றிய அத்தாட்சிக் குறிப்பு வழக்கு ஏட்டில் (Bundle) இருந்தால் பிரதிவாதியோ அவரது பிரதி நிதியோ, அவரது வழக்குரைஞரோ, நீதிமன்றத்தில் வழக்கு எடுத்துக் கொள்ளும் சமயம் இருக்கத் தவறினல் நீதிமன்றம் பிரதிவாதியில்லாமல் வாதியை மட்டும் விசாரித்து அவருடைய வாக்குமூலத்தின் மீது வாதிக்குச் சாதகமாகத் தீர்ப்பளித்து விடலாம்.

நீதிபதியோ, அதற்கென்று நியமிக்கப்பட்டுள்ள அதிகாரியோ, அழைப்பாணையில் கையெழுத்திட்டுப் பிரதிவாதிக்கு அது அனுப்பப்படல் வேண்டும் வழக்குத் தொடர்ந்த பிறகு வாதியோ, அவரது வழக்குரைஞரோ இருவருள் யாரேனும் ஒருவராவது நீதிமன்றத்தில் வழ்க்கைக் கூப்பிடும் போது விரவில்லையானல் நீதிமன்றம் விசாரணை ஏதுமில்லாமல் வழக்கைத் தள்ளுபடியும் செய்யலாம் (Dismiss).

அழைப்பாணை சாதாரணமாகப் பிரதிவாதிக்குச் சார்பு செய்தல் வேண்டும். பிரதிவாதியில்லாத சமயம் அவர் தொழி லில் அவருக்குத் துணையாக இருப்பவரிடமோ, அவருடைய அசையாச் சொத்துக்கான முகவரிடமோ (Agent), பிரதிவாதியின் குடும்பத்திலுள்ள வயது வந்த ஆண் உறுப்பினரிடமோ சார்பு செய்தால் போதுமானது. ஆனல், வழக்குத் தாக்கல் செய்யுங் கால் பிரதிவாதி அதை அறிந்து வாதியின் வழக்குக் கோரிக்கையை ஏற்றுக் கொள்வாரானல் அச்சந்தர்ப்பத்தில் அழைப்பாணை பிரதி வாதிக்கு அனுப்ப வேண்டிவராது (கட்டளை 5. விதி 1 பின்பகுதி) எடுத்துக் காட்டு:

Bank of Bengal Vs. Currie & Co. (1869) 3 BLR 396.

அனுப்பப்படுகின்ற ஒவ்வொரு அழைப்பாணையும் வழக்கு நகலுடன் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அனுமதிக்கப்படு மானால் வழக்கின் சாராம்சம் மட்டும் அனுப்பினால் போது மானனது (கட்டளை 5. விதி 2.)

பிரதிவாதி கண்டிப்பாக நீதிமன்றத்திற்கு வரவேண்டு மென்று நீதிமன்றம் கருதினால் அழைப்புக்கட்டளையில் அங்ஙனம் கோரப்படும். அதுபோல வாதியையும் அழைக்க வேண்டுமானால் அதற்கான கட்டளையும் பிறப்பிக்கப்படும் (கட்டளை 5. விதி 3.) வாதியோ, பிரதிவாதியோ நேரடியாக அழைக்கப்பட வேண்டு மானால் அவர்கள் நீதிமன்றத்தின் வட்டார வரம்பிற்குள் இருக்க வேண்டும். அல்லது நீதிமன்றத்திலிருந்து 50 மைல்களுக்குட் பட்ட இடத்தில் இருக்க வேண்டும். அவ்வாறின்றி ஆறில் ஐந்து மடங்கு, ரயில் அல்லது பேருந்து மூலம் கடக்க முடியுமானால் நீதிமன்றத்திலிருந்து 200 மைல் களுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

அழைப்பாணை வழக்கின் நிலை கருதி வழக்கு எழு வினாக்களை (Settling issues) நிர்ணயிக்கவும் அல்லது வழக்கு விசாரணை முடிக்க வேண்டுமெனக் காரணம் காட்டியும் அனுப்பப்படல் வேண்டும். ஆனால், சிறு காரண நீதிமன்றத்தின் அழைப்பாணை வழக்கு விசாரணை முடிவு கருதியே (Final disposal) அனுப்பப் படுதல் வேண்டும் (கட்டளை 5. விதி 5.)

அனுப்பப்படும் அழைப்பாணையில் பிரதிவாதி இருக்குமிடம், நீதிமன்ற அலுவல்களைக் கருதிப் பிரதிவாதி நீதிமன்றம் வரவும் வழக்குக்குக்குப் பதிலுரைக்கவும் போதுமான அவகாசம் தந்து நாள் குறிப்பிட வேண்டும் (கட்டளை 5. விதி 6). அதனோடு பிரதி வாதி தம் வசம் அவர் தரப்புக்குச் சாதாமாக உள்ள எழுத்து மானங்களைக் (Documents) கொண்டு கட்டளையிடும் (கட்டளை 5. விதி 7). இறுதி விசாரணைக்கான அழைப்பாணையெனில் பிரதி வாதியின் சாட்சிகளைக் கொணரவும் கேட்டுக்கொள்ளும் (கட்டளை 5. விதி 8).

அழைப்பாணை சார்புசெய்தல்

பிரதிவாதி, வழக்கு நிறுவப்பட்ட நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்குள் வசிப்பவரானால் அவரிடமோ, அவருடைய முகவர் (Agent) அழைப்பாணை ஏற்றுக் கொள்ளும் அதிகாரம் பெற்றிருந் தால் அவரிடமோ அழைப்பாணையைச் சார்பு செய்யலாம்.

அதற்கென்று நியமிக்கப்பட்ட அதிகாரியோ, அவருடைய துணையாளோ அழைப்பாணையைச் சார்பு செய்யவேண்டும் கட்டளை 5. விதி 9 (1).

பிரதிவாதி இந்தியாவில் எங்கிருந்தாலும் அல்லது வழக்கு நிறுவப்பட்ட நீதிமன்றத்தின் அதிகார வரம்புக் குள்ளிருந்தாலும் அவருக்கு அழைப்பாணை அனுப்புவதற்கு அதற்கென்றுள்ள அதிகாரியை நீதிமன்றம், அவ்வழைப்பாணையை அனுப்பும்படி கோரும். அதன்படி அழைப்பாணை சார்பு செய்யப்படலாம். அல்லது பதிவுத் தபால் மூலமாக (By Registered Post with Acknowledgement) அழைப்புக் கட்டளையை அனுப்பவும் ஆணை யிடலாம். அதன்படி ஒப்புதலில் (Acknowledgement) பிரதிவாதி கையெழுத்திட்டுத் திரும்ப வருமானால் மேற்படி ஒப்புதல் (Acknowledgement) அழைப்பாணை சார்பு செய்ததற்குப் போது மான ருசுவாகும் அல்லது அத்தாட்சி ஆகும் (கட்டளை 5. விதி 9 (3). அழைப்பாணையில் நீதிபதியோ, அவரால் நியமிக்கப்பட்ட அதிகாரியோ, கையெழுத்திட வேண்டும். அதனோடு அதில் நீதிமன்றத்தின் முத்திரை பதிக்கப்பட்டிருக்கவேண்டும். மேற்படி அழைப்பாணை பிரதிவாதிக்கு நேரடியாகவும் சார்பு செய்யப் படலாம் (கட்டளை 5. விதி 10).

ஒன்றுக்கு மேற்பட்ட பல பிரதிவாதிகள் இருப்பின் ஒவ்வொருவருக்கும் அழைப்பாணை சார்பு செய்யப்படல் வேண்டும் (கட்டளை 5. விதி 11).

எங்கெங்கு முடியுமோ, அங்கெல்லாம் பிரதிவாதியிடம் நேரில் அழைப்பாணை சார்பு செய்தல் வேண்டும். அப்படி முடியாவிட்டால் அவருக்காக அழைப்பாணையை ஏற்றுக் கொள்ளக்கூடிய பிரதிவாதியின் முகவரிடம் (Agent) அழைப் பாணையைச் சார்பு செய்யலாம். அப்படிச் சார்பு செய்தால் அது போதுமானதாகக் கருதப்படும்.

வழக்கு, வியாபார சம்பந்தமாக அல்லது தொழில் சம்பந்த மானதாக இருந்தால், அவ்வழக்கு நிறுவப்பட்ட நீதிமன்றத்தின் அதிகார எல்லைக்குள் பிரதிவாதியில்லாமலிருந்தால், வியாபாரம் செய்யுமிடத்திலிருக்கும் நிர்வாகியிடமோ, முகவரிடமோ (Agent) அழைப்பாணை சார்பு செய்தாலும் சரிதான்.

மேற்குறிப்பிட்ட விதிப்படி ஒரு கப்பலின் தலைவன், அந்தக் கப்பலின் சொந்தக்காரர் சார்பில் அழைப்பாணை பெற்றால், அது சரியான சார்பாகும் (கட்டளை 5. விதி 13). அசையாச்

சொத்து சம்பந்தப்பட்ட வழக்காயிருந்து பிரதிவாதிக்கு நேரடியாக அழைப்பாணை சார்பு செய்ய இயலவில்லையானால், அந்த அசையாச் சொத்தைக் கவனிக்கும் பிரதிவாதியின் முகவரிடம் (Agent) சார்பு செய்தால் போதுமானது (கட்டளை 5. விதி 14). அழைப்பாணை பிரதிவாதிக்குச் சார்பு செய்யுங்கால் அவர் இல்லாத போது, அதனோடு அவருடைய முகவரும் (Agent) ஏற்றுக் கொள்ள இயலாதபோது அவ்வாணையை அவர் குடும்பத்திலுள்ள வயதுவந்த ஆண் உறுப்பினரிடம் சார்பு செய்தால் போதுமானது.

விளக்கமாகக் கூற வேண்டுமானால் பிரதிவாதியின் இல்லத்திலிருக்கும் ஆண் பணியாளரை இது குறிப்பதாகாது (கட்டளை 5. விதி 15).

பிரதிவாதியிடமோ அவருடைய முகவரிடமோ (Agent) அவர் சார்பில் வேறு யாரிடமோ அழைப்பாணை சார்பு செய்யுங்கால் அவ்விதம் சார்பு செய்யும் அதிகாரி, மேற்படி அழைப்பாணையின் அசலை அவரிடம் கொடுத்ததற்கு அத்தாட்சியாக அதன் நகலில் அன்னாரின் கையெழுத்துப் பெற்றுக் கொள்ளல் வேண்டும் (கட்டளை 5. விதி 16).

அழைப்பாணையைச் சார்பு செய்யும் அதிகாரியிடம் மேற்படி ஆணையை ஏற்றுக்கொள்ளப் பிரதிவாதியோ, அவர் முகவரோ, அவர் சார்பாக யாராவது மறுத்து விட்டாலன்றிப் பிரதிவாதியோ, அவர் முகவரோ அவர் சார்பில் ஆணையை ஏற்றுக் கொள்வதற்கு அவர்கள் கிடைக்கவில்லை என்று சம்பந்தப்பட்ட அதிகாரி கூடுமானவரை முயன்று முடியவில்லையானால், அவர் பிரதிவாதி இறுதியாக வாழ்ந்த இடத்திலோ, தொழில் புரிந்த இடத்திலோ, அவர் வேலை பார்த்த இடத்திலோ, ஒரு பிரதான இடத்தில் மேற்படி அழைப்பாணையை ஒட்டிவிட்டு, எந்தச் சூழ்நிலையில் அழைப்பாணை அங்கு ஒட்டப்பட்டது என்ற குறிப்பை அழைப்பாணையின் நகலில் குறிப்பிடுவதோடு மேற்படி இடத்தைச் சுட்டிக் காட்டிய நபரின் பெயரும், அவருடைய கையெழுத்தும் பெற்றுக் கொள்ள வேண்டும். எந்த நீதிமன்றம் அந்த ஆணையைப் பிறப்பித்ததோ, அங்கு அதைத் திரும்பச் சேர்க்க வேண்டும் (கட்டளை 5. விதி 17).

மேற்குறிப்பிட்டபடி அழைப்பாணை சார்பு செய்யப்பட்டிருக்குமானால் அதன் உண்மையைச் சார்பு செய்த அதிகாரியின் சத்திய வாக்கு மூலம் (Affidavit) கூறினால் ஆணை பிறப்பித்த நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளலாம், அல்லது அந்த முறை திருப்திளிக்கவில்லை

யென்றால் வேறு வகையில் அழைப்பாணை சார்பு செய்யக் கட்டளையிடலாம் (கட்டளை 5. விதி 19).

பிரதிவாதி அழைப்பாணையைப் பெற்றுக் கொள்ளாதபடி ஏமாற்றுவாரானால், நீதிமன்றம் அழைப்பாணையைச் சார்பு செய்யக் கீழ்க்கண்ட முறையைக் கையாளலாம்.

அதன்படி மேற்படி அழைப்பாணையின் நகலை நீதிமன்றத்தில் பெரும்பாலானவர் பார்வை படும் இடத்தில் ஒட்டவும், அதனோடு பிரதிவாதி இறுதியாக வாழ்ந்ததாகக் கருதப்படும் இடத்திலோ, அவர் தொழில் புரிந்த இடத்திலோ, அவர் வேலை செய்த இடத்திலோ அழைப்பாணையின் நகலை எளிதாகக் கண்ணுக்குப்படும் இடத்தில் ஒட்டும்படி உத்தரவிடலாம், அல்லது வேறு வகையில் அழைப்பாணை சார்பு செய்யத் தோதிருந்தால் அந்த வகையிலும் சார்பு செய்ய உத்தரவிடலாம். உதாரணமாக, நாளிதழில் விளம்பரம் செய்ய உத்தரவிடலாம்.

இவ்விதம் சார்பு செய்யப்பட்ட அழைப்பாணை நேரடியாகச் சார்பு செய்யப்பட்டதாக நீதிமன்றம் கருதும்.

மேற்குறிப்பிட்டபடி அழைப்பாணை சார்பு செய்யப்படு மானால பிரதிவாதி ஒரு குறிப்பிட்ட நாளில் நீதிமன்றத்திற்கு வரவேண்டுமென்று குறிப்பிட வேண்டும் (கட்டளை 5. விதி 20).

எந்தக் காரணத்தினாலாவது அழைப்பாணை பிரதிவாதியிடம் மேற்குறிப்பிட்ட முறைப்படி சார்பு செய்ய முடியாமல் திரும்பி வந்து விட்டால் நீதிமன்றம் வேறு இடத்தில் பிரதிவாதி வாழ் கின்ற, அல்லது தொழில்புரிகின்ற அல்லது வேலை செய்கின்ற முகவரியில் சார்பு செய்ய வழிசெய்யலாம். அவரில்லாவிடில் அவரது முகவரிடம் அழைப்பாணையைச் சார்பு செய்ய ஆணை யிடலாம்.

பிரதிவாதியோ, அவர் முகவரோ, அழைப்பாணையை வாங்க மறுத்துவிடின், அல்லது பதிவுத் தபால் மூலம் அழைப்பாணை அனுப்பப்படுமானால் அதன் ஒப்புதல் ரசீதில் ((Acknowledgement) மேற்படி வாதியோ, அவரது முகவரோ, வாங்க மறுத்து விட்டதாக ருசுவிருந்தால் நீதிமன்றம் அழைப்பாணை சார்பு செய்யப்பட்டதாகக் கருதிக் கொள்ளலாம் (கட்டளை 5. விதி 20A).

பிரதிவாதி இருக்குமிடம் சொந்த மாநிலத்திலோ, வேறு மாநிலத்திலோவென்றால் அவர் எந்த நீதிமன்றத்தின் அதிகார எல்லைக்குள் இருக்கின்றாரோ அந்த நீதிமன்றம் மூலமாகவோ,

பதிவுத் தபால் மூலமாகவோ அவருக்கு அவ்வழைப்பாணையை அனுப்பலாம். ஆனால் உயர்நீதிமன்றத்தின் மூலமாக அவருக்கு அழைப்பாணை அனுப்பப்படக் கூடாது.

சென்னை, பம்பாய், கல்கத்தா, ஆகிய மாநிலத் தலைநகரங்களில் பிரதிவாதி இருப்பாரானால் மேற்படி அழைப்பாணை அந்தத் தலைநகரங்களில் உள்ள சிறு காரண நீதிமன்றம் (Small Causes Court) மூலமாகச் சார்பு செய்யப்பட வேண்டும் (கட்டளை 5. விதி 22).

மேற்குறிப்பிட்ட நீதிமன்றங்கள் அழைப்பாணையைச் சார்பு செய்துவிட்டு அதற்கான அத்தாட்சியுடன் சர்ர்பு செய்யக்கோரிய நீதிமன்றத்திற்கு அதைத் திரும்ப அனுப்ப வேண்டும் (கட்டளை 5. விதி 23).

பிரதிவாதி சிறையில் இருப்பாரானால் மேற்படி அழைப்பாணை சிறை அதிகாரிக்குத் தபால் மூலம் அனுப்பப்பட்டு அவர் மூலமாகச் சார்பு செய்யபடல் வேண்டும் (கட்டளை 5. விதி 24).

பிரதிவாதி சிறையில் இருப்பாரானால் மேற்படி அழைப்பாணை சிறை அதிகாரிக்குத் தபால் மூலம் அனுப்பப்பட்டு அவர் மூலமாகச் சார்பு செயல்படல் வேண்டும் (கட்டளை 5. விதி 24).

பிரதிவாதி அயல் நாட்டில் வசிப்பாரானால் அவருக்கு இந்தியாவில் முகவர் இல்லையானால் மேற்படி அழைப்பாணை நீதிமன்றத்திலிருந்து பிரதிவாதிக்குத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

பிரதிவாதி வாழும் அயல் நாட்டிற்கும் நம் நாட்டிற்கும் அழைப்பாணைகள் சார்பு செய்யும் வகையில் ஏதாவது உடன்பாடு இருந்தால் அதன்படி மேற்படி அழைப்பாணை சார்பு செய்யும் அதிகாரி மூலமாகச் சார்பு செய்யப்படும்.

பிரதிவாதி பாகிஸ்தானில் வாழ்ந்தால் அழைப்பாணையும் அதன் நகலும் அவர்மேல் அதிகார வரம்பு கொண்டுள்ள நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு அதன் மூலம் பிரதிவாதிக்குச் சார்பு செய்யப்படல் வேண்டும்.

பிரதிவாதி பாகிஸ்தானில், இராணுவம், கப்பற்படை, விமானப்படை, அதிகாரிகள் நீங்கலாக மற்று எல்லாத் துறையிலுள்ள அதிகாரியாயிருந்தாலும், அவருக்கு நம் நீதிமன்ற அழைப்பாணை, நம்முடைய மத்திய அரசு செய்தி இதழில் (Gazette) பிரசுரிக்கப்பட்டு விதிக்கின்ற முறைப்படி சார்பு செய்யப்படல் வேண்டும் (கட்டளை 5. விதி 25).

மைய அரசு அதன் அயல் நாட்டு அதிகார வரம்பில் வெளி நாட்டில் மேற்குறிப்பிட்ட காரணங்களுக்காக ஒரு குறிப்பிட்ட அரசியல் முகவரையோ (Political Agent) நீதிமன்றத்தையோ நிறுவியிருந்தால் அவர் மூலமாக, அல்லது அந்நீதிமன்றம் மூலமாக அயல் நாட்டில் வசிக்கும் பிரதி வாதிக்கு அழைப்பாணை சார்பு செய்யப்படலாம்.

இது தவிர மாநில அரசு தன்னுடைய செய்தி இதழில் (Gazette) பிரசுரித்துக் குறிப்பிட்டபடியும் வெளிநாட்டில் வாழும் பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்பு செய்யப்படும். வேறு வகுக் கப்பட்ட சார்பு செய்யப்பட்டாலும் அதுவும் சரியான சார்பாகக் கருதப்படும்.

அழைப்பாணை அனுப்புகின்ற நீதிமன்ற முள்ள மாநில அரசு பிரதிவாதி வாழும் வெளி நாட்டுடன் செய்து கொண்டுள்ள முன்னேற்பாட்டின்படி அழைப்பாணை அனுப்புவதானால் அந்த ஏற்பாட்டிற்கு ஏற்ப அதற்கென உள்ள அதிகாரி மூலம் சார்பு செய்யக்கூடும் (கட்டளை 5. விதி 26).

பிரதிவாதி அரசதிகாரியாயிருப்பாரானல் (இராணுவம், கப்பற்படை, விமானப்படை அதிகாரிகள் நீங்கலாக) அவருக்கு அழைப்பாணையை, அதன் நகலுடன் அவருடைய தலைமை அதிகாரி மூலமாக அனுப்பவேண்டும் (ஒப்புதல் ரசீதுடன் கூடிய பதிவுத்தபால் மூலம்). அதன்படி மேற்படி பிரதிவாதி அழைப் பாணையின் அசலைப் பெற்றுக்கொள்ள வேண்டும் (கட்டளை 5. விதி 27).

பிரதிவாதி முப்படைகளில் ஏதாவது ஒன்றில் பணிபுரி வாரானல் மேற்படி அழைப்பாணை அதன் நகலுடன் பதிவுத் தபால் ரசீதுடன் மேற்படி பிரதிவாதியின் தலைமை அதிகாரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும் (கட்டளை 5. விதி 28).

மேற்குறிப்பிட்டபடி அழைப்பாணையைப் பிரதிவாதிக்குச் சார்பு செய்யப் பணிக்கப்படும் அதிகாரி, அந்த அழைப் பாணையைச் சார்பு செய்து அதற்கான குறிப்புடன் அழைப்பாணை பிறப்பித்த நீதிமன்றத்திற்குத் திரும்ப அனுப்பக் கடமைப் பட்டிருக்கின்றார்.

மேற்குறிப்பிட்டபடி அழைப்பாணையைப் பிரதிவாதியிடம் சேர்ப்பிக்க இயலாவிட்டால் மேற்படி தலைமை அதிகாரி மேற்படி அழைப்பாணையை எந்தச் சூழ்நிலை காரணமாக மேற்படி அழைப் பாணை பிரதிவாதியிடம் சார்பு செய்ய முடியவில்லை என்ற குறிப்

போடு அழைப்பாணை பிறப்பித்த நீதிமன்றத்திற்குத் திரும்ப அனுப்ப வேண்டும். அவ்விதம் அனுப்பினுல் சார்பு செய்யாமைக்கு அது சாட்சியமாகும் (கட்டளை 5. விதி 29).

மேற் குறிப்பிட்டபடி யில்லாமல் பிரதிவாதி அரசதிகாரியா யிருந்து. தம்முடைய அதிகாரத்துக்குட்பட்டுச் செய்த காரியத்திற் காக வழக்குப் போட்டிருந்தால் அழைப்பாணை நேரடியாகப் பதிவுத் தபால் ஒப்புதல் சீட்டுடன் அனுப்பப்படவேண்டும் (கட்டளை 5. விதி 29A).

நீதிமன்றத்தின் கருத்துப்படி சில சிறப்பு வாய்ந்த பிரமுகர்கள் பிரதிவாதியாயிருக்க நேர்ந்தால் நீதிபதிகள் அல்லது அவரால் நிய மிக்கப்பட்டவர்கள் அழைப்பாணைக்குப் பதில் கையெழுத்திட்ட கடிதம் அனுப்பலாம் (Letters of request).

மேற்படி கடிதம் அழைப்பாணையைப் போல் எல்லாவிதமான தகவல்களும் கொண்டதாயிருத்தல் வேண்டும். எனவே, அக் கடிதமே அழைப்பாணையாகக் கருதப்படும்.

மேற் குறிப்பிட்ட கடிதம் தபால் மூலமாகவோ, குறிப்பிட்ட நபர் மூலமாகவோ சேர்க்கப் படலாம். சிறப்பாளர்களின் கடிதங் களை வாங்கும் சார்பாளரிடமும் அக்கடிதம் கொடுக்கப்படலாம் (கட்டளை 5. விதி 30).

பிரதிவாதி வேற்று நாட்டின் படையெடுப்பின் காரணமாக நம்முடைய நாட்டின் பகுதியாய் அவர்களின் கட்டுப் பாட்டுக்குள் இருக்குமிடத்தில் இருக்க நேர்ந்தால் வாதி மனுவின் பேரில் நீதி மன்றம் திருப்தியடையுமாஞல் அந்நபருக்கு அழைப்பாணை அனுப்புவதைத் தவிர்த்து விடலாம்; ஏனென்ருல், இந்தச் சூழ் நிலையில் பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்பு செய்ய இயலாது.

இந்தக் கரரணத்திற்காக நீதிமன்றம் விரும்பினுல் வாதியை, மேற்படி விண்ணப்பத்தைப் பத்திரிகையில் பிரசுரம் செய்யும்படி கோரி, அதன் பிறகு பிரதிவாதிக்கு அழைப்பாணை அனுப்புவதைத் தவிர்த்து விடலாம்.

மேற்படி காரணத்திஞல் அழைப்பாணை சார்பு செய்யாமல் நீதிமன்றம் பிரதிவாதிக்கு எதிராகக் கூறிய தீர்ப்பைத் தள்ளி வைக்கும்படி கோரி பிரதிவாதி பின்ஞல் மனுச் செய்தால் அதை ஏற்றுக்கொண்டு நீதிமன்றம் சில நிபந்தனைகளோடு அந்தத் தீர்ப்பைத் தள்ளி வைத்து வழக்கை மறுவிசாரணை செய்ய ஏற்பாடு செய்யும்.

மேற் குறிப்பிட்ட தீர்ப்பாணையைத் தள்ளி வைக்கும்படி கோரும் மனு, பிரதிவாதி திரும்ப நம் நாட்டின் அதிகாரத்திற்கு வந்த ஓர் ஆண்டுக்குள் தாக்கல் செய்யப்பட வேண்டும். இந்த மனு சம்பந்தமாக 1908ஆம் ஆண்டு இந்தியக் காலக் கட்டுப்பாட்டுச் சட்டம் 5ஆம் பிரிவு இதற்குப் பயன்படுத்தப்படும்.

மேற்குறிப்பிட்ட விதிகள், மேல் வழக்குகளுக்கும் (Appeals) சீராய்வு மனுவுக்கும் (Revision) அப்படியே மாற்றமேதுமின்றிப் பொருந்தும் (பிரிவு 28).

அழைப்பாணை மற்ற மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டு அங்குள்ள நீதிமன்றங்கள் மூலமாகச் சார்பு செய்யும்படி கோரப்படலாம். அப்படிச் சார்பு செய்யும்படி கேட்டுக்கொள்ளப் பட்ட நீதிமன்றங்கள் அந்த அழைப்பாணையைத் தாங்களே பிறப்பித்ததுபோல் சார்பு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றன.

மேற்குறிப்பிட்ட விதிகள் சமூக உரிமை நீதிமன்றங்களுக்கும், வருவாய்த்துறை நீதிமன்றங்களுக்கும் (Revenue Courts) பொருந்தும் (பிரிவு 29).

கேள்வித் தொகுப்பு மூலம் வழக்கின் நுணுக்கம் (சாராம்சம்) அறிதல்

நீதிமன்றங்கள் ஒரு வழக்கின் சாராம்சத்தைச் சுருக்கமான முறையில் அறிந்து அதை நீட்டாமல் நடத்திடவும் அதிகாரம் கொண்டிருக்கின்றன. அதன்படி தன்னிச்சையாக, அல்லது வாதி அல்லது பிரதிவாதியின் விண்ணப்பத்தின் பேரில் மேற்படி வழக்கின் சாராசம்சத்தைச் சுருக்கமான முறையில் அறிந்திட வாதியிடமோ, பிரதிவாதியிடமோ, உள்ள எழுத்து ஆதாரங்கள் கண்டுபிடித்தல் (Discovery of documents), ஆராய்தல் (Inspection), காண்பித்தல் (Production), பாதுகாத்து நிறுத்தி வைத்தல் (Impounding), அதனோடு எழுத்து ஆதாரங்களைத் திரும்பத் தருதல் (Return of documents) அல்லது வழக்குச் சம்பந்தப்பட்ட பொருள்கள் நீதிமன்றத்தில் காண்பிக்க முடித்தவையாயிருந்தால் அவைகளைக் காட்டவும் கட்டளையிடலாம்.

மேற் குறிப்பிட்ட காரணங்களுக்காக யாருக்கும் நீதிமன்றம் அழைப்பாணை அனுப்ப முடியும். அதன்படி அவர் சாட்சியம் சொல்லவும் அழைக்கப்படுவார். அது மட்டுமல்லாமல் சில காரியங்களைச் சத்தியவாக்கு மூலம் (Affidavit) ருசுப்படுத்தவும் கோரலாம் (பிரிவு 30).

மேற் குறிபிட்ட காரியங்களுக்காக யாரையும் வந்து சாட்சி மளிக்க நீதிமன்றம் கட்டாயப் படுத்தமுடியும். அதன்படி அவர்களை வரவழைக்க அவர்களைக் கைது செய்யவும் அவர்களுடைய சொத்துகளை ஜப்தி (attach) செய்யவும், ஜப்தி செய்த சொத்தை விற்கவும் அல்லது அவர்கள்மீது ரூ. 500/-க்கு மேற்படாமல் அபராதம் விதிக்கவும் அதிகாரம் உண்டு. நீதிமன்றத்திற்கு அவர்கள் வருவதற்கும் அவர்களைப் பிணை (Security) கொடுக்கவும் கட்டாயப்படுத்த முடியும் (பிரிவு 32).

தீர்ப்பும், தீர்ப்பாணையும் (Judgement & Decree)

நீதிமன்றம் வழக்கைக் கேட்ட பிறகு தீர்ப்பளிக்கும். தீர்ப்பிற்குப் பிறகு தீர்ப்பாணை தொடரும் (பிரிவு 33). தீர்ப்பு விளக்கம் பிரிவு 2 (9) தீர்ப்பாணை விளக்கம் பிரிவு 2 (2) காண்க.

இவ்விரண்டில் தீர்பாணைதான் முக்கியமானது. அது ஒரு வழக்கின் முடிவில் கிடைக்க வேண்டிய பயனாகும். ஒரு வழக்கின் தீர்ப்பை எதிர்த்து மேல் வழக்குப் (Appeal) போடவும், அல்லது அதன் தீர்ப்பாணையை நிறைவேற்றவும் அல்லது செயல்படுத்தவும் அது அத்தியாவசியமானது.

மேல் வழக்குப் போடுவதற்கு (கட்டளை 41 விதி 1-ன் படி) மேல் வழக்குத் தாக்கல் செய்யக் கண்டிப்பாக அத்தாட்சிபெற்ற தீர்ப்பாணை நகல் வேண்டும். ஒரு வேளை நீதிமன்றம் தீர்ப்பின் அத்தாட்சி பெற்ற நகலைத் (Certified copy of the Judgement) தாக்கல் செய்வதைக் கூடத் தவிர்க்கலாம். ஆனால், அத்தாட்சி பெற்ற தீர்ப்பாணையின் நகலைத் (Certified copy of the Decree) தாக்கல் செய்வதைத் தவிர்க்க முடியாது, அதுபோலத் தீர்ப்பாணையை நிறைவேற்றுவதற்கும், தீர்ப்பாணையின் அத்தாட்சி பெற்ற நகல் அத்தியாவசியமானது (கட்டளை 21. விதி 10).

வட்டி கணக்கிடல்

வழக்கின் தீர்ப்பாணைப்படி பணம் கட்டவேண்டுமென்று இருந்தால் அந்தத் தொகைக்கு நீதிமன்றம் நியாயம் என்று கருதுகின்ற விகிதப்படி வட்டி விதிக்கலாம். அந்தக் கணக்கு, வழக்குத் தொடர்ந்த நாள்முதல் வழக்கின் தீர்ப்பாணை நாள் வரையிலும் இருக்கலாம். வழக்குத் தொடர்வதற்கு முன் வட்டி கணக்கிடப் பட்டிருந்து, திரும்பவும் தீர்ப்பாணைப்படி கட்டவேண்டிய பணத்திற்கும் நியாய வட்டி நிர்ணயிக்கலாம். அப்படி நிர்ணயிக்கப்படும்

வட்டி விகிதம் ஆண்டுக்கு 6 சதவிதத்திற்கு அதிகமாக இருக்கக் கூடாது.

தீர்ப்பாணையில், தீர்ப்பிற்குப் பிறகும், திரும்பத் தீர்ப்பாணைப் பணம் கிடைக்கும் வரையில் எந்த வட்டியும் குறிப்பிடப்பட வில்லையானால் அதை வட்டி மறுக்கப்பட்டதாகக் கருதப்படும் (பிரிவு 34).

வழக்குச் செலவு

வழக்கு நடைபெறும் நீதிமன்றம், அது சம்பந்தமான செலவு தொகையை யார் கட்டிக்கொடுக்கவேண்டும் என்பதை நிர்ணயம் செய்து, அதன்படி கட்டளையிடலாம். வழக்கை நடத்த அதிகார வரம்பு இல்லாத நீதிமன்றமாயிருந்தாலும், தவறுதலாக வழக்கு அங்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்குமானால், அந்த நீதிமன்றம் அதற்கான செலவு தொகையை யார் கட்டித்தரவேண்டும் என்றும் எவ்வளவு என்றும் நிர்ணயிக்கும். அவ்வாறு நிர்ணயிக்கும் போது நியாயப் பொருத்தத்தையும் கருத்தில் கொண்டு செலவு தொகை அளிக்கக் கட்டளையிடவேண்டுமே தவிர, தன்னிச்சை யாகப் பொருந்தா முறையில் நீதிமன்றம் கட்டளையிடக்கூடாது (பிரிவு 35).

தீர்ப்பில் செலவு தொகை கட்டிக்கொடுக்க வேண்டியதில்லை என்று நீதிமன்றம் ஆணையிடுமானால் அதற்கான காரணங்களை அதில் எழுதியாக வேண்டும் (பிரிவு 35).

Cases :

1. **Punjab National Bank Vs Sri Ram Kenwar**
AIR 1957 S. C. 276.

2. **Kowri Naramma Vs Kowri Kottamma**
AIR 1966 A. P. 28.

3. **T. S. Swaminathan Vs Official Receiver of West Tanjore**
AIR 1957 S. C. 577.

4. **Shyamsundar Serey Vs Union of India**
AIR 1965 Cal 281.

5. Kaitan minerals Vs Sales Tax Appellat Tribunel

AIR 1963 Mysore 141.

6. Natesan Vs Surya

1957 (2) MLJ 586.

நட்ட ஈட்டு வழக்குச் செலவு (Compensatorry Cost)

வழக்குகளில் அதாவது தீர்ப்பாணையை நிறைவேற்றக் கோரும் (Execution of decree) மனு உட்படவும், மேல் வழக்கு நீங்கலாகவும் கோரப்பட்டதையும் (Claim) அல்லது அதை மறுத்தும் (Defence) சொன்னது, அதைக் கோருகின்றவர் அது பொய் யானது, அல்லது துன்புறுத்தும் தன்மையது (Vexations) என்று தமக்குத் தெரிந்தும் அதற்கு மறுப்புத் தெரிவித்திருந்தும், பிறகு அக் கோரிக்கை அல்லது கோரிக்கையை மறுத்துச் சொன்னதை நீதிமன்றம் நிராகரிக்குமானால் அல்லது அக்கோரிக்கை முழு மையாகவோ, பகுதியாகவோ திரும்பப் பெறப்படுமானால், நீதிமன்றம் அது பொய்யாகவும், துன்புறுத்தும் நோக்கத்தோடு கொடுக்கப்பட்டதாகக் கருதி அதற்கான காரணங்களைக் குறித்துக் கொண்டு அதை எதிர்த்துக் கட்சிக்காரருக்கு ஈட்டு வழக்குச் செலவு தொகையாக ரூ. 1000/-க்கு அதிகப்படாமலோ, அல்லது அந் நீதிமன்றம் அதற்கும் குறைந்த நிதிநிலை, அதிகார வரம்பு பெற்றிருந்தால் அந்த அவ்வளவிற்கு மிகைப்படாமல் வழங்கலாம்.

புறநகர் (Provincial) சிறு காரண வழக்கு மன்றமாயிருப்பின் அதன் நிதிநிலை அதிகார வரம்பு ரூ. 250/- மட்டுமாயின் அங்கும் ஈட்டு வழக்குச் செலவாக ரூபாய் 250/- அல்லது அதற்கும் ரூ. 100/- அதிகமாக உயர் நீதிமன்றம் அதற்கான ஆணை பிறப்பித் திருந்தால் வழங்கலாம்.

அது மட்டுமல்ல, உயர் நீதிமன்றம் அதன் பரிபாலிப்பிலுள்ள ஏனைய நீதிமன்றங்கள் ஈட்டு வழக்குச் செலவாக எவ்வளவுதான் வழங்கலாம் என்றும் நிர்ணயிக்கலாம்.

இந்த விதமாக ஈட்டு வழக்குச் செலவு அளிக்கப்படுமானால் மேற்படி கட்சிக்காரர் அதற்காகக் குற்றவியல் சட்டப்படி நட வடிக்கை எடுப்பதற்கும் தடையேதும் கிடையாது.

இஃதன்றி, தனிப்பட்ட முறையில் நட்ட ஈட்டு வழக்குத் தொடரப்படுமானால் அதில் இங்குக் கொடுக்கப்பட்ட ஈட்டு வழக்குச் செலவு தொகை, கணக்கில் எடுக்கப்படவேண்டும் (பிரிவு 35A).

4. இடைப்பட்ட நடவடிக்கைகள்

ஆணையாளர்களை நியமித்தல்

சில நிபந்தனைகள், வரையறுப்புகளுக்குட்பட்டு நீதிமன்றம் ஆணையாளர்களைக் கீழ்க்காணும் பணிகளுக்காக நியமிக்கலாம். அதாவது ஒருவரை நீதிமன்றத்தின் சார்பில் விசாரிக்கவும் (Examine) அல்லது வழக்குச் சம்பந்தப்பட்ட சொத்துகளையும் இடங்களையும் நேரில் கண்டு ஆராய்தற்கும் (Investigation) ஒரு சொத்தைப் பற்றிய அல்லது இடத்தைப் பற்றிய நுணுக்கங்களை நீதிமன்றத்திற்கு அறிவித்தற்கும், அதுபோலச் சில கட்சிக்காரர்களின் கணக்குகளைச் சரிபார்க்கவும், அல்லது சரிசெய்யவும், அதை அடுத்துச் சொத்துகளைப் பாகப்பிரிவினை செய்யவுமான பணிகளை ஆணையாளர்களைக்கொண்டு நிறைவேற்றுவதற்காக, அவர்கள் நியமிக்கப்படுவார்கள் (பிரிவு 75).

மேற் குறிப்பிட்ட பணிகளுக்கு ஆணையாளர்களை நியமிக்கக் கோரி மனுச் செய்யும் கட்சிக்காரர் அந்த மனுவுடன் என்ன காரணத்திற்காக மேற்படி ஆணையாளரை நியமிக்க வேண்டும் என்ற காரணங்களடங்கிய சத்தியவாக்கு மூலம் தாக்கல் செய்ய வேண்டும். அதற்காகும் செலவும் ஆணையாளருக்குக் கொடுக்கக் கூடிய தரகும் (Commission) எவ்வளவு என்றும் யார் கொடுக்க வேண்டுமென்ற விபரங்களையும் நீதிமன்றம் ஆணையிடுதல் வேண்டும் (C. R. P. 82).

நீதிமன்றங்கள் ஆணையாளர்களை மேற்குறிப்பிட்ட பணிகளுக்கு நியமிக்க வேண்டுமானால் தன்னிச்சையாகவோ, ஏதாவது ஒரு கட்சிக்காரரின் விண்ணப்பத்தின் பேரிலோ, விசாரிக்கப்பட வேண்டிய சாட்சியின் விண்ணப்பத்தின் பேரிலோ நியமிக்கலாம் (கட்டளை 26. விதி 2).

ஆணையாளர்களை நியமிப்பதில் நீதிமன்றங்கள் குறிப்பிட்ட கேள்வித் தொகுப்புக்கு (Interogatorie) பதில் வடிக்கவும் அல்லது இந்த நடைமுறைச் சட்டப்படி நீதிமன்றத்தில் தோன்றப் பிரிவு 132, 133-ன்படி விதி விலக்கப்பெற்றவர்கள், நீதிமன்ற எல்லை வரம்பிற்குட்பட்டிருந்தாலும் அவர்கள் இல்லத்தில் நேரில் சென்று விசாரித்துச் சாட்சியங்களைக் குறிக்கவும், நீதிமன்ற எல்லை வரம்பிற்குட்பட்டிருந்து நீதிமன்றத்தில் நோயின் காரணமாக வரமுடியாதிருந்தால் அல்லது அரசு ஊழியராயிருந்து அலுவலுக்குப் பங்கமில்லாமல் அவர் நீதிமன்றம் வரமுடியாத நிலையிலிருந்தால், அவர்கள் சாட்சியங்களை ஆணையாளர் நேரில் சென்று பதிவு செய்யவும் பணிக்கலாம்.

நீதிமன்றங்கள் பொதுப்படையாகத் தங்களுடைய அதிகார வரம்பு கடந்தும் ஆணையாளர் மூலம் விசாரணை நடத்தலாம். அப்படி விசாரிக்கப்பட வேண்டியவர்கள் வேறு நீதிமன்ற அதிகார வரம்பிற்குள் இருந்தால் எந்த நீதிமன்றத்தின் அதிகார வரம்பில் இருக்கின்றார்களோ, அந்த நீதிமன்றத்திற்கு அனுப்பி மேற்படி ஆணையை நிறைவேற்றச் செய்யலாம். ஆனால், அவ்வாறு அனுப்பப்படுகின்ற ஆணைகள் (Commission) உயர்நீதி மன்றம் நீங்கலாக அதற்குக் குறைந்த நீதிமன்றங்களுக்குத்தான் அனுப்பப்படல் வேண்டும். அதற்கிணங்கப் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் பணிமுடிந்த பிறகு அனுப்பிய நீதிமன்றத்திற்கோ அதன் கீழ்ப் பணியாற்றும் நீதிமன்றத்திற்கோ திருப்பி அனுப்பப்படவேண்டும் என்றுகேட்டுக்கொள்ளலாம் (கட்டளை 26. விதி 4).

வெளிநாட்டிலிருப்பவருடைய சாட்சியம் அத்தியாவசிமாயிருக்குமானால் நீதிமன்றம் சாட்சியம் பதிவு செய்துவர ஆணையாளரை நியமிக்கும்படி, அந்நாட்டின் எந்த நீதிமன்றத்தின் அதிகார எல்லைக்குள் மேற்படி சாட்சியம் அளிப்பவர் இருக்கின்றாரோ அந்த நீதிமன்றத்தைப் பணிக்கலாம். அதன்படி வெளிநாட்டிலுள்ள நீதிமன்றம் அதனுடைய அதிகார வரம்பிற்குள்ளிருக்கும், அந்த நபரிடம் விசாரணை நடத்துவதற்கான அனைத்தையும் செய்து அவருடைய சாட்சியத்தைப் பதிவு செய்து ஆணை பிறப்பித்த நீதிமன்றத்திற்குத் திரும்ப அனுப்பி வைக்கும் (கட்டளை 26. விதி 5 & 6).

அவ்வாணையின் கீழ்ச் (Commission) சேகரிக்கப்பட்ட சாட்சியம் நீதிமன்றத்தில் பதிவான சாட்சியமாகவே பொதுவாகக் கருதப்படினும் அதற்கு எதிர்த்தரப்பின் இசைவு (Consert) வேண்

டும். மேற்படி சாட்சியச் சேகரிப்போடு ஆணையாளரின் அறிக்கையும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விசாரணை நடத்திச் சாட்சியங்களைப் பதிவு செய்து கொடுத்த ஆணையாளரைக் கட்சிக்காரர்கள் சில நுணுக்கங்கள் தெளிவெடுப்பதற்காக நீதிமன்ற அனுமதியுடன் நீதிமன்றத்தில் விசாரிக்கலாம்.

ஆணையாளரின் அறிக்கை (Report) நீதிமன்றத்திற்குத் திருப்திகரமாயில்லையானல், நீதிமன்றம் மறு விசாரணை செய்யவோ, அவ்விசாரணை எந்த முறையில் நடத்துதல் வேண்டுமென்றே பணிக்கலாம்.

நியமிக்கப்பட்ட ஆணையாளர்கள், கட்சிக்காரர்களை அல்லது அவர்களுடைய சாட்சிகளை விசாரிக்க வேண்டுமாயின் அவர்களை விசாரிக்கவும் அல்லது எழுத்துச் சான்றுகள் (documents) முதலியவைகளைப் பரிசீலிக்கவும், வழக்கு சம்பந்தப்பட்ட நிலங்கள், கட்டடங்களில் நுழையவும், அங்குத் தம்முடைய ஆணைக்கான பணியைச் செய்ய அதிகாரம் பெற்றுள்ளார்கள் (கட்டளை 26. விதி 16). அதுபோலவே சாட்சிகளை அழைக்கவும் அதிகாரம் பெற்றிருக்கின்றார்.

வெளிநாட்டு நீதிமன்றம் ஆணையாளரை நியமிக்க நம் நீதிமன்றங்களைக் கேட்டுக்கொள்வதின் (Letter of request) பேரில் இங்கு ஆணையாளர் நியமிக்கப்படுவாரானல் அந்த ஆணையாளரும் மேற்குறிப்பிட்ட அதிகாரங்கள் செலுத்த வல்லவராவர்.

அரசு சார்பில் அதற்கு எதிராகத் தொடுக்கப்படும் வழக்குகளும், அரசு அலுவலர்கள் அவர்கள் அரசு பணியை நிறைவேற்றும் சமயம் எழுந்த வழக்குகளும், அவர்கள் மீதும் அல்லது அவர்களால் தொடரப்படும் வழக்குகளும்

அரசு தரப்பில் போடப்படும் அல்லது அரசுமீது போடப்படும் வழக்குகளில் கீழ்க்காணும் வடிவில் வழக்குக் காரணக்குறிப்பு (Cause tittle) அமைதல் வேண்டும். மத்திய அரசாயிருந்தால் "இந்தியக் கூட்டரசு' (Union of India) என்றும் மாநில அரசாயிருந்தால் அம்மாநில அரசின் பெயர். உதாரணமாக 'தமிழ் நாடு அரசு' என்று இருத்தல் வேண்டும் (பிரிவு 79).

தனிப்பட்ட முறையில் யாரும் மத்திய அரசுமீதோ, அல்லது மாநில அரசுமீதோ வழக்குப் போடுவதானல் கண்டிப்பாக இரண்டு

மாதக் காலக்கெடு கொடுத்து, முன் அறிவிப்பு (Notice) கொடுத்த பின்தான் வழக்குப்போட முடியும். இதைச் சட்டப்படியான முன் அறிவிப்பு என்று அழைக்கலாம் (Statutory Notice). அது போலவே அரசு அதிகாரி அல்லது அலுவலர் மீது அவர்கள் அரசு அலுவல் செய்யுங்கால் எழுந்த காரணத்தால் அவர்கள் மீது வழக்கு தொடுக்கப்படுமானாலும் அவர்களுக்கும் மேற்குறிப்பிட்ட இரண்டு மாதச் சட்டப்படியான முன் அறிவிப்பு (Statutory Notice) கொடுத்த பிறகே வழக்குப் போடமுடியும். இந்த இரண்டு மாதச் சட்டப்படியாகக் கெடு கொடுக்கப்பட்ட முன்அறிவிப்பு அந்த குறிப்பிட்ட அரசு அலுவலகத்தில் கொடுக்கப்பட்ட அல்லது சேர்ப்பிக்கப்பட்ட நாளிலிருந்து கணிக்கப்படும். அவ்விதமாக அறிவிப்புக் கொடுக்கப்பட வேண்டியவர்கள் மத்திய அரசாயிருந்தால் குறிப்பிட்ட துறை (Department) செயலாளர் அல்லது அது அவரது அலுவலகத்தில் சேர்க்கப்பட வேண்டும்.

இரயில் துறையாயிருப்பின், அந்த இரயில் துறைப் பொது நிர்வாகி (General Manager)க்கு மேற்படி இரண்டு மாதக் காலக் கெடு முன் அறிவிப்புக் கொடுக்கவேண்டும்.

மாநில அரசாயிருந்தால் குறிப்பிட்ட துறை அரசு செயலாளரிடமோ அல்லது அவர் அலுவலகத்திலோ (Secretary of the Department) அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் (Collector) அல்லது அவர் அலுவலகத்திலோ மேற்படி முன் அறிவிப்பு சார்பு செய்தல் வேண்டும்.

வழக்கு அரசு அதிகாரி அல்லது அலுவலர் மேல் போட வேண்டியிருப்பின் அவரிடமோ, அல்லது அவர் பணிபுரியும் அலுவலகத்திலோ மேற்படி சட்டப்படியான கெடு அறிவிப்புக் கொடுக்கப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட சட்டப்படியான முன் அறிவிப்பில் வழக்குக் கான காரணம், வழக்கு தொடர உத்தேசித்திருக்கும் வாதியின் பெயர், முகவரி, அதோடு எந்த நிவாரணம் கோரி (Relief) வழக்குத் தொடரத் திட்டம் என்பது குறிப்பிடப்பட வேண்டும்.

அவ்விதம் முன் அறிவிப்புக் கொடுத்துப் பதில் ஏதும் வரவில்லை யானுல் அல்லது அரசு தரப்பு தந்த பதில் திருப்தியளிப்பதாக இல்லாமல் இருந்து மேற்படி வழக்குத் தொடரும் போது, வழக் குரையில் (Plaint) மேலே குறிப்பிட்டபடி சட்டப்படியான முன் அறிவிப்புக் கொடுக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிடுவதோடு, அதற் கான அத்தாட்சியும் தாக்கல் செய்யவேண்டும். அவ்விதமாகக்

குறிப்பிடவில்லையானால் அந்த வழக்குரை தள்ளுபடி செய்யப்பட்டு விடும். எனவே மேற்படி சட்டப்படியான முன் அறிவிப்பு இன்றியமையாதது. முன்னோடியாக நிறைவேற்ற வேண்டிய கண்டிப்பான தவிர்க்க முடியாத நிபந்தனையாகும் (Condition Precedent) (பிரிவு 80).

அரசு அதிகாரிகள் மீது அல்லது அலுவலர்கள் மீது தனிப் பட்ட முறையில் போடப்பட்ட வழக்காக இருந்தால் அதற்கு மேற் குறிப்பிட்ட முன் அறிவிப்புக் கொடுக்கப்பட வேண்டிய அவசியமில்லை. இந்தச் சட்டப்பிரிவு பொது அதிகாரிகளை அவர்கள் அரசு கடமை செய்யுங்கால் எழுந்துள்ள வழக்கிலிருந்து சிறப்பான முறையில் பாதுகாப்பதற்கே ஏற்படுத்தப்பட்டது. உதாரணமாக, அரசு அதிகாரி ஒருவரிடம் ரூபாய் 2000/- கடன் பெற்றிருக்கின்றார் என்று வைத்துக் கொள்வோம். அந்தப் பணம் திருப்பிக் கொடுக்கப்படவில்லையானால், அந்தக் கடன் தொகையைத் திரும்பப் பெறுவதற்குக் கடன் கொடுத்தவர் அந்த அரசு அதிகாரி மீது வழக்குப் போடுவதானால் நேரடியாக நீதி மன்றத்தில் வழக்குரை தாக்கல் செய்யலாம். அவருக்கு எந்த வித முன் அறிவிப்பும் கொடுக்கத் தேவையில்லை. ஏனென்றால் இங்கு குறிப்பிட்டிருக்கும் வழக்குக்கான காரணம், அந்த அரசு அதிகாரியின் தனிப்பட்ட காரியம். அரசுக்காக, அல்லது அரசு அலுவலை நிறைவேற்றுகையில் எழுந்த காரணமல்ல என்பது குறிப்பிடத்தக்கது.

அதே சமயம் அரசு ஆணையை நிறைவேற்றுவதில், ஒருவருக்கு நட்டத்தை அல்லது மான நட்டத்தை ஏற்படுத்தி விட்டால் அதனால் அவ்வதிகாரியின் மீது வழக்கு தொடர வேண்டியிருப்பின் அவருக்குக் கண்டிப்பாக மேலே குறிப்பிட்டபடி சட்டப்படியான இரண்டுமாதக் கெடு அறிவிப்புக் கொடுத்த பின் மட்டுமே அவர் மீது வழக்குத் தொடர முடியும். ஆனால் அரசு சாதாரணமாக யார் மீது வழக்கு போடுவதானாலும், அவர்கள் மேற்குறிப்பிட்ட அல்லது அது போன்ற முன் அறிவிப்புக் கொடுக்கக் கடமைப் பட்டவர்களல்லர்.

இரண்டு வாதிகளிலிருந்து அவர்களில் ஒருவர் மட்டும் சட்டப் படியான முன் அறிவிப்புக் கொடுத்திருந்தால் மட்டும் போதாது. கண்டிப்பாக பிரிவு 80-ன்படி இரண்டு பேரும் மேற் குறிப்பிட்ட 60 நாள் கெடு கொடுத்த முன்அறிவிப்புக் கொடுத்தாக வேண்டும். அப்பொழுதுதான் வழக்கு சரிவரத் தாக்கல் செய்யப்பட்டதாகப் பொருள்படும்.

தீர்ப்பாணையைச் செயல்படுத்தும் போதன்றி மற்ற வழக்குச் சமயங்களில் பிரதிவாதி அரசு அதிகாரியாய் இருந்து, அவ்வழக்கு அரசு அலுவல் காரணமாக எழுந்ததாயிருந்தால், பிரதிவாதியான அவரைக் கைது செய்யவோ, அல்லது அவரது சொத்துகளை ஜப்தி (attach) செய்யவோ முடியாது.

அதுபோன்ற வழக்குகளில் பிரதிவாதி, அரசு அலுவல் பாதிக்காவண்ணம், நீதிமன்றத்திற்கு வழக்கிற்காக வர முடியா திருந்தால், நீதிமன்றம் அவரை நீதிமன்றத்திற்குக் கண்டிப்பாக வரவேண்டுமென்கிற நிலையிலும் அவருக்கு நீதிமன்றத்திற்கு வரத் தேவையில்லை என்று விதி விலக்களிக்கலாம் (பிரிவு 81).

மத்திய, மாநில அரசு அல்லது அதன் அதிகாரிகளின் மீது தீர்ப்பாணையைச் செயல்படுத்துவதில் கீழ்க்காணும் வகையைக் கையாள வேண்டும்.

தீர்ப்பாணையில் மேற்படி தீர்ப்பாணை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் மேற்படி அரசு அல்லது அதன் அதிகாரிகளால் நிறைவேற்றப்படவேண்டும் என்று குறிப்பிடவேண்டும். அவ்வாறு காலவரையறை குறிப்பிடப்படவில்லையானால் தீர்ப்பாணை நாளிலிருந்து 3 மாத காலத்திற்குள் மேற்படி ஆணை நிறைவேற்றப்பட வேண்டும் என்பதாக எடுத்துக் கொள்ளவேண்டும். இந்தக் குறிப்பிட்ட நாள்களில் தீர்ப்பாணை நிறைவேற்றப்படவில்லையானால், தீர்ப்பாணை பிறப்பித்த நீதிமன்றம் தான் இருக்கின்ற மாநில அரசுக்கு அதன் மறு கட்டளைக்காக இதை அறிவிக்கும் (Report). இந்த அறிவிப்புக்குப் பிறகும் 3 மாத காலம் வரை தீர்ப்பாணை நிறைவேற்றப்படாது. இந்த விதி தீர்ப்பாணைக்கு மட்டுமல்லாமல், நீதிமன்றம் அளிக்கும் ஏனைய கட்டளைகள் (Orders) தீர்வு (Award) முதலியவற்றை நிறைவேற்றுவதிலும் பொருந்தும் (பிரிவு 82).

வெளிநாட்டவர்கள் (Foreigners) வெளிநாட்டரசர்கள் (Rulers of Foreign Countries) தூதுவர்கள் (Ambassadors) துணைத்தூதுவர்கள் (Envoys) உயர் ஆணையாளர்கள் (High Commissioners) தொடரும் அல்லது அவர்கள் மீது தொடரப்படும் வழக்குகள்.

பகை நாட்டைச் சேர்ந்தவர்கள் நம் நாட்டில் இருந்தால் அவர்கள் நம் நாட்டில் யார் மீதும் உரிமையியல் வழக்குத்

Civil Suit) தொடர்வதானுல் மத்திய அரசின் அனுமதியுடன் தான் செய்ய முடியும். ஆனுல் நட்பு நாட்டைச் சேர்ந்தவர்கள் நம் நாட்டிலிருந்தாலும் சரி அல்லது அவர்களுடைய அல்லது வேறெந்த நாட்டிலிருந்தாலும் சரி நம் நாட்டில் யார் மீதும் வழக்குத் தொடர்வதானுலும் இந்நாட்டுக் குடிமகனேப் போலவே உரிமை உண்டு.

நம் நாட்டுடன் பகை கொண்ட நாட்டில் வாழ்பவர்கள் அனே வரும் பகை நாட்டைச் சேர்ந்தவர்கள் எனக் கருதப் படுவார்கள். நம் நாட்டவர்களும் வேற்று நாட்டவரும் தொழில் புரிய மேற்படி பகை நாட்டிலிருக்க நேரிடின், அவ்வாறு தொழில் நடத்த நம் மத்திய அரசின் அனுமதி பெருமலிருப்பார்களானுல் அவர்களும் பகை நாட்டினர் என்று கருதப்பட வேண்டியவர்கள் (பிரிவு 83).

வெளி நாட்டரசு நம் நாட்டில் யார் மீதும் தனிப்பட்ட உரிமையை நிலே நாட்ட (Private right) தகுதியான நீதிமன்றத்தில் வழக்குத் தொடரலாம். அரசியல் காரணங்களுக்காகவோ, அல்லது அரசியல் உரிமைக்காகவோ வழக்குகள் போடமுடியாது (பிரிவு 84).

மத்திய அரசு, வெளி நாட்டு ஆட்சியாளர் கேட்டுக் கொண்டால் அல்லது மத்திய அரசின் கருத்தில் அந்த நாட்டு அதிகாரி ஒருவர் நம் மத்திய அரசின் அனுமதியைக் கேட்கத் தகுதி பெற்ற வராயிருப்பின் அவருடைய வேண்டுகோளுக்கிணங்க அவ்வெளி நாட்டு அரசு சார்பில் நம் நாட்டில் வழக்குத் தொடர, அல்லது தொடரப்பட்ட வழக்கை எதிர்த்து வழக்காடத் தகுதியான யாரை யாவது நியமிக்கலாம்.

அவ்வாறு யாரையாவது நியமிக்கும்போது ஒரு தனிப்பட்ட வழக்குக்காகவோ, அல்லது அது போன்ற பலதரப்பட்ட வழக்கு களுக்காகவோ, அல்லது இவ்வாறு வழக்குகள் ஒவ்வொரு சமயம் வரும்போது அதைக் கவனித்துக் கொள்ளவோ, நியமிக்கலாம்.

இந்த முறையில் நியமிக்கப்பட்டவர் அவர் சார்பில் நீதி மன்றத்தில் பணியாற்ற யாரையும், அனுமதிக்கவோ, அல்லது அமர்த்தவோ முடியும். அதுமட்டுமல்லாமல் அவ்வழக்குகளில் அவர்கள் கடைப்பிடிக்கும் காரியங்கள் யாருக்காக அவர்கள் பணிபுரிகின்றனரோ, அவர்களே, அவற்றைச் செய்ததாகக் கருதப்படும் (பிரிவு 85).

மத்திய அரசின் இசைவோடு அவ்வனுமதியை மத்திய அரசு செயலாளர் எழுத்தால் உறுதி செய்ததின் பேரில் மட்டுமே

(Certified) அந்த வெளிநாட்டரசர் அல்லது ஆட்சியாளர் மீது நம் நாட்டில் தகுதியானதொரு நீதிமன்றத்தில் யாரும் வழக்குத் தொடரலாம்.

மேற்படி அனுமதியில்லாமல் அயல் நாட்டரசர் அல்லது ஆட்சியாளருக்குச் சொந்தமான அசையாச் சொத்தில் குடியிருப்பவர் அல்லது குத்தகைக்காரரா யிருக்கும் நபர் மட்டும் அது சம்பந்தமான வழக்குகளைத் தொடரலாம். மற்றப்படி எல்லா விதமான வழக்குகளுக்கும் மேற்குறிப்பிட்டபடி மத்திய அரசின் இசைவு கண்டிப்பாக வேண்டும்.

அப்படி வழங்கப்படுகின்ற இசைவு (Consent) அல்லது ஒரு குறிப்பிட்ட வழக்கிற்கோ, அல்லது சில வழக்குகளுக்கோ, ஒரு தரப்பட எல்லா வழக்குகளுக்கோ, வழங்கப்படலா மென்றாலும் சாதாரணமாக அவ்விசைவு கீழ்க்காணும் சந்தர்ப்பங்கள் தவிர மற்றவற்றிற்கு வழங்கப்படுவதில்லை. அதாவது (1) வெளி நாட்டு ஆட்சியாளர் ஏற்கெனவே அவர் மீது வழக்குத் தொடரலா மென்றிருந்த நபர் மீது வழக்குத் தொடர்ந்திருந்தால், அல்லது—

வெளி நாட்டு ஆட்சியாளர் அல்லது அவரைச் சார்ந்த யாரும் நம் நாட்டில் வியாபாரம் செய்து கொண்டிருக்கும், காரணமாக அவ்வியாபாரம் செய்யுமிடம் ஒரு குறிப்பிட்ட நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்குள்ளிருந்து அங்கு அவ்வழக்குக்கான காரணம் எழுந்திருந்தாலும்—

மேற்படி வெளி நாட்டு ஆட்சியாளர் (Ruler) வசமிருக்கும் (Possession) அசையாச் சொத்து குறிப்பிட்ட நீதிமன்ற அதிகார வரம்புக்குட்பட்டிருந்து, அதன் பேரிலோ, அல்லது அந்தச் சொத்தைக் கட்டுப் படுத்தும் தொகை சம்மந்தமாக மேற்படி வெளிநாட்டு ஆட்சியாளர் மீதும் வழக்கு தொடர வேண்டிய நிலையிருந்தாலும், அல்லது —

மேற்படி வெளி நாட்டு ஆட்சியாளர் இந்தச் சட்டப் பிரிவுப் படி அளிக்கப்பட்டிருக்கும் சலுகையை விட்டுக்கொடுப்பாரானாலுமாகும். மத்திய அரசின் இசைவின் பேரில் அதாவது அதன் செயலாளர் எழுத்தால் அத்தாட்சி செய்யாமல் (Certify) வெளி நாட்டு ஆட்சியாளர் யாரையும் இந்தச் சட்டத் தொகுப்பின்கீழ்க் கைது செய்யக் கூடாது. அது மட்டுமல்ல. அவர்களுடைய சொத்துக்களை ஜப்தி அல்லது ஒப்படைப்புச் (attach) செய்யவும் கூடாது.

மேற்குறிப்பிட்ட ஒழுங்கு, வெளிநாட்டுத் தூதர்கள் (Ambasadors), துணைத் தூதுவர்கள் (envoys), உயர் ஆணை யாளர்கள் (High Commissioner of the commonwealth countries) அந்த அலுவலகங்களில் பணிபுரியும் அதிகாரிகளுக்கும் உரியதாகும். ஆனால் அதிகாரிகளைப் பொறுத்தவரை மத்திய அரசு பொதுவான அல்லது சிறப்பான ஆணை ஏதும் பிறப்பிக்கலாம் (பிரிவு 86).

வெளிநாட்டு ஆட்சியாளர்கள் மீது தொடரப்படும் வழக்கு அவர்களுடைய நாட்டின் பெயரில் இருக்கலாம். அன்றி மத்திய அரசு பிரிவு 86-ல் குறிப்பிட்டபடி அவர்கள்மீது தொடரப்படும் வழக்கு நடத்த நியமிக்கும் முகவரின் (Agent) பெயரிலும் இருக்கலாம் (பிரிவு 87).

வெளி நாடு, வெளி நாட்டரசர் என்ற பதங்களின் பொருள் விளக்கம்

வெளி நாடு என்றால் மத்திய அரசால் இந்தியாவை விட்டு வெளியேயுள்ள எந்த ஒரு நாடும் தனி நாடு என்று ஏற்றுக் கொள்ளப் (Recognised) பெற்றிருக்கும் நாடு.

அது போல ஒரு நாட்டின் ஆட்சியாளர் என்பவரும் நம் மத்திய அரசால், அந்நாட்டின் ஆட்சியாளர்தான் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டவர் (Reeognised) தான் அந்த நாட்டின் ஆட்சியாளர் என்று கருதப்படுவார். மேற்குறிப்பிட்டபடி நம் மத்திய அரசு எந்த நாட்டை ஏற்றுக் கொண்டிருக்கின்றது அல்லது அதன் ஆட்சியாளரை ஏற்றுக்கொண்டிருக்கின்றது என்பது நம் நீதிமன்றங்கள்சட்டத்தினால் நிலை பெயராதிருக்கத் தக்கதாக (Judicial Notice) ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும் (பிரிவு 87A).

முன்னாள் இந்தியக் குறுநில மன்னர்கள் மீதான வழக்குகள்

முன்னாள் இந்தியத் தனி நாடுகள் (former Indian Statcs) என்று நம் மத்திய அரசு ஏற்று, அரசு இதழில் பிரசுரம் செய்யப் பட்ட பகுதிகள்தான் முன்னாள் இந்தியத் தனி நாடுகளாகும். அதுபோன்று அந்தப் பகுதி ஆட்சியாளர் என்பவர் நமது குடியரசு தலைவரால் ஏற்றுக் கொள்ளபட்டவராயிருத்தல் வேண்டும். அவர்களும் மேற்குறிப்பிட்ட சட்டப்பிரிவு 85, 86-ன் படி சில

சலுகைகளை அனுபவிக்க முடியும். ஆனால் இப்போது அம்மன்னர்களின் சலுகைகள் அத்தனையும் அரசியல் சட்டத்தில் திருத்தத்தின் காரணமாக நீக்கப்பட்டிருக்கின்றன. மத்திய அரசு அவர்களுக்கு வழங்கும் மானியங்களை நிறுத்தியுள்ளபடியால் அவர்கள் சாதாரணக் குடிமக்களாகவே கருதப்படுவர்.

இருவர்க்கு நடுவர் வழக்கு (Inter Pleader Suit) அல்லது இடைப்பாத்திய வழக்கு

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் ஒருவருக்கு ஒருவர் எதிராக, ஒரு கடன் வருவாயை (debt) அல்லது பணம் (Sum of money) அல்லது வேறு அசையும் அசையாச் சொத்தையோ, தமக்குத்தான் பாத்தியம் என்று கோரும் போது மேற்படி சொத்தோ, தொகையோ, மூன்றாவது நபரின் கைவசம் அல்லது பொறுப்பிலிருந்துஅவருக்கு இந்தச் சொத்தோ, பணமோ, கோருபவர்களில் உண்மையில் அது யாருக்குப் பாத்தியம் என்பது விளங்காமலிருக்குமானால், அதே சமயம் அவருக்கு அந்தப் பணத்திலோ, சொத்திலோ, எந்தப் பாத்தியதையும் உரிமையும் இல்லாதிருந்து, அந்தப் பொருளை அல்லது பணத்தை உண்மையான உரிமையாளரிடம் அவர் கொடுக்கத் தயாராக இருந்து, வேண்டுமானால் அந்தப் பொருளோ, பணமோ சொத்தோ, தன்னிடம், இருந்ததற்கு வாடகையை அல்லது தான் அதைப் பாதுகாப்பதில் ஏற்றிருக்கும், செலவு மட்டும் உண்மையான உரிமையாளரிடம் பெறுவதற்கு உரிமையுண்டு என்ற நிலையில் உண்மையான உரிமையாளர் என்பதாக நீதிமன்றத்தின் முடிவை அறிந்து அவரிடம் அதை வழங்குவதற்கு வழக்குத் தாக்கல் செய்யலாம். அப்படித் தொடரப்படும் வழக்கை இருவருக்கு நடுவர் வழக்கு அல்லது இடைப் பாத்திய வழக்கு என அழைக்கலாம்.

மேற்குறிப்பிட்ட சூழ்நிலையில் வேறு ஒரு வழக்கு நீதிமன்றத்திலிருந்து அந்த வழக்கின் வாயிலாக உண்மையான உரிமையாளர், என்று அறிந்து கொள்ள முடியும் நிலையிருந்தால் இந்த இருவருக்கு நடுவர் வழக்கு தாக்கல் செய்யக் கூடாது (பிரிவு 88).

இருவருக்கு நடுவர் வழக்கில் சாதாரண முறையில் வழக்கு மனு தயாரிப்பதோடு கீழ்க்காணும் சிறப்புக் குறிப்புகளும் இருத்தல் வேண்டும். அதன்படி நடுவராக வழக்குத் தொடர்பவர் தமக்கு வழக்குச் சொத்தோ, பொருளோ, அதைப் பாதுகாப்புக் கான செலவினங்கள் தவிர அவற்றில் தமக்கு எந்த பாத்தியதை யுமில்லை என்று கூற வேண்டும். அதோடு பிரதிவாதிகள் ஒருவருக்

கொருவர் எதிராக மேற்படி சொத்தையோ, அல்லது பெருளையோ, பணத்தையோ, தமக்குத்தான் சொந்தம் என்று உரிமை பாராட்ட வேண்டும். அது தவிர தமக்கும் பிரதிவாதி களில் யாருனுடனும் கூட்டு (Collusion) இல்லை என்றும் குறிப்பிட வேண்டும் (கட்டளை 35. விதி 1).

மேற்குறிப்பிட்டபடி இருவருக்கும் மேற்பட்டோர் ஒரு சொத்து தன்னது என்று கோரும்போது அச்சொத்தை வைத்திருப் பவர் நீதிமன்றத்தின் பாதுகாப்பில் அதைக் கொணர முடியுமானால் நீதிமன்றத்தின் பாதுகாப்பின்கீழ் அதைக் கொண்டு வரலாம். ரொக்கப் பணமாயிருந்தால் வழக்கின் முடிவு தெரியு முன் நீதி மன்றத்தின் பாதுகாப்பில் கட்டி விடலாம் (கட்டளை 35. விதி 2).

இருவருக்கு நடுவர் வழக்கில், ஏதாவது ஒரு பிரதிவாதி நடுவர் மீது மேற்படி வழக்குச் சொத்து, பணம், கோரி வழக்குத் தொடர்ந் திருப்பாரானால், ஏற்கெனவே இருவருக்கு நடுவர் வழக்கு நடை பெறும் நீதிமன்றத்திலிருந்து அது பற்றித் தெரிவிக்கப்படுமானால் பிரதிவாதி மேற்படி வாதியான நடுவர் மீது வழக்குத் தொடர்ந்த நீதிமன்றம் அவ்வழக்கை நிறுத்தி வைக்கும் (Stay). அது மட்டு மல்லாமல் பின்னல் தொடர்ந்த வழக்கில் நடுவரின் செலவு தொகையையும், இருவருக்கு நடுவர் வழக்கில் கட்டித் தரவேண் டும். அங்ஙனம் கட்டித் தரவில்லையானால் மேற்படி வழக்கின் இறுதியில் அச் செலவும், நீதிமன்றச் செலவு தொகையுடன் சேர்த் துக் கொள்ளப்படும் (கட்டளை 35. விதி 3).

இந்த வழக்கின் முதல் விசாரணை நாளில் வாதியான நடுவர், வழக்கில் கட்சிக்காரராக நீடிக்கத் தேவையில்லை என்று நீதிமன் றம் கருதினால் அவருடைய நீதிமன்றச் செலவைக் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்து அவரைப் பொறுப்பிலிருந்து விலக்கி விட்டு. வழக் கில் பிரதிவாதிகளை, வாதியாக, பிரதிவாதியாகப் பாவித்து வழக் கைச் சாதாரண முறையில் நடத்தி முடிக்கலாம். ஆனால் நீதியின் காரணமாகவும் வசதிக்கும் வாதியான ஒருவர் வழக்கு முடியும் வரை அவர் கட்சிக்காரராக இருந்தாக வேண்டுமெனில் நீதி மன்றம் எல்லோரையும் அப்படியே கட்சிக்காரர்களாக நிறுத்திக் கொள்ளலாம்.

மேற்படி வழக்கில் ஒப்புதல் (Admission) சாட்சியங்களைக் கொண்டு ஒருவருடைய உரிமைகளை நீதிமன்றம் பிரகடனம் செய்து விடலாம். நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்ட சாட்சியங் களைக் கொண்டு ஒருவருடைய உரிமைகளை, பாத்தியதைகளைப் பிர

கடனம் செய்ய இயலவில்லையானால் அதில் சர்ச்சைப் பொருளை (issue) நிர்ணயித்து அதைப்பற்றி ஆய்ந்து (try) சாதாரண வழக்குகளில் முடிவெடுப்பது போல முடிவெடுக்கலாம்.

முகவர்கள் (Agents) அதுபோலக் குத்தகைக்காரர்கள் (Tenants) அவர்களின் முதல்வர்கள் (Principals) அல்லது நில வீட்டுச் சொந்தக்காரர்களை எதிர்த்து இருவர்க்கு நடுவர் வழக்குப் போட முடியாது. அப்படியொரு வழக்குப் போட நேரிடின் அந்த வழக்கு மேற்படி முதல்வர்கள் அல்லது நில, வீட்டுச் சொந்தக்காரர்கள் மூலமாக முறையேதான் வழக்குப் போடவேண்டும் (கட்டளை 35. விதி 5).

இருவருக்கு நடுவர் வழக்கில் வாதியான நடுவருக்குண்டான நீதிமன்றச் செலவு தொகைக்கு வழக்குச் சொத்தில் பொறுப் பேற்றி வைத்து (Charge) அல்லது வேறு வழியில் அந்தச் செலவு தொகை வாதிக்குத் திரும்பக் கிடைக்க வழி செய்யப்படும். (கட்டளை 35. விதி 6).

சிறப்பு வழக்கு (Special Case) அல்லது நட்பு வழக்கு (Friendly Suit)

சிலர் எழுத்தில் ஒப்பந்தம் செய்து கொண்டு தங்களுக்குள்ளிருக்கும் விவகாரத்திற்கு நீதிமன்றத்தின் அபிப்பிராயத்திற்குச் சமர்ப்பித்துச் சட்டப்படியான தீர்ப்பை வாங்கி கொள்ள வழக்கு தாக்கல் செய்தால் அவ்வழக்குச் சிறப்பு வழக்கு என்றும் அல்லது நட்பு வழக்கு என்றும் அழைக்கப்படுகின்றது 'சிறப்பு' ஏனென்றால் சாதாரண வழக்குகளின்று மாறுபட்டுச் சிறந்து நிற்கின்றது. 'நட்பு' ஏனென்றால் சாதாரணமாக ஒருவர் வழக்குத் தொடர அதை மற்றவர் எதிர்த்து வாதாடுவதுதான் வழக்கம். இங்கு வழக்கே சம்மந்தபட்டவர்கள் நட்பு முறையில் ஒப்பந்த வடிவில் நடத்தப்படுகின்றது. குறிக்கோள், வழக்கு எதிர் வழக்காடுவதல்ல. அதற்கு மாறாக இருசாராரும் நீதிமன்றத்தின் தீர்ப்பை மனமுவந்து நாடுகின்றனர் (பிரிவு 90).

சிறப்பு வழக்கில் கட்சிக்காரர்கள் விவகாரத்தின் பொருட்டோ, விவகாரத்திலடங்கிய சட்டப்பிரச்சினை குறித்தோ, ஒப்பந்தம் செய்து கொள்ளலாம் (கட்டளை 36. விதி 1).

மேற்குறிப்பிட்டபடி தீர்ப்பு வழங்கப்பட்டால் அதன்படி ஒரு கட்சிக்காரர் மற்றவருக்குக் கொடுக்க வேண்டிய பணம் நிர்ணயிக்கப்படலாம்.

அதுபோல, அசையும் சொத்தோ, அசையாச் சொத்தோ, ஒரு தரப்பு, மற்றத் தரப்புக்குக் கொடுக்க வேண்டும் என நிர்ணயிக் கப்படலாம்.

மற்றும் ஒரு கட்சிக்காரரோ, மற்றவரோ குறிப்பிட்ட காரியம் எதையும் செய்ய வேண்டுமென்றோ அல்லது செய்யக் கூடாது என்றோ நிர்ணயிக்கலாம்.

இந்த வழக்கின் சாராம்சம் மற்ற வழக்குகளில் குறிப்பிடப்பட் டிருக்கும் வழக்குரை சாயலாக எழுதப்பெறும். அத்தோடு, கட்சிக் காரர்கள் தங்கள் கட்சிக்குச் சாதகமான எழுத்து ஆதாரங்களைக் காட்டுவதின் மூலம் நீதிமன்றம் கட்சிக்காரர்களால் எழுப்பப்பட்ட பிரச்சினைக்கு, தீர்ப்பு மூலம் தீர்வுகாண வசதி செய்ய வேண்டும்.

கொடுக்கப்பட வேண்டிய பொருள் அவ்வண்ணம் கொடுக்கப் பட முடியாதிருந்தால் அதன் விலை முதலியவை வழக்குரையில் குறிக்கப்படுதல் வேண்டும் (கட்டளை 36. விதி 2).

சிறப்பு வழக்கு ஒப்பந்த வடிவில் வழக்கின் மதிப்பு குறிப்பிடப் பட்டு அதிகார வரம்பு கொண்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப் பட வேண்டும். அதற்குப் பிறகு வழக்கின் வகையறிந்து வாதி, பிரதிவாதியாக, கட்சிக்காரர்கள் பிரிக்கப்படுவார்கள். இது வழக்காகப் பதிவு செய்யப்பட்டு, தாக்கல் செய்த கட்சிக்காரர்கள் தவிர மற்றும் சம்பந்தப்பட்ட எல்லாக் கட்சிகாரர்களுக்கும் அறிவிப்புக் கொடுக்கப்படும் (கட்டளை 36. விதி 3).

இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட கட்சிக்காரர்கள் அத்தனை பேரும் நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்குக் கட்டுபட்டவர்களாக இருத்தல் வேண்டும் (கட்டளை 36, விதி 4).

இந்த வழக்கு நடைபெறுவதில் இந்த நடைமுறைச் சட்ட ஒழுங்கு கையாளப்படும். நீதிமன்றம் இந்த வழக்கின் ஒப்பந்தம் செம்மையாக நிறைவேற்றப்பட்டது என்றும் கட்சிக்காரர்கள் தங்கள் பிரச்சனையைத் தீர்த்துக்கொள்ள உண்மையிலேயே அக்கறை கொண்டிருக்கின்றார்கள். அதோடு அவர்கள் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டிய அவசியம்தான் என்று திருப்திப்படுத்திக் கொண்டால் அதன்பேரில் நீதிமன்றம் தன்னுடைய தீர்ப்பை வழங்கும். அதைத் தொடர்ந்து தீர்ப்பாணை வழங்கப்படும். அது கட்சிகாரர்களைக் கட்டுப்படுத்தும்.

5. சிறப்பு நடவடிக்கைகள்

பொதுக் காரியங்கள் சம்மந்தப்பட்ட வழக்குகள்

சமூகக் கேடு விளைக்கும் தொல்லை நீக்க வழக்குத் தொடர்வதானல் வழக்கறிஞர் தலைவர் (Advocate General) அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டோர் வழக்கறிஞர் தலைவர் அவர்களின் எழுத்தின்மூலம் அனுமதி பெற்று வழக்குத் தொடரலாம். குறிப்பிட்ட பழுது விளையவில்லையானலும் (Special damages) சமூகக்கேடு விளைவிக்கும் தொல்லை வெளிப்படையாக அறிவிக்கவும் (Declaration) அதைத் தடுத்து நிறுத்தவும், மற்றும் அது சம்பந்தமாகக் காண வேண்டிய பரிகாரங்களைக் காணவும், மேற்படி வழக்குத் தொடரலாம்.

இது தவிர தனிப்பட்ட முறையில் சமூகக்கேடு விளைவிக்கும் தொல்லை நீக்குவது சம்மந்தமான வழக்கு ஏதும் போடுவதற்கு இச்சட்டப்பிரிவு தடையாயிருக்காது.

சமூகக்கேடு விளைவிக்கும் தொல்லை (Public Nuisance) என்பது, இந்தியக் குற்றவியல் சட்டம் (Indian Penal Code) 268ஆம் பிரிவில் விளக்கப்பட்டிருக்கின்றது. அதன்படி சமூகக்கேடு விளைவிக்கும் தொல்லை, அல்லது பொதுத் தொல்லை என்பது ஒருவன் ஒரு காரியத்தைச் செய்வதில் அல்லது செய்யாமல் விடுவதில், அந்தப் பக்கம் வாழும், வழிச் செல்லும் பொது மக்களுக்கு இடையூறும் சங்கடமும், ஆபத்து அல்லது அருவருப்பு உண்டாக்கும் விதத்திலும், அதுபோல அவ்வழியைப் பயன்படுத்தும் பொது மக்களுக்குத் துன்பம், தொல்லை, ஆபத்து, தடையாயிருத்தல் அருவருப்புக் கொள்ளும்படி இருத்தலும் ஆகும்.

இவ்வித சமூகக் கேடு விளைவிக்கும் தொல்லையால் சில நன்மையும் மக்களுக்குக் கிடைக்கலாம். அதனல் இது இருந்து விட்டுப் போகட்டும் என்று அனுமதிக்க முடியாததாகும்.

குறிப்பு: **General Causes Act. S. 3. cl.** (**148**)

சமூகக் கேடு விளைவிக்கும் தொல்லை இந்தியக் குற்றவியல் சட்டம் பிரிவு 268-ல் கூறியபடி என்று தான் விளக்கப்பட்டிருக்கின்றது காண்க (பிரிவு 91).

தர்ம காரியத்திற்கான அல்லது மத ரீதியான பொது அறங்காவலில் (Public Trusts of Charitable and religious nature) ஏதாவது முறிவு அல்லது மோசம் ஏற்பட்டால் (breach) அதைச்சரி செய்யவும் அல்லது மேற்படி அறங்காவல் நிர்வாகம் பண்ணுவதில் நீதிமன்றத்தின் ஆணை வேண்டுமாயின் வழக்கறிஞர் தலைவரே, அல்லது இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்டவர்கள் மேற்படி உரிமை கொண்டவர்கள் வழக்கறிஞர் தலைவரின் எழுத்து மூலமான அனுமதியின் பேரில் வழக்குப் போடலாம். சென்னை நகர எல்லைக் குட்பட்டதாயிருந்தால் உயர்நீதி மன்றத்திலோ, அல்லது மாவட்டகளாயிருந்தால், மாவட்ட நீதிமன்றங்களிலோ மேற்படி வழக்குகள் நிறுவப்படலாம். அதுவன்றி மாநில அரசு வேறு நீதி மன்றங்களிலும் அந்நீதிமன்ற அதிகார வரம்பிற்குள் அறங்காவல் சொத்து முழுதுமோ, அல்லது அதன் பகுதியோ, இருக்குமானால் வழக்குப் போட அதிகாரம் அளிக்கலாம்.

இவ்வழக்குகளில் கீழ்க்கண்ட காரணங்களுக்காகத் தீர்ப்பாணை பெறலாம்:

1. அறங்காவலரை, (Trustee) நீக்குவதற்கு.

2. புதிய அறங்காவலரை நியமிப்பதற்கு.

3. அறங்காவலர் ஒருவரின் பொறுப்பில் குறிப்பிட்ட சொத்து எதையும் ஒப்படைப்பதற்கு.

4. நீக்கப்பட்ட, அல்லது அறங்காவலராக நீடிக்காத ஒருவரிடமிருக்கும் அறங்காவல் சொத்தை அதற்குரியவரிடம் ஒப்படைக்கக் கோரி.

5. அறங்காவல் கணக்குகளைப் பரிசீலிக்கவும், அது சம்மந்தமான விசாரணை நடத்தவும் கோரி.

6. எந்த அறங்காவல் சொத்து அல்லது அதன் பகுதி அறங்காவலின் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்கு ஒதுக்குவதற்கு.

7. அறங்காவல் சொத்தை அல்லது அதன் ஒரு பகுதியைக் குத்தகைக்கு விடவும், விற்கவும், அடைமானம் வைக்கவும், அல்லது வேறு சொத்துக்கு அதை மாற்றிக் கொள்ளவும், அனுமதி வழங்கக் கோரி.

8. அறங்காவலின் புதியதொரு திட்டத்தை உருவாக்க.

9. அல்லது வழக்கின் தன்மையைக் கருதி வேறு அல்லது அதிகப் படியான பரிகாரம் (Relief) கிடைக்க.

1959ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்துமத பரிபாலன சட்டம் நடைமுறைக்கு வந்த பிறகு இந்துமதச் சார்புள்ள அறங்காவல் சம்மந்தமான வழக்குகள் மேற்படிச் சட்டப்படித் தீர்க்கப்பட வேண்டியவை. எனவே உரிமை நீதிமன்றங்களுக்கு அவ்வறங் காவல் வழக்குகளின் மீதான அதிகாரம் இல்லை (பிரிவு 92).

மேற் குறிப்பிட்டபடி வழக்கறிஞர் தலைவரோ, அல்லது அவர் எழுத்து மூலமான அனுமதி பெற்ற இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்டோர் தொடரும் வழக்கு, சென்னை, பம்பாய், கல்கத்தா போன்ற மாநிலத் தலைநகரங்களுக்குத்தான் பொருந்தும். எனவே மாவட்டங்களில் மேற்குறிப்பிட்ட சமூகக் கேடு விளைவிக்கும் தொல்லை (Public Nuisance) அல்லது பொது அறங்காவர் (Public trusts) சம்பந்தப்பட்ட வழக்குகள், இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்டவர்கள் மாநில அரசின் அதிகாரம் பெற்று மாவட்டத் தலைமை நீதிமன்றங்களில் நிறுவலாம், அல்லது மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அல்லது வேறு அதிகாரிக்கு மாநில அரசு அனுமதி யளித்திருந்தால் வழக்கறிஞர் தலைவர் மாநிலத் தலைநகரில் செலுத் தும் அதிகாரத்தை அவர் செலுத்தலாம் (பிரிவு 93).

6. கூடுதல் நடவடிக்கைகள்
(Supplemental Proceedings)

நீதிமன்றத்தின் சில கூடுதல் நடவடிக்கைகள் (Supplementa Proceedings)

கைது செய்வது சாதாரணமாகக் குற்றவியல் சட்டத்தைச் சார்ந்ததாயிருப்பினும் நீதியின் குறிக்கோள் தோல்வியடையக் கூடாது என்பதற்காக நீதிமன்றம் கீழ்க்காணும் சில ஆணைகளை அவ்வப்போது பிறப்பிக்கலாம்.

அதன்படி,

1. பிரதிவாதியைக் கைது செய்து, அவரை நீதிமன்றத்திற்கு முன் வரவழைத்து, அவர் நீதிமன்றத்தில் அவ்வப்போது, வந்தாக வேண்டும் என்பதற்கு ஏன் பிணை (Security) கொடுக்கக் கூடாது என்று கேட்டு அவ்வாறு அவர் கொடுக்கத் தவறினால் அவரைச் சமூக உரிமைச் சிறைக்கு (Civil prison) அனுப்ப ஆணையிடலாம்.

2. பிரதிவாதி பிணை (Security) கொடுத்துச் சொத்தை நீதிமன்றத்தில் கொணரவும், அல்லது அச்சொத்தை நீதிமன்றத்தின் உடைமையில் வைக்கவும் அல்லது அவரின் எந்தச் சொத்தையும் ஜப்தி (Attach) செய்யவும் கட்டளையிடலாம்.

3. இடைக்காலத்தடை, அல்லது நிறைவேற்று என்ற அதிகார ஆணையை (Mandatory Injunetion) மீறினால் பிரதிவாதியை உடனே கைது செய்து சமூக உரிமைச் சிறைக்கு (Civil prison) அனுப்பிவைக்கலாம், அல்லது அவன் சொத்தை ஜப்தி (Attach) செய்யலாம்.

4. நீதிமன்றச் சார்பில் சொத்தைப் பெறுபவரை (Receiver) யே நியமித்து வழக்குச் சொத்தை பரிபாலிக்கவும், வேண்டுமானால்

மேற்படிச் சொத்தை ஜப்தி (Attach) செய்யவும் விற்கவும் ஆணை யிடலாம்.

5. நியாயம், வசதி என்று நீதிமன்றத்திற்குத் தோன்றினல் வேறு எந்த இடைக்கால ஆணைகளை இடவும் செய்யலாம். (பிரிவு 94)

நீதிமன்றத்தில் மேற்குறிப்பிட்ட சில அசாதாரண ஆணைகளை அதாவது கைது செய்தல், ஜப்தி, இடைக்காலத்தடை அல்லது கட்டளை முதலியவைகளைநிறைவேற்றும் ஆணை போன்றவைகளைத் தகுந்த காரணமின்றி ஒருவர் பெறுவாராளுல் அவ்விதம் போது மான காரணமின்றிக் கோரியிருந்தார் என்று நீதிமன்றத்திற்குத் தெரியவருமாளுலும் அல்லது வாதியின் வழக்குத் தோற்று, நீதி மன்றத்திற்கு மேற்படி வழக்கு தகுதியில்லாத, அல்லது நியாய மில்லாத காரணத்திற்காக அவ்வழக்குப் போடப்பட்டதாகத் தெரியவருமாளுலும், அதன்பேரில் பிரதிவாதி நீதிமன்றத்திற்கு மனுக் கொடுத்தால் அம்மனு மீது நீதிமன்றம் வாதி ரூ. 1000/-த் திற்கு மிகைப்படாமல் பிரதிவாதிக்கு ஏற்பட்ட இடைஞ்சல் காரணமாக நட்ட ஈடாகப் பிரதிவாதிக்குக் கொடுக்கும்படி உத்தரவிடலாம்.

ரூபாய் 1000/-க்கு குறைவான நிதிநிலை அதிகார வரம்புள்ள நீதிமன்றங்கள் அதன் நிதிநிலை அதிகாரவரம்பிற்கு அதிகமாக நட்ட ஈடு வழங்க முடியாது.

இவ்விதமாக இந்தப் பிரிவுப்படி நட்ட ஈடு கொடுக்கும்படி கட்டளையிடப்பட்டிருந்தால் மேற்படிக் காரணத்திற்காகத் தனி வழக்குப் போடமுடியாது (பிரிவு 95).

இதன்படி நீதிமன்றத்தின் மேற்குறிப்பிட்ட சில அசாதாரண அதிகாரங்களைத் தவறுதலான முறையில் பயன் படுத்திக்கொள் ளும் பொறுப்பற்றவர்களைத் தண்டிக்கவும் அதன் மூலம் நீதி பரி பாலனத்தைப் பொருந்தா வகையில் அவர்கள் திருப்பாதிருப்பதற் கும் இந்தச் சரத்து உதவும்.

7. மேல் வழக்குகள்
(Appeals)

எந்த அசல் தீர்ப்பாணையை (Original Decree) எதிர்த்தும் மேல் வழக்குப் போடலாம் (Appeal). எந்த நீதிமன்றம் அசல் அதிகார வரம்பில் வழக்கை விசாரித்துத் தீர்ப்பாணை வழங்கினாலும், அந்தத் தீர்ப்பாணையை எதிர்த்து அதற்கென்று சட்டப்படி மேல் அதிகாரம் வகிக்கும் குறிப்பிட்ட நீதிமன்றத்தில் மேல் வழக்குத் தொடரலாம்.

இதன்படி பிரதிவாதி நீதிமன்றத்திற்கு வராதிருந்த காரணத்தால் அவரை விசாரிக்காமல் வாதிக்குச் சாதகமாகத் தந்த தீர்ப்பாணையை (Exporte decree) எதிர்த்தும் மேல் வழக்குப் போடலாம்.

ஆனால் வாதி பிரதிவாதி இருசாராரும் நட்புக்கொண்டு அதன் பேரில் ஆக்கப்பட்ட சமரசத் தீர்ப்பாணையை எதிர்த்து (Consent decree) மேல் வழக்குப் போடமுடியாது (பிரிவு 96).

முன்னோடித் தீர்ப்பாணை (Preliminary Decree)யை எதிர்த்து, அத்தீர்ப்பாணையால் பாதிக்கப்பட்ட நபர் மேல்வழக்குப் போடவில்லையானால் அந்தத் தீர்ப்பின் தகுதியைப் பற்றி இறுதித் தீர்ப்பாணையை (Final Decree) எதிர்த்துப் போடப்படும் மேல் வழக்கில் சர்ச்சை செய்யக் கூடாது (பிரிவு 97).

இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட நீதிபதிகள் மேல் வழக்கை விசாரிப்பார்களானால் அதில் பெரும்பான்மையினரின் தீர்ப்பே அந்த மேல் வழக்கின் தீர்ப்பாக ஏற்கப்படும். அதன்படி கீழ் நீதிமன்றத்தின் தீர்ப்பு மாற்றவோ, அல்லது உறுதி செய்யவோ படும்.

இரண்டு நீதிபதிகள் மட்டும் மேல் வழக்கை விசாரிக்க வேண்டியிருந்து அதில் அவர்கள் சட்டக்கருத்தில் அபிப்பிராயம் மாறுபட்டதாயிருந்தால், அந்த மேல் வழக்கு வேறு தனி நீதிபதிக்கோ, அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நீதிபதிகளின் அபிப்பிராயத்திற்கு விடப்பட்டு, அவ்வாறு செய்யப்பட்டால், தனி நீதிபதியாயிருந்தால் அவர் தீர்ப்பும் அல்லது பெரும் பான்மையினர் தரும் கருத்தே தீர்ப்பாக ஏற்றுக்கொள்ளப் படும்.

இந்த சரத்துகள் (விக்டோரியா மகாராணியின் சாசன வடிவில் கிடைத்த உயர் நீதிமன்ற நடைமுறைச் சிறப்புச் சட்ட ஒழுங்கு (Letters Patent) சரத்துகளை எந்த வகையிலும் பாதிக்காது (பிரிவு 98).

நீதிமன்றத்தின் அதிகார வரம்பையோ, (Jurisdiction) அல்லது வழக்கின் தகுதிகளையோ (merits) பாதிக்கப்படும் என்ற நிலையிருந்தாலன்றி கட்சிக் காரர்களைத் தவறுதலாகச் சேர்த்த திலோ (mis joinder Parties) அல்லது வழக்குக் காரணங்களைத் தவறுதலாகச் சேர்த்தாலோ (mis joinder of Causes of action) வழக்கு நடத்தினதில் தவறு (error)குறை (defect) ஒழுங்கின்மை (irragularity) இருந்தால் அதன் காரணமாக மட்டும் கீழ் நீதி மன்றத்தின் தீர்ப்பை மேல் நீதிமன்றம் மாற்றக் கூடாது (பிரிவு 99).

மேல் வழக்கு தயார் செய்து தாக்கல் செய்யும் முறை

மேல் வழக்கு எந்த அடிப்படையில் தொடரப்படுகின்றது என்ற காரணங்கள் அடங்கிய மனு தயார் செய்யப்பட்டு அதில் மேல் வழக்காளரோ (appelant) அல்லது அவருடைய வழக் கறிஞரோ, கையெழுத்திட்டு அத்துடன் கீழ் வழக்கின் அத்தாட்சி பெற்ற தீர்ப்பாணை நகலை (Certified Copy of the decree) கண்டிப்பாகச் சேர்த்துத் தாக்கல் செய்ய வேண்டும். அது மட்டு மல்லாமல் மேல் நீதி மன்றம் விதிவிலக்களித்தாலன்றி அத்தாட்சி பெற்ற தீர்ப்பு நகலும் (Certified Copy of the Judgement) அத் துடன் தாக்கல் செய்ய வேண்டும். அத்தாட்சி பெற்ற தீர்ப்பு நகல் தாக்கல் செய்வதற்கு மட்டும் இடைக்கால விதிவிலக்களிக் கலாமே யொழிய, அத்தாட்சி பெற்ற தீர்ப்பாணை நகல் (Certified Copv of the decree) தாக்கல் செய்வதை எக்காரணம் கொண்டும் மேல் நீதிமன்றம் விதிவிலக்களிக்க முடியாது (Connot dispense with). நீதிமன்றத் தீர்ப்பு அச்சிடப் பட வேண்டும். அதற்காக விண்ணப்பித்து மேற்படித் தீர்ப்பு (Judge-

ment) அத்தாட்சி பெறப்பட்டிருக்க வேண்டும் Certified). அத்துடன் அச்சிடப்பட்டு அத்தாட்சி பெற்ற தீர்ப்பு நகல் தாக்கல் செய்யப்படுதல் வேண்டும்.

மேல் வழக்கு மனு தெளிவான முறையில் கீழ் நீதிமன்றத் தீர்ப்பின் குறைகளைச் சுட்டிகாட்டிப் பகுதி, பகுதியாகப் பிரிக்கப் பட்டு, வாத ரீதியில் இல்லாமல் சுருக்கமாக இருத்தல் வேண்டும்.

அத்துடன் அந்த விண்ணப்பத்தில் மேல் வழக்கின் மதிப்பீடும் (Valuation) குறிக்கப்படல் வேண்டும். அதன்படி நீதிமன்றக் கட்டணம் (Court fee) தமிழ் நாடு வழக்கு மதிப்பீடு நீதிமன்றக் கட்டணச் சட்டம் 1955-ன்படி கட்டவேண்டும்.

1963ஆம் ஆண்டு இந்தியக் காலவரையறைச் சட்டப்படி (The Indian Limitation Act 1963) எந்த மேல் வழக்கும் குறிப்பிட்ட கால எல்லைக்குள் தாக்கல் செய்யப் படவேண்டும். அவ்வாறு செய்யவில்லையானாலும் அவ்வாறு குறிப்பிட்ட கால எல்லைக்குள் மேல் வழக்குத் தாக்கல் செய்ய முடியாததற்குத் தகுந்த காரணங் களிருக்குமானால், அந்தக் காரணங்கள், அல்லது காலாகாலத்தில் மேல் வழக்குத் தாக்கல் செய்ய முடியாதபடியான சூழ்நிலைகளை விளக்கி ஒரு சத்திய வாக்குமூலம் தயார் செய்து (Affidavit) அத்து டன் பிரிவு 5, 1963 இந்தியக் காலவரையறைச் சட்டப்படியான ஒரு மனுவும் சேர்த்து, அதன்படி நியாயமான காரணங்கள், சூழ் நிலைகளினால் மேற்படி மேல்வழக்கு காலாகாலத்தில் தாக்கல்செய்ய முடியவில்லை, அவ்வாறு ஏற்பட்ட தாமதத்தை (Delay) மன்னித்து மேல் வழக்கை விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளும்படி கோர வேண் டும். முதலில் இந்த மனு ஏற்றுக் கொள்ளப்பட்ட பிறகு தான் மேல் வழக்கு விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்படும். ஆனால் கால தாமத்தை மன்னிக்கக் கேட்கும் மனுவில், எதிர்த் தரப்பிற்கு அறிவிப்பு (Notice) கொடுத்து எதிர்த்தரப்பினரின் பிரதிவாதிகள், மறுப்புகளைக் கேட்டபின் நீதிமன்றம் காலதாமதத்தை மன்னிக்கு மானால் மேல் வழக்குக்கு அதற்கானமேல் வழக்கு எண் கொடுக்கப் பட்டு விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்படும். ஆனால் தகுதியில் லாத காரணங்களாயிருக்குமானால் மேற்படி மனு தள்ளுபடி செய் யப்படுமானால், மேல் வழக்குக்கான எண் அதற்கு வழங்காமலே அது தள்ளுபடி செய்யப்படும்.

மேல் வழக்கு அதிகார வரம்பு கீழ்க் கண்டபடி நிர்ண யிக்கப் படுகின்றது.

சென்னைச் சமூக உரிமை நீதிமன்றங்கள் சட்டம் 1873-ன் 3ஆம் சட்டம் (Madras Civil Court Act of 1873 as Amended by

Madras Civil and Village Courts Amendment Act 1951). சென்னை சமூக உரிமை மற்றும் கிராம நீதிமன்றச் சட்டம் 1951-ல் திருத்தப்பட்டபடி.

மாவட்டத்தில் (Muffusil) அசல் நிதிநிலை அதிகார வரம்பு

மாவட்ட முன்சீப் நீதிமன்றம் ரூபாய் 5000/- வரையும் துணை நீதிமன்றங்கள் (Sub-Court) ரூபாய் 5000/- முதல் அதற்கு மேற்பட்ட எந்த தொகைக்கும் ரூபாய் 10,000/- வரையும் மாவட்ட நீதிமன்றங்களில் (District Court) ரூ. 10,000க்குமேல் எந்தத் தொகைக்கும் அசல் நிதி நிலை அதிகார வரம்பு வழங்கப் பட்டிருக்கின்றது.

சென்னை நகரத்தில் அசல் நிதிநிலை அதிகார வரம்பு

ரூபாய் 50,000 வரை நகர உரிமை நீதிமன்றம் (City Civil Court, Madras1). அதற்கு மேற்பட்ட எந்தத் தொகை யானாலும், உயர் நீதிமன்றம் (High Court). ரூ. 2000/- வரையி லான அசையும் சொத்து மீதான வழக்குகள் சிறுகாரண நீதி மன்றத்தில் விசாரிக்கப்படலாம்.

மாவட்டங்களில் (Muffusil) மேல்வழக்குக்கான நிதிநிலை அதிகார வரம்பு

1. மாவட்டக் நீதிமன்றத் தீர்ப்பாணை அல்லது கட்டளையை எதிர்த்து உயர் நீதிமன்றத்துக்கும்,

2. மாவட்டக் குறைந்த நீதிமன்றங்களில் (Sut-Court) தீர்ப்பாணையின் மதிப்பு ரூபாய் 10,000/-க்குக் குறைந்திருந்தால் அல்லது மாவட்ட முன்சீப் நீதிமன்றங்களின் அசல் தீர்ப்பாணையை எதிர்த்தும் மாவட்ட நீதிமன்றத்திலும்,

3. மாவட்டக் குறைந்த நீதிமன்றங்களின் (Sub-Court) தீர்ப்பாணை மாவட்ட முன்சீப் நீதிமன்றங்களின் தீர்ப்பாணை மதிப்பு ரூபாய் 10,000/- மேற்பட்டிருக்குமானால் உயர் நீதி மன்றத்திலும், மேல் வழக்குத் தொடரலாம்.

சென்னை நகரத்தில் மேல் வழக்குக்கான நிதிநிலை அதிகார எல்லை

சென்னை நகர சமூக உரிமை நீதிமன்றங்கள் சட்டம் 1892, மத்திய அரசு, 7-வது சட்டம் 1892, சென்னை நகர சமூக உரிமை நீதிமன்றங்கள் (திருத்தச்) சட்டம் 1955 (1955ன் 10 வது

சட்டம்) The Madras City Civil Court Act 1892 (Central Act VII of 1892) as amended by The Madras City Civil Court (Amendment) Act 1955 (Madras Act No. 10 of 1955).

முதல் மேல்வழக்கின் மதிப்பு ரூ. 5000/- க்கு மேற்பட்டிருந்தாலோ அல்லது தீர்ப்பாணையோ, கட்டளையோ, பிரதம நகர சமூக நீதிபதியினுடையதாயிருந்தாலோ, அல்லது துணை நீதிபதிகளினுடையதாக இருந்தாலோ, உயர் நீதிமன்றத்திலும்,

மேல்வழக்கின் மதிப்பு ரூ. 5000/-க்கு அதிகப்படாமலிருந்தால் அது நகரத் துணை சமூக உரிமை நீதிமன்றத்திலிருந்து (Assistant City Civil Court) நகர பிரதம சமூக உரிமை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம். அங்கிருந்து இரண்டாம் மேல் வழக்காக, உயர் நீதிமன்றத்தில், தாக்கல் செய்யப்படலாம் (கட்டளை 41. விதி 1).

மேல்வழக்கு நீதிமன்றங்கள், மேல் வழக்கில் இடம் பெறாத காரண காரியம் தவிர (grounds) மற்றவற்றை விசாரணையின் போது அம்மேல் நீதிமன்றம் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. நீதியின் நிமித்தம் வேறு காரண காரியத்தைக் கருத்தில் கொள்வதானால், அதனால் பாதிக்கப்படுகின்ற கட்சிக்காரருக்குத் தகுந்த சந்தர்ப்பம் தந்து அவர் மறுப்பைக் கேட்ட பிறகே, அதைக் கருத்தில் கொண்டு தீர்ப்பளிக்கப்படும் (கட்டளை 41. விதி 2).

குறிப்பிட்ட முறைப்படி மேல் வழக்கு தயார் செய்யப்படவில்லையானாலும் நீதிமன்றம் அதைத் தள்ளுபடி செய்யலாம்; அல்லது மேல்வழக்காளர் (appellant) அதைச் சரி செய்து சரியான முறையில் திரும்பக் குறிப்பிட்ட நாள்களுக்குள் தாக்கல் செய்ய அனுமதிக்கப்படலாம்.

மேல்வழக்கை நீதிமன்றம் நிராகரித்தால் (reject) அதற்கான காரணங்களைப் பதிவு செய்தாக வேண்டும்.

மேல்வழக்கு மனு திருத்திச் சமர்ப்பிக்கப்படுமானால் அந்நீதிமன்ற நீதிபதியோ, அல்லது அவர் நியமிக்கும் அதிகாரியோ, அதில் கையொப்பம் இடவேண்டும் (கட்டளை 41. விதி 3).

ஓர் அசல் வழக்கில் பல வாதிகளும், பல பிரதிவாதிகளும் இருப்பாராகில் அதில் வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து ஒரு வாதியோ, அல்லது பிரதிவாதியோ கூட மேல் வழக்குப் போடலாம். அவ்வாறு போடப்பட்ட மேல் வழக்கில், அந்த வழக்கில்

சம்பந்தப்பட்ட எல்லாக் கட்சிக்காரருக்குக் கிடைத்த தீர்ப்பினைப் பாதிக்கும் வண்ணம் கூட மேல் வழக்குத் தீர்ப்பு மாற்றப்படலாம் (கட்டளை 41. விதி 3).

வழக்கின் நடவடிக்கை (further Proceeding) அல்லது தீர்ப்பை நிறைவேற்றுவதைத் தடைசெய்யும் அதிகாரம் (Stay of Execution of Decrees)

ஒருவர் மேல் வழக்குப் போட்டுவிட்டதால் மட்டும் அசல் வழக்கின் தீர்ப்பாணை நிறைவேற்றத் தன்னிச்சையாகத் தடை யேற்படுவதில்லை. மேல் நீதிமன்றம் தகுந்த காரணமுண்டு என்று கருதுமானால் அசல் நீதிமன்றத் தீர்ப்பாணையை, மேல் வழக்கு முடியுமட்டும் நிறைவேற்றாமலிருக்கத் தடைவிதிக்கலாம் (Stay). மேல் வழக்கு முன்னோடித் தீர்ப்பாணையை (Preliminary Decree) எதிர்த்துப் போடப்பட்டிருக்குமானால், அந்த மேல் வழக்கில் மட்டும் மேல் நீதிமன்றம் அந்த முன்னோடித் தீர்ப்பாணையைத் தொடர்ந்து இறுதித் தீர்ப்பாணை (Final Decree) வழங்கத்தடை விதிக்கும். இவ்வாறு தடை விதிக்கும் முன் இறுதித் தீர்ப்பாணை வழங்கப்பட்டிருக்குமானால் அந்தத் தீர்ப்பாணையை நிறைவேற்றத் தடைவிதிக்கும்.

மேல் வழக்குப் போடத் தகுந்த அசல் தீர்ப்பாணையை நிறைவேற்ற அசல் நீதிமன்றமும் (Original Court) தடை விதிக்கலாம். மேல் வழக்குப் போட உத்தேசித்திருக்கும் கட்சிக்காரர், மேல் வழக்குப் போடவேண்டிய காலக் கெடுவுக்குள் தகுந்த காரணங் களைக் கூறி விண்ணப்பித்துக் கொண்டால் அசல் தீர்ப்பாணையை நிறைவேற்றத் தீர்ப்பாணை வழங்கிய நீதிமன்றமே தடை விதிக் கலாம்.

மேற்குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் அசல் நீதிமன்றமோ, (Original Court) அல்லது மேல் நீதிமன்றமோ (appellate Court) தீர்ப்பாணையை நிறைவேற்றத் தடை விதிக்க வேண்டுமானால் கீழ்க் கண்ட திருப்தியளிக்கும் சந்தர்ப்பங்களில்தான் அத் தடையை விதிக்க வேண்டும்.

1. தடைவிதிக்கவில்லையானால் மேல் வழக்கு தொடரும் கட்சிக்காரருக்குக் கணிசமான நட்டம் ஏற்படும் சூழ்நிலையிருக்கு மானால்.

2. அதோடு மேற்குறிப்பிட்ட தடைவிதிக்கக் கோரும் மனு. மேல் வழக்குத் தாக்கல் செய்திருக்கும் நீதிமன்றத்தில் கால தாமத மில்லாமல் தாக்கல் செய்திருக்க வேண்டும்.

3. அசல் தீர்ப்பாணையை நிறைவேற்றும் பொறுப்பிற்கு தகுந்த பாதுகாப்பு (Security) தடை கோரும் விண்ணப்பதாரர் கொடுத்திருக்க வேண்டும்.

ஆனால் மேல் நீதிமன்றங்களுக்கு உள்ள சிறப்பு அதிகாரத்தைக் கொண்டு எதிர்த் தரப்பினரை வினவாமலே தடை மனுவின் விசாரணை முடியும் வரை இடைக்காலத் தடைவிதிக்கலாம் (கட்டளை 41. விதி 5).

ஒரு தீர்ப்பாணையை எதிர்த்து ஏற்கெனவே மேல்வழக்குத் தொடரப்பட்டிருக்கும் சமயம், மேற்படித் தீர்ப்பாணை நிறைவேற்றும் உத்தரவு போடப்பட்டிருந்தால் அச்சமயம் மேல் வழக்காளர் (appellant) தீர்ப்பாணை வழங்கிய அசல் நீதிமன்றத்தில் தகுந்த காரணங்காட்டி மனுச் செய்தால், மேல் வழக்காளரைப் பாதுகாப்புப் பொறுப்புப் கொடுக்கச்செய்து அதன் பேரில் அவருடைய சொத்து எதையும் ஜப்தி செய்து, மேல் வழக்காளரிடம் திரும்பி அளிக்கக் கட்டளையிடும், அல்லது அந்தச் சொத்தின் விலை மதிப்பை ரொக்கமாகக் கட்டிவிட்டுத் தீர்ப்பாணை நிறைவேற்றப்பட்டிருந்து, அதனால் ஒப்படைப்பு (ஜப்தி) செய்யப்பட்ட சொத்தைத் திரும்பக் கொடுக்கவும் ஆணையிடலாம்; அல்லது அவ்வாறு கொடுக்கப்படும் பொறுப்பு, அல்லது கட்டும் ரொக்கம் முதலியவற்றால் மேல் வழக்குத் தீர்ப்பாணை எதுவானாலும் நிறைவேற்றும் உத்திரவாதம் கிடைக்கும் வண்ணம், அசல் நீதிமன்றம் அவ்வாறு பொறுப்பு அல்லது உத்தரவாதம் பெற அசல் நீதிமன்றத்திற்குக் கட்டளையிடலாம். அதுபோல மேல் நீதிமன்றம் தானே அந்தப் பொறுப்பு அல்லது உத்தரவாதம் மேல் வழக்காளரிடம் பெறலாம்.

தீர்ப்பாணை நிறைவேற்றும் உத்தரவுப்படி மேல்வழக்குத் தொடர்ந்திருக்கும் கட்சிக் காரரின் சொத்தை விற்கும்படி கட்டளையிடப்பட்டிருந்தால் அவ்வாறு கட்டளையிட்ட, நிறைவேற்றும் நீதிமன்றம் (Executing Court) மேற்படித் தீர்ப்புக் கடனாளியானவரின் (Judgement debtor) மனுவின் பேரில் அந்த விற்பனையைத் தடைசெய்ய வேண்டும். அவ்வாறு தடை விதிக்கும் போது மேற்படித் தீர்ப்புக் கடனாளியானவர், நீதிமன்றத்திற்கு, அதன் திருப்திக் கேற்பத் தகுந்த பாதுகாப்பும் பொறுப்பும் கொடுக்கச் செய்து அவரைக் கட்டுப்படுத்தினால் அம்மேல் வழக்கு முடியும் வரை அத்தடையை நீடிக்கலாம் (கட்டளை 41. விதி 6).

செயல் தடையுத்தரவு கொடுப்பதில், மேல் நீதிமன்றங்கள் அசல் தீர்ப்பாணையை எதிர்த்துப் போட்ட மேல்வழக்குகளில்லா

மல் கீழ் நீதிமன்றம் வேறு மேல்வழக்குக்கான கட்டளைகளை (appealable Orders) எதிர்த்துத் தொடரப்படும் மேல் வழக்கு களிலும் கொடுக்கலாம் (கட்டளை 41, விதி 8).

மேல்வழக்கு குறிப்பிட்டபடி சரியாக அமைக்கப்பட்டு அதற்கான நீதிமன்றக் கட்டணம் (Court fees) கட்டிக் காலவரை யறைக்குள் அது தாக்கல் செய்யப்பட்டிருந்தால் அந்த மேல் வழக்கு விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு நீதிமன்ற அலுவலகர் பதிவு செய்து அதன்படி அந்த மேல்வழக்குக் கட்டில் அது தாக்கல் செய்யப்பட்ட நாள் குறிக்கப்பட்டு மேல் வழக்குகள் பதிவு செய்யப்படும். பதிவேட்டில் (Register) வரிசைப்படி பதிவு செய்யப்பட்டு அதற்கு அந்த ஆண்டுக்கான மேல்வழக்கு எண் ஒன்று கொடுக்கப்படும்.

அவ்வாறு மேல்வழக்குப் பதிவு செய்யப்படும். ஏடு மேல் வழக்குப் பதிவேடு என்று அழைக்கப்படும் (கட்டளை 41. விதி 9).

மேற்குறிப்பிட்டபடி மேல்வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட பிறகு மேல் நீதிமன்றம் அதன் எதிர்த்தரப்பாளருக்கு அறிவிப்புக் கொடுத்து அவர்களின் பதில் தாக்கல் செய்யு முன்னும் தானே அல்லது எதிர்த்தரப்பாளர் (Respondent) கொடுக்கின்ற மனு வின் பேரில், மேல்வழக்காளரை மேல்வழக்குக்கான செலவுத் தொகையையோ அல்லது வழக்குக்கான செலவுத் தொகையை யோ, அல்லது இரண்டையும் கட்டுவதற்கான பாதுகாப்புப் பொறுப்புக் (Security) கொடுக்கக் கேட்கலாம்.

ஆனால் மேல்வழக்காளர் இந்தியாவில் இல்லாதிருக்க நேரிடி னும், அதோடு இந்தியாவில் போதுமான அவர் சொத்தும் இல்லாதிருக்குமானாலும், அதாவது மேல்வழக்குச் சம்மந்தப் பட்ட சொத்தைத் தவிர, மேல் நீதிமன்றம் மேற்குறிப்பிட்ட செலவுத் தொகைக்கான பாதுகாப்புப் பொறுப்பு மேல்வழக் காளரைக் கொடுக்கும்படி செய்ய வேண்டும்.

அப்படி நீதிமன்றம் ஒரு குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் பொறுப்புக் கொடுக்க ஆணையிட்டு அதன்படி மேல்வழக்காளர் பொறுப்புக் கொடுக்கத்தவறினால் மேற்படி மேல் வழக்கை நிரா கரிக்க வேண்டும் (கட்டளை 41. விதி 10).

மேல் நீதிமன்றம் மூல நீதிமன்றத்திலிருந்து மேற்படி மேல் வழக்குச் சம்பந்தப்பட்ட எழுத்துமானங்களை (Records) வர வழைக்க உத்தரவிட்ட பிறகு, அவைகள் இங்கு வருமுன்னும்,

அன்றி மேல் நீதிமன்றம் சரி எனக் கருதினுல், மேல்வழக்கு விசாரணைக்கு, ஒரு நாளைக் குறிப்பிட்டு அன்று மேல்வழக்காளரை அல்லது அவரது வழக்கறிஞரை விசாரித்துவிட்டு அசல் நீதிமன்றத்திற்கோ எதிர்த்தரப்பினருக்கோ, அல்லது அவர் வழக்கறிஞருக்கோ, அறிக்கை (Notice) கொடுக்காமலே மேல் வழக்கைத் தள்ளுபடி செய்து விடலாம்.

மேல்வழக்கு விசாரணைக்குக் குறித்த நாளில் அல்லது அதிலிருந்து ஒத்திவைக்கப்பட்ட நாளில் மேல்வழக்காளரோ, அல்லது அவர் வழக்கறிஞரோ, மேல் வழக்கு மேல் நீதிமன்றத்தில் கூப்பிடும் போது பதிலுரைக்க வரவில்லையானுலும், மேற்படி மேல் வழக்குத் தள்ளுபடி செய்யப்படலாம்.

இவ்வாறு மேல்வழக்குத் தள்ளுபடி செய்யப்படுமானுல் எந்த நீதிமன்றத் தீர்ப்பாணையை எதிர்த்து மேல்வழக்குத் தொடரப்பட்டதோ, அந்த நீதிமன்றத்திற்கு அதுபற்றி அறிவிக்கப்படும் (கட்டளை 41. விதி 11).

மேற்குறிப்பிட்டபடி மேல்வழக்குத் தள்ளுபடியாகாமலிருக்குமானுல் மேல் நீதி மன்றம் விசாரணைக்கென்று ஒரு நாளைக் குறிக்கும்.

அவ்வாறு நாள் குறுக்கப்படும்போது எதிர்த்தரப்பாளர் இருக்கும் இடம் அவருக்கு மேல் வழக்குப் பற்றிய அறிவிப்புக் கொடுக்க எடுத்துக் கொள்ளும் காலம், அதோடு அவர் மேல் வழக்குக்குப் பதிலுரைக்கப் போதுமான அவகாசம் முதலியவைகளைக் கருதி விசாரணை நாள் நிர்ணயிக்கப்படும்.

மேற்குறிப்பிட்டபடி மேல்வழக்குத் தள்ளுபடியாக வில்லையானுல், மேல் நீதிமன்றம் மேல் வழக்குப் பற்றிய அறிவிப்பை எந்த நீதிமன்றத் தீர்ப்பாணையை எதிர்த்து மேல்வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றதோ, அந்நீதிமன்றத்திற்குக் கொடுக்க வேண்டும்.

அந்த அறிவிப்புக் கிடைத்தவுடன் எவ்வளவு சீக்கிரம் அந்த மேல்வழக்குச் சம்பந்தப்பட்ட எழுத்து மானங்களை (Records) அல்லது மேல் வழக்கு விசாரணைக்கு அத்தியாவசியமான எழுத்து மானங்களை மேல் நீதிமன்றத்திற்கு அசல் நீதிமன்றம் அனுப்பித் தரவேண்டும்.

அசல் நீதிமன்றத்தில் மேல் வழக்கில் சம்பந்தப்பட்ட கட்சிக்காரர் யாரும் அங்குள்ள எழுத்து ஆதாரங்களில் தங்களுக்கு

வேண்டிய எதையும் அத்தாட்சி பெற்ற நகல் கேட்டு அதற்கான செலவுகட்டிக் கொடுத்துப் பெற்றுக் கொள்ளலாம் (கட்டளை 41. விதி 13).

விதி 12-ல் குறிப்பிட்டபடி மேல்வழக்கு விசாரணை நாள் குறிக்கப்படுமானால் அந்த அறிவிப்பு மேல்நீதிமன்றத்தில், ஓர் இடத்தில் ஒட்டப்படும் அதுபோன்ற அறிவிப்பு அந்த நீதிமன்றத் தீர்ப்பாணையை எதிர்த்து மேல்வழக்குத் தொடரப்பட்டதோ, அந்த நீதிமன்றத்திற்கும் அனுப்பப்பட்டு, அந்த அறிவிப்பு எதிர்த் தரப்பாளருக்கும் அல்லது அவருடைய வழக்கறிஞருக்கும் சார்பு செய்யப்பட்டு, அவர்கள் மேல் நீதிமன்றத்தில் மேற்படி வழக்குக்குப் பதில் தரவும் போதுமான சந்தர்ப்பம் வழங்கப் படுவதில், சாதாரண வழக்குகளில் பிரதிவாதிக்கு அனுப்பப்படும் அழைப்பாணை எவ்வகையில் சார்பு செய்யப்படுமோ அதுபோன்ற நியதியே இங்கும் பொருந்தும்.

மூல நீதிமன்றத்தில் பிரதிவாதிகள் வராமல், அதனால் அவர்களை விசாரிக்காமல், வழக்கு நடைபெற்றிருக்குமானால் மேற்படியாளர்களுக்கு மேல்வழக்கில் அறிவிப்புக் கொடுப்பதை மேல் நீதிமன்றம் வேண்டாமென நீக்கலாம் (Dispurse with).

மேல் நீதிமன்றம், எந்த நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து மேல் வழக்கு போடப்பட்டதோ அந்த நீதிமன்ற மூலமாக அல்லாமல் தானே நேரில், எதிர்த்தரப்பாளருக்கோ, அல்லது அவருடைய வழக்கறிஞருக்கோ, மேல்வழக்குப் பற்றிய அறிவிப்புக் கொடுக்கவும் ஏற்பாடு செய்யலாம் (கட்டளை 41. விதி 14).

மேல் வழக்குக்கான மேற்படி அறிவிப்பில், எதிர்த்தரப்பாளர் மேல் வழக்கு விசாரணைக்குக் குறிப்பிட்ட நாளில் வரவில்லையானால் அவரை விசாரிக்காமலே மேல்வழக்கு விசாரிக்கப்பட்டு விடும் என்றும் குறிப்பிட வேண்டும் (கட்டளை 41. விதி 15).

விசாரணை நடைமுறை

மேல் வழக்கு விசாரணைக்குக் குறிப்பிட்ட நாளில் அல்லது அது ஒத்தி வைக்கப்பட்ட நாளில் மேல் வழக்காளரைத்தான் முதலில் நீதிமன்றம் கேட்கும். அவரைக் கேட்ட பிறகு மேல் வழக்கைத் தள்ளுபடி செய்ய வில்லையானல், எதிர்த்தரப்பாளரையும், நீதிமன்றம் கேட்கும். அவ்வாறு எதிர்த்தரப்பாளரை நீதிமன்றம் கேட்குமானல் மேல்வழக்காளருக்கு அவர் பதில் வாதங்களைக் கூறத் திரும்பவும் சந்தர்ப்பம் அளிக்கப்படும் (கட்டளை 41. விதி 16.)

மேல்வழக்கு விசாரணை நாள் குறிப்பிட்ட அல்லது அது தள்ளி வைக்கப்பட்ட நாளில் மேல்வழக்காளர் வரவில்லையானால் நீதி மன்றம் மேற்படி மேல்வழக்கைத் தள்ளுபடி செய்து விடலாம்.

அதுபோல அந்த நாளில் எதிர்த்தரப்பாளர் வரவில்லையானு லும் அவரில்லாமல் (Exparte) விசாரணை நடைபெற்றுத் தீர்ப்பு வழங்கப்படும் (கட்டளை 41. விதி 17).

மேல்வழக்காளருடைய தவறுமல் எதிர்த்தரப்பாளர்களுக்குக் கான அறிவிப்புக் கிடைக்கப் பெற வில்லையானுல், அதாவது வழக் காளர் மேற்படி அறிவிப்பை நீதிமன்றம் அனுப்புவதற்கான நட வடிக்கை, அதாவது தகுந்த பணம் கட்டுதல் முதலிய நடவடிக் கைகள் எடுக்கத் தவறினுல், அதன் காரணமாக எதிர்த்தரப்பாளர் களுக்கு மேல் வழக்குப் பற்றிய அறிவிப்பில்லாமலிருந்து அல்லது எதிர்த்தரப்பாளர்க்கு அறிவிப்பு சார்பு ஆகாமல் திரும்ப வந் திருந்து, அதன் பிறகு மேல்வழக்காளர், எதிர்த்தரப்பாளருக்கு அறிவிப்புக் கொடுக்க, தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளாமல் விட்டாலும், நீதிமன்றம் மேற்படி மேல்வழக்கைத் தள்ளுபடி செய்ய உத்தரவிடலாம்.

ஆனுல் எதிர்த்தரப்பாளர் மேற்படி அறிவிப்பு சார்பாகாமலி ருந்தாலும், மேல் வழக்கு நடைபெறக் குறிப்பிட்ட நாளில் நீதி மன்றம் வந்திருப்பாரானுல் நீதிமன்றம் மேல்வழக்கைத் தள்ளுபடி செய்யக் கூடாது (கட்டளை 1. விதி 18).

விதி 19

மேற் குறிப்பிட்ட விதிகள் 11, 17, 18-ன்படி மேல் வழக்கு தள்ளுபடி செய்யப்படுமாயின் மேல் வழக்காளர் மேல் நீதிமன்றத் தில் தம்முடைய மேல்வழக்கைத் திரும்ப ஏற்றுக் கொள்ளவேண்டு மென்று மனுச்செய்தால் அந்த மனுவில் தகுந்த சில காரணங் களால், காலாகாலத்தில் எதிர்த்தரப்பாளருக்கு அறிவிப்புக் கொடுக்கத் தக்க நடவடிக்கை எடுக்க இயலவில்லை என்று கூறுவா ரானுல், அந்தக் காரணங்களால்தான், தான் குறிப்பிட்ட நாளில் நீதிமன்றம் வரவில்லை என்று விளக்குவாரானுல், நீதிமன்றம் அதை ஏற்றுக் கொண்டு திரும்ப விசாரணைக்கு ஏற்றுக் கொள்ள ஆன நீதி மன்றச் செலவுத் தொகை கட்டவேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் உத்தரவு கொடுக்கலாம். மேற்குறிப்பிட்டபடி தள்ளுபடி செய்யப்பட்ட மேல்வழக்கைத் திரும்ப விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளுவதில் 1963 இந்தியக் கால வரையறைச் சட்டம் பிரிவு 5-ன் படி (Under S. 5 of the Indian Limitation Act of 1963) நடவடிக்கை மேற்கொள்ளபடும்.

எந்த நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து மேல் வழக்குத் தொடரப்பட்டிருக்கின்றதோ, அந்த நீதிமன்றத்தில் வழக்கில் சம்மந்தப்பட்ட கட்சிக்காரர்கள் யாராவது மேல்வழக்கில் விடப்பட்டிருந்தால், அவ்வாறு விடப்பட்ட கட்சிகாரர், இந்த மேல்வழக்கின் முடிவில் அக்கறை (interest) கொண்டிருப்பவரென்று மேல் நீதிமன்றத்தின் விசாரணையின் போது தெரியவந்தால் மேல்நீதிமன்றம் மேல்வழக்கை வேறு நாளைக்கு தள்ளிவைத்து விட்டு அந்தக் குறிப்பிட்ட எதிர்த்தரப்பாளரை இந்த மேல்வழக்கில் எதிர்த் தரப்பாளர்களில் ஒருவராக ஆக்கும்படி கட்டளையிட வேண்டும் (கட்ளை 41. விதி 20).

மேல்வழக்கில் எதிர்த்தரப்பாளர் விசாரணையின் போது வராமலிருந்து அவர் வராமல், மேல்வழக்கு முடிவுசெய்யப்பட்டிருக்குமானல், அவர் மேல்நீதிமன்றத்தில், மேல்வழக்கைத் திரும்பத் கேட்கும்படி மனுச் செய்யலாம். அந்த மனுவில் தமக்குத் தக்க அறிவிப்பு இல்லை என்பதையும், அல்லது தாம் தகுந்த சில காரணங்களால் நீதிமன்றத்திற்கு வரத் தடைசெய்யப்பட்டேன் என்பதையும், மேற்படி நீதிமன்றம் திருப்தியடையும் வண்ணம் கேட்டுக் கொள்வாரானல் நீதிமன்றம் அந்தமேல் வழக்கை மறுபடியும் கேட்க ஆணையிடும். அவ்வாறு நீதிமன்றம் ஆணையிடும்போது அது சம்பந்தமான செலவுத் தொகை (Costs) அல்லது வேறு சரி என்று கருதுகின்ற சில நிபந்தனைகளை அவர் மீது விதிக்கலாம்.

இந்த மனு விசாரிப்பதிலும், ஏற்றுக்கொள்வதிலும், 1963 இந்தியக்காலவரையறைச் சட்டம் பிரிவு 5-ன் படி (under S. 5. of the limitation Act 1963) நடைமுறை கடைப்பிடிக்க வேண்டும். (கட்டளை 41. விதி 21).

எந்த எதிர்ப்பாளரும் மேல் வழக்குத் தாக்கல் செய்யவில்லையானல் அவருக்கு விரோதமாக வழக்கில் கொடுக்கப்பட்ட தீர்ப்பாணையை அவர் ஆதரிக்கின்ருர் என்று பொருள்படும். அவ்வாறு மேல்வழக்கு அவர் தாக்கல் செய்யாவிட்டாலும், வேறு ஒருவர் தாக்கல் செய்திருக்கின்ற மேல்வழக்கில் இவர் குறுக்கு எதிர்ப்பை (Cross objection) தாக்கல் செய்யலாம். அவ்வாறு கொடுக்கக் கூடிய குறுக்கு எதிர்ப்பைத் தனக்கு அல்லது தன் வழக்கறிஞருக்கு மேல்வழக்கில் அறிவிப்பு வந்த ஒருமாத காலவரையறைக்குள் தாக்கல் செய்ய வேண்டும், அல்லது மேற்படிக் காலவரையறையை மேல் நீதிமன்றம் நீடித்திருந்தால் அந்தக் கால வரம்பிற்குள் தாக்கல் செய்யப்படவேண்டும்.

அவ்வாறு தாக்கல் செய்யப்படும் குறுக்கு எதிர்ப்பு (Cross objection) சாதாரண மேல் வழக்கு மனு எந்த அம்சத்தில் உள்

ளதோ அதே மாதிரி அமைக்கபடல் வேண்டும். அதனுடைய அமைப்பு அதில் அடங்கியுள்ள சாராம்சம் முதலியன, மேல் வழக்குரை போன்றே இருத்தல் வேண்டும்.

அவ்வாறு தாக்கல் செய்யப்படும் குறுக்கு எதிர்ப்பில் அடங்கியவை எந்தக் கட்சிக்காரரையும் பாதிக்கும் விதத்திலிருக்குமாளுல், மேற்படிக் கட்சிகாரரிடம் இந்தக் குறுக்கு எதிர்ப்பு மனு நகல் பெற்றுக் கொண்டதாக, எழுத்து அத்தாட்சியுடன் தாக்கல் செய்ய வேண்டும். அவ்வாறு அத்தாட்சி பெருமல் குறுக்கு எதிர்ப்பு தாக்கல் செய்யப்படுமாளுல் மேல்நீதிமன்றம் அந்தக் குறுக்கு எதிர்ப்பு மனுவின் நகலை சம்பந்தப்பட்ட கட்சிகாரருக்கோ, அன்றி அவருடைய வழக்கறிஞருக்கோ, குறுக்கு எதிர்ப்பாளர் செலவில் சார்பு செய்து தரும்படி கட்டளையிடும்.

இந்தக் குறுக்கு எதிர்ப்பு சரியான முறைப்படி தாக்கல் செய்த பிறகு ஏற்கெனவே தாக்கல் செய்யப்பட்ட மேல் வழக்கு திரும்பப் பெறப்பட்டாலும் (with drawn) அல்லது ஏதாவது குறை காரணமாக (default)த் தள்ளுபடி செய்யப்பட்டாலும், இந்தக் குறுக்கு எதிர்ப்பே, மேல் வழக்காகக் கருதப்பட்டு, அதன்மீது எதிர்த்தரப்பாளர்களுக்கு நீதிமன்றம் சரி என்று கருதுகின்றபடி அறிக்கை கொடுக்கப்பட்டு, விசாரணை செய்யப்பட்டுத் தீர்மானிக்கப்படும்.

எங்கெங்கு பொருந்துமோ, அந்தச் சந்தர்ப்பங்களில் எளியோர், மேல்வழக்கு (Pauper Appeals) நடத்துவதற்குக் கொடுக்கப்படும் சலுகை சட்ட திட்டங்கள் இந்தக் குறுக்கு எதிர்ப்பு மனு எளியவர் (Pauper) தாக்கல் செய்வாராளுல் அவருக்கும் பொருந்தும் (கட்டளை 41. விதி 22).

மேல் நீதிமன்றம் வழக்கை அசல் நீதிமன்றத்திற்குத் திரும்ப அனுப்புதல் (Remand)

மேல் வழக்காக எடுக்கப்பட்ட வழக்கு அசல் அல்லது மூல நீதிமன்றத்தில் பூர்வாங்கமான குறையினுல் (preliminary point) உடனே தீர்க்கப்பட்டிருக்குமாளுல் அந்தத் தீர்ப்பு மேல் நீதிமன்றத்தில் மாற்றப்படுமாளுல் அல்லது தள்ளப்படுமாளுல் (setting aside) அவ்வாறு அசல் வழக்குத் தீர்ப்பு மாற்றப்படும் அல்லது தள்ளப்படும்போது, மேல்நீதிமன்றம் நியாயத்தின் அடிப்படையில் அந்த வழக்கைத் திரும்பவும் நடத்த வேண்டியது அவசியம், என்று கருதினுல், அந்த வழக்கை எந்த நீதிமன்றம்

தீர்த்ததோ, அந்த நீதிமன்றத்திற்குத் திரும்ப அனுப்பக் கட்டளையிடும்.

அதோடல்லாமல் அவ்வாறு திரும்ப அனுப்பப்பட்ட வழக்கில் எந்த பிரச்சினை, அல்லது பிரச்சினைகள் (issues) விசாரிக்கப்பட்டுத் தீர்வுகாண வேண்டும், என்று இயங்குவதோடு (direct) மேல் நீதி மன்றத் தீர்ப்பு நகலை, எந்த நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து மேல் வழக்கு தொடரப்பட்டதோ, அந்த நீதிமன்றத்திற்கு அனுப்பி அவ்வழக்கை நீதிமன்றம் திரும்ப ஏற்றுக் கொண்டு, ஏற்கெனவே கொடுக்கப்பட்ட வழக்குப் பதிவேட்டிலுள்ள வழக்கு எண்ணின் கீழ் (suit number) அந்த வழக்கைத் திரும்ப நடத்தி வழக்கில் தீர்வு காண வேண்டுமென்று உத்தரவிடும்.

மேற்படி வழக்கில் அசல் நீதி மன்றத்தில் வழக்கு நடைபெறும் சமயம் பதிவான சாட்சியங்கள் நியாயமான விதிவிலக்கோடு, திரும்ப அனுப்பப்பட்ட பிறகு நடைபெறும் விசாரணையில் சாட்சியங்களாகக் கருதப்பட்டு அதனடிப்படையில் மேற்படி வழக்குத் தீர்மானிக்கப்படும் (கட்டளை 41. விதி 23).

குறிக்கப்பட்ட சாட்சியங்கள் (evidence as record) மேல் நீதி மன்றம் தகுந்த தீர்ப்பை வழங்கப் போதுமானதாயிருப்பின் வழக்கின் பிரச்சினைகளைத் திரும்பத் தேவையானால் நிர்ணயித்து, எந்த நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து மேல்வழக்குப் போடப்பட்டதோ, அதன் தீர்ப்பு முற்றிலும் தவறான வழியில் நிர்ணயிக்கப்பட்டிருந்தால், அதை அப்படியே மாற்றித் தீர்ப்பு வழங்கலாம் (கட்டளை 41. விதி 24).

எந்த நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து மேல்வழக்குத் தொடரப்பட்டதோ அந்த நீதிமன்றம் ஏதாவது வழக்குப் பிரச்சினை (issue) யை வடிவமைக்காமலும் (frame) அல்லது விசாரிக்காமலும் அல்லது உண்மையான கேள்வியினை (question of fact) விட்டிருந்து அது மேல் நீதிமன்றம் தகுதியின் அடிப்படையில் சரியான தீர்ப்புக்கு அத்தியாவசியமானது என்று கருதினால் பிரச்சினைகளை, சரியானபடி வடிவமைத்து அதைத் திரும்பவும் மூல நீதிமன்றத்திற்கு அனுப்பி, அதைத் தொடர்ந்து கூடுதலான சாட்சியங்களைப் பதிவு செய்யும்படி கோரலாம்.

அவ்வாறு திரும்ப மூல நீதிமன்றத்திற்கு அனுப்பப்படுமாயின், அந் நீதிமன்றம் அம்மாதிரியான கூடுதல் சாட்சியங்களைப் பதிவு செய்வதோடு, அதன் முடிவுகளையும் அம்முடிவுகளுக்கான காரணங்

களையும் குறித்து மேல் நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும் (கட்டளை 41. விதி 25).

மேற்குறிப்பிட்டவாறு தரப்பட்ட கூடுதல் சாட்சியங்களும், முடிவுகளும் வழக்கு சம்மந்தப்பட்ட பதிவுகளாக (records) கருதப்படும். ஆனால் இந்த சாட்சியங்களுக்கு, ஒவ்வொரு கட்சிக் காரரும் மேல் நீதிமன்றம் நிர்ணயிக்கும் நாளுக்குள் மறுப்பு மனு (memorandum of objections) கொடுக்கலாம்.

மறுப்பு மனு கொடுக்கத் தரப்பட்ட அவகாசத்திற்குள், யாரும் மறுப்புத் தரவில்லையானால் மேல் நீதிமன்றம் மேல் நடவடிக் கையைத் தொடர்ந்து அதை முடிக்கும் (determine) (கட்டளை 41. விதி 26).

மேல் வழக்கிலிருக்கும் கட்சிக்காரர்கள் அந்த நீதிமன்றத்தில் கூடுதல் வாய் மூலமான அல்லது எழுத்துமான சாட்சியங்கள் தர அனுமதிக்கப்பட மாட்டார்கள். ஆனாலும் கீழ்க்காணும் சந்தர்ப்பங்களில் அந்தச் சாட்சியங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். அதன்படி.

1. எந்த நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து மேல் வழக்குத் தொடரப்பட்டதோ, அந்த நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளக் கடமைப்பட்ட சாட்சியத்தை ஏற்றுக் கொள்ளாமல் விட்டிருக்கு மானாலும்.

2. கூடுதல் சாட்சியம் மேல் நீதிமன்றத்தில் கொடுக்க எண்ணுகின்ற கட்சிக்காரர்தான் உண்மையில் முயன்றும் குறிப் பிட்ட ஒரு சாட்சியம் மூல நீதிமன்றத்தின் தீர்ப்பாணை சொல் லப்படு முன் அந்நீதிமன்றத்தில் காட்டுவதற்கு அல்லது கொடுப் பதற்குத் தனக்கு முடியாமற் போனதாகவும், அல்லது அந்த சாட்சியம் இருந்தது தனக்குத் தெரியாமலிருந்தது என்பது உண்மை என்றும் மேல் நீதிமன்றத்தைத் திருப்தி செய்வாரா னாலும்,

3. மேல் நீதிமன்றம் தன்னுடைய தீர்ப்பை அளிக்கவும், அல்லது அதுபோல வேறு உறுதியான (Substantial reason) காரணத்திற்காக எதாவது எழுத்து ஆதாரங்களைக் கொடுக்கவும் அல்லது ஏதாவது சாட்சியை விசாரிக்கவும் தேவையென்று கேட்டாலும்,

அவ்விதம் கூடுதல் சாட்சியங்களைக் கொடுக்க மேல் நீதிமன்றம் அனுமதித்தால் அவைகளை ஏற்றுக்கொண்டதற்கான காரணங் களைப் பதிவு செய்ய வேண்டும் (கட்டளை 41. விதி 27).

கூடுதல் சாட்சியங்களைக்காட்ட மேல் நீதிமன்றம் அனுமதித்தால் ஒன்று, மேல் நீதிமன்றமே அந்தச் சாட்சியங்களை எடுத்துக் கொள்ளலாம் அல்லது எந்த நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து மேல் வழக்குத் தொடரப்பட்டதோ, அந்த நீதிமன்றத்தை மேல் நீதிமன்றம் அக்கூடுதல் சாட்சியங்களை எடுக்கச் சொல்லலாம் அல்லது மேல் நீதிமன்றம் தனக்குக்கீழ்ப்பட்ட வேறு நீதிமன்றத்தையும் அந்தக் கூடுதல் சாட்சியங்களை எடுத்துப் பதிவு செய்து தனக்கு அனுப்பும்படி பணிக்கலாம் (கட்டளை 41. விதி 28).

மேற்குறிப்பிட்டபடி கூடுதல் சாட்சியங்களை எடுக்கக் கோரினல் மேல் நீதிமன்றம் எந்தக் குறிக்கோளின் கீழ் (Points) அந்தச் சாட்சியங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அந்த நடவடிக்கைகளில் குறிக்கவேண்டும் (கட்டளை 41. விதி 29).

மேல் வழக்கில் தீர்ப்பு (Judgements in Appeals)

மேல் நீதிமன்றம் சம்மந்தப்பட்ட கட்சிக்காரர்கள் அல்லது அவர்களுடைய வழக்கறிஞர்களைக் கேட்டு, மேல்வழக்கின் நடவடிக்கைகளை ஆய்ந்து எந்த நீதிமன்றத் தீர்ப்பாணையை எதிர்த்து மேல் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதோ, அதன் அம்சங்களையும் கணித்து, அதன் மீதான தீர்ப்பு உடனடியாகவோ, அல்லது வேறு குறிப்பிட்ட நாளிலோ, அந்த நாள் பற்றிக் கட்சிக்காரர்களுக்கோ, அல்லது அவர்களுடைய வழக்கறிஞர்களுக்கோ அறிக்கை கொடுத்த பிறகு, நீதிமன்றத்தில் பகிரங்கமாகப் பிரகடனம் செய்யப்படும் (கட்டளை 41. விதி 30).

மேல் நீதிமன்றத் தீர்ப்பு எழுதப்பட்டு அதில் கீழ்க்கண்ட சாராம்சம் இருக்க வேண்டும்.

1. முடிவுக்கான காரணங்கள் (Points)

2. அந்தக் காரணங்களின் முடிவு (decision)

3. தீர்மானத்திற்கான விளக்கங்கள்

4. மேல்வழக்கிற்குட்பட்ட தீர்பாணை, திருப்பப்பட்டாலும், மாற்றப்பட்டாலும், அதன்படிமேல் வழக்காளருக்குக் கிடைக்கும் பலன் (relief).

அத்தோடு என்றைக்குத் தீர்ப்பு பிரகடனப் படுத்தப்பட்டது என்றும் குறிக்கப்பட்டு அந்தத் தீர்ப்பையளித்த நீதிபதி அல்லது நீதிபதிகளின் கையெழுத்தும் இடம் பெறவேண்டும். எந்த நீதிபதியையும் நீதிமன்றத்தில் பகிரங்கமாக, சுருக்கெழுத்தாளரி

டம் தீர்ப்பைக் கூறுவதற்கு உயர்நீதிமன்றம் அனுமதித்திருந்தால் அதன்படி தீர்ப்பை நீதிமன்றத்தில் கூறிவிட்டு அந்தத் தீர்ப்பு பதிவுசெய்யப்பட்ட அசலில் அந்நீதிபதி கையெழுத்திட வேண்டும் (கட்டளை 41. விதி 31).

மேல் வழக்குத் தீர்ப்பு ஒன்று அசல் நீதிமன்றத்தின் தீர்ப்பாணையை உறுதிசெய்வதாகவும், இரண்டு அதை மாற்றவும், மூன்று அதைத் திருப்பவுமாக இருக்கலாம். மேல் வழக்கிலுள்ள கட்சிக்காரர்கள் தீர்ப்பு எவ்விதம் எந்த வகையில் அமைக்கப்படல் வேண்டுமென்பதாக ஒப்புக்கொள்வார்களானாலும் அதன்படியும் மேல் நீதிமன்றம் தீர்ப்பாணையை வழங்கவும், அல்லது கட்டளை ஏதும் கொடுக்கவும் முடியும்.

மேல் நீதிமன்றத்திற்கு எந்த விதமான தீர்ப்பாணையும் கட்டளையும், அதிகாரமுள்ளது. மேற்படி தீர்ப்பாணையோ. கட்டளையோ அசல் நீதிமன்றம் வழங்கியிருக்க வேண்டியதாயிருந்தால் வேண்டும். அதன்படி தீர்ப்பாணையோ, கட்டளையோ அதைத் தொடர்ந்த கட்டளைகளைத் தரவும் அதிகார முண்டு. மேல் வழக்கு ஒரு பகுதியைப் பொறுத்திருந்தாலும் அல்லது ஒரு சில கட்சிக்காரர்களே, மேல் வழக்கு நடவடிக்கைகளில் கலந்து கொண்டாலும், எல்லோரையும் கட்டுப்படுத்தும் விதத்தில் தீர்ப்பாணை வழங்கலாம்.

ஆனல் பிரிவு 35A-ன் படி நட்ட ஈடோடு. கூடிய நீதிமன்றச் செலவுத் தொகை சம்பந்தமாக அசல் நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பைக் கட்சிக்காரர்கள் ஏற்றுக்கொண்டோ, அன்றி மறுத்தோ இருந்தாலும் அது சம்மந்தமாக மேல் நீதிமன்றம் எந்தக் கட்டளையும் கொடுக்கக்கூடாது.

எடுத்துக்காட்டு

ஆனந்தன் என்பவர் தமக்கு பெரியசாமி, ஆறுமுகம் என்ற இருவரும் ஒரு குறிப்பிட்ட தொகை தரவேண்டுமென்று தொடர்ந்த வழக்கில், பெரியசாமிதான் மேற்படித் தொகை ஆனந்தனுக்குக் கொடுக்க வேண்டுமென்று தீர்ப்பாணை வழங்கப்படுகின்றது, இந்தத் தீர்ப்பாணையை எதிர்த்து பெரியசாமி மேல் வழக்குப் போடுகின்றார். மேல் வழக்கில் மேற்படி மேல் நீதிமன்றம். ஆறுமுகம்தான் அந்தத் தொகை ஆனந்தனுக்குக் கொடுக்க வேண்டுமென்று தீர்ப்பாணை கூறலாம் (கட்டளை 41 விதி 33).

ஒன்றுக்கு மேற்பட்ட நீதிபதிகள், மேல் வழக்கை விசாரிக்க நேரிடின் அவர்களில் ஒருவர் மாறுபட்ட தீர்ப்போ அல்லது கட்

டளையோ கொடுப்பாராஜல் அவ்விதமான முடிவுக்கோ அல்லது கட்டளைக்கோ என்ன காரணம் என்று எழுத வேண்டும் (கட்டளை 41 விதி 34)

மேல் வழக்கில் தீர்ப்பாணை (Decree in Appellate Court)

மேல் வழக்கிலும் தீர்ப்பாணை வழங்கப்படும். அதில் அத்தீர்ப்பாணை வழங்கப்பட்ட நாள் குறிக்கப்படும். அதோடு மேல் வழக்கின் எண், மேல் வழக்கிற்கான நீதிமன்றச் செலவு எவ்வளவு என்றும் அந்தச் செலவுத் தொகை யார் கட்டித் தர வேண்டும் மென்றும், மேல் வழக்காளர் எதிர்தரப்பாளர்கள், பெயர்கள், அவர்களுடைய முகவரிகள், தீர்ப்பாணை மூலம் கொடுக்கப்பட்ட திட்டவட்டமான நிவாரணம் (Relief) அல்லது நிர்ணயம் (adjudication) கூறப்பட வேண்டும்.

இந்தத் தீர்ப்பாணையில் நீதிமன்றச் செலவு குறிக்ப்பிடப்பட்டு யாரால் எந்தச் சொத்திலிருந்து செலவுத் தொகை எந்த அளவு என்றும், அது போக மூல வழக்கில் உண்டான செலவுத் தொகை அளவு எவ்வளவு கட்டப்படவேண்டும் என்றும் குறிக்க வேண்டும்.

தீர்ப்பாணையில் எந்த நீதிபதி அல்லது நீதிபதிகள் தீர்ப்பு வழங்கினரோ, அவர்களால் கையெழுத்திட்டுத் தீர்ப்பு வழங்கிய தேதியும் குறிப்பிடவேண்டும்.

மாறுபட்டக் கருத்துக் கொண்ட நீதிபதி ஒன்றுக்கும் மேற்பட்ட நீதிபதிகள் தீர்ப்பு வழங்குவதில் தனித்திருப்பாராஜல் தீர்ப்பாணையில் அவர் கையெழுத்துப் போட வேண்டிய அவசியமிராது .

ஒரே தீர்ப்பாணையை எதிர்த்துப் பல மேல் வழக்குகள் போடப்பட்டிருப்பின், மேல்நீதிமன்றம் அவைகளை ஒன்றுக இணைத்து விசாரணை நடத்தி ஒரே தீர்ப்பாணை வழங்க வேண்டும் (கட்டளை 41. விதி 35).

சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்கள் விண்ணப்பத்தின் பேரில் மேல் நீதிமன்றம் அத்தாட்சி பெற்ற தீர்ப்பு, தீர்ப்பாணை நகல்களை மேற்படிக் கட்சிக் காரர்களின் செலவில் தயார் செய்து கொடுக்க வேண்டும் (கட்டளை 41 விதி 36).

மேல்நீதிமன்றம், தன் தீர்ப்பு, தீர்பாணையின் அத்தாட்சி பெற்ற நகல்களை அசல் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். அது அசல் நடவடிக்கைளோடு சேர்க்கப்பட்டிருக்கும்

வழக்குப் பதிவேட்டிலும் மேல் நீதிமன்றத் தீர்ப்புப் பற்றிய குறிப்புப் பதியப்படும்.

இரண்டாவது மேல் வழக்கு (Second Appeal)

இரண்டாவது மேல்வழக்கு என்பது முதல் மேல்வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பாணையை எதிர்த்துத் தொடுக்கப்படும் மேல் வழக்காகும். இந்த இரண்டாம் மேல் வழக்கு நடத்தும் அதிகார வரம்பு உயர் நீதிமன்றத்திற்குத்தான் உண்டு. அந்த இரண்டாம் மேல் வழக்கு நடத்தும் முறை 100 முதல் 103 பிரிவுகளிலும் கட்டளை (41A)யிலும் விவரிக்கப் பட்டிருப்பதுதான்.

உயர் நீதிமன்றத்தின் கீழ் உள்ள எந்த முதல் மேல் வழக்கின் தீர்ப்பாணையை எதிர்த்தும் இரண்டாவது மேல் வழக்கு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படலாம். ஆனல் கீழ்க் கண்ட காரண காரியங்களின் மீதுதான் மேற்படி இரண்டாவது மேல் வழக்குத் தாக்கல் செய்யத் தகுதியாகும்.

1. முதல் வழக்கின் தீர்ப்பு சட்டத்திற்கு விரோதமானதோ. அன்றிச் சட்டத்தின் வலிவுள்ள வழக்கத்திற்கு விரோதமாயிருந்தால்,

2. முதல் வழக்கு முடிவு சட்டத்தின் முக்கிய அம்சத்தையோ, அல்லது சட்ட வலிவுள்ள வழக்கத்தின் முக்கிய அம்சத்தையோ நிர்ணயிக்கத் தவறியிருக்க வேண்டும்.

3. நடை முறையில் இந்நடை முறைச் சட்டத்திற்குப் புறம்பாகப் பெருமளவிலான தவறு அல்லது குறையோ அல்லது நடைமுறையில் உள்ள வேறு சட்டத்திற்குப் புறம்பாகப் பெருமளவிலான தவறு அல்லது குறையோ இருந்து அதனிமித்தம் மேல் வழக்கு முடிவில் தகுதியின் பேரில் தவறும், குறையும். ஏற்பட்டிருக்க வேண்டும்.

அதோடு இந்தப் பிரிவின்கீழ் இரண்டாவது மேல் வழக்கு முதல் மேல் வழக்கின் தீர்ப்பாணை ஒருதலைப்பட்சமாக (Exparte) நிறை வேற்றப்பட்டிருந்தாலும் தாக்கல் செய்யப்படலாம் (பிரிவு 100).

மேற்குறிப்பிட்டபடியில்லாமல் வேறு எந்தக் காரணக் காரியத்திற்காகவும், இரண்டாவது மேல் வழக்குப் போட முடியாது. (பிரிவு 101).

சிறு காரண நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து, அவ்வழக்கின் பொருள் மதிப்பு ரூபாய் 1000/-க்குக் குறைவாக இருக்குமானால் இரண்டாவது மேல் வழக்குப் போட முடியாது. (பிரிவு 102)

எந்த ஒரு இரண்டாவது மேல் வழக்கிலும், உயர் நீதிமன்றம், பதியப்பட்ட சாட்சியங்களைக் கொண்டு, ஒரு பிரச்சினையின் உண்மையை (issue of fact) மேல் வழக்கைத் தீர்ப்பதற்கு போதுமானதாகக் கருதினால், அந்தச் சாட்சியங்களைக் கொண்டு ஒரு பிரச்சினையின் உண்மையை முதல் மேல் நீதிமன்றம் நிர்ணயிக்க தவறி விட்டிருந்தால் அல்லது அது தவறுதலாகத் தீர்மானிக்கப் பட்டிருந்தால் பிரிவு 100ல் குறிப்பிட்டபடி அது சட்டத்திற்கு புறம்பானதாகக் கருதப்பட்டு உயர் நீதிமன்றத்தில் தீர்க்கப்படும் வழக்கின் உண்மைப் பிரச்சினை விடுபட்டிருந்தாலும், அது சட்டப் படியான தவறாகும். எனவே அது சட்டப்படியான குறையுள்ளது. ஆகவே நீதிமன்றம் அப்பிரச்சினையில் உண்மையையும் (issue of fact) இரண்டாவது மேல்வழக்கில் நிர்ணயிகலாம். (பிரிவு 103)

ஏறத்தாழக் கட்டளை 41-ன் கீழ் மேல் வழக்குகளை வகைப்படுத்தும் சட்டதிட்டங்கள்தான் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் இரண்டாவது மேல் வழக்குக்குப் பொருந்தும்,

அது தவிர இரண்டாவது மேல் வழக்கு மனுவுடன் அசல் வழக்கு, முதல் மேல் வழக்குத் தீர்ப்புகள், நகல்கள் 6 வீதம் அச்சடிக்கப்பட்டது தாக்கல் செய்யப்படவேண்டும். அவற்றில் ஒன்று அத்தாட்சி பெற்ற தீர்ப்பு நகலாயிருத்தல் வேண்டும். அதோடு எதிர்த் தரப்பாளருக்கு அறிவிப்புக் கொடுக்கப் போதுமான செலவு கட்டி அதற்கான ரசீது நீதிமன்றக் கணக்கரிடம் பெற்று தாக்கல் செய்ய வேண்டும்.

மிக முக்கியமாக இரண்டு கீழ் நீதிமன்றங்களின் அத்தாட்சி பெற்ற தீர்ப்பாணைகளைக் கண்டிப்பாக, மேல் வழக்கு மனுவுடன் தாக்கல் செய்ய வேண்டும். இரண்டாம் மேல் வழக்கின் மதிப்பைக் கணக்கிட்டு அதற்குத் தகுந்த நீதிமன்றக் கட்டணம் கட்ட வேண்டும்.

மேல் வழக்கில் எதிர்த்தரப்பாளர் தாக்கல் செய்வது போன்ற குறுக்கு மறுப்பு இந்த இரண்டாவது மேல் வழக்கிலும் எதிர் தரப்பாளருக்கு அறிக்கை சார்பு செய்யப்பட்ட நாளிலிருந்து ஒரு மாதக் கெடுவுக்குள் தாக்கல் செய்யலாம்.

இந்த இரண்டாம் மேல்வழக்கில் எதிர்த்தரப்பாளருக்குக் கொடுக்கப்படும் அறிவிப்பில் எந்த நாளுக்குள், இந்த மேல் வழக்கை எதிர்த்து நடத்த விரும்புகின்றார் என்பதை எழுத்து மூலம் அறிவிக்க வேண்டுமென்று கூறப்பட்டிருக்கும்.

அப்படி எதிர்த்து வழக்காடுவதற்கான தன் குறிப்பை அவர் அந்தக் குறிப்பிட்ட நாளில் தாக்கல் செய்யவில்லையானால் மேல் வழக்குச் சம்பந்தப்பட்ட எழுத்து ஆதாரங்களின் அத்தாட்சி பெற்ற நகல்களை அவர் பெற முடியாது.

ஆனால் எதிர்த்தரப்பாளர் தாம் மனுச் செய்து கால நீடிப்புக் கேட்டால் உயர் நீதிமன்றம் அந்தக் கால நீடிப்பு வழங்கலாம், மேற்படி மனுவை ஆதரிக்கும் வண்ணம் ஒரு சத்திய வாக்கு மூலம் எழுதித்தர வேண்டும். அதில் கால தாமதத்திற்குக் காரணம், ஏன் குறிப்பிட்ட நாளில் எதிர் வழக்காடும் குறிப்பைத் தாக்கல் செய்யவில்லை என்பதற்கான நியாயமான காரணங்களையும் எழுதி யிருக்க வேண்டும். அந்த மனுவின் பேரில் ஏனைய கட்சிக்காரர் களுக்கு அறிவிப்புக் கொடுக்கப்பட்ட பிறகு அந்த மனுவை அனு மதிக்கும் போது நீதிமன்றம், ஏனைய கட்சிக்காரர்களுக்கு இந்த மனு சம்பந்தப்பட்ட நீதிமன்றச் செலவை மனுதார் கட்டித்தரும்படி ஆணையிடும்.

மேல் வழக்கு மனுவிலும், மனுதாரர் குறிப்பிலும், (Memo of appearance) லும், சென்னை நகரிலுள்ள மேற்படிக் கட்சிக் காரர் அல்லது அவரது வழக்கறிஞர் முகவரி கொடுக்க வேண்டும். ஏனென்றால் மேல் வழக்குக்கான அறிவிப்புகள் மேற்படி முகவரி யில் கொடுக்கப்பட வகை செய்ய வேண்டும்.

ஆனால் எதிர்த்தரப்பாளர், வழக்கறிஞர் துணையில்லாமல் நேரில் அம்மேல் வழக்கை நடத்த முன்வருவாரானால் அவருடைய முகவரி, எந்த நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து மேல் வழக்குப் போடப்பட்டதோ அந்த நீதிமன்ற அதிகார வரம்பிற்குள் ஓர் இடத்தில் கொடுக்கலாம். அவரே பின்பு வழக்கறிஞர் துணை யுடன் மேல்வழக்கை நடத்துவாரானால் அவருடைய வக்காலத் தில் (Vakalat) சென்னை நகர முகவரி கொடுப்பதோடு, அது பற்றி ஏனைய கட்சிகாரர்களுக்கும் அறிவிப்புக் கொடுக்க வேண்டும்.

ஒருவர் வழக்கறிஞர் மூலம் வழக்கை நடத்துவாரானால் அந்தக் கட்சிக்காரரின் வழக்கறிஞர் முகவரி அந்தக் கட்சிக்காரர் முகவரியாகக் கருதப்படும்.

மேல் வழக்கில் கட்சிக்காரர்களுக்கு அனுப்பப்படும் அறிவிப்புகள், பதிவுத் தபாலில், ஒப்புப்கொள் ரசீதுடன் அனுப்பப் படலாம். அவ்வாறு அறிவிப்புகள் சார்பாகி இருந்தால் அது தகுந்த சார்பாகக் கருதப்படும் (கட்டளை 41A).

உச்சிநீதிமன்ற மேல்வழக்குகள் (Appeals to the Supreme Court).

பிரிவு 109

இந்திய அரசியல் சட்டம் 4-வது அதிகாரம் (Chapter 4) 5ஆம் பாகத்தில் (Part 5) உள்ள சரத்துகளின்படியும் அதுபோல் உச்சி நீதிமன்றம் அவ்வப்போது இயற்றுகின்ற ஏனைய நீதிமன்றங் களிலிருந்துவரும் மேல் வழக்குகள் பற்றிய விதிகளின் படியும் இங்குக் குறிக்கப்பட்டிருக்கும் சரத்துக்களின்படியும் உச்சி நீதி மன்றத்திற்குக் கீழ்க் கண்ட சந்தர்ப்பங்களில் மேல் வழக்குத் தொடரலாம்:

1. எந்த உயர் நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பு, தீர்ப்பாணை, இறுதிக் கட்டளைகளை எதிர்த்தும்,

2. உயர் நீதிமன்றத்தின் அசல் அதிகாரவரம்பில் வழங்கப் பட்ட தீர்ப்பாணை, இறுதிக் கட்டளையை எதிர்த்தும்.

3. எந்தத் தீர்ப்பாணையும் அல்லது இறுதிக் கட்டளையும், உச்சி நீதிமன்றம் மேல் வழக்குக்குகந்தது என்று கீழ்க் காணும் சில சூழ் நிலைகளில் சரிபார்க்கப்பட்டு அனுமதிக்கப்பட்டிருக்கு மானாலும்.

மேலே குறிப்பிட்ட 1, 2, குறிப்புகளில் வழக்கின் மதிப்பு ரூ. 1,00,000/-க்கு (ரூ. ஒரு லட்சத்திற்கு) மேற்பட்டதாயிருத்தல் வேண்டும் என்பது புதிதாக வந்துள்ள அரசியல் சட்டத்திருத்தத் தின்படியாகும். உச்சி நீதிமன்றத்திற்கு மேல்வழக்காக வரும் போது அதன் மதிப்பு மேல்வழக்கின் மதிப்பு அந்த அளவு அல்லது அதற்குக் கூடுதலாக இருக்க வேண்டும். இதைப் பற்றி உயர் நீதி மன்றம் சான்று கூறவேண்டும். (இந்திய அரசியல் சட்டம் பிரிவு 133 (1) (a), முன்பு மேல்வழக்கின் மதிப்பு ரூ. 20,000/-க்கு மேற்பட்டதாயிருந்தால் போதுமானதாகவிருந்தது குறிப்பிடத் தக்கது.

இது தவிர மேல்வழக்கின் தீர்ப்பு கீழ் வழக்கின் தீர்ப்பை உறுதி செய்வதாயிருந்தால் அந்தத் தீர்ப்பு, தீர்ப்பாணை, அல்லது

இறுதிக் கட்டளை ஒரு முக்கியமான, சட்டப்பிரச்சினை அடங்கியதாயிருந்தால் உச்சி நீதிமன்றத்திற்கு மேல் வழக்காக வரலாம், அவ்வாறு முக்கிய சட்டப்பிரச்சினை அடங்கியிருக்கின்றது என்று உயர் நீதிமன்றம் அத்தாட்சி (Certificate) தரவேண்டும் (இந்திய அரசியல் சட்டம் பிரிவு 133 (1) பிற்பகுதி).

உயர் நீதிமன்றம் மேற்கூறியபடி அத்தாட்சி தர மறுத்தால் உச்சிநீதிமன்றமே நேரடியாக, முக்கிய சட்டப் பிரச்சினை மேற்படி வழக்கில் சம்மந்தப்பட்டிருக்கின்றது என்று கண்டால், சிறப்பு அனுமதி (Special leave) அல்லது இணக்கம் தரலாம். அதன் பேரில் உச்சி நீதிமன்றத்தின் மேல் வழக்கு அனுமதிக்கப்படும் அரசியல் சட்டம் பிரிவு 132 (2).

இந்த சட்டப் பகுதியில் கண்டுள்ள சரத்துகள் உச்சி நீதிமன்றத்தின் சிறப்பு அனுமதி (Special leave) அல்லது இணக்கம் கொடுக்கும் அரசியல் சட்டம் 136ஆம் பிரிவில் தரப்பட்ட அதிகாரத்தைப் பாதிப்பதாகவோ, மோதுவதாகவோ கொள்ளக்கூடாது. இந்தச்சரத்துப்படி எந்த நீதிமன்றத் தீர்ப்பையும் எதிர்த்து நேரடியாகவே உச்சி நீதிமன்றத்திற்கு மேல்வழக்குத் தாக்கல் செய்ய உச்சி நீதிமன்றம் தன் சிறப்பு அனுமதி அதிகாரத்தைப் பயன்படுத்தி, அனுமதிக்கலாம்.

அதுபோல அரசியல் சட்டம் 145ஆம் பிரிவின்கீழ் உச்சி நீதிமன்றம் உருவாக்குகின்ற விதிகளையும் இந்நடை முறைச் சட்டம் பாதிப்பதாகக் கொள்ளக் கூடாது.

அதுபோல இந்நடை முறைச் சட்டம் குற்றவியல் கடந்துறை (Admilty) சம்பந்தப்பட்ட நீதிபரிபாலனத்திற்குச் சம்பந்தம் எதுவுல்லை எனக் காண்க (பிரிவு 112).

உச்சி நீதிமன்றத்திற்கு மேல்வழக்குப் போடுவதற்குச் சாதாரணமாகத் தீர்ப்பாணை என்பது இறுதிக் கட்டளையையும் குறிக்கும்.

உச்சி நீதிமன்றத்திற்கு மேல்வழக்குப் போட விரும்புபவர்கள் எந்தத் தீர்ப்பாணையை எதிர்த்து மேல்வழக்குப் போடவேண்டுமோ அந்த நீதிமன்றத்தில் விண்ணப்பித்து மேற்குறிப்பிட்டபடி பிரிவு 110-ல் குறிப்பிட்ட நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டியிருக்கும். அதாவது வழக்கு உச்சி நீதிமன்றத்திற்குமேல் வழக்காக எடுத்துச்

செல்லத் தகுதியுடையது தானா என்பதாகும். அதை விசாரிக்க மேற்படி மனுவின் பேரில் எதிர்த்தரப்பாளர்களுக்கு அறிக்கை கொடுத்துக் கோரப்பட்டபடி ஏன் அத்தாட்சி (Certificate) கொடுக்கக் கூடாது என்று அவர்களின் மறுப்பைக் கேட்ட பிறகு அந்த அத்தாட்சி வழங்கப்படலாம் அல்லது மறுக்கப் படலாம்.

அவ்வத்தாட்சி கொடுக்கப்படுமானால் 90 நாள்களுக்குள் அல்லது அதற்கும் அதிகமாக நீடிக்கப்பட்ட காலத்திற்குள் அதுவும் 60 நாள்களுக்கு மிகைபடாமல் தகுந்த நிவாரணத்தின் நிமித்தம், மேற்படித் தீர்ப்பாணை நாளிலிருந்தும், அல்லது அத்தாட்சி கொடுக்கப்பட்ட 6 வாரங்களில் இவற்றில் எது முந்தினதோ அந்நாளில்,

1. மேல் வழக்குப் போட அத்தாட்சி கோரின விண்ணப்பதார் எதிர்த்தரப்பாளருக்கான செலவுத் தொகைக்கு, பொறுப்புத் தொகை பணமாகவோ அல்லது அரசு காப்பாகவோ (Govt. Security) ஒப்படைக்கவேண்டும்.

2. அதோடு மொழிபெயர்ப்பு, திரும்ப எழுதித் தயாரிக்கும் பணிக்கும், அந்த எழுத்துமானங்களை, ஒழுங்கு செய்யவும், அச்சடிக்கவும் அவைகள் அத்தனையின் உண்மை நகல் அதாவது வழக்குச் சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் உச்சி நீதிமன்றத்திற்கு மேலே கூறியபடி தயாரித்து அனுப்பவும்.

இவற்றில் உயர் நீதிமன்றம் தேவையில்லை என்றும் அல்லது சம்மந்தப்பட்ட கட்சிக்காரர்களைத் தேவையில்லை என்று ஒப்புக் கொள்ளும் பதிவுகளைத் (Record) தவிர மற்றெல்லாவற்றையும் தயார் செய்வதற்கான செலவுத் தொகை கட்டவேண்டும்.

மேற்குறிப்பிட்ட தொகை கட்டுதல் போன்ற நிபந்தனைகள் அரசுகள் மேல் வழக்காளர்களாயிருப்பின் அவைகளைக் கட்டுப் படுத்தாது,

அவ்விதம் தொகை குறிப்பிட்ட நாளில் கட்டப்பட்டு விட்டால், மேல் வழக்கு விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டதாகப் பொருள். அதன் பேரில் எதிர்த்தரப்பாளருக்கு அறிக்கை கொடுக்கப்படும். பிறகு உச்சி நீதிமன்றத்திற்கு மேற்குறிப்பிட்டபடி வழக்கு எல்லாப் பதிவுகளோடு கூட (Records) அனுப்பி வைக்கப் படும்.

சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்கள் கோரினால் அதற்கான கட்டணம் வசூல் செய்து கொண்டு நீதிமன்றம் அவர்களுக்கு அந்த பதிவுகள் அடங்கிய உண்மை நகல் வழங்கும்.

மேற் கூறியபடி உச்சிநீதிமன்றத்திற்குப் பதிவுகள் (Records) தயார் செய்ய, ஏற்கெனவே கட்டிய பணம் போத வில்லையானல் அந் நீதிமன்றம் விண்ணப்பதாரரை மேற்கொண்டும் பணம் கட்ட ஆணையிடலாம். இந்த விதி, பொறுப்புத் தொகையாகக் கட்ட வேண்டிய பணத்திற்கும் பொருந்தும். அவ்விதம் ஆணை யிட்டபடி பணம் கட்டத் தவறினல் மேல் வழக்கு நிறுத்தி வைக்கப் படுவதோடு, எந்தத் தீர்ப்பாணையை எதிர்த்து மேல்வழக்குப் போடப் பட்டதோ அந்தத் தீர்ப்பாணை செயல்படுத்தத் தடையும் விதிக்கப் படமாட்டா.

மேல் வழக்கு விசாரணையிலிருக்கும் போது குறிப்பிட்ட நீதி மன்றம் அதன் தீர்ப்பாணையை எதிர்த்து மேல் வழக்குப் போடப் பட்டிருக்கும் போது மேற்படித் தீர்ப்பாணையை நிறைவேற்றக் கூடாதெனச் சில நிபந்தனைகளின் பேரில் தடைவிதிக்கலாம். (கட்டளை 45).

8. மேற்கோள் விசாரணை (Reference) மறு ஆய்வு (Review) சீராய்வு (Revision)

மேற்கோள் விசாரணை (Reference)

இந் நடைமுறைச் சட்டததில் மேற்கோள் விசாரணை என்பது, உயர் நீதிமன்றத்திற்குக் கீழ்ப் பட்ட நீதிமன்றங்கள் எதுவாயினும் சில சந்தர்ப்பங்களில் உயர் நீதிமன்றத்தின் சட்ட அபிப்பிரா யத்தை கோரும். அதன் பேரில் உயர் நீதிமன்றம் தரும் அபிப் பிராயங்களை மேல் வரிச் சட்டமாகக் கொண்டு மேற்கோள் விசாரணை கேட்ட நீதிமன்றம் குறிப்பிட்ட அந்த வழக்கைத் தீர்க் கும். விதிக்கப்படும் நிபந்தனைகள், வரம்புகளின் கீழ் எந்நீதிமன்ற மும், ஒரு வழக்கைக் குறித்து, அது பற்றிய உயர் நீதிமன்றத்தின் அபிப்பிராயத்தைக் கேட்கலாம். அதன்படி உயர்நீதி மன்றம் தகுந்தது என்று கருதும் ஒரு கட்டளை வழங்கும்.

அவ்வாறு உயர் நீதிமன்றத்தின் அபிப்பிராயம் கேட்கும் நீதி மன்றம் அந்த வழக்கில் ஒரு சட்டமோ அல்லது அரசு ஆணையோ, விதி முறையோ, அல்லது அவற்றிலுள்ள சரத்துகளோ, ஏதே னும் செல்லுபடியாகாது என்ற சந்தேகம் ஏற்பட்டு, அந்தச் சந் தேகம் நீக்கப்படுவது அந்த வழக்கைத் தீர்ப்பதற்கு இன்றியமை யாததாயிருக்கின்றது என்று அந் நீதிமன்றம் தனக்குத் தானே திருப்தி செய்து கொள்ள வேண்டும். அந்தச் சந்தர்ப்பத்தில் அது பற்றிய அபிப்பிராயம், அந் நீதிமன்றம் எந்த உயர் நீதிமன்றத் திற்கு உட்பட்டிருக்கின்றதோ அதனிடம் கோரும் பொழுது அதற் கான காரணங்களையும் அந்நீதிமன்றம் குறித்து அனுப்பவேண்டும்.

'விதி முறை' (Regulation) என்பது வங்காளம், சென்னை, பம்பாய் முதலியவற்றின் சட்டத் தொகுப்பிலுள்ளவைகளைக் குறிக்கும் (Codes).

இவ்வாறு அபிப்பிராயம் கேட்கும் போது, அபிப்பிராயம் கேட்கும் நீதிமன்றம் தன்னிச்சையாகவோ, ஏதாவது கட்சிக்காரரின் விண்ணப்பத்தின் பேரிலோ, கேட்கலாம். அதன்படி வழக்கின் சாராம்சம் சுருக்கமாகக் கூறி எந்த இடத்தில் சட்டம் பற்றிய சந்தேகம் எழுந்திருக்கின்றது என்று குறித்து அந் நீதிமன்றம் என்ன கருதுகின்றது என்று அதன் கருத்தையும் தெரிவிக்க வேண்டும். அவ்வாறு கோரப்படும்போது அதற்கான செலவுகளைச் சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்களை ஏற்றுக்கொள்ளச் செய்ய வேண்டும்.

இம்முறையில் அபிப்பிராயம் கோரியிருக்கும் போது மேற்படி நீதிமன்றம் மற்ற நடிவடிக்கைகளை நிறுத்தி வைக்கவில்லையானாலும், எந்தக் கட்டளையையும் உயர்நீதிமன்ற அபிப்பிராயம் வரும் வரை நிறுத்தி வைக்க வேண்டும்.

உயர் நீதிமன்றம் தன் அபிப்பிராயத்தைத் தெரிவித்த பிறகு அதன் வழியில் மேற்படி வழக்குத் தீர்க்கப்படும் (பிரிவு 113).

பிரிவு 114

மறு ஆய்வு (Review)

ஒரு தீர்ப்பாணையானாலும் அல்லது கட்டளையானாலும், கட்சிக்காரர் ஒருவர் தமக்குத் தீங்கிழைக்கப்பட்டதாக (aggrieved) கருதினால்,

அந்தத் தீர்ப்பாணையை அல்லது கட்டளையை எதிர்த்து மேல் வழக்குப் போடச் சட்டத்தில் இடமில்லாதிருந்து அல்லது இடமிருந்தும் அவ்வாறு செய்யாமல் விட்டாலும்,

அல்லது சிறுகாரண நீதிமன்றத்திலிருந்து மேற்கோள் விசாரணை (Reference) நடத்தியதில் ஏற்பட்ட தீர்ப்பாணை அல்லது கட்டளையின் பேரிலும் எந்த நீதிமன்றம் மேற்படித் தீர்ப்பாணை அல்லது கட்டளையை வழங்கியதோ அந்த நீதிமன்றம் அந்தத் தீர்ப்பாணையையோ, அல்லது கட்டளையையோ மறு ஆய்வு செய்யும்படி பாதிக்கப்பட்டவரால் தாக்கல் செய்யப்பட்ட அம் மனுவைப் பரிசீலித்து அந்நீதிமன்றம் மறு ஆய்வு செய்யலாம்.

அவ்வாறு மறு ஆய்வு செய்யுக்கோரும் மனுவில் பாதிக்கப்பட்ட கட்சிககாரர் மிக முக்கியமான புதிய காரியம், அல்லது சாட்சியம் தாம் கவனம் செலுத்தியும் வழக்கு நடைபெறுகின்ற சமயம் கிடைக்காமல், இப்போதுதான் கிடைத்தது என்றும் இது

வழக்கில் தீர்ப்பாணை அல்லது கட்டளை வழங்குமுன் கிடைத்திருக்குமானால் மேற்படித் தீர்ப்பாணையோ அல்லது கட்டளையோ வேறு விதமாக மாற்றப்பட்டிருக்கும் ஆனதால், வழங்கப்பட்டிருக்கின்ற தீர்ப்பாணை வெளிப்படையாகத் தெரிகின்ற குறையோ அல்லது தவறோ கொண்டிருக்கின்றது என்று இருக்கும்போது அதில் மறு ஆய்வு செய்யப்பட வேண்டுமென விரும்பினால், அதற்கான காரணங்களடங்கிய மனுவை எந்த நீதிமன்றம் அத்தீர்ப்பாணை அல்லது கட்டளையைக் கொடுத்ததோ, அந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம்.

மேற் கூறப்பட்ட தீர்ப்பாணை அல்லது கட்டளையை எதிர்த்து வேறு ஒரு கட்சிக்காரர் மேல்வழக்குப் போட்டிருந்தாலும், பாதிக்கப்பட்டதாகக் கருதும் கட்சிக்காரர் மறு ஆய்வு மனுச்செய்யலாம். மேற்குறிப்பிட்ட மேல்வழக்கு மறு ஆய்வு விண்ணப்பதாரருக்கும், மேல்வழக்காளருக்கும் பொதுப் பிரச்சினைகளை ஆய்வதாயிருக்குமானால் மேல்வழக்கு நீதிமன்றத்திலும், மறு ஆய்வு விண்ணப்பதாரர் மறு ஆய்வுப் பிரச்சினையைப் பற்றிக் குறிப்பிடலாம்.

மறு ஆய்வு மனு, மேல்வழக்கு மனு, எம் முறையில் தயாரிக்கப்படுகின்றதோ அதே முறையில் தயாரிக்கப்பட வேண்டும். மேல் வழக்குக்கான ஒழுங்கு முறைதான் அப்படியே இந்த மனுவுக்கும் பொருந்தும்.

தகுந்த காரணமில்லையானால் நீதிமன்றம் இந்த மறு ஆய்வு மனுவை நிராகரிக்கும்.

நீதிமன்றம் மறு ஆய்வு செய்யப்பட வேண்டுமெனக் கருதுமானால் மேற்படித் தீர்ப்பாணை அல்லது கட்டளையை மறு ஆய்வு செய்யும்.

அப்படி மறு ஆய்வு செய்யும் பொழுது எதிர்த்தரப்பாளருக்கு அறிவிப்புக் கொடுத்து, மேற்படித் தீர்ப்பாணை அல்லது கட்டளை சரியாகச் சொல்லப்பட்டது என்பதற்கான அவர் வாதங்களைக் கேட்டபிறகே முடிவு கூறப்படும்.

மறு ஆய்வு மனுதாரர் தாம் முயன்றும், நியாயமான சிரத்தை எடுத்தும் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட காரியம் (Matter) அல்லது சாட்சியங்கள் மேற்படி வழக்கில் தீர்ப்பாணை அல்லது இறுதிக் கட்டளை வழங்கும் சமயம் அல்லது அதற்கு முன்பு கிடைக்கவில்லை. அது கிடைத்திருக்குமானால் மேற்படித் தீர்ப்பாணை அல்லது கட்டளை வேறுவிதமாக மாறியிருக்கும் எனக் குறிப்பிடுவாரானால் அந்தக் காரணங்களைத் தக்க ஆதார

பூர்வமாக ருசுப்படுத்தினாலன்றி, மறு ஆய்வுக்கு நீதிமன்றம் சம்மதிக்காது.

தீர்ப்பாணை அல்லது கட்டளை வழங்கிய நீதிபதியோ அல்லது நீதிபதிகளில் ஒருவரோ, மேற்படி நீதிமன்றத்தில் தொடர்ந்திருந்து அங்கு மறு ஆய்வு கோரப்பட்டிருக்குமானால் மேற்படித் தீர்ப்பாணை அல்லது கட்டளை வழங்கிய நீதிபதி, ஆய்வு மறு தாக்கல் செய்த நாளிலிருந்து 6 மாத காலம் மேற்படி நீதிமன்றத்தினின்று மாற்றலாகி அல்லது வேறு காரணத்தினால் இல்லாமலிருந்தாலொழிய அந்த மறு ஆய்வு மனுவைக் குறிப்பிட்ட நீதிபதியே விசாரித்துத் தீர்க்க வேண்டும். இதனுடைய உட்கருத்து என்னவென்றால் கூடுமானவரை எந்த நீதிபதி தீர்ப்பாணை அல்லது கட்டளை வழங்கினாரோ, அவரே அதை மறு ஆய்வு செய்ய வேண்டுமென்பதாகும்.

ஒன்றுக்கும் மேற்பட்ட நீதிபதிகள் மேற்படி மறு ஆய்வு மனுவை விசாரிக்கும்போது பெரும்பான்மையினர் கருத்துப்படி மறு ஆய்வு ஏற்றுக் கொள்ளப்படும் அல்லது தள்ளுபடி செய்யப்படும்.

நீதிபதிகள் சரிசமமாக வேறுபட்டாலும் மேற்படி மனு தள்ளுபடி செய்யப்படும்.

மறு ஆய்வு மனு தள்ளுபடியானால் அந்த ஆணையை எதிர்த்து மேல்வழக்குப் போட முடியாது. ஆனால் ஏற்றுக் கொள்ளப்படுமானால், கீழ்க்காணும் சந்தர்ப்பங்களில் மேல்வழக்குப் போடலாம்.

1. தகுந்த காரணமிருந்தும் மறு ஆய்வு மனு நிராகரிக்கப்பட்டிருந்தாலும், (2) காலங்கடந்தும் தகுந்த காரணமில்லாதிருந்தாலும், மறு ஆய்வு மனு ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தாலுமாகும்.

மறு ஆய்வு மனுமனுதாரர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வராததால் தள்ளுபடி செய்யப்பட்டிருக்குமானால் தான் தகுந்த காரணங்களினால் வர இயலவில்லை என நீதிமன்றத்தின் திருப்திக்கு ருசுப்படுத்தினால், எதிர்த்தரப்பாளருக்கு அறிக்கை கொடுத்து, நீதிமன்றச் செலவு எதிர்த்தரப்பாளருக்குக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்ற நிபந்தனையின் பேரில் மேற்படி மனு மறு ஆய்வுக்கு ஏற்றுக் கொள்ளப் படலாம்.

மறு ஆய்வு மனு மீதே திரும்பவும் மறு ஆய்வு மனு தாக்கல் செய்ய அனுமதிக்கப்பட மாட்டாது (கட்டளை 47).

பிரிவு 115 சீராய்வு (Revision)

உயர் நீதிமன்றம் தனக்குக் கீழ்ப்பட்ட எந்த நீதிமன்றத் தீர்ப்பாணையோ, கட்டளையோ, மேல் வழக்குப் போட முடியாத நிலையிலிருந்தால் அவைகளைக் கீழ்க்காணும் சந்தர்ப்பங்களில் சீராய்வு செய்ய முடியும்.

1. மேற்படிக் கீழ் நீதிமன்றம் வழங்கின தீர்ப்பாணை, அல்லது கட்டளை அந்த நீதிமன்றம் செலுத்த வேண்டிய அதிகார வரம்பை மீறியதாக இருக்க வேண்டும்.

2. தனக்கு வழங்கப்பட்டிருக்கின்ற அதிகார வரம்பைச் செலுத்தத் தவறியது.

3. அதிகார வரம்பைச் செலுத்துவதில் சட்டத்திற்குப் புறம்பாக (illegal), அல்லது பிரதான ஒழுங்கீனம் (matirial irregularitv) நடந்திருந்தாலும். உயர்நீதிமன்றம் அந்தத் தீர்ப்பைச் சீராய்வு செய்து தகுந்தபடி அதை மாற்றியமைக்க முடியும்.

உயர்நீதிமன்றம் இதன்படி சீராய்வு செய்யும்போது, தான் அவ்வாறு சீராய்வு செய்யாமல் விட்டால் அது நீதியையே மறுத்ததாகக் கருதப்படும். சூழ்நிலையிலோ, அல்லது சரி செய்ய முடியாத பழுது அது புரியும் என்று கருதப்படும் சூழ்நிலையிருந்தால் இவ்வதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும்.

நடைமுறைச் சட்டத் தவறு இருந்து அதனால் நீதிக்குப் பங்கம் ஏற்படுமானாலும் சீராய்வு செய்யலாம்.

வெளிப்படையான அநீதி, விபரீதம் இழைக்கப்பட்டிருந்தாலும், சீராய்வு செய்வது பொருந்தும்.

9. விதிகள்
(Rules)

முதல் சட்ட இணைப்பில் (First Schedule) உள்ள விதிகள் இச்சட்டத் தொகுப்பின்படி மாற்றப்பட்டால் அல்லது நீக்கப் பட்டாலன்றி, அவைகள் இச்சட்டத் தொகுப்பின் பகுதியாகக் கருதப்படும் (பிரிவு 121).

உயர் நீதிமன்றங்கள் அவ்வப்போது முன் பிரகாரத்திற்குப் பிறகு தங்களுடைய நடைமுறையை வகைப்படுத்தலும் அதோடு தங்களுடைய மேற்பார்வையின் கீழ் உள்ள சமூக உரிமை நீதி மன்றங்களின் நடைமுறையை வகைப்படுத்தும் முறையிலும் விதிகளைப் படைக்கலாம். அவ்வாறு படைக்கும் விதிகளில் இந்த முதல் இணைப்புப் பகுதியிலுள்ள (First Schedule) விதிகளை, நீக்கவும் மாற்றவும், சேர்க்கவும் கூடும் (பிரிவு 122).

இவ்விதம் விதிகளை உருவாக்கும் 'விதிக்கு' (Rule Committee) எனப்படும் குழு உயர்நீதிமன்றத்திலும் அமைக்கப்படும். அவ்வாறு அமைக்கப்படும் விதிக்குழுவில் கீழ்க் கண்டவர்கள் இடம் பெறுவர்.

1. மூன்று அதே உயர்நீதிமன்ற நீதிபதிகள், அவர்களில் ஒருவர் குறைந்தது மூன்றுண்டுக் காலத்திற்கு மாவட்ட நீதிபதி யாக அல்லது வட்டார திபதியாகப் பணியாற்றியிருக்க வேண்டும்.

2. அந்த உயர் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட வழக் கறிஞர்கள் இருவர்.

3. மேற்படி உயர்நீதி மன்றத்திற்குட்பட்ட சமூக உரிமை நீதிமன்ற நீதிபதி ஒருவர் (Civil Judge).

4, இது போக, சென்னை, கல்கத்தா, பம்பாய் நகரங்களில் ஒரு சட்டப் பிரதிநிதி (attorney) ஒருவருமாவர்.

மேற் குறிப்பிட்ட விதிக் குழு அங்கத்தினர்கள் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியால் நியமிக்கப்படுவர்.

உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியே தன்னை அக்குழுவின் தலைவராக ஏற்படுத்திக் கொள்ள வில்லையானால், அக் குழுவிற்கு மேற் குறிப்பிட்டவர்களில் யாரையாவது தலைமை நீதிபதி தலைவராக நியமிக்கலாம்.

தலைமை நீதிபதி நிர்ணயிக்கின்ற காலம்வரை மேற்படி அங்கத்தினர்கள் பணி புரியலாம். அங்கத்தினர்களில் யாராவது ஓய்வு பெறுவாரானாலும் அல்லது பதவியைத் துறப்பாரானாலும் இறந்து போனாலும், குறிப்பிட்ட மாநிலத்திலிருந்து வெளி மாநிலம் அல்லது வெளிநாடு சென்று விட்டாலும் அல்லது அங்கத்தினராகப் பணி புரிய இயலவில்லையானாலும், அவருக்குப் பதிலாகத் தலைமை நீதிபதி வேறு ஒருவரை நியமிப்பார்.

இந்த விதிக் குழுவுக்கு ஒரு செயலாளரைத் தலைமை நீதிபதி நியமிப்பார். அவ்வாறு நியமிக்கப்படும் செயலாளருக்கு மாநில அரசு வகுத்து வழங்கும் ஊதியம் அளிக்கப்படும்.

இந்த விதிக்குழு குறிப்பிட்ட உயர் நீதிமன்றத்திற்கு அவ்வப்போது ஒரு அறிக்கை (Report) தாக்கல் செய்யும். அதில் முதல் இணைப்புப் பகுதியில் (First Schedule) எந்த விதியை நீக்குவது, மாற்றுவது, அல்லது சேர்ப்பது என்ற உத்தேசங்கள் அடங்கியிருக்கும். மேற்படி உயர் நீதிமன்றம் அந்த அறிக்கையைப் பரிசீலனை செய்த பிறகே, மேற் கூறிய மாற்றங்களை ஏற்றுக்கொள்ளும் பிரிவு 124).

உயர் நீதிமன்றம் அவ்வாறு ஏற்றுக் கொள்ளும் விதிகள் மாநில அரசின் ஒப்புதலுக்குட்பட்டது. எனவே இதன்படி உருவாக்கப் பட்ட விதிகள், மாநில அரசின் ஒப்புதல் பெறப்பட்டு அதிகார பூர்வமான அரசிதழில் (official Gazette) பிரசுரிக்கப் பட்ட நாளிலிருந்து அந்த விதிகள் முதலாவது இணைப்புப் பகுதியில் (First Schedule) ஒரு பகுதியாகக் கருதப்பட்டு நடைமுறைக்கு வரும் (பிரிவுகள் 126 & 127).

இந்த விதிகள் சட்டத் தொகுப்பிலுள்ள சரத்துகளுக்கு எந்த வகையிலும், மாறுபாடுடைய தாயிருக்கக் கூடாது. ஆனால் சமூக உரிமை நீதிமன்றங்களின் நடைமுறைகளை வகைப் படுத்துவதாக அமைதல் வேண்டும். குறிப்பாக, இச்சட்டத்தின் பொது நோக்கத்தைப் பாதிக்கா வண்ணம் கீழ்க் கண்டவைகளை மாற்றியமைக்கலாம்.

1. அழைப்பாணை அதன் வகைகள் அனுப்புதல், அவை சார்பு செய்யப்படுதல் முதலியன.

2. ஜப்தி செய்யும் பொருள், அசையும் பொருள், மிருகங்கள் அவைகளைப் பாதுகாத்தல், பேணுதல், அதற்கான செலவு அவற்றை விற்பனை செய்தல் போன்றவை.

3. வழக்குகளில் எதிர்மனு (Counter claim) அவற்றின் மதிப்பு முதலியன கணக்கிடும் வகை.

4. பிரதிவாதிக்கு ஈவுத் தொகை (Contribution) நட்ட ஈட்டுத் தொகை (indeminity) கட்டுதல் சம்பந்தமானது. மொத்தத் தீர்வான வழக்கு (Summary Procedure) க்கான இவற்றை வகைப் படுத்தலாம் வகை (பிரிவு 128).

5. தீர்ப்புக் கடனாளிக்குக் கடனாளியின் (Garnishee) கடன் முதலியவைகளை ஜப்தி செய்வது, அப்பொருளை விற்பனை செய்வதில் ஏற்படும் செலவினம் பற்றியதும், உயர் நீதிமன்றங்கள் மேற் கூறியவை நீங்கலாகத் தன்னுடைய அசல் அதிகார வரம்பில் நடைபெறும் வழக்குகள், நடவடிக்கைகளை வகைப் படுத்த நடைமுறைவிதிகளையும் உருவாக்கலாம் (பிரிவு 129).

10. பலதரப்பட்ட நடவடிக்கைகள்

(Miscellaneous Proceedings)

நீதிமன்றத்தில் கட்சிக்காரர்கள் நேரடியாகத் தோன்று வதற்கான விதிவிலக்கு

நாட்டு வழக்கப்படி, வழிமுறைப்படி வெளியில் தோன்றாத அல்லது தோன்ற வற்புறுத்தப் படக்கூடாத பெண்கள் நீதிமன்றங் களில் தோன்ற விதி விலக்களிக்கப்படும்.

ஆனால் இந்தச் சட்டத் தொகுப்பின்படி விதி விலக்களிப்பட்ட பெண்களைத் தீர்ப்பாணையை நிறைவேற்றும்போது, கைது செய்ய விதி விலக்கில்லை. ஆனால் இச்சட்ட ஒழுங்குப்படி பெண்களை கைது செய்ய அதிகாரம் இருந்தாலன்றி பெண்களைக் கைது செய் யக்கூடாது (பிரிவு 132). உதாரணமாகப் பணம் கொடுப்பதற் கான தீர்ப்பாணையை (Money decree) நிறைவேற்றுவதில் எந்தப் பெண்ணையும் கைது செய்ய முடியாது. என்று பிரிவு 56-ல் கூறப் பட்டிருக்கின்றது என்பதை இங்குக் கவனப்படுத்துவது மிகவும் பொருந்தும். இது தவிர கீழ்க் கண்ட பெருமைக் குரியவர்களும் நேரில் நீதிமன்றத்தில் தோன்றுவதிலிருந்து விதி விலக்களிக்கப் படுவார்கள்:

1. குடியரசு தலைவர் (President)
2. குடியரசு துணைத் தலைவர் (Vicc-President)
3. நாடாளு மன்றச் சபா நாயகர்.
4. மத்திய அமைச்சர்கள்
5. உச்சி நீதிமன்ற நீதிபதிகள்.
6. மாநில ஆளுநர்கள்.

7. மாநிலச் சட்டமன்றச் சபாநாயகர்கள்.

8. மாநிலச் சட்ட மேலவைத் தலைவர்கள்.

8. மாநில அமைச்சர்கள்.

10. உயர் நீதிமன்ற நீதிபதிகள்.

முதலியவர்களாவர்.

இந்தச் சலுகையைப் பயன் படுத்த வேண்டுமாயின் அதோடு இந்தச் சலுகைக் குரியவர்கள் சாட்சியம் முதலியவை விசாரணைக்கு அவசியமானால், அதற்கு அவர்களை நேரடியாக விசாரிக்க ஆணையாளரை (Commissioner) அனுப்பிச் சாட்சியங்களைப் பதிவு செய்து வர வேண்டுமானால் அதற்கான செலவுத் தொகையை அவ்வாறு விதிவிலக்களிக்கப்பட்டவர்களோ, அல்லது அவர்களுடைய சாட்சியங்களைக் கோரும் கட்சிக்காரர்களோ, கட்ட வேண்டும். (பிரிவு 133).

நீதிபதியோ, குற்றவியல் நீதிபதி (Magistrate) அல்லது வேறு நீதித்துறை அதிகாரி நீதிமன்றத்திற்கு போகும்போதோ, அல்லது நீதிமன்றத்தில் வீற்றிருக்கும்போது அல்லது நீதிமன்றத்திலிருந்து திரும்பி வரும்போது சமூக உரிமை நீதிமன்ற நடவடிக்கை காரணமாகக் கைது செய்யப் படக்கூடாது. இந்த விதிவிலக்கு குற்றவியல் சம்பந்தமாக அவர்கள் கைது செய்யப்படுவதைப் பாதிக்காது.

இதுபோல அழைப்பாணைகளின்படி கட்சிக்காரர்களோ, அவர்கள் வழக்கறிஞர்களோ நீதிமன்றம் செல்லும்போதும் நீதிமன்றத்தில் தங்கள் வேலையைக் கவனிக்கும் போதும், அன்றி நீதிமன்றத்திலிருந்து திரும்பும் போதும் சமூக உரிமை நீதிமன்ற நடவடிக்கை காரணமாகக் கைது செய்யப் படக் கூடாது.

தீர்ப்புக் கடனாளி (Judgement debtor) மீது தீர்ப்பாணையை நிறைவேற்ற அப்போதே அவர் நீதிமன்றத்திலிருக்க நேரிடின் கைது செய்யப்பட ஆணையிடப்பட்டாலும் இவ்விதி விலக்குப் பாதிக்காது (கட்டளை 21. விதி 11). அதுபோலத் தீர்ப்புக் கடனாளி (Judgement debtor) ஏன் தன்னைக் கைது செய்து சமூக உரிமைச் சிறையிலிடக்கூடாது என்ற பதிலுரைக்க நீதிமன்றம் வந்திருக்கும் போதும் இந்த விதிவிலக்குக் கிடையாது (பிரிவு 135).

சட்டசபை உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் சலுகை

சட்டமன்ற அல்லது சட்ட மேலவை உறுப்பினர்களைச் சமூக உரிமை நடவடிக்கையின்கீழ்ச் சில சந்தர்ப்பங்களில் கைது செய்து

சிறையிலிட முடியாது. சட்டசபைக் கூட்டங்கள் நடைபெறும் சமயங்களில் 14 நாள்கள் முன்னும் பின்னும், அவர்கள் சட்டமன்றக் குழு எதிலும் அங்கம் வகிப்பாரானால் அக்குழுக்கூட்டம் நடைபெறும் சமயம் 14 நாள்கள் முன்னும் பின்னும் அவர்கள் கைது செய்யப்பட்டுச் சிறையிலிட முடியாது. மேற்குறிப்பிட்ட சமயங்களில் அவர்கள் சிறையிலிருந்தால் விடுவிக்கப்படுவார்கள். அவ்வாறு விடுவிக்கப்பட்டவர்கள் திரும்பவும், அவ்விதிவிலக்கு நீங்கலாகக் கைது செய்யப்பட்டு சமூக உரிமைச் சிறையில் வைக்கப்படலாம் (பிரிவு 135).

தீர்ப்பாணை நிறைவேற்றுதல் தவிர மற்றப்படி ஜப்தி செய்ய வேண்டிய சொத்து, அல்லது கைது செய்யப்பட வேண்டியவர், வெளிமாவட்டத்திலிருக்கும் போது ஒரு நீதிமன்றம் அதற்கான ஆணையை அந்த மாவட்ட நீதிமன்றம் மூலமாக ஜப்தி செய்ய வேண்டிய அந்த சொத்து அல்லது கைது செய்யப்பட வேண்டிய ஆள் இருக்கும் நீதிமன்றத்திற்கு அனுப்பப்படுமாயின், அவ்வாறு அனுப்பப்படும் ஆணையுடன் அதற்கான செலவுத் தொகையும் அனுப்பி வைக்க வேண்டும். அடுத்து ஆணையைப் பெறும் நீதிமன்றம் அதை நிறைவேற்றிவிட்டு, அதுபற்றிய குறிப்பை அவ்வாணையை அனுப்பிய நீதிமன்றத்திற்குத் திரும்ப அனுப்பி வைக்கும்.

அவ்வாறு ஜப்தி செய்ய வேண்டிய சொத்து அல்லது கைது செய்யப்படவேண்டிய ஆள் சென்னை, கல்கத்தா, பம்பாய் நகர எல்லைக்குட்பட்ட உயர் நீதிமன்ற அசல் அதிகாரவரம்பிற்குள் இருக்க நேரிட்டால், மேற்படி ஆணை அந்நகரங்களிலுள்ள சிறு காரண நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு அந்நீதி மன்றங்களால் நிறைவேற்றப்படும் (பிரிவு 136).

நீதிமன்ற மொழி

சாதாரணமாக உயர் நீதிமன்றத்தில் பயன்படுத்தப்படும் மொழிதான் அதன்கீழ் உள்ள ஏனைய நீதிமன்றங்களின் மொழியாக இருக்கலாம். ஆனால் மாநில அரசின் ஆணைப்படி அந்த நீதிமன்றங்களின் மொழி, அந்த வட்டார மொழியாக இருக்கலாம்.

நீதிமன்றங்களின் மொழி எது வென்று நிர்ணயிக்கும் பொறுப்பும், அதிகாரமும் மாநில அரசிடம்தான் இருக்கின்றது. எந்த மொழியில் எந்த முறைப்படி நீதிமன்ற நடவடிக்கைகளை நடாத்த வேண்டுமென்று மாநில அரசு ஆணையிடலாம்.

நம் நீதிமன்றங்களைப் பொறுத்தவரை, உயர் நீதிமன்றத்தில் எல்லா நடவடிக்கைகளும் ஆங்கிலத்தில் நடைபெறுகின்றன. அதுபோல சமீப காலம் வரை கீழ் நீதிமன்றங்களிலும் ஆங்கிலத்திலேயே எல்லா நடவடிக்கைகளும் எழுதப்பட வேண்டுமென்ற நிலை இருந்தது. சமீபத்திய நம் மாநில அரசு ஆணையின்படி இப்போது நீதிமன்றத்தில் தமிழ் மொழி தெரிந்த நீதிபதிகள், சாட்சியங்கள் தமிழில் கூறப்பட்டால் அவைகளைத் தமிழில் எழுத வேண்டுமென ஆணை பிறப்பித்தது. அதன்படி இப்போது சாட்சியங்கள் தமிழில் பதியப்படுகின்றனவே தவிர தீர்ப்பு ஏனைய நீதிமன்றப் பதிவுகள் அனைத்தும் ஆங்கிலத்தில்தான் எழுதப்படுகின்றன என்ற நிலைதானிருக்கிறது (பிரிவு 137).

சில சந்தர்ப்பங்களில் உயர்நீதிமன்றம் அரசு இதழில் பிரகரம் செய்து விட்டு, குறிப்பிட்ட சில வழக்கில், மேல்வழக்கு வர வாய்ப்பிருந்து, அதனால் அந்த வழக்கிலுள்ள சாட்சியங்களை, நடவடிக்கைகளை அந்த நீதிமன்றம் ஆங்கிலத்தில் தயாரிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளலாம் (பிரிவு 138).

சத்திய வாக்கு மூலம் (Affidavits)

சத்திய வாக்கு மூலம் என்பது எழுதப்பட்ட சாட்சியமாகக் கொள்ள வேண்டும். அது முழுவதும் உண்மையான வாக்கு மூலமாதலால் அதைச் சாதாரண மனுப்போல் தயாரிக்காமல் சத்தியமான வாக்கு மூலம் எழுதப்படுவதால் அந்த வாக்கு மூலத்தை அறிந்துதான் ஒருவர் கையெழுத்திடுகிறார் என்பதை உறுதிப்படுத்தவும், அத்தோடு கையெழுத்திடுபவர் சில பொறுப்பானவர்கள் முன்னிலையில் கையெழுத்துப் போடுகின்றார்கள் என்ற அத்தாட்சி உடனிருக்க வேண்டுமென யார், யார், முன்னிலையில் சத்திய வாக்கு மூலம் கையெழுத்திடப்பட வேண்டுமென்று குறிக்கப்பட்டிருக்கின்றது.

அதன்படி

1. ஒரு நீதிபதியோ அல்லது குற்றவியல் நீதிபதியோ (Magistrate),

2. எந்த ஒரு அதிகாரியையோ, அல்லது வேறு யாரையுமோ உயர் நீதிமன்றம் இக்காரணத்திற்காக நியமித்திருந்தால் அவர்களோ,

3. வேறு நீதிமன்றம் அப்படி யாரையும் நியமிக்கலாம் என்ற மாநில அரசின் உத்தரவின் பேரில் நியமிக்கப்பட்டவர்

களும், சத்திய வாக்கு மூலம் தயாரிக்கப்பட உதவலாம் (பிரிவு 139).

இவர்கள் போக (நீதிமன்ற நடவடிக்கை விதிகளில் 34ல்) (Rule 34 of Civil Rules of Practice) குறிப்பிட்டபடி கீழ்க் குறிக்கப் பட்ட வேறு சிலரும் சத்திய வாக்கு மூலம் தயாரிக்க உதவலாம்.

துணைப்பதிவாளர் (Sub Registrar), நாசிர், துணை நாசிர், நோட்டரிச்சட்டம் 1952-ன் கீழ் நியமிக்கப்பட்ட நோட்டரி சான்றுறுதி அதிகாரி (Notory) சட்டமன்ற, சட்ட மேலவை உறுப்பினர்கள், மாவட்டக் கல்விமன்ற உறுப்பினர்கள் (District Educational Council), நகராட்சி உறுப்பினர்கள், அரசு பட்டம் (tittle) வழங்கப்பட்டவர், ஓய்வு கால ஊதியம் பெறும் ஓய்வு பெற்ற அரசு பதிவு பெற்ற அதிகாரி (Retired Gazetted Officer receivig Pension), ஓய்வு கால அரசு ஊதியம் பெறும் ஓய்வு பெற்ற குற்றவியல் நீதிபதிகள் (Retired magistrats rceiving Pension), அரசு பதிவு பெறுதவர்களானாலும் அதுபோலப் பதிவுபெற்ற இராணுவ அதிகாரி முதலியவர்களோடு குறிப்பிட்ட கட்சிக்காரருடைய வழககறிஞர்கள் தவிர ஏனைய வழக்கறிஞர்கள், சத்தியவாக்கு மூலம் தயாரிக்க நியமிக்கப்படப் பொறுப்புள்ளவர்களாவர்.

கப்பல் சேதம் கணிப்பாளரை நியமித்தல்

கப்பல் துறை வழக்குகளில், கப்பல் தாழ்ந்து அதனின்று மீட்கப்பட்ட அல்லது தாழ்ந்த கப்பலில் எஞ்சியது சம்பந்தமான அல்லது பழுதுபட்ட கப்பலை இழுத்து வருவதற்கான அல்லது ஒரு கப்பல் இன்னொரு கப்பலோடு மோதினதால் உண்டான சேதம் சம்பந்தமான வழக்குகளில் நீதிமன்றம் தன் அசல் அல்லது மேல் அதிகார வரம்பைச் செலுத்துவதில், அவ்வழக்கின் ஏதாவது ஒரு கட்சிக்காரரின் வேண்டுகோளின்படி, மேற்கூறிய கப்பல் சம்பந்தப் பட்ட நட்டத்தைக் கணக்கிட அதற்குத்தகுந்த ஒரு கணிப்பாளர் களை (Assessors) நியமிக்கலாம். அவர்களின் சேவை நீதமன்றத் திற்கு எவ்வகையில் அவசியம் என்பதை நீதிமன்றம் வரையறை செய்யும். அவர்களும் அதன்படி நீதிமன்ற நடவடிக்கையில் கலந்து கொண்டு அதற்கு உதவ வேண்டும்.

மேற்குறிப்பிட்ட கணிப்பாளர்களுக்கு நீதிமன்றம் விதிக் கின்ற தகுந்த கட்டணம், குறிப்பிட்ட எந்தக் கட்சிக்காரர் அவர்கள் சேவையைக் கோரினார்களோ, அவர்கள் கட்ட வேண்டும் என்று நீதிமன்றம் நிர்ணயிக்கும் (பிரிவு 140).

இந்த சட்டத் தொகுப்பிலுள்ள சட்டதிட்டங்கள், விதிகள், ஏனைய சமூக உரிமைகளை நிர்ணயிக்கும் மன்றங்களும், எவ்வளவு தூரம் பயன்படுத்திக் கொள்ள முடியுமோ, அவ்வளவுக்கவ்வளவு பயன்படுத்திக் கொள்ளப்படும் (பிரிவு 141).

சட்டப்படியான நடவடிக்கைகளில் வழங்கப்படும் ஆணைகள், அளிக்கப்படும் அறிவிப்புகள், அத்தனையும் எழுத்து மூலமாகத் தான் இருக்க வேண்டும் (பிரிவு 142).

இந்தச் சட்டத்தொகுப்பின்கீழ் தபால் மூலம் அனுப்பப் படும், அறிவிப்பு, அழைப்பாணை, மற்றும் கடிதங்கள் அவைகள் பதிவுத் தபாலில் அனுப்பப்படுவதானால் இதன் காரணமாக மாநில அரசு விதித்திருக்கும் கட்டணங்களை, சம்மந்தப்பட்ட கட்சிக்காரர், அவைகள் அனுப்பப்படு முன் அல்லது குறிப்பிட்ட கால வரையறைக்குள் கட்டியாக வேண்டும்.

மீட்டளிப்பு (Restitution)

ஒரு வழக்கில் தீர்ப்பாணையை எதிர்த்து மேல் வழக்குப் போடப்பட்டிருக்கும் போது, கீழ் நீதி மன்றத் தீர்ப்பு மேல் நீதி மன்றத்தில் மாற்றப்படுமாயின், மேல் நீதிமன்றத் தீர்ப்பாணை தான் சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்களைக் கட்டுப்படுத்தும். அவ்வாறு கீழ் நீதிமன்றத் தீர்ப்பு மாற்றியமைக்கப்படுமாயின், அதன் பேரில் மேல் வழக்கில் யாருக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கப்பட்டதோ, அவர் மீட்டளிப்பு விண்ணப்பத்தின் (application for restitution) கீழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம்.

அசல் நீதிமன்றத்தின் தீர்ப்புப்படி வசூல் செய்த பணம் அல்லது திரும்பப் பெற்ற சொத்து முதலியவை, மேல் நீதி மன்றத் தீர்ப்பின்படி, முதலில் பெற்றவரிடமே, அதாவது மேல் வழக்கில் வெற்றி பெற்றவருக்குத் திரும்பத் தரவேண்டி வரும்.

இந்த மீட்டளிப்பு மனுவின் பேரில் மேல் வழக்கில் வழங்கப் பட்ட தீர்ப்பின்படி என்ன காரியங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமோ அவைகளை அசல் நீதிமன்றம் நிறைவேற்றும். மேல் நீதிமன்றத் தீர்ப்பாணை, அல்லது கட்டளைகளை நிறைவேற்றுவதில் அசல் நீதிமன்றம், சில ஆணைகளைப் பிறப்பிக்கலாம். அதன்படி நீதிமன்றச் செலவுத் தொகை ஏற்கெனவே பெற்றிருந்தால் அந்தக் கட்சிக்காரர் மேல் வழக்கில் வெற்றி பெற்றவருக்கு அந்தச் செலவுத் தொகையைத் திரும்பக் கொடுக்க ஆணையிடும். முதல் தீர்ப்பாணையின்படி, ஒரு கட்சிக் காரரிடமிருந்து வெற்றி பெற்ற கட்சிக்காரர் ரொக்கமாகப் பணம் ஏதும் பெற்றிருந்தால்

அல்லது அவர் உபயோகப்படுத்திக் கொள்ளக் கூடிய வகையில் அந்தத் தொகை நீதிமன்றத்தில் காப்பிலிருந்தால் அப்பணத்திற்கான வட்டியும், கட்டித்தர ஆணையிடலாம். ஏற்கெனவே வழங்கப்பட்ட தீர்ப்பாணை மேல் நீதிமன்றத்தில் மாற்றப்பட்டதால் முதல் நீதிமன்றத் தீர்ப்பின் விளைவாக ஏற்பட்ட இழப்பீடு (damages) அல்லது நட்ட ஈடு (Compensation) தவறுதலாகக் கிடைத்த உடைமையால் அனுபவத்தால் கிடைத்த ஆதாயம் (mesne Profits) முதலியவைகளைத் திருப்பக் கொடுக்கவும் ஆணையிடலாம்.

மேல் நீதிமன்றத் தீர்ப்பாணையைச் செயலாக்க மேற்குறிப்பிட்ட மீட்டளிப்பு மனு தாக்கல் செய்தால் அத் தீர்ப்பாணை முழுவதும், நிறைவேற்றப்படும் வரை அதைத் தவிர தனிப்பட்ட முறையில் அதை நிறைவேற்ற வழக்கேதும் போடத் தேவையில்லை; போடவும் கூடாது.

உத்தரவாதத்தை நிறைவேற்றுதல்

சில சூழ்நிலையில் நீதிமன்ற நடவடிக்கைகளில் ஒருவர் மற்றவருக்குப் பிணை ஆளாக அல்லது உத்தரவாதமாகக் கீழ்க்கண்ட காரணங்களுக்காக, அதாவது,

1. ஒரு தீர்ப்பாணையை அல்லது அதன் ஒரு பகுதியை நிறைவேற்றவும்,

2. தீர்ப்பாணை நிறைவேற்றப்பட்டிருந்தால் அதன்படி எடுத்துக்கொண்ட சொத்தைத் திரும்பப் பெறுவதற்கான மீட்டளிப்பிற்கும்,

3. பணம் எதுவும் செலுத்தவும், அல்லது நீதிமன்ற நடவடிக்கைகளின் போது யார் மீதும் சுமத்தப்பட்ட நிபந்தனையை நிறை வேற்றுவதற்காகவும்,

ஒருவர் உத்தரவாதம் அளித்திருப்பாரானல் அவர் எந்த அளவுக்குத் தம்மைக் கடப்பாடுடையவராக ஆக்கியிருக்கிறோ (liable) அந்த அளவிற்கு மேற்படித் தீர்ப்பாணை அல்லது கட்டளை அவர் மீதும் நிறைவேற்றப்படும் அந்தத் தீர்ப்பாணை நிறைவேற்றுவதில் எழுந்துள்ள மேல்வழக்கில் இந்த உத்தரவாதம் அல்லது பிணைகொடுத்தவரும், ஒரு கட்சிக்காரராகக் கருதப்படுவார். அப்படிப்பட்ட சூழ்நிலையில் நீதிமன்றம் பிணைகொடுத்தவருக்கு நியாயம் என்று கருதுகின்ற தகுந்த முன்னறிவிப்புக் கொடுக்க வேண்டும் (பிரிவு 145).

நீதிமன்றங்கள் இந்தச் சட்டத்தொகுப்பின்கீழ் ஒரு காரியம் அல்லது செயலைச் செய்ய ஒரு குறிப்பிட்ட காலத்தை நிர்ணயித்திருந்தாலும், அல்லது கொடுத்திருந்தாலும், அதைச் செய்வதற்கான காலத்தை அந்தக் காரியம் செய்யப்படும் காலம் கடந்துவிடுமுன்னும், அல்லது கடந்த பிறகும்கூட தன்னுடைய உசிதம் போல் நீதிமன்றம் நீடிக்க முடியும் (பிரிவு 148).

இது போலவே நீதிமன்றக் கட்டணம் செலுத்துவதிலும் காலம் கடந்து செலுத்த வேண்டியிருப்பினும், நீதிமன்றம் அதை ஏற்றுக்கொள்ளவும் அனுமதிக்கவும் கூடும் (பிரிவு 149).

இச் சட்டத் தொகுப்பில் பிரிவு 24-ன் படியோ, அல்லது உயர் நீதிமன்றத்தின் அசாதாரண அதிகார வரம்பின்கீழ் ஒரு நீதிமன்றத்திலிருந்து வேறு ஒரு நீதிமன்றத்திற்கு ஒரு வழக்கோ, அல்லது வழக்கு சம்பந்தப்பட்ட நடவடிக்கையோ, அல்லது ஒரு நீதிமன்ற வேலை மற்ற நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டிருப்பின், அவ்விதம் மாற்றப்பட்டிருக்கும் அலுவலை அந் நீதிமன்றம் எந்த நீதிமன்றத்திலிருந்து மாற்றப்பட்டதோ, அந் நீதிமன்றம் செய்யும் கடமைகளையும் அதிகாரத்தையும் நிறைவேற்றும் (பிரிவு 150).

நீதிமன்றத்தின் இயல்பான அதிகாரம்

இந்தச் சட்டத்தொகுப்பில் வழிவகுக்குப் படாத சூழ்நிலையில், சில நடவடிக்கைகளை நிர்ணயிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும் போது சட்டத்தில் இவ்வகையில்தான் செய்ய வேண்டும் என்ற விதி முறை இல்லாதிருக்குமானாலும் அல்லது வழக்கு வழித் தோன்றிய சட்டமில்லாமலிருந்தாலும் (Case law) நீதிமன்றங்கள் நடவடிக்கைகளைக் காலா காலத்தில் முடிக்க நியாயம் (Justice) நேர்மை அல்லது பாகுபாடற்ற தன்மை (equity) நல்ல மனச்சாட்சிப்படி (good conscience) அதைத் தீர்க்க முடியும். நீதிமன்றத்தின் இந்த அதிகாரத்தைத்தான் இயல்பான அதிகாரம் என்று கூறுகின்றோம் (Inherent jurisdiction).

இந்த அதிகாரம் சட்டத்தில் 151வது பிரிவில் கூறப்பட்டதிலிருந்து இந்தச்சட்டம் முற்றுப் பெற்ற சட்டமன்று (Not a perfect or Exhaustive Code) என்பது தெளிவாகிறது.

மற்றப்படி இந்தச் சட்டத்தொகுப்பில் மற்ற இடங்களில் என்ன கூறப்பட்டிருந்த போதிலும், நீதிமன்றத்தின் மேற்குறிப்பிட்ட இயல்பான அதிகாரத்தை எதுவும் கட்டுப்படுத்தாது எனக் கொள்ளவேண்டும். இந்த இயல்பான அதிகாரத்தைப் பயன்படுத்தும் போது நீதிமன்றம் இடும் கட்டளைகள் நீதியின் முடிவை நிறைவேற்றவும், நீதிமன்ற அதிகாரம் தவறுதலாகப்

பயன்படுத்தப்படுவதைத் தடுக்கவும் வேண்டும் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

இயல்பான அதிகாரம் என்பது நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டதாகக் கொள்ளாமல் நீதிமன்றத்தினிடத்தில் இயல்பாக இருப்பதாகக் கொள்ள வேண்டும். ஏனென்றால் நீதிமன்றத்திற்கு நீதி வழங்க வேண்டுமென்ற முக்கிய கடமைப்பாடு உண்டு அல்லவா? அதன்படி கட்சிக்காரர்களிடையே நீதியை நிலைநாட்ட அவ்வதிகாரம் பயன்பட வேண்டும்.

ஆனால் இந்தச் சட்டத் தொகுப்பு எதைச் செய்யக் கூடாது என்று தடைவிதிக்கின்றதோ அதை மீறிச் செல்ல இந்த இயல்பான அதிகாரம் நீதிமன்றத்தை அனுமதிக்காது (பிரிவு 151).

சாதாரணமாகத் தீர்ப்பு எழுதப்பட்டு, படிக்கப்பட்டு, நீதிபதியின் கையெழுத்திடப்பட்டுவிட்டால் அதை மாற்றியமைக்க முடியாது. ஆனால் எழுத்துப் பிழை, கணக்குப்பிழை, தீர்ப்பிலோ, தீர்ப்பாணையிலோ, அல்லது கட்டளையிலோ இருந்து, அந்தப் பிழை காரணமாக எழுந்துள்ள தவறுகளைத் திருத்தவோ, அல்லது தற்செயலாக ஏற்பட்ட தவறு அல்லது விடுதல் முதலியவற்றை எந்த நேரத்திலும், நீதிமன்றம் தன்னிச்சையாகவோ, அல்லது கட்சிக்காரருடைய விண்ணப்பத்தின் பேரிலோ திருத்தலாம் (பிரிவு 152).

நீதிமன்றங்கள் அவற்றிலுள்ள நடவடிக்கைகளில் உள்ள குறையையும், தவறையும், எந்த நேரத்திலும் மாற்றுதவற்கான பொது அதிகாரம் பெற்றிருக்கின்றன. அதன்படி சம்பந்தப்பட்ட கட்சிக்காரரின் விண்ணப்பத்தின் பேரிலோ, அன்றி நீதிமன்றம் தன்னிச்சையாகவோ, தேவையானபடி சரிசெய்யலாம். ஆனால் அதற்கான செலவுத் தொகை யார்யார் கட்டித்தர வேண்டுமென்ற நிபந்தனைகளையும் விதிக்கலாம். அவ்வாறு மாற்றங்களைச் செய்யும் போது, வழக்கு சம்பந்தப்பட்ட உண்மையான பிரச்சினையை நிர்ணயம் செய்யுவும், அல்லது நடவடிக்கைகளினால் எழுந்துள்ள பிரச்சினையையோ, அல்லது நடவடிக்கைகளைச் சார்ந்த பிரச்சினையையோ தீர்ப்பதற்கு உதவும் வண்ணம் செய்ய வேண்டும் (பிரிவு 153).

வழக்கில் கட்சிக்காரர்கள்

வாதிகள் பலராயிருப்பின் அவர்களுடைய வழக்குக்கான காரணங்கள் ஒரே வகையான கொடுக்கல் வாங்கல்கள் அல்லது வணிக வழியிலெழுந்த காரணங்களாக இருந்து தனிப்பட்ட,

அல்லது பலதரப்பட்ட காரியங்களாயிருந்தாலும், அவைகளால் வழக்குத் தொடரும் போது கிடைக்கும் பலன் ஒருதலைப்பட்டதா யிருப்பின், வாதிகள் அனைவரும் வழக்கில் சேர்க்கப்படல் வேண்டும். அவர்கள் தனித்தனியாக வழக்குத் தொடர்வார் களானால்' அவ்வழக்குகளில் பொதுப்படையான சட்டம் அல்லது வேறு பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டிவரும் என்ற நிலையில் அவர்கள் அனைவரும் வாதிகளாக இணைக்கப்பட வேண்டும் (கட்டளை 1. விதி 1).

நீதிமன்றம் அவ்விதமாக எல்லா வாதிகளையும், ஒருங் கிணைக்கும் போது ஒரு சிலரால் வழக்கு காலதாமதம் அல்லது தடைபடும் அல்லது ஏனைய வாதிகளுக்கு இடைஞ்சலாக இருக்கும் என்ற நிலையிருந்தால், தனிப்பட்ட வழக்கு அந்தந்த வாதிகளின் விருப்பப்படி தொடர ஆணையிடலாம் (கட்டளை 2. விதி 2).

பிரதிவாதிகளைச் சேர்ப்பதிலும் மேலே குறிப்பிட்ட வாதிகளை இணைக்கும், ஏறத்தாழ அதே வழி முறையைக் கையாள வேண்டும். வாதிகளோ, பிரதிவாதிகளோ பலராயிருப்பின் கூட்டமாகவோ, அல்லது தனித்தனியாக ஒவ்வொருவர் குறித்தும் தீர்ப்பு வழங்கப்படலாம். அதன்படி ஒவ்வொருவருக்கும் கிடைக்கக் கூடிய நிவாரணம் (Relief) அல்லது ஒருவர் மற்ற வருக்குக் கொடுக்கவேண்டியது என்னவென்று நிர்ணயிக்கப் படலாம். அதனால் ஒவ்வொரு பிரதிவாதியும் வழக்கின் எல்லாப் பலன்களிலும், கண்டிப்பாக அக்கறை கொண்டிருக்க வேண்டு மென்ற அவசியமில்லை (கட்டளை 1. விதி 4).

ஓர் ஒப்பந்தம் சம்பந்தமாக ஏற்படும் வழக்கில் வாதி, அதில் சம்பந்தப்பட்ட எல்லோரையும் இணைத்தோ, அல்லது தனியாகவோ, அவர் விருப்பப்படியும், அந்த ஒப்பந்தத்திலிருந்து எடுத்த வழக்காயிருக்குமானாலும், அதுபோல மாற்று முறி (Bill of exchange), உண்டியல் (Hundi), வாக்குறுதிக் கடன் பத்திரம் (Promissary Note) முதலியவற்றில் எழும் வழக்கு களிலும், அவர்களைப் பிரதிவாதிகளாக்கலாம். வாதி, எந்தப் பிரதிவாதியிடமிருந்து நிவாரணம் கிடைக்கவேண்டு மென்பதில் சந்தேகப்படக் கூடிய நிலையிலிருந்தால், அவர் இரண்டு அல்லது மூன்று பேரைப் பிரதிவாதிகளாகச் சேர்த்து, அவர்களில் தனக்கு நிவாரணம் தரவேண்டியவர் யார், எவ்வளவு என்பதையும், நீதி மன்றம் நிர்ணயிக்கச் செய்யலாம் (கட்டளை 1. விதி 5, 6&7.).

தவறுதலாகக் கட்சிக்காரர்களைச் சேர்த்ததாலோ, அல்லது சேர்க்காமல் விட்டதாலோ, ஒரு வழக்குத் தள்ளுபடி செய்யப் படாது. அதனால் நீதிமன்றத்தில் குறிப்பிட்ட வழக்கில் சம்பந்தப் பட்டு வந்திருக்கும் கட்சிக்காரர்களின் பிரச்சினைக்குரிய உரிமைகள், அவர்களின் அக்கறை (interest) முதலியவைகளை மட்டும் நீதி மன்றம் தீர்மானிக்கும்.

தவறுதலாகச் சேர்க்கப்பட்ட கட்சிக்காரர்களை நீதிமன்றம் தானாகவோ, அல்லது குறிப்பிட்ட கட்சிக்காரர்களின் விண்ணப் பத்தின் பேரிலோ, எந்தக் கட்டத்திலும், வழக்கிலிருந்து நீக்கி விட நீதிமன்றம் ஆணையிடலாம்.

தவறுதலாகக் கட்சிக்காரர்கள் சேர்க்கப்பட்டிருப்பதை, எதிர்ப்பவர்கள் காலதாமதமின்றி எவ்வளவு சீக்கிரம் மறுப்புத் தெரிவிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் மறுப்புத் தெரிவிக்க வேண்டும். எப்படியும் வழக்குக்குரிய பிரச்சினைகள் என்ன என்று தீர்மானிக்குமுன் (before Settlement of issues) மறுப்புத் தெரிவிக்க வேண்டும், அல்லது அதற்குப்பின் ஒரு காரியம் பிரச்சினைக்குரிய தாக்கப்பட்டதாகத் தெரியவந்தால் அந்தச் சமயத்திலேயே மறுப்புத் தெரிவிக்க வேண்டும். இல்லையானால் மறுப்புத் தெரிவிப்பதற்கான தங்கள் உரிமையை அவர்கள் விட்டுக் கொடுத்துவிட்டதாகக் கருதப்படும்.

வழக்குரை (Plaint)

வழக்குரை எந்த முறையில் அமைக்க வேண்டுமென்று வரை யறுக்கப்பட்டிருக்கின்றது. அதன்படி அந்த மனு கீழ்க்கண்ட வகையில் தயாரிக்கப்பட வேண்டும்.

முதலில் எந்தத் தர நீதிமன்றத்தில், வழக்கு நிறுவப்படு கின்றது என்று குறிக்க வேண்டும். நீதிமன்றத்தைத் தேர்ந் தெடுப்பது அந்நீதிமன்றம், வட்டார அல்லது நிதிநிலை அதிகார வரம்புடையதா என்பதை வழக்கிலடங்கிய நிவாரணம் முதலிய வைகளை கருதித் தேர்ந்தெடுக்க வேண்டும்.

அதையடுத்து வழக்கின் எண் குறிப்பதற்கான அசல் வழக்கு (Original Suit) எண் என்று இடம் விட்டு அதிலேயே எந்த ஆண்டில் வழக்குத் தாக்கல் செய்யப்படுகின்றதோ, அந்த ஆண்டையும் குறிக்க வேண்டும். உதாரணமாக அசல் வழக்கு எண் /1973 என்றிருக்க வேண்டும். இது அவசியம். ஏனென்றால் ஒவ்வோர் ஆண்டுக்கும் ஒரு வழக்குகள் பதிவேடு உண்டு. அந்தப் பதிவேட்டில் அந்த அசல் வழக்கின் காரணம்

கோரப்பட நிவாரணம் சுருக்கமாகக் குறிக்கப்பட்டு ஒவ்வொரு வழக்குக்கும் வரிசைப்படி அந்த ஆண்டிற்கான எண் ஒன்று கொடுக்கப்படும். அதோடு அவ்வழக்கு முடிந்துவிட்டால் அவ்வழக்கின் முடிவும் அதில் சுருக்கமாகக் குறிக்கப்படும். அதை அடுத்து வாதியின் பெயர் குறிக்கப்பட்டு அதற்கு நேரே வாதி என்றும், அதையடுத்து எதிர்த்து (Versus) என்று இடையில் எழுதி அடுத்த வரியில் பிரதி வாதியின் பெயர் எழுதப்பட்டு அதற்கு நேரே பிரதிவாதி என்று குறிக்கப்பட வேண்டும்.

அதையடுத்து எந்தச்சட்டப்படி பிராது அல்லது வழக்கு மனு தாக்கல் செய்யப்படுகின்றது என்று குறித்தல் வேண்டும். அதாவது கட்டளை 7 விதி 1, 1908-ஆம் ஆண்டுச் சமூக உரிமை சட்டத்தொகுப்பு என்று எழுதிக் கோடிடவேண்டும்.

முதல் பகுதியில் வாதியின் முகவரி, அவரைப்பற்றிய குறிப்பு, அவர் தந்தையின் பெயர், மதம், வயது முதலியன குறிக்கப்பட்டு, அவர் வழக்கறிஞர் மூலம் வழக்கு நடத்துவாரானால் நீதிமன்றத்தின் அழைப்பாணை முதலியவை பெறுவதற்கு வாதியின் முகவரியாக அவருடைய வழக்கறிஞரின் முகவரியைக் கொடுக்கலாம். வழக்கறிஞர் வாதிக்காக வழக்கு நடத்துவதற்கு வாதியின் எழுத்து மூலமான அத்தாட்சி பெற்றிருக்க வேண்டும். அதை 'வக்காலத்' என்று சாதாரணமாகச் சொல்வார்கள்.

இரண்டாம் பகுதியில் பிரதிவாதியின் தந்தையின் பெயர், தெரிந்திருந்தால் அவர் பெயரும், பிரதிவாதியின் வயது, மதம், அவருடைய முகவரி கொடுக்கப்பட வேண்டும் ஏனென்றால் நீதிமன்றத்திலிருந்து அவருக்கு அழைப்பாணை அறிவிப்புகள் அனுப்புவதற்கு அது மிகவும் அவசியம்.

வாதியோ, பிரதிவாதியோ, வயது வராதவர் (Minor) அல்லது மனப்பேதம் (man of unsound mind) கொண்டவராயிருந்தால், அதுபற்றிய குறிப்பேடு அவர்களுடைய பாதுகாப்பாளர் (Guardian) யார் என்பதையும், குறித்து அவர் மேற்குறிப்பிட்டுள்ள குறையுள்ள வாதியை அல்லது பிரதிவாதியைப் பிரதிநிதித்துவம் செய்கின்றார் என்பதும் குறிக்கப்படல் வேண்டும்.

பிறகு வழக்கின் சாராம்சத்தை நடந்தபடி தெளிவாகக் குறித்து எவ்வண்ணம் எப்பொழுது வழக்குக்கான காரணம் எழுந்திருக்கின்றது என்பதையும் சுட்டிக் காட்ட வேண்டும். அதையும் பகுதிபகுதியாகப் பிரித்துச் சுருக்கமாக எழுதவேண்டும்.

அதையடுத்து அந்தக் குறிப்பிட்ட நீதிமன்றம் அவ்வழக்கை விசாரிக்கும் அதிகார வரம்பு கொண்டிருக்கின்ற உண்மையைச் சுட்டிக்காட்ட வேண்டும்.

அதைத் தொடர்ந்து என்ன நிவாரணம் கோரப்படுகின்றது என்பதை வேண்டுதலாகக் குறிக்க வேண்டும்.

வாதி, பிரதிவாதிக்குச் சாதகமாக விட்டுக்கொடுத்த கோரிக்கையையும், அல்லது பிரதிவாதிக்குத் தான் கொடுக்க வேண்டியதைக் கழித்து விட்டு மீதியை அவரிடமிருந்து கோருவதையும் அதில் குறிக்கலாம்.

பிறகு வழக்கின் மதிப்பைக் குறிக்க வேண்டும். ஏனென்றால் அந்த மதிப்பைப் பொறுத்து நீதிமன்றக் கட்டணம் (Court fees) கட்டவும், அத்துடன் மேற்படி நீதிமன்றத்திற்கு அவ்வழக்கை மேற்கொள்ள அதிகார வரம்பிருக்கின்றது என்பதைக் காட்டவும், அது அவசியமாகின்றது.

வழக்கின் மதிப்பின் பேரில் 1955 ஆம் வருடத் தமிழ் நாடு நீதிமன்றக் கட்டணம் வழக்கு மதிப்பீட்டு சட்டப்படி நீதிமன்றக் கட்டணம் கட்டி அது பற்றியும் குறிப்பிட வேண்டும்.

அதையடுத்து எந்த ஊரில் பிராது, அல்லது வழக்கு மனு வாதியால் கையெழுத்திடப்பட்டது என்றும் குறிப்பிட வேண்டும். அதற்குக் கீழ், வாதியின் கையெழுத்தும், அவருக்காக வழக்கறிஞர் நியமிக்கப்பட்டிருப்பாரானால் அவரும் கையெழுத்துப் போட வேண்டும்.

அதன் பிறகு சரிபார்த்தால் (verification) அதன்படி பிராதில் குறிப்பிட்ட காரியங்கள் அத்தனையும் உண்மையென்று குறித்து, வாதி கையெழுத்திட வேண்டும்.

வாதியின் கைவசமுள்ளதோ அல்லது வேறு எழுத்து ஆதார மீது வழக்குத் தாக்கல் செய்யப்படுமானால், அதுபற்றிய விபரம் குறிக்கப்படுவதோடு அதன் அசலோ, அல்லது நகலோ வழக்குரையுடன் தாக்கல் செய்யப்பட வேண்டும் (கட்டளை 7. விதி 14).

இந்தக் குறிப்பினடியிலும் வாதி கையெழுத்திட வேண்டும். இறுதியாக வாதி தன் வழக்கை நிரூபிக்கத் தேவையான எழுத்து ஆதாரங்களைத் தன் கைவசமிருந்தால் அதையும் தாக்கல் செய்யலாம், அல்லது வழக்கு நடக்கின்ற போது தாக்கல் செய்வதானலும் அது பற்றிய குறிப்பு எழுதி அதற்குக்கீழ் வாதி கையெழுத்திட வேண்டும் (கட்டளை 7. விதி 14(2).

பிராதில் கோரப்பட்டது பணமாக இருந்தால் எவ்வளவு என்று திட்டவட்டமாகக் குறிக்கப்பட வேண்டும். வழக்கு அசையாச் சொத்தைப் பற்றியதாக இருந்தால் அவைகளைப் பற்றிய விளக்கம் அவைகளின் எல்லைகள் குறிக்கப்பட வேண்டும். அதோடு எந்த நிவாரணமாயிருந்தாலும் அதுவும் திட்டவட்டமாகக்குறிக்கப் படவேண்டும்.

வாதி, பிரதி நிதித்துவ முறையில் வழக்குத் தொடர்வாரானால் அதைப் பற்றிய குறிப்பும் பிராதில் இருப்பதோடு தனக்கு வழக்கில் உண்டான அக்கறையின் தன்மையையும் குறிப்பிட வேண்டும்.

வழக்குகள் காலவரையறைக்குள் தாக்கல் செய்யப்பட வேண்டும் அவ்வாறு செய்யாமல் காலம்கடந்திருந்தால் 1963ஆம் ஆண்டு இந்தியக் காலவரையறைச் சட்டத் (Indian Limitation Act, 1663) தின்கீழ் நிராகரிக்கப்படும்.

பிராது தவறுதலான நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படுமானல், அந்த நீதிமன்றம் அதைத் திருப்பிக் கொடுத்துச் சரியான நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்று குறிப்பு எழுதும். அதில் எந்த நாளில் பிராது தாக்கல் செய்யப்பட்டது என்றும், அது ஏன் திருப்பிக் கொடுக்கப்பட்டது என்ற குறிப்பும் எழுதி அதில் நீதிபதியின் கையெழுத்திடப்பட்டிருக்கும்.

கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் பிராது நிராகரிக்கப்படும்:

1 பிராதில் வழக்குக்கான காரணம் வெளிப்படாமலிருந்தாலும்,

2. நிவராணம் குறைவாக மதிப்பிடப்பட்டு அது சரியாக மதிப்பிடப்பட வேண்டுமென்று நீதிமன்றம் கேட்டும், வாதி சரியான மதிப்பைக், குறிப்பிட்ட நாளுக்குள் கொடுத்துத் திருத்திக் கொள்ளத்தவறினுலும்,

3. நிவாரணம் சரியாக மதிப்பிடப்பட்டிருந்து தகுந்த நீதிமன்றக் கட்டணம் கட்டாமல் நீதிமன்றம் அதற்காகக் கொடுத்த அவகாசத்திற்குள் கட்டத்தவறினுலும்,

4. அல்லது சட்டப்படி வழக்குத் தொடரத் தடையிருக்குமானுலும்.

இவ்விதமாக நிராகரிக்கப்படும் போது நீதிபதி ஏன் நிராகரிக்கப்பட்டது என்ற காரணம் எழுதிக், கையெழுத்திட வேண்டும். இப்படி நிராகரிக்கப்பட்டால் வாதி திரும்பவும் புதுப்பிராது

கொடுக்கத் தடையேதுமில்லை. அதுபோல இந்த நிராகரிப்பு ஒரு தீர்ப்பாணையாகக் கருதப்படுவதால் அதை எதிர்த்து மேல் வழக்கும் போடலாம் (பிரிவுகள் 2, (2)ம் 96ம்).

பிரதி வாதியின் மறுப்பு மனு (Written Statement by the defendant)

பிராதில் கண்டவைகளை, வழக்குக்கான அழைப்பாணை, பிரதி வாதிக்குச் சார்பு செய்யப்பட்ட பிறகு மறுத்துப் பிரதிவாதி மறுப்பு மனு தாக்கல் செய்யலாம். அது வழக்கின் முதல் விசாரணையின் போது அல்லது நீதிமன்றம் கொடுக்கும் கால நீட்டிப்புக்குள் தாக்கல் செய்யப்படலாம்.

அந்த மறுப்பு மனுவில் பிரதிவாதி எங்ஙனம் அந்த வழக்கு நிலைநாட்டப்பட முடியாது என்றும், வழக்குக்கான காரணம் சட்டப்படி தன்னைக் கட்டுப்படுத்தாது அல்லது செல்லாது என்பது போக, பிராதில் கூறுதவற்றைத் தற்காப்பிற்காக, உதாரணமாக ஏமாற்றுதல் (Fraud), காலவரை (Limitation) மீறியிருத்தல், விடுதலை (release) கொடுத்திருத்தல், பணம் திரும்பக் கொடுத்திருத்தல், ஒப்பந்தம் நிறைவேற்றியிருத்தல், வழக்கின் சாரம் சட்ட விரோதமானது என்பனவும் கூறலாம்.

பிரதிவாதியின் மறுப்பு மனுவில் கூறப்படும் மறுப்புகள் திட்டவட்டமாயிருத்தல் வேண்டும். சுத்த மழுப்பலாயிருக்கக் கூடாது. அதுபோல பிரதிவாதி, வாதி கொடுக்க வேண்டியதைக் கழித்துக் கொள்ளக் கோருவதானாலும், அதுவும் திட்டவட்டமாக எவ்வளவு என்பதையும், அதுவும் சட்டப்படித் திரும்பப் பெற வேண்டியது என்றும் தெளிவுபடுத்த வேண்டும். வாதி கொடுக்க வேண்டியதைக் கழித்துக் கொள்ளவோ, சரி செய்யவோ (Set off) அல்லது கழித்துக்கொண்டது போக மீதி பிரதிவாதிக்குத் திரும்பக் கொடுக்க இணங்குவதானாலும், வழக்கின் முதல் விசாரணையின் போது கேட்க வேண்டும், அல்லது நீதிமன்றம் அனுமதி கொடுத்தால், வேறு நாளில் தாக்கல் செய்யலாம்.

மேற்குறிப்பிட்ட சரிசெய்யக் கோரும் மறுப்பு மனு ஒரு பிராதாகவே கருதப்படும். அதை எதிர்த்து வாதியும், எதிர் மனுக் கொடுக்க அனுமதிக்கப்படுவார் (கட்டளை 8. விதி 6).

இராணுவம், கப்பற்படை, விமானப்படை உறுப்பினர்கள் தொடரும் வழக்குகளும், அவர்கள் மீது தொடரப்படும் வழக்குகளும்

மேற்குறிப்பிட்ட நம் அரசு முப்படைத்துறையில் பணிபுரியும் அதிகாரி, அல்லது வீரர்கள் அவர்களில் யாராவது ஒரு வழக்கில்

கட்சிக்காரராயிருந்து அவ்வழக்கை நடத்துவதற்கு விடுமுறை பெற்று வந்து அதை நடத்த முடியாத நிலையிலிருந்தால், அவர்கள் யாரையாவது அவர்கள் சார்பில் மேற்படி நடவடிக்கை நடத்த எழுத்து மூலம் அனுமதியளிக்கலாம். அவ்வாறு எழுதப்படும் அனுமதி அந்த குறிப்பிட்ட வீரருடைய தலைமை அல்லது துணைத் தலைமை அதிகாரி முன்னிலையில் கையெழுத்திட்டதாக இருக்க வேண்டும்.

வழக்கில் சம்பந்தப்பட்டவர் தலைமை அதிகாரியோ, அல்லது இராணுவம், கடற்படை, விமானப்படை, முதலியவைகளில் படைப் பிரிவு நீங்கலாகச் சாதாரணத்துறையில் பணிபுரிவபராஞல் தன் கையெழுத்தோடு துறைத்தலைவர் அல்லது பெரிய அதிகாரியின் கையெழுத்துப் பெற்று யாரையும் அவர்கள் சார்பில் வழக்கு நடத்த அனுமதியளிக்கலாம்.

அவ்வாறு அனுமதிக்கப்பட்டவர் தாஞகவோ, அல்லது வழக்கறிஞர் துணையுடனோ, அவ்வழக்கை நடத்தலாம். எல்லா வகையிலும் அவர்கள் வழக்குகளில் அசல் கட்சிக்காரர்கள் போல் நடத்தப் படுவார்கள் (கட்டளை 28).

தொழில் கூட்டுக் கழகங்கள் தொடரும் அல்லது அவைகள் மீது தொடரப்படும் வழக்குகள் (Corporations)

தொழில் கூட்டுக் கழகங்களின் வழக்குகளில் அதன் மனுக்கள் பிராது, எதிர்மனுக்கள், முதலியவைகளில், அக்கூட்டுக்கழகங்களின் சார்பில் இயக்குநரோ (director) அல்லது செயலாளரோ அல்லது பிரதான அதிகாரியோ கையெழுத்துப் போடலாம்.

அதுபோல தொழில் கூட்டுக் கழகங்களுக்கு அனுப்பப்படும் அழைப்பாணையை, நீதிமன்ற அறிவிப்புகளைச் செயலாளரோ, இயக்குநரோ, அல்லது பிரதான அதிகாரியோ அவைகளின் சார்பில் பெறலாம் அல்லது அத்தொழில் கூட்டுக் கழகத்தின் பதிவு செய்யப்பட்ட தலைமை அலுவலகத்திற்குப் பதிவுத் தபாலில் அவைகள் அனுப்பப்படலாம். அப்படிப் பதிவு செய்யப்பட்ட தலைமை அலுவலகம் இல்லாத நிலையில் அக் கூட்டுக் கழகம் தொழில் புரியும் இடத்திற்கு அனுப்பப்படலாம். அவ்வாறு அழைப்பாணை அல்லது அறிவிப்புகள் சார்புசெய்யப்படுமாஞல் அவைகள் தகுந்த சார்பாகக் கருதப்படும்.

இவ்வழக்குகளில் நீதிமன்றம் மேற்படி செயலாளர், இயக்குநர், பிரதான அதிகாரி இவர்களை நீதிமன்றத்தில் நேரில் வரச்

செய்து வழக்கு சம்பந்தப்பட்ட முக்கியமான கேள்விகளுக்கு பதிலுரைக்கக் கோரலாம் (கட்டளை 29).

கூட்டு வணிகம் தொடரும் அல்லது அதன்மீது தொடரப்படும் வழக்குகள் (Partnership)

இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட கூட்டு வணிகப் பங்காளிகள், தங்கள் கூட்டு வணிகத்தின் சார்பில் வழக்குத் தொடரலாம். அதுபோல மற்றவர்களால் அக்கூட்டு வணிகத்தின் மீதும் வழக்குத் தொடரப்படலாம். அவ்வாறு வழக்குத் தொடரும் போது அந்தப் பங்காளிகள், தங்கள் பெயர்களை, முகவரிகளைக் கொடுக்கக் கடமைப் பட்டிருக்கின்றார்கள். மற்றவர்கள் கூட்டு வாணிகத்தின்மீது வழக்குத் தொடர்ந்தாலும், பங்காளிகளின் (Partners) பெயர்கள், முகவரிகள் பிராதில் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தப்படலாம்.

அழைப்பாணை, நீதிமன்ற அறிவிப்புகள் கூட்டுவணிகத்தின் பேரில் தாக்கல் செய்யப்படுவதனால் ஒரு பங்காளியிடம் சார்பு செய்தாலும் போதுமானதாகக் கருதப்படும். பங்காளிகளில் ஒருவர் இறந்து விட்டாலும், அவர்களின் பங்கைப் பற்றிப் பிரதிநிதித்துவம் செய்பவர்களைப் புதிதாகச் சேர்க்காமலே, கூட்டு வணிகத்தின் வழக்கு தடையின்றி நடைபெறலாம். ஆனாலும், இறந்தவரின் பங்கைப் பிரதிநிதித்துவம் செய்யும் நபர்களை வழக்கில் சேர்த்துக் கொள்வதற்கும் இடையூறு இல்லை.

11. வக்கில்லாதவர்கள் வழக்கு

(Pauper Suits)

இந்த சமூக உரிமை நடைமுறைச் சட்டத் தொகுப்பின்படி வக்கில்லாதார் என்பவர் யார் என்று பார்ப்போமானால் ஒரு வழக்குத் தொடர்வதற்குக் கட்ட வேண்டிய நீதிமன்றக் கட்டணத் திற்குப் போதுமான நிதி இல்லாதிருந்தால் அவரை வக்கில்லாதவர் என்று கொள்ளலாம், அல்லது அவ்வழக்குப் போடுவதற்கு நீதி மன்றக் கட்டணம் கட்டத் தேவையில்லையானால் அல்லது மிகக் குறைந்த பெயரளவிலான கட்டணம்தான் கட்டவேண்டுமென்ற நிலையிருந்தால், அவர் வசம் உள்ள ஆடைகள் தவிரவும் வழக்கின் சொத்தில் தனக்குள்ள உரிமையின் மதிப்பு நீங்கலாக, அவர் ரூ. 100/-க்கு குறைவான சொத்துக்குரியவாரயிருத்தல் வேண்டும்.

அவருடைய சொத்து மதிப்பை கணக்கிடுவதில் எதிர்த்தரப் பாளர் உடனடியாக அவருக்குத் திருப்பிக் கொடுக்கும் அல்லது விட்டுக் கொடுக்கும் சொத்தின் மதிப்பும் கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டும்.

ஒருவர் வழக்கிற்கு ரூபாய் 10,000/-நீதிமன்றக் கட்டண மாகக் கட்ட வேண்டியிருக்குமாயின் அவர் வசமுள்ள வழக்கில் சம்பந்தப்பட்ட சொத்தின் மதிப்பு நீங்கலாக, அதற்குக் குறை வானது உதாரணமாக ரூ. 9500/ தானிருக்கிறது என்று வைத்துக் கொண்டாலும் அவர் இச்சட்டத்தின்கீழ் வக்கில்லாதவர். எனவே இந்தச் சட்டச் சலுகைப்படி நீதிமன்றக் கட்டணம் கட்டாமலே அவர் அந்த வழக்குப் போடலாம்.

ஒருவர் பிரதிநிதித்துவ முறையில் வக்கில்லாதவராக வழக்குப் போடுவாரானால் அந்தப் பிரதிநிதியின் சொத்து

மதிப்புக் கணக்கிடப்பட்டு மேற்குறிப்பிட்டபடி அவர் வசதியுள்ளவரா, வக்கில்லாதவரா என்று முடிவு செய்யப்படும்.

வக்கில்லாதவர்கள் வழக்குப் போடும் போது அதற்காக அனுமதி கோரும் மனுவில் சாதாரணமாக பிராதில் குறிக்கப்பட்டிருக்கும் விபரங்கள் குறிக்கப்படுவதோடு, மனுதாரரின் அசையும், அசையாச் சொத்துகளின் விவரம் அடங்கிய பட்டியலும் அதில் அவைகளின் மதிப்புத்தரவேண்டும். அதில் சரிபார்க்கப்பட்டது என்பதாக மனுதாரர் கையெழுத்துப் போடவேண்டும்.

நீதிமன்றத்தில் நேரில் தோன்றுவதற்கு விதிவிலக்களிக்கப்படாதவராயிருந்தாலன்றி வக்கில்லாதார் வழக்குப் போட அனுமதி கோரும் மனுவை நீதிமன்றத்தில் மேற்படி மனுதாரர் நேரில் வந்து சமர்பிக்க வேண்டும். விதிவிலக்களிக்கப்பட்டவர்கள் அவர்களுடைய உண்மைப் பிரதிநிதியை நீதிமன்றத்திற்கு அனுப்பி மேற்படி மனுவை நேரில் சமர்பிக்கச் செய்யலாம். அவ்வாறு மற்றவருக்காக மனுவை நேரில் சமர்ப்பிக்க வருபவர் அந்த மனு சம்பந்தமாகக் கேட்கப்படும் கேள்விகளுக்குத் தக்க பதிலளிக்கக் கூடியவராயிருத்தல் வேண்டும்.

இது தவிர உயர் நீதிமன்றம், பொதுவாகவும் அல்லது சிறப்பாகவும், ஒருசிலரை ஒரு வகுப்பினரை நேரில் வந்து இம் மனுவைச் சமர்பிக்காமல் அவர்கள் பிரதிநிதிகள் மூலமாகச் சமர்பிக்க அனுமதிக்கலாம்.

இவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட மனு எல்லா வகையிலும் ஏற்றுக் கொள்ளும்படியாகச் சரியாக இருக்குமாயின் விண்ணப்பதாரரையும் அல்லது அவர் சார்பில் மனு சமர்ப்பிக்க அனுமதிக்கப்பட்டவராயிருப்பின், அவரை அந்த மனுவின் தகுதி குறித்து விசாரிக்கும். மனுதாரர்க்குப் பதிலாக வேறு ஒருவர் மனு சமர்ப்பிப்பாரனால் இந்த மனு குறித்து மனுதாரரை நீதிமன்றம் விசாரிப்பது பொருத்தமாகும் என்று கருதினால் அதற்கான ஆணையாளரை (Commissioner) நியமித்து நேர்முக விசாரணை செய்ய ஆணையிடலாம்.

மேற்குறிப்பிட்டபடி மனு சரியான முறையில் சமர்பிக்கப் படவில்லையானால், நீதிமன்றம் அந்த மனுவை நிராகரிக்கலாம். அல்லது மனுதாரர் இந்தச் சட்டவிதிமுறைப்படி வக்கில்லாதவரா யில்லா விட்டாலும், இவ்விதமாக வக்கில்லாதவர் வழக்குப் (Pauper Suit) போடும் பொருட்டு, வஞ்சயாகத் தன்னுடைய

சொத்தை அல்லது சொத்துகளை இந்த மனு சமர்ப்பிப்பதற்கு இரண்டு மாதங்களுக்குள் விற்றிருந்தாலும், அல்லது மனுவில் வழக்குக்கான காரணம் ஏதுமில்லாமலிருந்தாலும் அல்லது இந்த வழக்கு வேறு சட்டப்படி மறுக்கப்படுமானாலும், அல்லது இந்த வழக்குச் சொத்து சம்பந்தமாக வேறு ஒருவரிடம் ஒப்பந்தம் ஏதும் செய்துகொண்டதின் விளைவாக மேற்படி மூன்றாவது நபருக்கு அந்த வழ்க்குச் சொத்தில் ஏதாவது பாத்தியதை உண்டாக்கியிருந்தாலும், இந்த மனுவை நீதிமன்றம், நிராகரித்து விடும் (கட்டளை 33. விதி 5).

இந்த வக்கில்லாதவர் வழக்குமனு மேற்குறிப்பிட்ட காரணங்களுக்காக நிராகரிக்கப்படாமல் ஏற்றுக்கொள்ளப்படுமானால், அந்த மனு மீதான பூர்வாங்க விசாரணை நடத்த நீதிமன்றம் ஒரு நாளைக் குறிக்கும். அவ்வாறு நாள் குறிக்கும் போது எதிர்த்தரப்பாளருக்கும் அரசு வழக்கறிஞருக்கும் (Government Pleader) பத்து நாள்களுக்குக் குறைவில்லாத அவகாசம் தந்து அறிவிப்புக் கொடுக்கப்படும். அதன் பிறகு அந்தக் குறிப்பிட்ட நாளில் அம் மனுவை நிராகரிக்கக் கூடிய தவறு ஏதும் இல்லை என்று மனுதாரர் ருசுப்படுத்தவும், எதிர்த்தரப்பாளரும், அரசு வழக்கறிஞரும், அதற்கு விரோதமாக ஏதாகிலும் சாட்சியங்கள் கூறவும் சந்தப்பம் அளிக்கப்படும். அரசு வழக்கறிஞருக்கு அறிவிப்புக் கொடுப்பதின் நோக்கம். நீதிமன்றக் கட்டணம் கட்டுவதிலிருந்து விதிவிலக்கு அளிப்பது மாநில அரசின் பொறுப்பு. அத்தோடு அரசின் வருமானம் பாதிப்பதால் அதைக் கண்காணித்துக் கொள்வது அம்மாநில அரசின் கடமையாகும்.

அதன்படி விசாரணை நடைபெறக் கூடுமானால் இருதரப்புச் சாட்சியங்களும் கொடுக்கப்படும். நீதிமன்றம் மனுதாரரையும் அல்லது அவருடைய பிரதிநிதியையும் விசாரித்து அவர்களின் சாட்சியங்களின் சாரம்சத்தை குறித்துக்கொள்ளும். அதைத் தொடர்ந்து இரு தரப்பு வாதங்களைக் கேட்டு நீதிமன்றம் மேற்படி மனுவை ஏற்றுக்கொள்ளவோ, நிராகரிக்கவோ செய்யும்.

பிரதிநிதித்துவ முறையில் வக்கில்லாதவர் வழக்கு (Pauper Suit) போடப்படுமானால் அதாவது பிரிவு 91, 92-ஐம் கட்டளை 1 விதி 8-ன் கீழும் அந்தப் பிரதிநிதி, நீதிமன்றம் சரி என்று கருதுமானால் நீதிமன்றக் கட்டணம் கட்டுவதற்கான உத்தரவாதம் கொடுக்கும்படி கட்டளையிடலாம்.

மேற்குறிப்பிட்ட வக்கில்லாதவர் மனு ஏற்றுக் கொள்ளப் படுமானல் முதலில் கொடுக்கப்பட்ட அசல் மனு எண்ணுக்குப் பதிலாக (Original Petition Number) அசல் வழக்கு எண் (Original Suit Number) ஒன்று கொடுக்கப்பட்டுச் சாதாரணமாக நடத்தப்படும் வழக்குப் போல அது நடத்தப் படும். ஆனல் மனுதாரர் நீதி மன்றக் கட்டணம் மட்டும் கட்டத் தேவையில்லை. ஆனல் எதிர்த்தரப்பாளருக்கு அழைப்பாணை, அறிவிப்புகள் அனுப்புவதற்கான கட்டணங்கள் மட்டும் கட்டியாக வேண்டும். அது போல அவருக்குரிய வழக்கறிஞரை நியமித்து அவருக்கும் கட்டணம் கட்டுவதும் மனுதாரரின் பொறுப்பாகும்.

ஒரு மனுதாரரை வசதியுள்ளவராகப் பிரகடனம் செய்வதானல் பிரதிவாதியின் மனுவின் பேரிலோ, அல்லது அரசு வழக்கறிஞரின் மனுவின் பேரிலோ, வக்கில்லாதவரான மனுதாரருக்கு ஏழு நாள்களுக்குக் குறைவில்லாத அவகாசம் கொடுத்து, அறிவிப்புக் கொடுத்து அந்த மனுவை விசாரித்து மேற்படி வழக்கின் போது, வக்கில்லாத அம்மனுதாரர் தொந்தரவு தரும் விதத்திலும் (Vexations) அல்லது தகாதவிதத்திலும் நடந்து கொண்டிருப்பதாகக் குற்றம் கண்டுபிடிக்கப்பட்டாலும், அல்லது அவரிடம் போதுமான பணவசதி இருப்பதாகக் காணப்பட்டு அதனல் அவர் வக்கில்லாதவராகக் கருதப்பட முடியாத நிலையி லிருப்பாரனலும், அல்லது வழக்கு சொத்து மட்டில் வேறு ஒருவருடன் உடன்பாடு செய்துகொண்டதினல், மற்றவருக்கு அந்தச் சொத்தில் பாத்தியதை உண்டாகியிருப்பது தெரிய வந்தாலும் மேற்படி விண்ணப்பத்தாரர் வசதி படைத்தவர் வக்கில்லாதவர்களுக்குரிய சலுகைகளை அனுபவிக்கத் தகுதியற்றவராகப் பிரகடனப் படுத்தப்பட்டு, மேற்படி வழக்கை அவர் மேலும் தொடர வேண்டுமானல் நீதிமன்றம் குறித்திருக்கும் நாளுகுள் அந்த வழக்குக்கான நீதிமன்றக் கட்டணத்தைச் செலுத்தி அவ்வழக்கை நடத்தலாம்.

வக்கில்லாத வாதி வழக்கில் வெற்றி பெறுவாரானல், மாநில அரசு யாரை எதிர்த்துத் தீர்ப்பாணை வழங்கப்பட்டதோ அவரிடமிருந்து அந்த வழக்குக்கான நீதி மன்றக் கட்டணம் சாதாரணமாக எவ்வளவு கட்டியிருக்க வேண்டுமோ, அந்தத் தொகையை வசூல் செய்துகொள்ள முடியும். அதோடு மாநில அரசு வெற்றி பெற்ற வக்கில்லாத வாதிக்குத் திரும்பக் கிடைக்கப் பெற்ற சொத்தில் மேற்படி நீதிமன்றக் கட்டணத்தை வசூலிப்பதற்கான முதல் பொறுப்பு (Charge) பெற்றுக்கொள்ளும்.

வாதி வழக்கில் தோல்வியுறுவாரானால் அல்லது வசதியுள்ள வராகப் பிரகடனப்படுத்தபடுவரானாலும், அல்லது அவ்வழக்கு திரும்பப் பெறப்படுமானாலும், அல்லது வழக்கில் ஒரு பகுதி இடையில் விட்டு விடப்படமாயின் அல்லது வழக்கு தள்ளுபடி செய்யப் படுமாயின் அதாவது வாதி குறிப்பிட்ட காலத்தில் அழைப்பாணை அனுப்பக் கட்டணம் கட்டத்தவறினதால் பிரதிவாதிக்கு அழைப் பாணை அனுப்பப்படாததாலும், அல்லது வழக்கு விசாரணைக்கு வரும்போது, வாதி நீதிமன்றத்திற்கு வராததாலும் நிராகரிக்கப் படுமானால், நீதிமன்றம் வாதியை நீதிமன்றக் கட்டணம் கட்டி வழக்கை நடத்த ஆணையிடலாம். வாதி வசதியுள்ளவராகப் பிரகடனப் படுத்தப்படுவாரானாலும், குறிப்பிட்ட நாளில் நீதி மன்றக் கட்டணத்தைச் செலுத்தி வழக்கைத் தொடர நீதிமன்றம் ஆணையிடலாம். அதன்படி நீதிமன்றக் கட்டணம் கட்டத் தவறினால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு மேற்படி நீதி மன்றக் கட்டணம் கட்டவேண்டுமென்றும் ஆணையிடலாம்.

வயது வராதவருக்காக அவருடைய பாதுகாப்பாளர் (Guardian) நியாயத்திற்குப் புறம்பாகவும், தவறுதலாகவும், வக்கில்லாதவர் வழக்குப் போட்டிருப்பதாகக் காணப்பட்டால் நீதிமன்றம் மேற்படிப் பாதுகாப்பாளர் தனிப்பட்ட முறையில் நீதிமன்றக் கட்டணம் கட்டவேண்டுமென ஆணையிடலாம் (கட்டளை 33. விதி 11).

மேற்குறிப்பிட்ட வழக்கு, வாதியோ, இணைவாதியோ இறந்த தால் தள்ளுபடி செய்யப்படுமானால் இந்த வழக்கிற்கான நீதி மன்றக் கட்டணத்தை, இவ்வழக்கு வக்கில்லாதவர் வழக்காக நடத்த மறுக்கப்பட்ட நிலையில் எவ்வளவு கட்டணம் கட்டியிருக்க வேண்டுமோ, அந்தத் தொகையை இறந்துபோன வாதியின் சொத்தின் பேரில் தொடர்ந்து மாநில அரசு வசூல் செய்ய முடியும் (கட்டளை 33. விதி 11 (A).

மேற்குறிப்பிட்ட சூழ்நிலைகளில் மாநில அரசு நீதிமன்றத் திற்கு விண்ணப்பித்து நீதிமன்றக் கட்டணம் வாதி கட்ட வேண்டுமென்று கேட்க உரிமை கொண்டிருக்கின்றது. வக்கில்லா தவர் வழக்கில் நீதிமன்றப் பாதுகாப்பிலிருக்கும் பணம் எதுவும் எடுக்கக் கோரும் விண்ணப்பத்தில், அரசு வழக்கறிஞருக்கு அது பற்றித் தகுந்த அறிவிப்புக் கொடுத்த பிறகே அது பற்றி நீதி மன்றம் உத்தரவிடும்.

இந்த வழக்குகளில் மாநில அரசு ஒரு கட்சிக்காராகவே கருதப்படுதல் வேண்டும்.

இவ்வழக்குகளில் நீதிமன்றக் கட்டணம் வசூல் செய்ய வேண்டுமென்ற நிலை ஏற்பட்டால் மேற்படி ஆணையின் அல்லது தீர்ப்பாணையின் நகலைக் குறிப்பிட்ட மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி வைக்கும். அதன் பேரில் அந்த மாவட்டஆட்சித் தலைவர் அந்த நீதிமன்றக் கட்டணப் பாக்கியை, வருவாய்த் துறைப் பாக்கியை வசூல் செய்வது போல், வருவாய் மீட்புச் சட்டபடி (Revenue Recovery Act) வாதியையோ, அல்லது அவருடைய சொத்தையோ கட்டுப்படுத்தி வசூல் செய்யப் படும்.

ஒருமுறை ஏதாவதொரு காரணத்தினால் வக்கில்லாதவர் வழக்குப் (Pauper Suit) போட முடியாது என்று நீதிமன்றம் நிராகரித்து விட்டால் அவ்வாறு நிராகரிக்கப்பட்டவர் திரும்பவும் அதே காரணத்திற்காக வக்கில்லாதவர் வழக்குப் போட முடியாது. ஆனால் நீதிமன்றக் கட்டணம் கட்டிச் சாதாரண முறையில் வழக்குப் போடத் தடையில்லை. அவ்விதம் நீதிமன்றக் கட்டணம் கட்டி வழக்குப் போடும் போதுதான் ஏற்கெனவே சமர்பித்த தன்னுடைய வக்கில்லாதவர் மனு நிராகரிக்கப்படும் வகையில் எதிர்த்தரப்பாளரும், அரசுத்தரப்பும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தால், நீதிமன்றச் செலவுத் தொகையை வாதி கட்டிய பிறகே, அவர் சாதாரணமான முறையிலும் வழக்குத் தொடரலாம்.

இந்த வழக்குக்கான முதல் விண்ணப்பம், அதைத் தொடர்ந்து விசாரணை முதலியவைகளுக்கான செலவுத் தொகை நீதிமன்றச் செலவுத் தொகையாகக் கணிக்கப்படும் (கட்டளை 33).

வக்கில்லாதவர் மேல் வழக்கு (Pauper Appeals)

ஒருவர் மேல் வழக்குப் போடத் தகுதி பெற்றிருந்தால் அதற்கான நீதிமன்றக் கட்டணம் கட்ட முடியாத நிலையிலிருப் பாரானால், மேல் வழக்கு மனுவுடன் தான் வக்கில்லாதவர் என்ற முறையில் மேல் வழக்குப் போட அனுமதிக்குமாறு கோரும் விண்ணப்பம் கொடுக்க வேண்டும். அவைகளை மேல் வழக்காளர் நேரில் சமர்ப்பிக்க வேண்டும்.

அவ்வாறு கொடுக்கப்பட்ட மனுவின் பேரில் மேல்நீதிமன்றம் மேல் வழக்காளரைக் கேட்பதற்கு ஒரு நாளைக் குறிப்பிட்டு அன்று அவர் வந்திருந்தால் அவரைக் கேட்டு, அவருடைய மனுவையும் அத்துடன் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மேல் வழக்கு மனு,

மேல் வழக்குக் குரிய தீர்ப்பாணை, நகல்களை படித்துப் பார்த்து விட்டு அது மேல்வழக்குக்குகந்தது என்றால் அந்தத் தீர்ப்பாணை சட்டத்திற்கோ, அல்லது சட்டத்தின் வலிவுள்ள சம்பிரதாயத்திற்கோ விரோதமானது என்று கண்டால் அந்த மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளவும், அவ்வாறு தகுதி யில்லாதிருக்குமானால் நிராகரிக்கவும் செய்யலாம்; அல்லது வக்கில்லாத் தன்மையை மேல் நீதிமன்றத்திலேயே விசாரிக்கலாம்; அல்லது எந்தத் நீதிமன்றத் தீர்ப்பாணையை எதிர்த்து மேல் வழக்குப் போடப்பட்டிருக்கின்றதோ, அந்த நீதிமன்றத்திற்குத் திரும்ப அனுப்பி அதை விசாரிக்கச் செய்யலாம்.

ஆனால், அசல் நீதிமன்றத்திலேயே, மேல் வழக்காளர் வக்கில்லாதவராக வழக்கு நடத்தவோ, அல்லது மேல் வழக்குப் போடவோ அனுமதிக்கப்பட்டிருப்பாரானால் மேற்கொண்டு வக்கில்லாத் தன்மையை விசாரிக்க எந்த விசாரணையும், தேவைப் படாது. ஆனால் அரசு வழக்கறிஞரைக் கேட்டபின் நீதிமன்றம் மேல்வழக்காளருடைய, வக்கில்லாத் தன்மையைப் பற்றி விசாரிக்கக் காரணமிருப்பதாகக் கருதினால், மேற்கொண்டு விசாரணை செய்ய மேல் நீதிமன்றம் ஆணையிடலாம் (கட்டளை 44).

12. அசையாச் சொத்துகளின் அடைமானம் சம்பந்தமான வழக்குகள் (Mortgage Suits)

அடைமானம் சம்மந்தமான வழக்குகளில் அடைமானச் சொத்தின் பாதுகாப்பில் (Security) பாத்தியதை (Interest) கொண்டிருக்கும் அனைவரும் அல்லது அடைமானச் சொத்தை மீட்பதில் உரிமை கொண்ட அனைவரும் கட்சிக் காரர்களாகச் சேர்க்கப் படவேண்டும். ஆனால் பின் அடைமானம் எடுத்தவர் (Puisne mortgagee) அடைமானத்தை மீட்கத் தடை விதிக்கவோ (Foreclosure) அல்லது அடைமானச் சொத்தை விற்பதற்காகப் போடப்படும் வழக்குகளில் முன் அடைமானம் எடுத்தவர்களைக் கட்சிக்காரர்களாகச் சேர்க்க வேண்டிய அவசியமில்லை.

அடைமானத்தை மீட்கத் தடை கோரும் வழக்கில் நீதிமன்றம் முன்னோடித் தீர்ப்பாணை வழங்கும் (Preliminary decree). அதன்படி அந்தத் தீர்ப்பாணை நாள்வரை கணக்கு எடுத்து வாதிக்குப் பணம் எவ்வளவு பாக்கி என்று நிர்ணயிக்கவும், அடைமானத்தினால் எவ்வளவு வட்டியும், முதலும் பாக்கி என்று கணக்கிடவும் வழக்கின் செலவுத் தொகையாக நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தொகை எவ்வளவு என்று கணக்கிடவும், அது தவிர ஏனைய செலவுகள், நியாயமான முறையில் இந்த அடைமானப் பாதுகாப்புக்காகச் செய்யப்பட்டவையும், அதற்கான வட்டியும் சேர்த்து மொத்தமாக முதல் தீர்ப்பாணை வழங்கும் சமயம் எவ்வளவு என்று அறிவிக்கவும் செய்யலாம்.

முதல் தீர்ப்பாணைப்படிக் கட்ட வேண்டிய பணத்தைப் பிரதிவாதி காலாகாலத்தில் கட்ட வில்லையானால் வாதி, இறுதித் தீர்ப்பாணைக்கு விண்ணப்பித்து, அதன்படி பிரதிவாதி அடைமானத்தைத் திருப்புவதற்குத் தடைசெய்யலாம்.

ஆனால் நீதிமன்றம் பிரதிவாதியின் விண்ணப்பத்தின் பேரில் மேற்குறிப்பிட்டபடி தொகை கட்டுவதற்காகத் தகுந்த காரணத்தின் பேரிலும், அல்லது வாதிக்கு செலவுத் தொகை கட்டித்தரவேண்டும் என்ற நிபந்தனையின் பேரிலும் கால நீடிப்புத் தரலாம். அவ்வாறு கொடுக்கப்பட்ட கால நீடிப்பிற்குள் தொகை கட்ட அனுமதிக்கப்படுமானால் அதற்குப்பின் ஏற்பட்ட செலவினங்கள், கட்டணங்கள், வட்டி முதலியவை அந்தத் தொகையுடன் சேர்த்துக் கட்டவேண்டும்.

அடைமானத்தை மீட்கக் கூடாது (Foeclosure) என்று வழக்குத் தொடர்ந்திருக்கும் போது குறிப்பிட்ட அடைமானம் எடுத்தவர் அவருக்குப் பின் அடைமானம் எடுத்தவர்களையும், அவ்வழக்கில்கட்சிக்காரர்களாகச் சேர்த்திருந்தால் முன்னோடித் தீர்ப்பாணையில் அவர்கள் அனைவருடைய உரிமைகளும் அவர்கள் பாக்கியாகக் கொடுக்க வேண்டியவைகளையும் நிர்ணயிக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட வழக்கில் வழங்கப்பட்ட இறுதி தீர்ப்பாணைப்படி அடைமானம் வைத்த சொத்தை மீட்க முடியாது என்று தீர்ப்பளிக்கப் படுமுன் அவர் அடைமானத்தின் கீழ் சம்பந்தப் பட்ட எல்லாத் தொகையையும் நீதிமன்றத்தில் கட்டிவிட்டால் பிரதிவாதியின் மனுவின் பேரில் இறுதித் தீர்ப்பாணை வழங்கப் பட்டு அதன்படி வாதி அடைமானம் சம்பந்தப்பட்ட எழுத்து மானங்களனைத்தும் திருப்பிக் கொடுக்கும்படியும், அடைமானச் சொத்தைத் திரும்ப பிரதிவாதியிடம் ஒப்படைப்பதுடன், உடைமையையும் (Possession) கொடுக்க வேண்டு மென்றும் கட்டளையிடலாம்.

பிரதிவாதி குறிப்பிட்ட காலத்திற்குள் குறிப்பிட்டபடி இறுதித் தீர்ப்பாணைப்படி கட்டவேண்டிய தொகையைக் கட்ட வில்லையானால், அடைமானத்தை மீட்கக் கூடாது (Foreclosure) என்று இறுதித் தீர்ப்பாணை வழங்கப்படும். அதன்படி அடைமானத்தை அவர் மீட்க முடியாது. அதுபோக வாதியிடம் சொத்து உடமையைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

இறுதித் தீர்ப்பாணை பிறப்பித்த பிறகு, பிரதிவாதி அடைமான வழக்கு சம்பந்தமான கடன்பாடுகளிலிருந்து (liability) விடுபட்டதாகக் கருதப்படுவார்.

அடைமான சம்பந்தமான வழக்கில் மேற்படிச் சொத்தை விற்பதற்கான நிவாரணம் கோரப்பட்டிருக்குமானாலும் அதற்கான விதி முறைகள் மேற்குறிப்பிட்டபடிதான் கடைப்பிடிக்கப் படும். அதன்படி முன்னோடித் தீர்ப்பாணையும் அதையடுத்து இறுதித் தீர்ப்பாணையும் வழங்கப்படும்.

அடைமானத்தை மீட்கப் போடப்படும் வழக்குகளிலும் முன்னோடித் தீர்ப்பாணையை அடுத்து இறுதித் தீர்ப்பாணை வழங்கப் படும். அதற்கான விதிமுறைகள் மேற்குறிப்பிட்டபடியே கடைப் பிடிக்கப்படும் (கட்டளை 34).

13. மாற்றுமுறை யாவணம் சுருக்கு நடைமுறை

(Summary Procedure on Negotiable Instrument)

மாற்று முறையாவணம் காரணமாக (Negotiable Instruments) எழுந்துள்ள வழக்குகள் சாதாரண வழக்குகள் போலில்லாமல் சுருக்கு முறையில் விசாரணை செய்து முடிக்கப் படலாலம். மற்றவழக்குகளில் ருசுப்படுத்துதல், ஏனைய சாட்சியங்களைக் கொண்டுதான் முடியும். ஆனால் மாற்று முறையாவணங்களில் உதாரணமாக. வாக்குறுதிக் கடன் சீட்டு (Promissary Note) போன்றவை எழுதப்பட்டு அதன் பேரில் பணம் ரொக்கமாகக் கடன் கொடுக்கப்படுவதாலும், அதில் வட்டியும் முதலும் கொடுக்கப்பட்டிருந்தால் அது அந்தச் சீட்டில் வரவு வைக்கப் படும். இதுபோன்ற மிக எளிதாகப் பணம் கொடுக்கப்பட்டதா அல்லது இல்லையா என்பதை எந்தச் சிரமமின்றியும் ருசுப்படுத்த முடியுமாதலால், இதுபோன்ற வழக்குகளைச் சுருக்கமான முறையில் நடத்துவதற்குச் சட்டம் வழி செய்திருக்கின்றது. இந்த வழக்கில் பிரதிவாதி கொடுக்க வேண்டிய தொகை நிர்ணயிக்கப்பட்டது நிச்சயமானது. எனவே அவரால் அது மறுக்கப்பட முடியாதது. அப்படி மறுப்பதற்கு அல்லது கொடுக்க வேண்டிய தொகை கொடுக்கப்பட்டதற்குத் தகுந்த ஆதாரங்களோ, அல்லது அத் தொகையைப் பிரதிவாதி கொடுத்திருக்கக் கூடும் என்ற ஆதார பூர்வமான சாட்சியங்கள், இருக்குமானால் அவர் இந்தக் குறிப் பிட்ட சுருக்கு முறை வழக்கில் வழக்கை எதிர்ப்பதற்குத் தகுந்த வழி இருப்பதாகக் கூறி அதனால் அதை எதிர்த்து நடத்துவதற்கு நீதிமன்றம் சந்தர்ப்பம் வழங்கவேண்டுமென்று, இந்த வழக்கின் அழைப்பாணையில் குறிப்பிட்டபடி அவ்வழைப்பாணை கிடைத்த பத்து நாள்களுக்குள் அந்த நீதிமன்றத்தில் விண்ணப்பிக்க வேண்டும். அந்த விண்ணப்பத்தில் எதிர்த்து வழக்காடப் போதுமான அத்தாட்சி அல்லது காரணம் இருப்பது கூறப்பட வேண்டும்.

நீதிமன்றம் அதை ஏற்றுக் கொள்ளுமானால் பிரதிவாதி எதிர் வழக்காடலாம். ஆனால் அனுமதி மறுக்கப்படுமானால் அல்லது குறிப்பிட்ட பத்துநாள்களுக்குள் அல்லது நீதிமன்றம் காலநீடிப்பு கொடுத்திருக்குமானால் அந்தக் காலவரையறைக்குள், அதற்கு அனுமதி கோரிப் பிரதிவாதி மனுச் செய்யவில்லையானாலும், வாதி கேட்டுக் கொண்டபடி விசாரணையேதுமில்லாமல் மேற்படி வழக்கில் தீர்ப்பாணை வழங்கப்படும்.

இந்த விதம் சுருக்க நடை முறையில் வழக்குகளை எல்லா நீதி மன்றங்களிலும் நடத்த முடியாது, ஒருசில குறிப்பிட்ட நீதி மன்றங்கள் அதாவது வியாபாரம், தொழில், முக்கியத்துவம் வாய்ந்த சில நகரங்களில் உள்ள சில நீதிமன்றங்களுத்தான் சுருக்க நடைமுறைக்கான அதிகாரம் வழங்கப் பட்டிருக்கின்றது.

அதன்படி, சென்னை, கல்கத்தா, பம்பாயில், உள்ள உயர் நீதிமன்றங்கள் மாநில அரசால் அதிகாரம் வழங்கப்பட்டிருந்த மாவட்ட அல்லது வேறெந்த நீதிமன்றமோ, மேற்குறிப்பிட்ட சுருக்கு முறையில் வழக்குகளை நடத்தலாம். உதாரணமாக மாவட்ட நீதிமன்றங்களும், சென்னை, சமூக உரிமை நீதிமன்றமும் இவ்விதம் சுருக்க முறை வழக்குகளை நடத்த அதிகாரம் பெற்றவைகளே.

மாற்று முறையாவணம் (Bill of Exchange) உண்டியல் (Hundi) வாக்குறுதிச் சீட்டு (promissory Note) முதலியவை களிலான வழக்குகள் சாதாரண முறையில் பிராது தயார் செய்யப்பட்டுத் தாக்கல் செய்யப்படும். ஆனால் சுருக்க முறையில் அவ்வழக்குகள் நடத்தப்பட வேண்டுமானால் அதன் படி மேற்குறிப்பிட்ட அல்லது அனுமதிக்கப்பட்ட நீதிமன்றங் களில் அவ்வழக்குகள் தாக்கல் செய்யப்படுமானால் இவ்வழக்கு களில் அழைப்பாணை மட்டும் வித்தியாசமானதாக அமையும். இதற்காக நிர்ணயிக்கப்பட்ட முறைபடி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு அதற்கான அழைப்பாணை அனுப்பப் படுமானால் அந் நீதிமன்றத்தில் பிரதிவாதி அனுமதி பெற்றாலன்றி அவர் எதிர்த்து வழக்காட முடியாது. அவ்வாறு அனுமதி கோரப் படாவிட்டாலும் அல்லது மறுக்கப்பட்டாலும் இவ்வழக்கில் வாதிக்கு அவர் கேட்டபடி தீர்ப்பாணை வழங்கப்படும். அதன் படி வட்டியும் முதலும் கணக்கிடப்பட்டு அந்தத் தீர்ப்பாணையில் குறிக்கப்படும். அது மட்டுமல்லாமல் நீதிமன்ற வழக்குச் செலவு தொகையும் அதோடு வழங்கப்படும். இந்தத் தீர்ப்பாணையை உடனே நிறைவேற்ற முடியும்.

தகுதியின் அடிப்படையில் பிரதிவாதி சுருக்க முறை வழக்கில் எதிர்வாதம் செய்யப் போதுமான காரண காரியங்கள் இருப்பதாகவும் அத்துடன் அவ்வழக்கை எதிர்த்து நடத்த அனுமதி வழங்க வேண்டுமென்றும் நீதிமன்றத்திற்கு அழைப்பாணை கிடைத்த 10 நாள்களில் விண்ணப்பம் செய்து கொண்டதின் பேரில் நீதிமன்றம் மேற்படி வழக்கை எதிர்த்து நடத்த அவருக்கு அனுமதிக்கும். அதன் பேரில் பிரதிவாதி எதிர்த்து வழக்கு நடத்த முடியும். மேற்படி மனுவில் பிரதிவாதிகான் பணம் வாங்கியதற்குப் போதுமான மறுபயன் (Consideration) இல்லாமை அல்லது அதைப்பற்றி வாதி எண்பிக்க வேண்டிய நிர்ப்பந்தமிருப்பதாகக் கண்டாலும், எதிர் வழக்காடப் பிரதிவாதி அனுமதிக்கப் படவேண்டும்.

இவ்வாறு எதிர்வழக்காடுதலுக்கான அனுமதி கொடுப்பது நிபந்தனையின்றியும், அல்லது ஒருசில நிபந்தனைகள், அதாவது வழக்குக்கான பாதுகாப்புத் தொகை (Security) கட்ட அல்லது வழக்கில் உள்ள பிரச்சினைகளை வரையறை செய்துகொண்டு, அல்லது நீதிமன்றம் சரி என்று கருதுகின்ற விதத்திலும், நிபந்தனைகளை விதித்துப் பிரதிவாதியின் மனுவை ஏற்றுக்கொண்டு எதிர் வழக்காட நீதிமன்றம் அனுமதி வழங்கலாம். தீர்ப்பாணை வழங்கப்பட்ட போதிலும், தகுந்த காரணங்கள் காண்பிக்கப் படுமானால், பிரதிவாதியின் கோரிக்கையின் பேரில் மேற்படித் தீர்ப்பாணை தள்ளி வைக்கப்படும். அல்லது தீர்ப்பாணையை நிறைவேற்றுவதை நீதிமன்றம் தேவையானால் தடைசெய்யும் அதோடு பிரதிவாதி எதிர்த்து வழக்காட அனுமதிக்கப்படுவார்.

சுருக்க முறை வழக்குகளில் மேற்குறிப்பிட்ட சில சிறப்புகளைத்தவிர வழக்கு சாதாரணமான முறையில் நடத்தப்படும் (கட்டளை 37).

14. தீர்ப்பிற்குமுன் கைதுசெய்தல் பொருளை ஜப்தி செய்தல்,

(Arrest before Judgement and attachment before Judgement)

அசையாச் சொத்து சம்மந்தமான வழக்குகள், தவிர ஏனைய வழக்குகளில் நீதிமன்றத்தில் வாதி கொடுக்கின்ற சத்திய வாக்கு மூலத்தில் கூறப்பட்டுச் சில, மிக அவசியமான சூழ்நிலைகள் விளக்கப்படுமானுல் அந்த நிலையை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு தீர்ப்பளிக்குமுன் பிரதிவாதியைக் கைதுசெய்ய நீதிமன்றம் ஆணையிடலாம்.

இதற்கான ஆணையை நீதிமன்றம் பிறப்பிக்கும் போது கீழ்க் கண்ட சூழ்நிலைகளைக் கவனித்துத் தான் கைது செய்வதற்கான உத்தரவையிடலாம். அதாவது,

1. பிரதிவாதி வழக்கு நடவடிக்கையைத் தாமதப்படுத் தவும், அல்லது நீதிமன்ற ஆணைகளைத் தவிர்ப்பதற்காகவும், அல்லது தடுத்து விடுவதற்காகவும் அல்லது தீர்ப்பாணையை நிறைவேற்றுவதைத் தடுப்பதற்காகவும் அல்லது தாமதப் படுத்துவதற்காகவும் நீதிமன்றத்தின் வட்டார அதிகார எல்லையைக் கடந்து ஓடிவிட்டதாலும் அல்லது அவ்விதம் ஓடிவிட விருப்பதாலும், அல்லது குறிப்பிட்ட நீதிமன்றத்தின் அதிகார எல்லையிலுள்ள அவனுடைய சொத்தையோ அல்லது அதன் பகுதியையோ, விற்றுவிட்டதாலோ அல்லது அசையும் சொத்தாயிருந்தால் குறிப்பிட்ட நீதிமன்ற அதிகார எல்லையை விட்டு வேறு இடத்திற்குக் கடத்தி விட்டதாலோ,

2. இது தவிரவும், பிரதிவாதி இந்தியாவை விட்டு வெளியேறிவிட யிருப்பதாலும், அதன் காரணமாகக் குறிப்பிட்ட வழக்கில் கிடைக்க வேண்டிய பலனைத் தடுத்துவிடக் கூடிய நிலையிருந்தாலும், நீதிமன்றம் பிரதிவாதியைக் கைது செய்து தன்முன் நிறுத்தி இந்த வழக்கின் விசாரணைகளில் அவர் தோன்றுவதற்கான உத்தரவாதம் அல்லது பிணை ஏன் அவர் தரக்கூடாது என்று கேட்கலாம்.

அவ்விதமாகக் கைதுசெய்யும் உத்தரவு பிறப்பித்திருந்து, அந்த ஆணையை நிறைவேற்ற வந்த அதிகாரியிடம் பிரதிவாதி அந்தக் கைது ஆணையில் குறிக்கப்பட்டிருக்கின்ற தொகையைக் கட்டி விடுவாரானால் அதன்படி வாதியின் வழக்குக் கோரிக்கையைத் திருப்பித்தர முடியுமானால் அவ்வாறு கட்டிய தொகை நீதிமன்றத்தில் வழக்கு முடியும் வரை அல்லது நீதிமன்றத்தின் மறு ஆணைவரை பாதுகாப்பில் வைக்கும்படி கட்டப்பட்டு விட்டால் அவர் கைதுசெய்யப்படமாட்டார்.

இதுதவிர நீதிமன்றத்தில் பிரதிவாதிதான் ஏன் கைது செய்யக் கூடாது என்று காரணம் காட்டத்தவறினால் நீதிமன்றம் அந்தப் பிரதிவாதியைக் குறிப்பிட்ட தொகையை நீதிமன்றத்தில் கட்டவும், அல்லது நீதிமன்றப் பாதுகாப்பில் அவருடைய சொத்தை ஒப்படைக்கவும் அவ்வாறு கட்டப்படக் கூடிய தொகையோ, அல்லது நீதிமன்றப் பாதுகாப்பில் ஒப்படைக்கப் படவேண்டிய சொத்தோ, வாதியின் கோரிக்கையை ஏறத்தாழத் திருப்தியளிக்கத்தக்கதாகப் பார்த்துக் கொள்ளப்படும். அல்லது பிரதிவாதி நீதிமன்றத்தில் எதிர்வழக்கு நடத்துவதற்கு வருவதற்கான உத்தரவாதப் பாதுகாப்பு (Security) ஏதும் வழக்கு முடியும் வரையோ, அல்லது தீர்ப்பாணை நிறைவேற்றும் வரையோ கொடுக்கச் சொல்லியும், அல்லது நியாயம் என்று கருதுகின்ற வேறு நிபந்தனையை விதித்தும் நீதிமன்றம் கட்டளை பிறப்பிக்கலாம்.

பிரதிவாதி நீதிமன்றத்தில் தோன்றுவதற்காக வேறுயாரும் பிணைகொடுப்பார்களானால், பிரதிவாதி நிறைவேற்றத் தவறியவைகளுக்கு அவ்விதம் பிணை கொடுத்தவர்கள் பொறுப்பாக வேண்டியிருக்கும்.

பிரதிவாதிக்காகப் பிணை கொடுத்தவர் தம்முடைய, பொறுப்பிலிருந்து எந்தச் சமயத்திலும் விலகிக் கொள்ளலாம். அவ்வாறு விலகிக்கொள்வதானால் குறிப்பிட்ட நீதிமன்றத்தில், விண்ணப்பிக்க வேண்டும். அந்த விண்ணப்பத்தின் பேரில் நீதி

மன்றம் பிரதிவாதியை நீதிமன்றத்திற்குக் குறிப்பிட்ட நாளில் வரவழைக்கும் அல்லது சரியென்று பட்டால் அவரைக் கைது செய்து வரவும் ஆணையிடலாம்.

அவ்வாறு பிரதிவாதி நீதிமன்றத்திற்கு அழைப்பாணையை ஏற்றோ அல்லது தானுகவோ, அல்லது கைது செய்யப்பட்டோ வந்தால் நீதிமன்றம் அவருக்காகப் பிணை கொடுத்தவரை பொறுப்பிலிருந்து நீக்கிவிட்டு, பிரதிவாதியைப் புது உத்திரவாதப் பாதுகாப்புக் கொடுக்க ஆணையிடும்.

அதன்படிபிரதிவாதி உத்திரவாதப் பாதுகாப்புக் கொடுக்கத் தவறுவாராளுல் அவரைக் கைதுசெய்து சமூக உரிமைச்சிறைக் கூடத்தில் வழக்கில் ஒரு முடிவு காணும் வரையோ அல்லது தீர்ப் பாணை நிறைவேற்றும் வரையோ, வைக்கும்படி ஆணையிடலாம். அவ்வாறு சிறையிலிடப்படுபவர் ஆறு மாதத்திற்கு அதிகமான காலத்திற்கோ, அல்லது வழக்கில் பாக்கியாகத் தர வேண்டியது ரூ. 50/- ஐமபதிற்கு அதிகப்படாமலிருந்தால் 6 வாரத்திற்கு அதிக மான காலத்திற்கோ வைக்க முடியாது. நீதிமன்றத் தீர்ப் பாணையை நிறைவேற்ற வேண்டியிருந்தாலும், பிரதிவாதி சிறை யில் மேற்குறிப்பிட்ட காலத்திற்கு மேல் நிறுத்தி வைக்கப்பட மாட்டார் (கட்டளை 38 விதிகள் 1 முதல் 4).

தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்தல் (Attachement before Judgement)

மேற்குறிப்பிட்ட சூழ்நிலையில் அதாவது வழக்கு நடைபெறு கின்ற நிலையிலும், வாதியின் சத்திய வாக்கு மூலத்தில் குறிப்பிடப் பட்டு அது நீதிமன்றத்தைத் திருப்தி செய்யும் விதத்திலிருந்தால் அதாவது பிரதிவாதிக்கு விரோதமாக வழங்கப்படும் குறிப்பிட்ட தீர்ப்பாணையை நிறைவேற்றுவதைத் தடுக்கவும், தாமதப்படுத்தவு மான நோக்கத்தோடு பிரதிவாதி தன்னுடைய சொத்து முழு வதையும், அல்லது அதில் ஒரு பகுதியை விற்று விடுகின்ற நிலை யிருந்தாலோ, அல்லது அவருடைய அசையும் சொத்தை முழுவதுமோ, அல்லது பகுதியையோ குறிப்பிட்ட நீதிமன்ற அதிகார எல்லையிலிருந்து வேறு இடத்திற்குக் கடத்திச் செல்வ தாயிருந்தாலும், நீதிமன்றம் பிரதிவாதியை ஒரு குறிப்பிட்ட நாளில் உத்திரவாதப் பாதுகாப்பு கொடுக்கவும், அல்லது ஏதாவது ஒரு குறிப்பிட்ட தொகையைக் கட்டவும், அதன்பேரில் நீதிமன்றத்தின் பாதுகாப்பில் சொத்தை ஒப்படைக்கவும், அல்லது அந்தச் சொத்தின் மதிப்பைக் கட்டவும் அல்லது வழக்கில் கோரப்பட்ட தொகைக்கு ஈடாக இருக்கும் தொகையைக் கட்ட

வும். அல்லது நீதிமன்றத்திற்குப் பிரதிவாதியை வரவழைத்து ஏன் உத்திரவாதப் பாதுகாப்புக் கொடுக்கக் கூடாது. என்ற காரணத்தைச் சொல்லவும். நீதிமன்றம் ஆணையிடலாம்; அல்லது, அவசியமானுல் பிரதிவாதியின் மேற்குறிப்பிட்ட சொத்தைத் தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்ய நீதிமன்றம் ஆணையிடலாம்.

மேற் கூறியவாறு நீதிமன்றம் ஆணையிடவில்லையானுல், வாதி, பிரதிவாதியின் எந்தக் குறிப்பிட்ட சொத்தை ஜப்தி செய்ய வேண்டும் எனவும், அந்தச் சொத்தின் மதிப்பையும் குறிப்பிட வேண்டும். அவ்விதமாகத் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் பேரில் நீதிமன்றம் சில நிபந்தனையின்கீழ் மேற்படிச் சொத்தை ஜப்தி செய்ய உத்தரவிடலாம். அதன்படி பாதியோ, அல்லது வேறு குறிப்பிட்ட தொகை கட்டுவதானுல், ஜப்தி செய்யாமலும் விடலாம்.

நீதிமன்றம் விதித்த நிபந்தனைகளைப் பிரதிவாதி நிறைவேற்ற வில்லையானுலும் அல்லது ஏன் பாதுகாப்புத்தரக் கூடாது என்பதற்கான காரணம் காட்டாவிட்டாலும் அல்லது பாது காப்புத் தரவேண்டுமென்று விதித்தபடி பாதுகாப்புக் கொடுக்கப் படாத நிலையிலும் நீதிமன்றம் குறிப்பிட்ட சொத்தை அல்லது அதன் பகுதியை ஜப்தி செய்ய ஆணையிடலாம்.

பிரதிவாதி ஏன் தன் சொத்தை ஜப்தி செய்யக் கூடாது என்று திருப்தியளிக்கும் காரணம் காட்டினுலும், அல்லது தகுந்த பாதுகாப்பு அளித்தாலும் அவருடைய சொத்து எதுவும் ஜப்தி செய்யப்படமாட்டாது. ஏற்கெனவே அவருடைய சொத்து ஜப்தி செய்யப்பட்டிருந்தாலும், அந்த ஜப்தி நீக்கப்படும். அல்லது நீதிமன்றம் அந்தச் சந்தர்ப்பத்தில் எது தகுதி என்று கருதுகின்றதோ, அந்தக் கட்டளையைவிதிக்கலாம்.

நீதிமன்றம் வேறுவிதமான நிபந்தனைகள் விதிக்கவில்லை யானுல் தீர்ப்புக்கு முன் செய்யப்படும் ஜப்தி சாதாரணமாக தீர்ப்பாணையை நிறைவேற்றும் போது செய்யப்படும் ஜப்தி போலவே அமையும்.

தீர்ப்பிற்கு முன் ஜப்தி செய்யப்பட்ட சொத்தின் மீது பிரதி வாதி தவிர வேறு ஒருவர், தமக்கு அந்தச் சொத்தில் பாத்தி யத்தையுண்டு, என்று கோருவாரானுல் அந்த மூன்றுவது நபருடைய கோரிக்கை மீது சாதாரணமாகச் செய்யப்படும் பரிசீலனைசெய்யப்பட்டு அதுபற்றி முடிவெடுக்கப்படும்.

தீர்ப்பிற்கு முன் ஒரு சொத்து ஜப்தி செய்யப்பட்டிருந்தால் அந்த ஜப்திக்கான உத்திரவாதத் தொகையை, செலவுத் தொகையுடன் பிரதிவாதி கட்டி விட்டாலோ, அல்லது மேற்படி வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டாலோ, ஜப்தி நீக்கப்பட்டு விடும்.

இவ்விதமான தீர்ப்பிற்கு முன் ஜப்தி செய்யப்பட்ட சொத்தில் பாத்தியதை கொண்டவர்களின் உரிமைகளை அந்த ஜப்தி பாதிக்காது அவ்வாறு ஜப்தி செய்யப்பட்ட சொத்தில் பாத்தியதையுள்ளவர்கள் ஏதாவது நீதிமன்றத் தீர்ப்பாணை நிறைவேற்றப்பட்டதின் காரணமாக அச் சொத்தின்மீது உரிமை காரணமாக எழுத்து அல்லது வேறு விபத்தில் பாத்தியதை கொண்டவர்கள், அந்தச் சொத்தை விற்பதற்காக விண்ணப்பிப்பதற்குத் தடையேதுமில்லை

தீர்ப்பிற்கு முன் ஒரு சொத்து ஜப்தி செய்யப் பட்டிருந்தால் அந்த வழக்கின் தீர்ப்பாணை நிறைவேற்றுவதில் திரும்பவும் அச் சொத்தை ஜப்தி செய்ய வேண்டிய அவசியமில்லை.

தீர்ப்பிற்கு முன் ஜப்தி செய்வதில், நீதிமன்றம் பிரதிவாதி விவசாயியாயிருப்பாரானால் அவர் வசமுள்ள விவசாயப் பொருள்களை அல்லது தானியங்களை ஜப்தி செய்ய ஆணையிடக் கூடாது.

சிறு காரண நீதிமன்றம் அசையாச் சொத்துகளின் மீது ஜப்தி ஆணை பிறப்பிக்க முடியாது (கட்டளை 38 விதி 5 முதல் 13).

15. தற்காலத்தடை, செயல் ஆணைகள் இடைக்கால ஆணைகள்

(Stay, Temporary Injunctios and Interlocutory Orders)

எந்த ஒரு வழக்கிலும் அந்த வழக்கு சம்பந்தப்பட்ட சொத்து பாழாக்கப்படவோ, அல்லது சிதைக்கப்படவோ, அல்லது வழக்கின் கட்சிக்காரர் யாராவது விற்கப்படவோ, அல்லது தவறுதலாக வேறு தீர்ப்பாணைப்படி விற்கப்படவோ கூடுமென்ற அபாயநிலையிருக்குமானால் அதைத் தடுக்கும்பொருட்டுப் பாதிக்கப் படும் கட்சிக்காரர் சத்திய வாக்கு மூலத்துடன் விண்ணப்பித்து அதை நிரூபிப்பாரானல், அல்லது வழக்கில் சம்பந்தப்பட்ட சொத்தைப் பிரதிவாதி வேறு இடத்திற்குக் கடத்தி விடுவா ரானலும், விற்று விடுவதாகப் பயமுறுத்தினலும் அல்லது விற்பதற் கான நோக்கம் கொண்டிருப்பாரானலும் அவ்வாறு செய்து தனக்குக் கடன் கொடுத்தவர்களை ஏமாற்றும் நோக்கம் கொண் டிருந்தாலும் அதைத் தடுப்பதற்கு நீதிமன்றம் தற்காலத் தடை யுத்தரவைப் பிறப்பித்து, அதன்படி அந்தச் செயலைத் தடுக்கவும், அல்லது சிதைப்பதை அல்லது விற்றுவிடுவதை, கடத்தி விடுவதை வழக்கு முடியும் வரை தடை செய்யும் விதத்தில் எது நியாயம் என்று நீதிமன்றம் கருதுகின்றதோ, அந்தப்படியான ஆணையோ அல்லது அதைத் தொடர்ந்த வேறு ஆணைகளையோ பிறப்பிக்கலாம்

இதைப் போன்று ஒப்பந்தம் சம்பந்தமான வழக்குகளில் ஒப்பந்த நிபந்தனைகளை மீறக்கூடாது என்றும் அவ்வாறு மீறப் பட்டிருப்பின் திரும்ப மீறக் கூடாது என்றும் அல்லது வேறு ஒப்பந்த நிபந்தனைகளை வேறுவிதமாகப் பாதிக்கக்கூடிய காரி யத்தைச் செய்யவும் தடை விதிக்கலாம். இவ்வழக்குகளில்

ச—9

பாதிக்கப்பட்டவர் சத்தியவாக்கு மூலத்துடன் விண்ணப்பித்துக் கொள்ளும்போது, வழக்கு நடைபெற்றுக் கொண்டிருந்தாலும், அல்லது தீர்ப்பு வழங்கப்பட்டாலும், வழக்கிலுள்ள ஒப்பந்த நிபந்தனையை மீறக் கூடாது. அல்லது தீங்கேதும் இழைக்கக் கூடாது என்ற அதிகார ஆணை நீதிமன்றம் பிறப்பிக்கலாம். ஒப்பந்தம் சம்பந்தமாகப் பாதிக்கும் உரிமைகள், அதை மீறு வதால் ஏற்படும் கேடுகளைத் தவிர்ப்பதற்காகத் தற்காலத் தடை அல்லது எதை உடன் செய்ய வேண்டுமென்றும் அதிகார ஆணைகளைப் பிறப்பிக்கலாம்.

இவ்வாறு பிறப்பிக்கப்படும் தடை, அல்லது செயல், ஆணைகளை யாரும் மீறுவார்களானால் அவ்வாறு மீறுபவர் களுடைய சொத்துகளை ஜப்தி செய்யவும் அது மட்டுமில்லாது அவரைக் கைது செய்து சமூக உரிமைச் சிறையில் ஆறுமாத காலத்திற்கு மிகைப்படாமல் சிறைவைக்கவும் முடியும். அவசிய மானால் அவ்வாறு சிறையிலிருக்கும் போது அவரை எந்த வேளை யிலும் நீதிமன்றம் விடுதலை செய்ய ஆணையிடலாம்.

இந்தக் குறிப்பிட்ட விதிப்படி பிரதிவாதி, அல்லது வழக்கின் ஒரு கட்சிக்காரருடைய சொத்து ஜப்தி செய்யப்பட்டிருந்தால் அது ஓர் ஆண்டுக் காலத்திற்கு மேல் நீடிக்காது. அந்த ஓர் ஆண்டு முடிந்தும்கூட நீதிமன்றத் தடை அல்லது செயல் ஆணைகளை, அவர்கள மீறுவார்களானால் ஜப்தி செய்யப்பட்ட சொத்து விற்கப்பட்டு, அவ்வாறு விற்கப்பட்ட பணத்திலிருந்து, பாதிக்கப்பட்ட கட்சிக்காரருக்கு நீதிமன்றம் சரியென்று கருது கின்ற நட்ட ஈடு கொடுத்தது போக மீதித் தொகை இருக்கு மானால் சொத்துக்கு உரிமையாளரிடம் கொடுக்கப்படும்.

தடை அல்லது செயல் ஆணைகளை (injuntions) வழங்கும் போது காலதாமதம் செய்தால் மேற்படி ஆணைகள் வழங்கு வதின் நோக்கம் பழுதடையும் அல்லது தோல்வியுறும் என்ற நிலையில்லையானால் ஏன் அப்படிப்பட்ட தடை அல்லது செயல் ஆணைகளைப் பிறப்பிக்கக் கூடாது என்று கேட்டு அவ்வாணையால் பாதிக்கப்படும் கட்சிக்காரருக்கு அறிவிப்புக் கொடுத்து, அவர்கள் ஆட்சேபணைகளைப் பரிசீலித்த பிறகே அவ்வாணைகள் கொடுக்கப் படும்.

அதனால் தடை அல்லது செயல் ஆணைகள் பிறப்பிக்கப் பட்டபிறகு அவ்வாணைகளால் பாதிக்கப்பட்டவர்களுடைய மனுவின் பேரில் அவ்வாணைகள் பொருத்தமில்லாதது எனக்

காணப்படுமிடத்து அவைகளை நீதிமன்றம் நீக்கிவிடவோ, அல்லது மாற்றிடவோ, தள்ளிவிடவோ கூடும்.

இவ்வகையில் இடப்பட்ட தடை அல்லது செயல் ஆணைகள் கூட்டுத்தொழிலை (Corporation) கட்டுப்படுத்துவதாயிருந்தால் ஒட்டு மொத்தமாக அத்தொழிலை மட்டுமில்லாது அதனுடைய அங்கத்தினர்கள் அத்தொழில் அதிகாரிகளின் தனிப்பட்ட செயல்களையும் கட்டுப்படுத்தும் (கட்டளை 39. விதிகள் 1முதல் 5).

இடைக்கால ஆணைகள் (Interlocutory Orders)

ஒரு வழக்கின் கட்சிக்காரரின் விண்ணப்பத்தின் பேரில், வழக்கில் சம்பந்தப்பட்ட அசையும் பொருளாயிருந்து அப்பொருள் இயற்கையில் எளிதில் கெட்டுப் போகும் தன்மை கொண்டிருந்தால் அல்லது அதற்கிணையான காரணங்களுக்காகவும் அல்லது அவை தீர்ப்பிற்கு முன் ஜப்தி செய்யப்பட்ட பொருளாயிருந்தாலும், அதை உடனே விற்பனை செய்ய நீதிமன்றம் ஆணையிடலாம். அவ்வாணையில் யார் விற்கவேண்டும், எந்த வகையில் விற்கவேண்டும் எனவும் நீதிமன்றம் நியாயமெனக் கருதும் நிபந்தனைகளுடன் விற்பதற்கு வகைசெய்யலாம்.

வழக்கில் சம்பந்தப்பட்ட ஒரு கட்சிக்காரரின் விண்ணப்பத்தின் பேரில் நீதிமன்றம் சரியெனக் கருதுகின்ற நிபந்தனைகளின் பேரில்,

1. வழக்குச் சொத்தை இருப்பில் வைக்கவோ, பாதுகாக்கவோ, அதைச் சோதனையிடவோ, அவைகள் சம்பந்தப்பட்ட கேள்விகளுக்கும், பதிலுரைக்கும் வண்ணம் அவசர ஆணைகள் பிறப்பிக்கலாம்.

2. மேற்குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்காக, மேற்படிச் சொத்து வேறு யார் வசமிருப்பினும் அதில் நுழைய யாரையும் நீதிமன்றம் அனுமதி வழங்கலாம்.

3. மேற்குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்காக ஒரு பொருளின் மாதிரி (Sample) எடுக்கவும், பரிசோதிக்கவும் அல்லது செயல் முறையைக் பார்க்கவும் (expriment) அவைகளை ஆராய்வது குறிப்பிட்ட சூழ்நிலையில் அவசியம் என்று கருதுமிடத்தும் நீதிமன்றம் அவசர ஆணைகளைப் பிறப்பிக்கலாம்.

அதுபோல நீதிமன்ற ஆணைகளை நிறைவேற்றவும், அவசர நடவடிக்கைகளை நீதிமன்றம் உத்தரவிடலாம்.

வழக்கு நடை முறையிலிருக்கும் போது மேற் குறிப்பிட்ட அவசர ஆணைகள் பிறப்பிக்கப்படுமானால் நீதிமன்றம் எதிர்த் தரப்புக்கு அறிக்கை கொடுத்துவிட்டு அவர்களுடைய ஆட்சேபணைகளைக் கேட்டு விட்டும் அவ்வாணைகளைப் பிறப்பிக்கலாம். (கட்டளை 39. விதி 7ம் 8ம்).

16. உடைமைக் காப்பாளர்களை நியமித்தல்

(Appointment of Receiver)

நீதிமன்றத்திற்கு நியாயம், அல்லது வசதி என்று படும்போது வழக்கு சம்பந்தப்பட்ட சொத்தின் உடைமைக் காப்பாளர்களை நியமிக்கலாம்.

இவ்வாறு உடைமைக் காப்பாளர்களைத் தீர்ப்பாணைக்குமுன்னும் அல்லது பின்னும் நீதிமன்றம் நியமிக்கலாம்.

ஒருவரைச் சொத்தின் உடைமையிலிருந்து நீக்க ஆணையிட்டு, அந்த இடத்தில் அச்சொத்து சம்பந்தப்பட்ட விவகாரம் தீரும் வரை அச்சொத்திற்கு உடைமைக் காப்பாளரை நியமிக்கலாம்.

அதோடு மேற்படி உடைமைக் காப்பாளர்களுக்குச் சில அதிகாரங்களை நீதிமன்றம் வழங்கும். அதன்படி அவர்கள் அச்சொத்து சம்பந்தமாக வழக்குப் போடவும், அதன் மீது வழக்கு யாராவது போட்டிருந்தால் அதில் எதிர்வழக்காடவும், அச்சொத்தை அபிவிருத்திசெய்யவும், அச் சொத்திலிருந்து வரும் வாடகை வசூலிப்பது அல்லது வேறு வரவுகளைப் பெறுவது, அவ்வருமானங்களைப் பயன் படுத்துதல், அவை சம்பந்தமான எழுத்து ஆதாரங்கள் பத்திரங்களைத் தயார் செய்தல், இன்னும் இதுபோன்ற நீதிமன்றத்திற்குச் சரியெனப்படும் காரியங்களைச் செய்யவும் அதிகாரங்கள் வழங்கப் படலாம்.

ஒருவரை ஒரு சொத்தின் உடைமையிலிருந்து நீக்குவதானால் அவரை அவ்விதம் நீக்கக் கோருபவருக்கு அவ்வுரிமை யிருந்தாலன்றி நீதிமன்றம் ஒருவருடைய உடைமை யிலிருந்தோ அல்லது பாதுகாப்பிலிருந்தோ அச்சொத்தை நீக்கிவிடக் கூடாது.

இவ்விதமாக நியமிக்கப்படும் உடைமைக் காப்பாளருக்கு நீதி மன்றம் நியாயம் எனக்கருதும் ஊதியம் அவர்களுடைய சேவைகளுக்காகக் கொடுக்கும்படி ஆணையிடும்.

உடைமைக் காப்பாளர்களின் கடமைகள்

நீதிமன்றம் வேண்டாமெனக் கருதினுலொழிய உடைமைக் காப்பாளர்கள் ஒரு குறிப்பிட்ட பாதுகாப்புத் தொகை கட்ட வேண்டும். அது உடைமைக் காப்பாளர் கையாளும் சொத்தின் மதிப்பைப் பொறுத்ததாயிருக்கும்.

2. எந்த வடிவில் எந்தெந்தச் சமயங்களில் கணக்குகள் ஒப்படைக்க வேண்டுமென்று நீதிமன்றம் கருதுகின்றதோ, அந்தப்படி கணக்கு ஒப்படைக்க வேண்டும்.

3. தன்னிடமிருந்து கட்ட வேண்டிய பணத்தை நீதிமன்றம் ஆணையிடும் விதத்தில் கட்ட வேண்டும்.

4. உடைமைக் காப்பாளர் தன்னுடைய அசட்டையினுலும், கவலையீனத்தினுலும் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட சொத்திற்கு நட்டம் ஏற்படின் அதற்கு அவரே பொறுப்பு ஏற்க வேண்டும்.

உடைமைக் காப்பாளர் தக்கபடி அதாவது குறிப்பிட்ட வடிவத்திலும், காலத்திலும் கணக்கு ஒப்படைக்கத் தவறினுல் அவ்விதம் கணக்கு ஒப்படைக்கும் வரை அவருடைய சொத்து ஜப்தி செய்யப்படும்.

நீதிமன்றம் தன்னிச்சையாகவோ, அல்லது கட்சிக்காரரின் விண்ணப்பத்தின் பேரிலோ, உடைமைக்கப்பாளர் எவ்வளவு பணம் கட்டவேண்டுமென்று அவருடைய கணக்கைப் பொறுத்தும் விசாரணை நடத்தலாம். அல்லது உடைமைக் காப்பாளர் அவருடைய கவலையீனத்தினுலும், குற்றம் குறையினுலும் சொத்திற்கு நட்டம் ஏதாவது ஏற்பட்டிருக்கின்றதா, அல்லது உடைமைக் காப்பாளரிட மிருந்து வரவேண்டிய பணத்தை உடனே அல்லது குறிப்பிட்ட நாளில் கட்டச் சொல்லி நீதிமன்றம் ஆணையிடலாம்.

இவ்வாறு விசாரணை நடத்தும்போது உடைமைக் காப்பாளர் மற்றும் கட்சிக்காரர்கள் அனைவருக்கும், இந்த விசாரணை பற்றிய அறிவிப்பு பதிவுத் தபாலின் மூலம் அனுப்பப்படும். அந்த அறிவிப்பு உடைமைக் காப்பாளருக்காகப் பிணை கொடுத்தவருக்கும் அனுப்பப்பட்டு அவரும் உடைமைக் காப்பாளருடன் இவ்விசாரணையில், ஒரு கட்சிக்காரராகவே கருதப்படுவார்.

உடைமைக் காப்பாளர் கொடுத்த கணக்கு சர்ச்சைக் குரியதாகயிருக்குமானாலும், அல்லது சிக்கலானதா யிருக்குமானாலும், அல்லது அவருடைய குறையினாலும் அல்லது கவலையீனத்திலும் சொத்துக்குப் பெரிய நட்டம் ஏற்பட்டிருப்பது காணப்பட்டால் அதைப் பற்றி ஏனைய கட்சிக்காரர்களுக்குத் தெரிவிக்கப்படும். அவ்வாறு தெவிக்கப்படும் காரணங்களை நீதிமன்றம் குறித்துக் கொள்ளவேண்டும்.

உடைமைக் காப்பாளர், நீதிமன்றம் ஆணையிட்டபடி கட்ட வேண்டிய தொகையைக் குறிப்பிட்ட நாளில் கட்டத் தவறினால், நீதிமன்றம் அவர் கொடுத்திருந்த பாதுகாப்புத் தொகை அல்லது பொறுப்பாகக் கொடுத்த சொத்திலிருந்து அந்தத் தொகையை பிடித்துக் கொள்ள ஆணையிடும். அவ்வாறு பாதுகாப்பு ஏதும் கொடுக்காதிருந்தால், அவருடைய சொத்தை ஜப்தி செய்து, விற்றுச் சேரவேண்டிய பணத்தை மீட்டது போக மீத முள்ளதை சொத்துக் காப்பாளரிடம் கொடுத்துவிடலாம். ஏற்கெனவே அவருடைய சொத்து ஜப்தி செய்யப்பட்டிருக்குமானால் அதை விற்று அந்தத் தொகையிலிருந்து சொத்துக்கு அவரால் ஏற்பட்ட நட்டத்தையும் அதோடு அவரிடமிருந்து சேரவேண்டிய பாக்கித் தொகையை எடுத்துக் கொண்டு, மீதியை அவருக்குத் திருப்பிக் கொடுக்க நீதிமன்றம் கட்டளையிடும்.

அரசுக்கு வரிகட்டும் நிலமாயிருந்து, அரசுத்துறை, வருவாய் மீட்கப்பட்டு அல்லது அதுக்கென்று ஒதுக்கப்பட வேண்டியிருந்தால், அந்நலனைப் பாதுகாக்கும் பொருட்டு மாவட்ட ஆட்சித் தலைவரை, அந்நிலத்திற்கு உடைமைக்காப்பாளராக நியமிக்கலாம்.

அது போலவே, கூட்டுறவுச் சங்கம் சம்பந்தப்பட்ட சொத்துக்கு உடைமைக் காப்பாளராக, அந்தச் சங்கத்தின் நலன் கருதி அந்தத் துறை அதிகாரியை நியமிக்கலாமென நீதிமன்றம் கருதினால் அவ்வதிகாரியையும் நியமிக்கலாம்.

17. நிறைவேற்றல்

(Execution)

நீதிமன்றத் தீர்ப்பாணைகளையும், அல்லது கட்டளைகளையும் நிறைவேற்றும் விதம் ஏறத்தாழ ஒரே முறையிலேயே இருக்கும் (பிரிவு 36).

தீர்ப்பாணையை வழங்கிய நீதிமன்றம் என்பது நேர்முகமாகத் தீர்ப்பாணையை வழங்கிய அசல் நீதிமன்றம் மட்டுமில்லாமல், மேல் வழக்கில் வழங்கப்படும் தீர்ப்பாணையாயிருக்குமானல், அம் மேல் நீதிமன்றமும் அதற்கிணையாகக் கருதப்படும். ஏனென்ருல் அத் தீர்ப்பாணையும் நிறைவேற்றத் தகுதியுடையதாகும்.

அசல் வழக்கில் நேர்முகமாகத் தீர்ப்பாணை வழங்கிய நீதி மன்றம் பின்பு இல்லாமலிருக்க நேரிடின் அந்நீதிமன்றத்தின் அதிகார வரம்பு வேறு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டிருக்கு மானல் அந்நீதிமன்றம் அத்தீர்ப்பாணையை வழங்கிய நீதிமன்ற மாகக் கருதப்படும். அந்நீதிமன்றம் அந்தத் தீர்ப்பாணையை நிறைவேற்றும் நீதிமன்றமாகவும் கருதப்படும் (பிரிவு 37).

தீர்ப்பாணையை நிறைவேற்றும் நீதிமன்றம்

எந்த நீதிமன்றம் தீர்ப்பாணையை வழங்கியதோ, அதே நீதி மன்றம் அத்தீர்ப்பாணையை நிறைவேற்றலாம், அல்லது எந்த நீதிமன்றத்திற்கு அத்தீர்ப்பாணை, நிறைவேற்றுவதற்காக அனுப்பப்படுகின்றதோ, அந்நீதிமன்றமும் தீர்ப்பாணை நிறை வேற்றும் நீதிமன்றமாகக் கருதப்படும் (பிரிவு 38).

தீர்ப்பாணை வழங்கிய நீதிமன்றம் தீர்ப்பாணை பெற்ற வருடைய விண்ணப்பத்தின் பேரில் அத்தீர்ப்பாணையை

நிறைவேற்றுவதற்காகக் கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் வேறு நீதி மன்றத்திற்கு அனுப்பலாம்.

1. தீர்ப்பாணை யாருக்கு எதிராக வழங்கப்பட்டதோ, அவர் வேறு நீதிமன்றத்தின் வட்டார அதிகார வரம்பிற்குள் வசிப்பவராலும், அல்லது தொழில் அல்லது வியாபாரம் செய்பவராலும் அல்லது வேலை செய்பவரானாலும், அல்லது அங்கு அவருடைய சொத்துகள் இருக்குமானாலும்,

2. தீர்ப்பாணை வழங்கிய நீதிமன்றத்தின் அதிகார எல்லைக் குள் யாருக்கு விரோதமாகத் தீர்ப்பாணை வழங்கப்பட்டதோ, அவருக்குத் தீர்ப்பாணை நிறைவேற்றிக்கொள்ளத் தக்க அளவிற்குப் போதுமான, சொத்தோ, அல்லது சொத்தேதுமில்லாமல் வேறு நீதிமன்றத்தின் அதிகார எல்லைக்குள் அவருக்குத் தீர்ப்பாணை நிறைவேற்றத்தக்க அளவிற்குச் சொத்து இருக்குமானாலும்,

3. தீர்ப்பாணை வேறு நீதிமன்ற அதிகார எல்லைக்குள் உள்ள அசையாச் சொத்துகளை திருப்பிக் கொடுப்பதற்காகவும் (delivery) அல்லது விற்பதற்காகவுமானதாக இருந்தால் அந் நீதிமன்றத்திற்கு மேற்படித் தீர்ப்பாணை நிறைவேற்றுவதற் காகவும் அனுப்பப்படலாம்.

4. வேறு நியாயமான காரணங்களுக்காகத் தீர்ப்பாணை வழங்கிய நீதிமன்றம் அத்திர்ப்பாணையை நிறைவேற்றுவதற்காக வேறு நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டுமெனக் கருதினால், அதற்கான காரணங்களைப் பதிவு செய்து கொண்டு அந்நீதி மன்றம் வேறு நீதிமன்றத்திற்கு அத்தீர்ப்பாணையை நிறை வேற்றும்பொருட்டு அனுப்பி வைக்கலாம்.

தீர்ப்பாணை வழங்கிய எந்த நீதிமன்றமும் தன்னிச்சை யாகவே அத்தீர்ப்பாணையை நிறைவேற்றுவதற்காகத் தனக்குக் கீழ்ப்பட்ட, அதை நிறைவேற்றும் தகுதி படைத்த நீதிமன்றத்திற் கும் அனுப்பிவைக்கலாம்.

வேறு மாநிலத்திலுள்ள நீதிமன்றங்களுக்குத் தீர்ப்பாணையை நிறைவேற்றுவதற்காக அனுப்புதல்

ஒரு மாநிலத்திலுள்ள நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப் பாணை நிறைவேற்றப்படுவதற்காக வேறு மாநிலத்திலுள்ள நீதி

மன்றத்திற்கு அனுப்பப்படுமானல் அந்நீதிமன்றம் அந்த மாநிலத்தில் அமலிலுள்ள விதிகளுக்குட்பட்டு எந்த விதத்தில் அத்தீர்ப்பாணை நிறைவேற்றப்படவேண்டுமோ அதன்படி அது நிறைவேற்றப்படும்.

Benares Ice Factory Vs Shukla AIR 1961 Cal 422

(பிரிவு 40).

தீர்ப்பாணை நிறைவேற்றப் படுவதற்காக வேறு நீதிமன்றத்திற்கு அனுப்பப்படுமானல் அந்நீதிமன்றம் அத்தீர்ப்பாணையை நிறைவேற்றியதற்கான அத்தாட்சியைத் திருப்பி அனுப்ப வேண்டும், அல்லது அதை நிறைவேற்ற முடியாததற்கான சூழ்நிலைகள் காரணங்களைக் குறிப்பிட்டுத் தீர்ப்பாணை வழங்கிய நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும் (பிரிவு 41).

தீர்ப்பாணையை நிறைவேற்றும் நீதிமன்றம் அத்தீர்ப்பாணையை வழங்கிய நீதிமன்றம் என்ன அதிகாரம் கொண்டிருக்கின்றதோ, அதே போன்ற அதாவது, அத்தீர்ப்பாணையைத் தானே வழங்கியது போன்ற அதிகாரம் கொண்டிருக்கும். எனவே அத்தீர்ப்பாணை நிறைவேற்றும் போது, அதற்குப் பணியாதவர்களையும், அதைத் தடுக்கின்றவர்களையும், அத்தீர்ப்பாணை வழங்கிய நீதிமன்றம் அவர்களை எந்த விதத்தில் தண்டிக்கத் தகுதியுடையதோ, அதே முறையில் அத்தீர்ப்பாணையை நிறைவேற்றும், நீதிமன்றம் தண்டிக்க முடியும். தீர்ப்பாணை நிறைவேற்றும் நீதிமன்றத்தின் ஆணைகள் எப்படித் தீர்ப்பாணை வழங்கிய நீதிமன்றத்தின் ஆணைகளிலிருந்து மேல் வழக்காக எடுக்கப்படுமோ அதே விதத்தில் அந்நீதி மன்றம் கொடுக்கும் ஆணைகளிலிருந்தும் மேல் வழக்கு எடுக்கலாம் (பிரிவு 42).

வெளிநாட்டுத் தீர்ப்பாணைகளை நிறைவேற்றுதல்

நம் நாட்டுடன் ஒன்றுக்கொன்று நட்புத் தொடர்பு கொண்டிருக்கும் நாட்டின் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பாணையை நம் நாட்டிலுள்ள நீதிமன்றங்கள் நிறைவேற்றலாம். அதன்படி அந்நாட்டின் உயர்தர நீதிமன்றத் (Superior Court) தின் தீர்ப்பாணையின் அத்தாட்சி பெற்ற நகலுடன், அதை நிறைவேற்றக் கோரப்படும் மனு, நம் நாட்டின் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டால், அம் மாவட்ட நீதிமன்றம் அந்தத்தீர்ப்பாணையை, தானே வழங்கிய தீர்ப்பாணையைப் போல் கருதி அதை நிறைவேற்றும்.

மேற்குறிப்பிட்டபடி அத்தாட்சி பெற்ற தீர்ப்பாணை நகலுடன் மேற்கொண்டு அத்தீர்ப்பாணையை வழங்கிய நீதிமன்றத்திலிருந்து ஒரு அத்தாட்சியும், அதில் அந்தத் தீர்ப்பாணை எந்த அளவிற்கு நிறைவேற்றப் பட்டிருக்கின்றது, அல்லது சரிசெய்யப் பட்டிருக்கின்றது என்ற விவரங்களைக் கொடுக்க வேண்டும். இவ் விதம் நம்முடை நீதிமன்றத்தில் அந்தத் தீர்பாணை நிறைவேற்றப் படுவதற்கு, அத்தீர்பாணை எந்த அளவுக்கு நிறைவேற்றப்பட்டது என்பதாக வழங்கப்பட்ட அத்தாட்சி அறுதியான சான்றுறுதியாகக் கொள்ளப்படும் (Conclusive proof).

இந்தப் பகுதியில் பிரிவு 47-ல் உள்ளபடி நிறைவேற்றுதல் (execution) விடுவிப்பு(discharge) தீர்த்தல் (satisfaction) முதலிய விவகாரங்கள் பற்றித் தனி வழக்குப் போடாமல் தீர்ப்பாணையை நிறைவேற்றுகின்ற நீதிமன்றத்திலேயே மேற்குறிப்பிட்ட மூன்று வகையான கேள்விகளுக்குத் தீர்வுகாண வேண்டும்.

ஆனால் பிரிவு 13-ன் கீழ் கொடுக்கப்பட்டிருக்கின்ற 6 விதமான குறைபாடுகளில் ஒன்று அல்லது பல உள்ள அயல் நாட்டு நீதிமன்றத் தீர்ப்பாணையாயிருந்தால், அதை நிறைவேற்ற நம் நீதிமன்றம் மறுத்துவிடலாம்.

நம் நாட்டுடன் ஒன்றுக் கொன்று நட்புறவு கொண்ட நாடு (Receprocating territory) என்பது நம்முடைய மத்திய அரசால் இந்தக் காரணத்திற்காக, ஒரு நாடு நம் நாட்டுடன் நட்புறவு கொண்டது என்று அரசிதழில் குறிப்பிடப்பட்ட நாடாகும். அது போன்று மேலான நீதிமன்றம் (Superiar Court) என்பதும் வெளிநாட்டில் எவ்வகையான நீதிமன்றம் இக்கருத்திற்காக மேலான நீதிமன்றம் என்று மத்திய அரசால் அரசிதழில் குறிக்கப்பட்ட நீதிமன்றமாகும்.

அவ்வகையான நீதிமன்றத் தீர்ப்பாணை என்பது அவ் வெளிநாட்டு நீதிமன்றத் தீர்ப்பாணையையும் தீர்ப்பையும் குறிக்கும். அதன்படி ஒருவர் மற்றவருக்கு ஏதாவது ஒரு குறிப்பிட்ட தொகை கொடுக்க வேண்டியிருக்க வேண்டும். அவ்வாறு கொடுக்க வேண்டிய பணம் அந்நாட்டுக்குச் செலுத்தப்பட வேண்டிய வரிப்பாக்கியாக, அல்லது அது போன்று அரசுக்குச் செலுத்த வேண்டிய பாக்கிப் பணமாக அல்லது அபராதத் தொகையாகவோ, தண்டமாக இருத்தல் கூடாது. அவ்வகைப் பட்டா தாயிருப்பின் அதை நம் நாட்டில் நிறைவேற்ற முடியாது

அதுபோல இசைவுத் தீர்ப்பு முறையில் (Arbitration) கொடுக்கப் பட்ட தீர்ப்பு. அந்நாட்டில் சாதாரணமாக நிறைவேற்றப்படக் கூடியதாக விருந்தாலும், நம் நீதிமன்றங்களின் வாயிலாக, நிறைவேற்றப் படக் கூடியதல்ல (பிரிவு 44A).

ஒரு நீதிமன்ற எல்லை கடந்து வேறு நீதிமன்ற எல்லைக்குள் நிறைவேற்றப்படும் ஆணை பற்றுணை (Precept)

ஒரு தீர்ப்பாணை வழங்கப்பட்ட பிறகு தீர்ப்பாணைக்குரிய வருடைய விண்ணப்பத்தின் பேரில் தீர்ப்பு வழங்கிய நீதிமன்றம் பற்றுணை (Precept) ஒன்று வழங்கி அதன்படி தீர்ப்புக் கடனாளி யின் சொத்து வேறு நிறைவேற்றும் தகுதியுடைய நீதிமன்ற அதிகாரஎல்லைக்குள்ளிருந்தால் அந்நீதிமன்றம் அந்தப் பற்றுணை யில் குறிப்பிட்ட அவருடைய சொத்தை ஜப்தி செய்யும்.

அவ்வாறு வேறு நீதிமன்றம் ஜப்தி செய்யும் போது சாதாரண மாகத் தீர்ப்பாணை நிறைவேற்றும் போது, எம்முறையில் சொத்துகள் ஜப்தி செய்யப்படுமோ, அந்த வகையில் அத்தீர்ப்புக் கடனாளியின் சொத்துகள் ஜப்தி செய்யப்படும்.

சாதாரணமாக மேலே குறிக்கப்பட்ட பற்றுணை (Precept) இரண்டு மாத காலத்திற்குத் தான் செல்லுபடியாகும். ஆனால், நீதிமன்றத்தின் ஆணைப்படி அக்காலம் நீடிக்கப் படலாம். அல்லது தீர்ப்பாணை வழங்கிய நீதிமன்றத்திலிருந்து தீர்ப்பாணை நிறைவேற்றுகின்ற நீதிமன்றத்திற்கு அந்த இரண்டுமாத காலம் அல்லது அதற்கு மேல் நீடிக்கப்பட்ட காலத்திற்குள் நிறைவேற்று வதற்காக மேற்படித் தீர்ப்பாணை அனுப்பப்பட்டால், அக்கால வரையறையைக் கடந்து அந்த ஜப்தி நீடிக்கும். அதற்குள் தீர்ப்பாணை பெற்றவர் நிறைவேற்றும் நீதிமன்றத்தில் ஜப்தி செய்த சொத்தை விற்பதற்காக மனுச் செய்திருக்கலாம் (பிரிவு 46).

நிறைவேற்றும் நீதிமன்றம் முடிவு செய்யும் பிரச்சினைகள்

ஒரு தீர்ப்பாணை நிறைவேற்றுதல் (Execution), விடுவிப்பு (discharge), தீர்த்தல் (Satisfaction) முதலிய மூன்று காரியங்கள் குறித்து எழுதப்படும் பிரச்சினைகளை நிறைவேற்றும் நீதிமன்றம் தவிர வேறு நீதிமன்றத்தில் சம்பந்தப்பட்ட யாரும் தனிப்பட்ட வழக்குத் தொடர்ந்து தீர்வு காணக்கூடாது.

ஆனால் நிறைவேற்றும் நீதிமன்றம், தீர்ப்பாணை வழங்கிய நீதிமன்றத்தின் அதிகாரவரம்பு அல்லது கால வரம்பு பற்றிய பிரச்சினையின் கீழெழுந்த காரியங்களை முடிவு செய்வதானால் அக்காரியங்களை ஒரு வழக்குப் போல நடத்தித்தான் தீர்வு காணமுடியும் என்று அந்நீதிமன்றம் கருதினால், அதன்படி அந்தப் பிரச்சினையைத் தீர்க்க அதை முழுவழக்காகவே மாற்றி அதற்கு வேறாக நீதிமன்றக் கட்டணம் கட்டவேண்டுமானாலும் கட்டக் கட்டளையிட்டு அந்நீதிமன்றமே அதை நடத்தும்.

ஒருவர் ஒரு கட்சிக்காரரின் பிரதிநிதியா, அல்லது இல்லையா என்ற கேள்வியை நிர்ணயிக்கும் பொறுப்பும், தீர்ப்பாணையை நிறைவேற்றும் போது அந்நீதிமன்றத்திற்கே உண்டு.

ஒரு தீர்ப்பாணை நிறைவேற்றப்படும் போது, தீர்ப்புக் கடனாளியின் சொத்து ஏற்கெனவே விற்கப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்படுமானால் அச் சொத்தை வாங்கியவரும், நிறைவேற்று மனுவிசாரணையில் ஒரு கட்சிக்காரராகக் கருதப்படுவார் (பிரிவு 47).

உரிமை மாற்றம் பெற்றவர் நிலை (Transferee of a decree)

தீர்ப்பாணை உரிமை மாற்றம் பெற்றவர் அத்தீர்ப்பாணைக்கு உரியவராவார். தீர்ப்புக் கடனாளி அத்தீர்ப்பாணையை எதிர்த்து எடுத்துக் கூறத்தக்க குறைகள் அடங்கியதோடு சாதாரணமாகக் கடைப்பிடிக்கப்படும் நேர்மை நெறிகளுக்கு (equities) உட்பட்டதாகும் (பிரிவு 49).

சட்டப்படியான சொத்துப் பிரதிநிதிநிலை (Position of the legal representative)

தீர்ப்புக் கடனாளி ஒருவர் தீர்ப்பாணை நிறைவேற்றப் படுமுன்னும் அல்லது முழுதும் அது நிறைவேற்றப் படாமலிருக்கும்போது இறக்க நேரிட்டால் தீர்ப்பாணை பெற்றவர் நீதிமன்றத்தின் ஆணைகோரிப் பெற்றுத் தீர்ப்புக் கடனாளியின் சட்டப்படியான சொத்துப் பிரதிநிதி மீது அத்தீர்ப்பாணையை நிறைவேற்றலாம்.

அவ்விதம் சட்டப்படியான சொத்துப் பிரதிநிதி மேல் தீர்ப்பாணை நிறைவேற்றப்படும் போது தீர்ப்புக் கடனாளி அவரிடம் விட்டுச் சென்ற சொத்தின் மதிப்புவரைதான் அவர் கட்டுப்படத்தக்கவராகின்றார். தீர்ப்புக் கடனாளி விட்டுச் சென்ற

சொத்தின் மதிப்பு எவ்வளவு என்று கணிக்கத் தீர்ப்பாணை பெற்றவர் கேட்டுக் கொண்டதாலும் அல்லது தீர்ப்பாணை நிறை வேற்றும் நீதிமன்றமே தன்னிச்சையாகவும், அந்தச் சட்டப்படி பிரதிநிதியை அச்சொத்துப் பற்றிய முழுக் கணக்கு விவரங்களைக் காட்டச் சொல்லலாம்.

தீர்ப்பாணை நிறைவேற்றும்போது கடைப்பிடிக்க வேண்டியவை

தீர்ப்பாணையை நிறைவேற்றும் போது கீழ்க்கண்ட முறைகளைக் கையாள வேண்டும். அவைகள் குறிப்பிட்ட சில நிபந்தனை களின், வரையறைகளுக்குக் கட்டுப்பட்டு நிறைவேற்றப்படும்.

1. தீர்ப்பாணைப்படித் திரும்பக் கொடுக்கப்பட வேண்டிய சொத்தைத் திரும்பப் பெறுதல்.

2. சொத்தை ஜப்தி செய்வதும் பிறகு அதை விற்பதும் அல்லது ஜப்தி செய்யாமலே அதை விற்பது மாகும்.

3. தீர்ப்புக் கடனாளியை கைதுசெய்து சமூக உரிமை சிறைக் கூடத்தில் அடைத்தலும்,

4. தீர்ப்பாணைக்குட்பட்ட சொத்துகளுக்கு பெறுநர் (Receiver) நியமித்தல்,

5. இவைகள் போக வேறு பரிகாரம் கொடுக்க வேண்டி யிருக்குமாயின் அதை எவ்வகையில் கொடுக்க முடியுமோ, அவ் வகையில் கொடுக்க ஆணையிடும்.

தீர்ப்பாணையின்படி தீர்ப்புக் கடனாளியானவர் ஒரு குறிப் பிட்ட தொகையைத் திருப்பித் தரவேண்டுமென்ற நிலையிருக்கு மானால் அவர் மீது தீர்ப்பாணை நிறைவேற்றப் படும்போது, அவர்கைது செய்யப்பட வேண்டுமானால் அவருக்கு ஏன் உன்னைக் கைது செய்யக் கூடாது என்று அறிவிப்புக் கொடுத்து அவர் ஆட்சேபணையைக் கேட்ட பின்னரே, அவசியமென்றால் அவர் கைது செய்யப்படலாம். அவ்வாறு கைது செய்யப் படுவதற்குக் கீழ்க்காணும் காரணங்கள் அவசியமாகின்றன. கைது செய்யுமுன் நீதிமன்றம் அக்காரணங்களைப் பதிவுசெய்த பின்னரே அவர் களைக் கைதுசெய்ய ஆணை பிறப்பிக்கலாம்.

1. தீர்ப்புக் கடனாளியானவர், தீர்ப்பை நிறைவேற்ற விடாமல் தடைசெய்யவும், அல்லது காலதாமதப்படுத்தும்

நோக்கோடு தீர்ப்பாணை நிறைவேற்றும் நீதிமன்றத்தின் அதிகார வரம்பை விட்டு ஓடிவிடவோ, அல்லது அதை விட்டுச் செல்லும் நிலையிலிருந்தாலோ,

2. ஒரு வழக்கில் தீர்ப்பாணை வழங்கப்பட்ட பிறகு கெட்ட எண்ணத்தோடு தீர்ப்புக்கடனாளி அவருடைய சொத்தை முழுவதுமோ, அதன் பகுதியையோ, விற்றுவிட்டாலோ, மறைத்துவிட்டாலோ, அல்லது கெட்ட எண்ணத்துடன் அச்சொத்தைப் பாதிக்கின்ற செயல் ஏதும் செய்திருந்தாலும்,

3 தீர்ப்புக் கடனாளி தீர்ப்பாணைக்குப் பிறகு தன்வசம் அந்தத் தீர்ப்பாணையை நிறைவேற்றும் வக்கு வசதியிருந்தாலும், அத்தீர்ப்பாணையை முழுவதுமோ, அல்லது அதற்குக் குறைவாகவோ, நிறைவேற்ற முடியாதபடி கொடுக்க மறுப்பதும், அல்லது கொடுக்கக் கவலையீனமாக இருந்தாலும்,

4. தீர்ப்புக் கடனாளிதான் வேறு ஒருவருக்குப் பணம் கொடுக்கவேண்டிப் பொறுப்பேற்றிருந்தாலும் (பிரிவு 81).

சட்டப்படியான சொத்து பிரதிநிதி மீது தீர்ப்பாணை நிறைவேற்றும் விதம்

ஒரு தீர்ப்பாணை சட்டப்படியான சொத்தின் பிரதிநிதிக்கு எதிராக வழங்கப்பட்டிருக்குமானால் அதன்படி அவர் தீர்ப்பாணைக் குரியவருக்குப் பணம் கட்ட வேண்டியிருக்கும். ஆனால் அதைப் பெறுவதற்கு இறந்த தீர்ப்புக் கடனாளியின் சொத்தை ஜப்தி செய்தும், அதை விற்றும், தீர்ப்பாணையை நிறைவேற்ற முடியும்.

தீர்ப்புக் கடனாளியின் சொத்துக்குச் சட்டபடியான சொத்து பிரதிநிதி வசம் இறந்தவரின் சொத்தேதுமில்லையானால், அது அவ்வாறு நிறைவேற்றப் படமுடியாது. ஆனால் அப்பிரதிநிதி வசம் ஏதாவது இறந்தவருடைய சொத்து வந்திருக்குமானால், அச்சொத்தை சட்டப்படியான காரியங்களுக்கு அதை அவர் பயன்படுத்தியதாகக் கணக்குக் கொடுக்க முடியவில்லையானால், எவ்வளவு சொத்து அவர் கைக்கு வந்ததோ, அந்தளவுச் சொத்துக் குரிய மதிப்பை, பிரதிநிதியிடமிருந்து பெறுவதற்குத் தீர்ப்பாணை அவருக்கு எதிராக நிறைவேற்றப்படும். இந்த வகையில் தீர்ப்பாணை அவருக்கு விரோதமாக வழங்கப்பட்டதாகவே கருதப்பட்டு நிறைவேற்றப்படும்.

இதேமுறையில் இந்தச் சட்டபடி பிள்ளைகள் அவர்களுடைய இறந்த முன்னோர்களின் கடன்களையும், அவர்கள் விட்டுச் சென்ற

சொத்தின் அளவிலோ, அல்லது சட்டப்படி கட்டப்பட வேண்டிய அளவிலோ அவர்கள்மீது தீர்ப்பாணை நிறைவேற்றப்படலாம் (விதி 53).

கைதுசெய்தலும் சிறையிடலும்

தீர்ப்பாணையை நிறைவேற்றும் பலவிதங்களில் ஒன்று தீர்ப்புக் கடனாளியை (Judgement debter) எந்த நேரமும் கைது செய்வதாகும். அவ்வாறு கைது செய்யப்பட்டவர் எவ்வளவு கால தாமதமின்றி நீதிமன்றத்திற்குக் கொண்டு வரப்படுவாரோ, அவ்வளவு சீக்கிரம் கொண்டு வரப்படவேண்டும். அதன் பின் சிறை வைப்பதானால், அந்நீதிமன்றம் இருக்கின்ற மாவட்ட சமூக உரிமைச் சிறைக்கூடத்தில் வைக்க ஆணையிட வேண்டும். அல்லது அங்கு இடமில்லையானாலும் மற்றெந்தக் காரணத்தினாலும் மாநில அரசு ஆணைப்படி வேறு இடத்திலும் அவர் சிறை வைக்கப்படலாம்.

ஆனால் இதற்காக, ஒருவரைச் சிறைப்பிடிப்பதற்கு எந்த இல்லத்திலும் நுழைய வேண்டியிருக்குமானால், சூரிய உதயத்திற்குப் பிறகும் சூரியன் அடைவதற்கு முன்னும்தான் செல்ல வேண்டும்.

இரண்டாவதாக, தீர்ப்புக் கடனாளியைக் கைது செய்வதற்கு நீதிமன்ற ஆணையிருந்து அவர் ஓர் இல்லத்தில் இருந்து கொண்டு வரமறுத்தாலோ, கைது செய்ய வந்திருக்கும் நீதிமன்ற அலுவலரை உள்ளே விடாதபடி தடைசெய்தாலும் அவ்வதிகாரி அந்த இல்லத்தின் வெளிக்கதவை உடைத்து அவரைக் கைதுசெய்ய அவவில்லத்தினுள்ளே நுழையலாம்.

ஆனால் கைதுசெய்ய வந்திருக்கும், நீதிமன்ற அலுவலகர் தீர்ப்புக் கடனாளியிருக்கும் இல்லத்தில் நுழைந்து விட்டாரென்றால் வீட்டுக்குள்ளிருக்கும் ஓர் அறைக்குள் கைது செய்யப்பட வேண்டியவர் ஒளிந்து கொண்டு உள்ளே தாழ்ப்பாளிட்டுக் கொண்டு வெளியே வர மறுத்தாலோ, அல்லது மேற்படி அலுவலருக்கு அவ்வாறு கைது செய்யப்பட வேண்டியவர், அந்த அறையில் இருக்கின்றார் என்று தோன்றுமானால் அவ்வறைக் கதவை உடைத்து அவரைக் கைது செய்யலாம்.

அவ்வாறு கைதுசெய்யப்பட வேண்டியவர் இருக்கும் அறையில் நம் நாட்டின் வழக்கப்படி வெளியில் வரக் கூடாத பெண் இருப்பாரானால், நீதிமன்ற அலுவலகர், அந்தப் பெண்ணை

அவ்விடத்தை விட்டு வெளியேறும்படி கேட்டுக்கொண்டு அவ்வாறு அப்பெண் வெளியேறுவதற்குப் போதுமான அவகாசமும் வசதியும் தந்து அந்தப் பெண் அவ்வறையைவிட்டு வெளியேறிய பின்னர், அந்த அறையில் நுழைந்து அவரைக் கைது செய்ய லாம்.

கைது செய்யவரும் அதிகாரியிடம், தீர்ப்புக் கடனாளி தீர்ப்பாணைப்படி செலுத்த வேண்டியது பணமாக இருந்தால் அப்பணத்தையும் கைது செய்வதற்கான செலவுத் தொகையையும் கட்டுவாரானால் அவர் உடனே விடுவிக்கப்படுவர்.

இக்காரணத்திற்காக ஒருவரை அல்லது ஒரு வகுப் பினரை அமைதிக்குப் பங்கம் விளையும் ஆபத்தும் பொது மக்களுக்கு அசௌகரியமும் ஏற்படும் என்ற நிலையில் மாநில அரசு அதற்கான அறிவிப்புக் கொடுத்து எந்த விதத்தில் அவர் அல்லது அவர்கள் கைது செய்யப்படலாம் என்று குறிப்பிடலாம்.

கைதுசெய்யப்பட்ட தீர்ப்புக் கடனாளி நீதிமன்றத்திற்குக் கொண்டு வரப்படும்போது, நீதிமன்றம் அவரை நொடித்துப் போனவராகப் பிரகடனப்படுத்த (To be declared as an insol-vent) நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்ளும் அவர் கெட்ட எண்ணத்துடன் நடந்து கொள்ளாதவராயிருப்பின் அல்லது நொடித்துப் போனவர் என்று பிரகடனப்படுத்துவதற்கான சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்வாரானாலும் அவர் விடுவிக் கப்படலாம்.

தீர்ப்புக் கடனாளி கைது செய்யப்பட்டு வந்த பிறகு நீதி மன்றத்தில் தான் நொடித்துப் போனவர் என்று பிரகடனப்படுத்து வதற்கு விருப்பம் தெரிவிப்பாரானால் அந்நீதிமன்றத்தின் விருப்பப் படி அதன் ஆணைக்குத் தான் கட்டுப்பட்டிருப்பதாகத் தகுந்த உறுதி அல்லது உத்தரவாதம் அளிப்பாரானாலும் அதன்படி ஒரு மாத காலத்திற்குள் அவர் நொடித்துப் போனவர் என்று பிர கடனப் படுத்த நடவடிக்கை எடுத்துக் கொள்வதாயிருந்தாலும், அதோடு நீதிமன்றத்திற்கு வரும்படி ஆணையிடும்போதெல்லாம் வருவதாக உத்தரவாதம் கொடுப்பாரானாலும் அவரை விடுவிக் கலாம்.

ஆனால் அவ்வாறு விடுவிக்கப்பபட்ட ஒரு மாத காலத்திற்குள் நொடித்துப் போனவர் என்று பிரகடனப் படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கத் தவறினாலும் அல்லது நீதிமன்றம் அவரை வரக்கோரும்போது நீதிமன்றத்திற்கு அவர் வரத்தவறினாலும், அவர் கொடுத்திருந்த பிணைப்பாதுகாப்பை (Security) கைப்பற்

றவோ, அல்லது அவரைச் சமூக உரிமை சிறைக்கூடத்தில் அடைக்கவோ நீதிமன்றம் ஆணையிடலாம் (பிரிவு 55).

தீர்ப்பாணைப்படி பணம கட்ட வேண்டியவர் ஒரு பெண்ணுயிருப்பாரானுல் அவரைக் கைதுசெய்யவோ, சிறையிலிடவோ கூடாது (பிரிவு 56).

தீர்ப்புக் கடனாளியைத் தீர்ப்பாணையை நிறைவேற்றுகையில் சிறையிலிட வேண்டுமானுல் அவருக்கான உணவுப் படி கட்டுவதற்கு ஒவ்வொரு வகைப்பட்டவருக்கு அதாவது அவருடைய தகுதி, இனம், எந்நாட்டவர் என்பதைப் பொறுத்து மாதத்திற்கு எவ்வளவு உணவுப் படி கட்டவேண்டும் என்று மாநில அரசு நிர்ணயிக்க வேண்டும். அந்தப் படியைத் தீர்ப்பாணை நிறைவேற்றுபவர் கட்டவேண்டியிருக்கும்.

சிறையிலிடலும் விடுவித்தலும்

தீர்ப்பாணை நிறைவேற்றும்போது ஒருவர் சமூக உரிமைச் சிறைக்கூடத்திலிடப் படுவாரானுல் தீர்ப்பாணைப்படி ரூபாய் 50-க்கு மேற்பட்ட தொகை கட்டவேண்டியிருக்குமானுல் அவரை 6மாத காலம் வரையில் சிறையில் வைக்கலாம். அதற்குக் குறைவான தொகையாயிருந்தால் 6 வாரம் வரை வைத்திருக்கலாம்.

மேற்குறிபிட்ட காலத்திற்குள்ளும் தீர்ப்புக் கடனாளி கீழ்க கண்ட சந்தர்ப்பங்களில் விடுவிக்கப்படலாம்.

1. எவ்வளவு தொகை கட்ட வேண்டுமென்று கைது செய்யப்பட்டவருக்கு இடபட்ட பிடி ஆணையில் (Warrant) குறிபபிட்ட தொகையைச் சிறையதிகாரியிடம் கட்டிவிட்டாலும் அல்லது,

2. தீர்ப்பாணை வேறுவழியில் முழுதும் தீர்க்கப் பட்டிருக்குமானுலும் அதன் பேரில் நீதிமன்றம் அவரை விடுதலை செய்யும்படி கட்டளை யிடுமானுலும்,

3. தீர்ப்பாணை நிறைவேற்றியவர் அவரை விடுதலை செய்யும்படி கேட்டுக் கொண்டாலும் அதன் பேரில் நீதிமன்றம் ஆணையிடுமானுலும்,

4. தீர்ப்பாணை நிறைவேற்றியவர், சிறையிலிடப்பட்ட தீர்ப்புக் கடனாளிக்கு, கட்ட வேண்டிய உணவுப் படி கட்டாமல் விட்டு விட்டாலும்,

தீர்ப்பாணை நிறைவேற்றுவதில் தீர்ப்புக் கடனாளி சிறையி லிடப்பட்டால் அவர் தீர்ப்பாணையின்படி செலுத்த வேண்டிய கடனில் நின்று விடுவிக்கப் படமாட்டார். ஆனால், அந்தத் தீர்ப்பாணையின்கீழ் திரும்பவும் சிறையிலிடப்படமாட்டார் (பிரிவு 58).

நோயின் காரணமாக விடுதலை

கைதுசெய்யும்படி பிடி ஆணை கொடுக்கப் பட்டாலும் தீர்ப்புக் கடனாளி, கடுமையான நோயுற்றிருப்பாரானால் நீதிமன்றம் அவ்வாணையை ரத்துச் செய்து விடலாம்.

கைதுசெய்யப்பட்ட தீர்ப்புக் கடனாளி நீதிமன்றத்தின் அபிப்பிராயப்படி சிறையிலடைக்கும்படியான நிலையிலுள்ள உடல் நலத்துடன் இல்லையெனக் கருதினாலும் அவரை விடுதலை செய்துவிடலாம்.

கைதுசெய்யப்பட்டுச் சிறையிலிடப் பட்டிருந்தாலும், தொத்து நோய் அல்லது எளிதில் பரவக் கூடிய நோயின் காரணமாக மாநில அரசின் ஆணைப்படி அவர்கள் விடுதலை செய்யப்படலாம்.

அதுபோல ஆணைபிறப்பித்த அல்லது அதற்கும் தரத்தில் உயர்ந்த நீதிமன்றத்தின் ஆணைப்படியும் மேற் குறிப்பிட்ட நோய்கள் காரணமாக விடுதலை செய்யப்படலாம்.

மேற்குறிப்பிட்ட நோய்கள் காரணமாக விடுவிக்கப்பட்ட வர்கள் திரும்பவும் கைதுசெய்யப் படலாம். ஆனால் மொத்த மாகச் சேர்த்து அவர்கள் சிறையிலிருக்கும் காலம் முன் குறிப்பிட்டபடி 6 மாதத்திற்கு அல்லது 6 வாரத்திற்கு மிகை படக் கூடாது (பிரிவு 59).

ஜப்தி (Attachment)

தீர்ப்பாணை நிறைவேற்றும்போது கீழ்க்கண்ட சொத்துகள் ஜப்தி செய்யப்படவும், விற்கப்படவும் கூடியவையாகும். அவைகள் நிலங்கள், வீடுகள் அல்லது ஏனைய கட்டடங்கள், சாமான்கள், பணம், வங்கிச்சீட்டுகள் (Bank Notes), காசோலைகள் (Cheques) மாற்றுச் சீட்டுகள் (Bills of Exchange), உண்டியல்கள் (HundieS), வாக்குறுதிக் கடன் சீட்டுகள் (Promissorv Notes), அரசு பாது காப்புப் பத்திரங்கள், பிறர் தரவேண்டிய கடன்கள், வியாபாரத் தின் பங்குகள் மற்றும் தீர்ப்புக் கடனாளியின் விற்றுப் பணமாக்கக்

கூடிய அசையும், அசையாச் சொத்துகள் அதோடு தீர்ப்புக் கடனாளி ஆதிக்கம் செலுத்த உரிமை கொண்ட அல்லது அச் சொத்தை விற்கும் பாத்தியதையுள்ள சொத்துகள் அல்லது அவருக்காக வேறு ஒருவர் அச் சொத்துகளை வைத்திருந்தாலும், அவைகளைத் தீர்ப்பாணைக்குரியவர், அதை நிறைவேற்றுகையில் ஜப்தி செய்யவும், விற்கவும் முடியும்.

கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் சில பொருள்கள் ஜப்தி செய்யப் பட முடியாதபடி விதி விலக்களிக்கப் பட்டிருக்கின்றன.

தீர்ப்புக் கடனாளியின், அவர் மனைவி, குழந்தைகள், அவர் குடும்பத்தினர் அணியக் கூடிய ஆடைகள், சமையலுக்கான பாத்திரங்கள், அவர்கள் படுக்கைகள், படுக்கைச் சாதனங்கள், அதோடு மதச்சம்பிரதாயப்படி பெண்கள் கழட்டி வைக்க முடியாத சில ஆபரணங்கள், உதாரணமாகத் திருமணமான பெண்கள் அணிந்திருக்கும் தாலி, கம்மல், முதலியவை.

இங்குக் குறிப்பிட்டபடி சமையலுக்கான பாத்திரங்கள், தீர்ப்புக் கடனாளியின் வீட்டில் உள்ளவைகளையே குறிக்கும். உதாரணமாகத் தீர்ப்புக் கடனாளி ஓர் உணவு விடுதி நடத்துபவராக இருப்பாரானால் உணவு விடுதி வியாபாரத்திற்காகப் பயன் படுத்தப்படும் சமையல் பாத்திரங்கள் இந்த விதிவிலக்கை அனுபவிக்க முடியாது.

தொழிலாளியின் தொழில் கருவிகளையும் ஜப்தி செய்யவும் விற்றுவிடவும் முடியாது. தொழிலாளி வாழ்க்கை நடத்துவதற்குப் பயன்படுத்தும் அத்தியாவசியமான தொழிற் கருவிகளைத்தான் இது குறிக்கும். இசைக்கருவி தொழில் கருவியாகக் கருதப்பட முடியாது. ஆனால் ஒருவர் அவ்விசைக் கருவியை ஓத்துக்கொண்டுதான் தன் வாழ்க்கையை ஓட்ட வேண்டுமென்ற நிலையிருப்பதாக இருந்தால் அதை ஜப்தி செய்யவும, விற்கவும் முடியாது. அதுபோல தையல் கருவி, சாதாரணமாக இந்த விதி விலக்கின்படி தொழில் கருவியாகக் கருத முடியாது. ஆனால் அத் தையல் கருவியால் ஒரு தையல் தொழிலாளி வேலை செய்துதான் தன் வாழ்க்கையைக் கொண்டு செல்லமுடியுமானால் அக் கருவி, தொழில் கருவியாகக் கருதப்படும். அதனால் அதை ஜப்தி செய்யவும், விற்கவும் கூடாது. ஒரு மருத்துவருடைய அறுவைக் கருவிகள் (Tools of Surgeon) தொழில் கருவிகளாகக் கருதப்பட மாட்டா. ஆக ஒரு தொழில் நடத்துவதற்கு அத் தொழிலாளியின் வாழ்க்கை நடத்துவதற்கு அத்தியா

வசியமானதாக அக்கருவிகள் இருப்பின், அக்கருவிகள் ஜப்தி செய்யவும், விற்கப்படவும் முடியாதவைகள் எனக் காண்க.

தீர்ப்புக் கடனாளி ஒரு விவசாயியாக இருக்க நேரிடின் விவசாயக் கருவிகள், அவருடைய கால்நடைகள், விதைத் தானியங்கள், நீதிமன்றத்தின் கருத்தில் விவசாயப் பணிக்கு அத்தியாவசியமானவை எனக் கருதப்படுமானாலும், அத்துடன் விவசாயத் தொழிலுக்கு அவசியமானவை எனப் பிரகடனப் படுத்தப்பட்ட சில பொருள்களும், அதாவது விவசாய உற்பத்திப் பொருள்களில் ஒருபகுதியை மாநில அரசு விவசாயிகளுக்குக் கொடுக்கும் சலுகைகளாக அரசிதழில் பிரகடனப்படுத்தப் பட்டவைகளும் அல்லது வேறு சட்ட வடிவில் கொடுக்கப்பட்ட சலுகைகளின்படியும், அவர்களுடைய சில சொத்துகளை ஜப்தி செய்யவோ அல்லது விற்கவோ கூடாது எனப் பிறப்பிக்கலாம். டிராக்டர், தண்ணீர் இறைக்கும் மோட்டார் பம்பு முதலியவை விவசாயத்திற்கு அத்தியாவசியக் கருவிகளாகக் கருதப்படவில்லை யாதலால் அவைகளை ஜப்தி செய்யலாம் என நீதிமன்றத் தீர்ப்புகளிருக்கின்றன.

Arumugha Gounder Vs Marappa Gounder
1972 (17 M.L.J.S.N.P. 33)

விவசாயிகளின் நிலத்தைப் பரிபாலிக்கும் விதத்தில் விளை நிலம் அருகே இருக்கும் அவர்களின் இல்லம், அவைகளில் விவசாயத்திற்குரிய பொருள்கள் முதலியவை அதைச் சுற்றிய நிலம் முதலிய விவசாயிகளின் அனுபவத்தில் உள்ளவைகளை ஜப்தி செய்யவும், விற்கவும் கூடாது.

இதைத் தவிர கணக்குப்புத்தகங்களும், நட்ட ஈடு கோரி வழக்குத் தொடரத் தக்க உரிமை அதுபோன்று ஒருவர் செய்ய வேண்டிய பணிக்கான உரிமை (any right of Personal Service)

அரசு அல்லது ஊராட்சித் துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்கள் பெறும் உதவிப்பணம் (Stipends) ஊழியக் கைமாறு (gratiuty) அரசு வழங்கும் குடும்ப ஓய்வுக் கால ஊதியம் (Pensions) அதோடு அரசியல் ஓய்வுக்கால ஊதியம் (Political pensions) முதலியவைகள் (மத்திய அல்லது, மாநில அரசு இதழ் களில் பிரகடனப்படுத்தப் பட்டவைகள்) ஜப்தி செய்யப்பட முடியாதவைகளாகும்.

வீட்டு வேலை செய்யும் அல்லது தினக்கூலிக்கு வேலை செய்யும் தொழிலாளர்களுடைய ஊதியம் பணமாகவோ, அல்லது பொருளாகவோ கொடுக்கப்படுபவைகளை ஜப்தி செய்ய முடியாது.

மனைவிக்கு வழங்கப்பட்டிருக்கும் பராமரிப்புத் தொகைக்கான தீர்ப்பாணை தவிர, ஏனைய தீர்ப்பாணைகளை நிறைவேற்றுவதில் கீழ்காணும் விதி முறை அனுசரிக்கப்பட வேண்டும். ஒருவருடைய சம்பளத்தில் முதல் ரூ 100/ம் அதற்கு மேலுள்ள தொகையில் பாதியும் ஜப்தி செய்யமுடியாது. உதாரணமாக ஒருவருக்கு ரூ 300/- சம்பளம் என்று வைத்துக் கொண்டால் முதல் ரூ 100/- போக எஞ்சிய ரூ 200/-ல் பாதியும் அதாவது ரூபாய் 100/- ஆக இதில் ரூ 200/- ஜப்தி செய்ய முடியாது. ரூபாய் 300/- சம்பளம் பெறுபவருக்கு ரூபாய் 100/- மாதந் தோறும் ஜப்தி செய்யத்தகுந்ததாகின்றது.

ஏற்கெனவேயுள்ள தீர்ப்பாணை நிறைவேற்றப்பட்டதில், ஓர் அரசு, அல்லது ஊராட்சித்துறை அல்லது இரயில் துறையில் பணிபுரிபவருடைய சம்பளம் தொடர்ந்து அல்லது விட்டு விட்டு 24 மாத காலத்திற்கு ஜப்தியில் இருந்திருந்தால், அவ்வாறு ஜப்தியிலிருந்த தொகையும், திரும்பவும் அதே அல்லது வேறு தீர்ப்பாணை செயலாற்றுவதில் அடுத்த 12 மாதங்கள் முடியும் வரை ஜப்தி செய்ய முடியாது. ஒரே தீர்ப்பாணையை நிறை வேற்றுவதனுல் மேலே குறிப்பிட்ட 24 மாத காலத்திற்குப் பிறகு திரும்பவும் அவருடைய சம்பளத்தின் பகுதி ஜப்திக்குட் பட்டது அல்ல.

மனைவிக்கு வழங்கப்பட்டிருக்கும் பராமரிப்புத் தொகைக் கான தீர்ப்பாணையிலிருப்பின், அவளுடைய கணவனின் சம்பளத் தில் மூன்றில் ஒரு பங்கு ஜப்திக்குட்பட்டது அல்ல.

1950ஆம் வருட விமானப் படைச் சட்டம், 1950ஆம் வருட இராணுவச் சட்டம், 1934ஆம் வருட இந்தியக் கடற்படைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தில் குறிப்பிட்டபடி முப்படை வீரர்களின் சம்பளமும் படியும் ஜப்திக்கு விதிவிலக்களிக்கப்பட்டிருக்கின்றன.

அதுபோல முன்யோசனை சேமிப்புத் தொகை (provident fund) அச்சட்டத்தின்படி விதிவிலக்களிக்கப்பட்ட தொகையும் ஜப்தியிலிருந்து விதிவிலக்களிக்கப்பட்டிருக்கின்றன.

அரசு ஆணைப்படி அரசு அலுவலர்கள், ஊராட்சித்துறை அலுவலர்கள், இரயில் துறை அலுவலர்களின் சம்பளம் வருவாய்

(allowance) முதலியவைகள் ஜப்தியிலிருந்து விதிவிலக்களிக்கப் பட்டிருக்குமானால் அதுவும் இவ்விதிவிலக்கில் அடங்கும். எதிர் பார்க்கும் உரிமைகள் அதாவது ஒருவர் இறந்தபின் அல்லது, வேறு ஏதாவது நடைபெற்றால், அல்லது நடக்கா விட்டாலும் அதன் விளைவாகக் கிடைக்கும் உரிமைகள், பாத்தியதைகள், ஜப்தி செய்யப்பட முடியாதவை.

அதுபோலப் பின்காலத்தில் பராமரிப்புக் கோரும் உரிமையும் ஜப்திசெய்ய முடியாது

வேறெந்த இந்தியச் சட்டப்படி, தீர்ப்பாணை நிறைவேற்றும் போது ஜப்தி செய்யப்பட முடியாது என்று பிரகடனப்படுத்தப் பட்ட எந்த வகைப்படியும்.

'சம்பளம்' என்று குறிப்பிடும் போது ஒருவருடைய சம்பள மும், படியும் சேர்த்துக் கணக்கு எடுக்கப்படும். ஆனால் அரசு ஜப்தி செய்வதிலிருந்து ஏந்தத் தொகைக்கும், விதிவிலக்களித்திருந் தால் அந்தத் தொகை அதில் சேராது (பிரிவு 60).

வீடுகளில் உள்ள பொருள்களை ஜப்தி செய்யும் முறை

வீடுகளிலுள்ள அசையும் பொருள்களை ஜப்தி செய்வதற்காக அந்த ஜப்தி ஆணையை நிறைவேற்றுபவர்கள் சூரிய உதயத்திற்கு முன்னும், சூரியன் மறைந்த பிறகும் வீடுகளில் நுழைய முடியாது.

அவ்வாறு ஜப்தி செய்யச் சென்றிருக்கும்போது, தீர்ப்புக் கடனாளி அவ்வில்லத்தில் இருந்துகொண்டு நீதிமன்ற ஆணையை நிறைவேற்றவரும் அதிகாரியை உள்ளே வரக்கூடாது என்று தடுத்தாலும், அல்லது வெளிக்கதவை திறக்க மறுத்தாலும், அக்கதவை உடைக்கலாம். அவர் இல்லத்திலில்லாமல் இருப்பா ரானால் அவ்விதம் கதவை உடைக்கக் கூடாது. அவ்வதிகாரிகள் அந்த இல்லத்திற்குள் ஜப்தி செய்ய நுழைந்துவிட்டாரானால் அவ்வில்லத்திலே ஓர் அறையில் ஜப்தி செய்வதற்கான பொருள்கள் அடைத்து வைத்திருப்பதாக அவர் கருதினால் அவ் வறையின் கதவை உடைத்து அப்பொருள்களை ஜப்தி செய்யலாம்.

ஜப்திக்குரிய பொருள்கள் அவ்வில்லத்தின் அறையொன்றில் இருப்பதாகக் கருதப்பட்டாலும், அவ்வறையில் நம் நாட்டு வழக்கப்படி வெளியில் வரக்கூடாத பெண் யாரும் இருக்க நேரிடின் அப்பெண்ணை வெளியே போகும்படி கேட்டுக்கொண்டு

அவ்வாறு அவள் வெளியே செல்வதற்கு வசதி செய்து கொடுத்து, அவள் வெளியே வந்த பிறகு அவ்வறையிலுள்ள பொருள்களை, ஜப்தி செய்யலாம். அது சமயத்தில் அங்குள்ள பொருள்கள் திருட்டுத்தனமாகக் கடத்திச் செல்லப்படாதபடிக்கும் பார்த்துக் கொள்ள வேண்டும் (பிரிவு 62).

பலதரப்பட்ட நீதிமன்றங்களின் தீர்ப்பாணைகள் நிறை வேற்றப்பட்டதன் விளைவாகத் தீர்ப்புக் கடனாளியின் சொத்துகள் ஜப்தி செய்யப்பட்டு, அது ஒரு நீதிமன்றத்தின் பாதுகாப்பில் இல்லாமலிருக்குமானால், அவ்வாறு ஜப்தி செய்யப்பட்ட சொத்து பற்றிய பாத்தியதை கொண்டாடல், அதுபோன்ற இன்ன பிற கேள்விகளை முடிவு செய்தல், அச்சொத்தை விற்றுக் காசாக்குதல் முதலியவைகளை அந்நீதிமன்றங்களில் உயர்ந்த நீதிமன்றம் கவனிக்க வேண்டும். அவ்வாறு ஜப்தி ஆணைகளை நிறைவேற்றிய நீதிமன்றங்கள் சரிநிகரானவையிருக்குமானால், எந்த நீதிமன்றத்தின் ஜப்தி ஆணை முதலில் நிறைவேற்றப்பட்டதோ, அந்நீதிமன்றம் மேற்குறிப்பிட்ட விவகாரங்களைக் கவனிக்கும்.

ஆனால் அதற்காக வேறொரு நீதிமன்றம் தீர்ப்பாணையை நிறைவேற்றுவதில் மேற்கொள்ளும் நடவடிக்கைகள், செல்லத் தகாது எனக் கருதமுடியாது (பிரிவு 63).

தீர்ப்பாணை நிறைவேற்றப்படும் வகையில் தீர்ப்புக் கடனாளியின் சொத்து ஜப்தி செய்யப்பட்டிருக்கும்போது, அச்சொத்தைத் தனிப்பட்ட முறையில் விற்பனை செய்யவோ, மாற்றவோ, அல்லது அந்தச் சொத்தில் உள்ள பாத்தியதையை (interest) மாற்றவோ கூடாது. அதுபோக இந்த ஜப்தியை மீறித் தீர்ப்புக் கடனாளிக்குச் செலுத்தப்படும் கடன் கொடுக்கப்படும் வேறு பலன் எல்லாம் ஜப்தியினால் கிடைக்கத்தக்க பலனைக் கடந்து செல்லா நிலையுடையது.

ஜப்தியினாற் கிடைக்கத்தகுந்த பலனில் தீர்ப்பாணை நிறை வேற்றும்போது விகிதப்படி பகிர்ந்து கொள்ளலும் அடங்கும் **(Rateable distribution)** (பிரிவு 64).

ஜப்தி செய்துவிட்டதால் மட்டும் தீர்ப்பிற்குரியவருக்கு ஜப்தி செய்யப்பட்ட பொருளில் எந்தப் பாத்தியதையும் ஏற்பட்டு விடுவதில்லை. சுருக்கமாகச் சொல்லப்போனால் ஜப்தி செய்யப்பட்ட சொத்து வேறு யாருக்கும் விற்கப்படவோ, கைமாற்றப்படவோ கூடாது. அதுபோல ஜப்தி செய்யும் தீர்ப்புக் குரியவருக்கு, எந்த உரிமையும் அச்சொத்தில் ஏற்படுவதில்லை.

ஒரு சொத்து ஜப்திலிருக்கும்போது, அதை யாரும் வாங்கினாலும் வாங்கியவருக்கு அச்சொத்தின் பேரில் எந்த உரிமையும், பாத்தியதையும் இருக்காது.

சொத்துகள் ஜப்தி செய்யப்படும்போது அவைகள் சரியானபடி ஜப்தி செய்யப்பட வேண்டும். அப்போதுதான் ஒரு சொத்து ஜப்தி செய்யப்பட்டதாகவே கருதப்படும். அப்படியில்லாமலிருந்தால், உதாரணமாக ஜப்தி ஆணை நீதிமன்றம் பிறப்பித்துவிட்டால் மட்டும் போதாது, அதை நிறைவேற்ற வேண்டும். அதன்படி அந்த ஆணைக்குப் பிறகு சொத்தைச் சட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டபடி நேரடியாக ஜப்தி செய்ய வேண்டும். அவ்வாறு செய்யாதிருந்து, ஜப்தி ஆணை நீதிமன்றம் கொடுத்த பிறகு அந்தச் சொத்தை வேறொருவருக்கு அடைமானம் வைத்தால், அந்த அடைமானம் செல்லுபடியாகலாம்.

விற்பனை (Sale)

ஓர் அசையாச் சொத்து, தீர்ப்பாணையை நிறைவேற்றுவதில் விற்கப்பட்டு அவ்விற்பனை முழுமையானதாக ஆக்கப்பட்டால் (absolute), அந்தச் சொத்து வாங்கப்பட்ட நாளிலிருந்து வாங்கியவருக்கு முழுஉரிமையாகின்றது (பிரிவு 65).

மேலே குறிப்பிட்டபடி சொத்தை வாங்கியவர்மீது அச்சொத்தின் சம்பந்தமாக வழக்கேதும் போட முடியாது. வாதிக்காக அச்சொத்து வாங்கியதாகவோ அல்லது வேறு யார் பெயருக்கும் வாங்கியிருந்து அவர் மூலம் வாதிக்கு அச்சொத்தில் பாத்தியதையுண்டு என்ற காரணத்திற்காகவும் அவ்வழக்குப் போட முடியாது.

ஆனால் விற்பனை அத்தாட்சியில், அதை வாங்கியவரின் பெயர் திருட்டுத்தனமாகத் திணிக்கப்பட்டிருக்கின்றது என்றாலும், அப்பெயர் உண்மையிலேயே வாங்கியவருடைய அனுமதியில்லாமல் இடம் பெற்றது என்ற காரணத்திற்காகவும், அல்லது மூன்றாவது நபருடைய பாத்தியதையைப் பாதிக்கும் வகையிலிருக்கின்றது என்று பிரகடனப்படுத்தும் வகையில் வழக்குப்போடத் தடையில்லை (பிரிவு 66).

சொத்துகளைப் பகிர்ந்தளித்தல் (Distribution of Assets)

தீர்ப்புக் கடனாளியின் சொத்துகள் நீதிமன்றத்தின் பிடியிலிருந்து அவற்றில் ஒருவருக்கும் அதிகப்பட்டோர் தீர்ப்பாணை நிறைவேற்றுவதற்காக அந்தச் சொத்து நீதிமன்றத்

தின் கட்டுக்குள் கொண்டு வரப்படுமுன் மனுச் செய்ததில் அவருடைய சொத்திலிருந்து அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பணத்திற்காக அவ்ர்களுக்குக் கிடைத்த தீர்ப்பாணைப்படி தங்களுக்குக் கிடைக்க வேண்டிய பலன் கிடைக்காமலிருக்கு மானால், நீதிமன்றம் அச்சொத்துகளை விற்று அதில் கிடைத்த தொகையில் நீதிமன்றச் செலவுகள், அச்சொத்தைக் காசாக்கு வதில் ஏற்பட்ட செலவுத் தொகை முதலியவைகளைக் கழித்தது போக எஞ்சிய பணத்தில் விண்ணப்பித்த தீர்ப்புக்குரியவர்களுக்கு விகிதப்படி பகிர்ந்து கொடுக்க வேண்டியது.

அவ்வாறு விகிதப்படி பகிர்ந்தளித்தல் கீழ்க்கண்ட நிபந்தனை களின்படி இருக்க வேண்டும்.

விற்கப்பட்ட சொத்து அடைமானத்துக்கு அல்லது பற்றுப் பொறுப்பிற்கு உட்பட்டு (charge) இருக்குமானால் விற்பனையில் கிடைத்த தொகையில் உண்டான மேலதிகமான தொகையில் அவர்களுக்குப் பாத்தியதை ஏதுமில்லை.

தீர்ப்பாணைப்படி விற்கப்பட வேண்டிய சொத்து அடை மானத்திற்கு அல்லது பற்றுப் பொறுப்பிற்குட்பட்டதாக (charge) இருக்குமானால் அந்த அடைமானக்காரர் அல்லது பற்றுப்பொறுப் பாளருடைய அனுமதி பெற்று அந்தச் சொத்தை மேற்படி அடைமானம் அல்லது பற்றுப்பொறுப்பு நீங்கலாக விற்று, அவர்களுக்குச் சேரவேண்டிய தொகையைக் கொடுத்தது போக எஞ்சியதை விகிதப்படி ஏனைய தீர்ப்பாணைகளை நிறைவேற்றும் வகையில் பகிர்ந்தளிக்கப்படும்.

தீர்ப்பாணைப்படி ஒரு சொத்து விற்கப்பட்டு அச்சொத்தி லுள்ள வில்லங்கத்தை நீக்க வேண்டியிருக்குமானால் அச்சொத்தை விற்று முதலில் அவ்வாறு விற்பதற்கான செலவைக் கழித்துவிட்டு அடுத்து தீர்ப்பின்படி கட்டவேண்டிய பணத்தைக் கட்டிவிட்டு, பின் ஏற்பட்ட வில்லங்கங்களை நீக்குவதற்கு அதற்குரிய அசலும் வட்டியும், அதையடுத்து ஏனைய தீர்ப்பாணைக்குரியவர்களுக்கு அவர்கள் தீர்ப்பாணைகள் நிறைவேற்றப்படாத நிலையில் விகிதப் படியான பங்கீடு செய்வதில் அவர்கள் தீர்ப்புக் கடனாளியின் சொத்தை விற்பதற்கு முன் தீர்ப்பாணையை நிறைவேற்றுவதற்கு விண்ணப்பித்திருக்க வேண்டும்.

இந்தப்படி பகிர்ந்தளிக்கையில் பாத்தியதை யில்லாத ஒருவ ருக்கு ஏதாவது ஒரு பங்கு கிடைத்திருந்தால், அப்பங்குக்குரிய

ஒருவர் அவரிடத்திலிருந்து, மேற்படி தொகையைத் திரும்பப் பெற வழக்குப் போடலாம். ஆனால் அரசுக்குச் செலுத்தவேண்டிய பாக்கி ஏதுமிருந்தால், முதலில் அதைத் தீர்த்த பிறகே எஞ்சியதை மற்றவர்களுக்கு மேற் குறிப்பிட்ட விகிதப்படி பகிர்ந்தளிக்க வேண்டும் (பிரிவு 73).

நிறைவேற்றுதலுக்கு எதிர்ப்பு (Resistance to Execution)

ஒரு தீர்ப்பின்படி ஒருவருக்கு ஒரு சொத்தின் உடைமை கிடைக்கவேண்டியிருப்பின், அல்லது ஒரு தீர்ப்பாணை நிறைவேற்றுகையில் ஒரு சொத்தை வாங்கியவர் அந்தச் சொத்தின் உடைமையை அடைவதைத் தீர்ப்புக் கடனாளியோ, அல்லது அவர் சார்பில் வேறு யாராவதோ, அதைத் தடுத்தால், அவ்வாறு தடுப்பது தகுந்த காரணமில்லாமலிருந்தால் தீர்ப்பாணை பெற்றவருடைய அல்லது தீர்ப்பாணை நிறைவேற்றுகையில் அச் சொத்தை வாங்கியவர் விண்ணப்பத்தின் பேரில் அவ்வாறு தடுப்பவரை நீதிமன்றம் ஒரு மாத காலத்திற்கு அதிகப்படாமல் சிறையிடலாம். அதோடு தீர்ப்பாணைக்குரியவர் அல்லது தீர்ப்பாணை நிறைவேற்றுகையில் அச்சொத்தை வாங்கியவர்களுக்கு உடனே உடைமையும் கொடுக்கவேண்டுமென்று நீதிமன்றம் ஆணையிடலாம் (பிரிவு 74).

தீர்ப்பாணைக் கட்டளைகளை நிறைவேற்றுதலும் தீர்ப்பாணையின்கீழ் பணம் கட்டுதலும் (Execution of Decrees and Orders Payment Under Decrees)

தீர்ப்பாணைப்படி செலுத்தவேண்டிய பணத்தை ஒன்று, தீர்ப்பாணையை நிறைவேற்றும் நீதிமன்றத்தில் கட்டலாம். இரண்டு, நீதிமன்றத்திற்கு வெளியேயும், தீர்ப்பாணை பெற்றவரிடம் நேரிலும், அல்லது மூன்றாவதாக, தீர்ப்பாணை வழங்கிய நீதிமன்றம் அப்பணத்தை எந்த முறையில் கட்டவேண்டுமென்று உத்தரவிடுகின்றதோ, அம்முறையிலும் கட்டலாம்.

நீதிமன்றத்தில் தீர்ப்பாணைக்குரிய பணம் கட்டப்படுமானால், தீர்ப்பிற்குரியவர்க்கு அவ்வாறு பணம் கட்டியதற்கான அறிவிப்புக் கொடுக்க வேண்டும் (கட்டளை 21, விதி 1).

ஒரு தீர்ப்பாணையின்கீழ்க் கட்டவேண்டிய பணம் நீதிமன்றத்திற்கு வெளியே தீர்ப்பாணைக்குரியவரிடம் கட்டிவிட்டாலோ, அல்லது வேறு வகையில் ஒரு பகுதியோ அல்லது முழுவதுமோ,

கட்டித் தீர்க்கப்பட்டுவிட்டாலோ, தீர்ப்பாணைக்குரியவர், அதை அத்தாட்சி செய்து (Certify) அந்த வகையில் பெறப்பட்ட பணத்தையும், எவ்வளவுதூரம் தொகை சரிசெய்யப்பட்டது என்ற விபரம் அடங்கிய அந்த அறிவிப்பை எந்த நீதிமன்றம் அத்தீர்ப்பாணையை நிறைவேற்ற வேண்டுமோ, அந்த நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும். அவ்வாறு அவ்வறிவிப்புக் கிடைக்கப் பெற்றவுடன் அந்த நீதிமன்றம் அதைப் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

இது தவிர வழக்குச் சம்பந்தப்பட்ட எந்தக் கட்சிக்காரரோ, அல்லது அவருடைய சொத்தின் சட்டப் பிரதிநிதியோ (Legal Representative) அல்லது தீர்ப்பாணைத் தொகையைக் கட்டப் பிணை கொடுத்தவரோ, அவ்விதம் நீதிமன்றத்திற்கு வெளியே தீர்ப்பாணைக்குரிய தொகை அல்லது பகுதி கட்டப்பட்ட விவரம் அத்தீர்ப்பாணையை நிறைவேற்றும் நீதிமன்றத்திற்குத் தெரிவிக்கலாம். அவ்வாறு தாக்கல் கிடைத்தவுடன் அவர்கள் விருப்பப்படி அந்நீதிமன்றம் தீர்ப்பாணைக்குரியவருக்கு அதுபற்றி அறிவிப்புக் கொடுத்து, குறிப்பிட்ட நாளில் அவருடைய பதிலைக் கேட்டு ஏன் அவ்வாறு கொடுக்கப்பட்ட பணத்திற்கு, வரவு வைத்து, அத்தாட்சி செய்துகொள்ளக் கூடாது என்று அறிக்கை கொடுக்கும். அந்தப்படி தீர்ப்பாணைக்குரியவர் வரத்தவறினால், குறிப்பிட்ட அந்தத் தொகை கொடுக்கப்பட்டதாக அத்தாட்சிப் பதிவு செய்து கொள்ளப்படும் அல்லது தீர்ப்பாணைக்குரியவர் நேரில் வந்து உரைப்பாராலும் அல்லது பதில் அனுப்பிக் கொண்டாலும், அதன்படியும் பதிவு செய்துகொள்ளப்படும்.

மேற்குறிப்பிட்டபடி நீதிமன்றத்திற்கு வெளியே தீர்க்கப்பட்டதாகக் கூறப்படும் தீர்ப்பாணைப்படி சேரவேண்டிய பணம் பற்றிய அத்தாட்சிக் குறிப்பு தீர்ப்பாணை நிறைவேற்றும் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்படாவிட்டால் அது அங்கீகரிக்கப்படாது கட்டளை 21, விதி 2).

தீர்ப்பாணையை நிறைவேற்றும் நீதிமன்றம் (Court Executing Decrees)

அசையாச் சொத்து ஒரே நிலப்பரப்பாயிருந்து (estate) அந்நிலப்பரப்பு இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட நீதிமன்றத்தின் வட்டார அதிகார வரம்பிற்குள்ளிருக்குமானல், தீர்ப்பாணையை நிறைவேற்றுவதில் அச்சொத்தை ஜப்தி செய்து விற்பதானல் அவைகளில் ஒரு நீதிமன்றம், சொத்தைப் பூராவும் ஜப்தி செய்யவும் விற்கவும் முடியும் (கட்டளை 21, விதி 3).

ஒரு நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பாணையைச் சிறு காரண நீதிமன்றத்தின் மூலம் நிறைவேற்ற வேண்டுமானால், அந்த வழக்குரையில் கோரப்பட்ட தொகை ரூ. 2000/-க்கு மிகைப் படாமலிருக்க வேண்டும். அதில் வழங்கப்பட்ட தீர்ப்பாணையை, சிறுகாரண நீதிமன்றம் நிறைவேற்றுவதில் எந்தச் சட்டத் தடையு மில்லாமலிருந்தால், அத்தீர்ப்பாணையை வழங்கிய நீதிமன்றம், அத்தீர்ப்பாணை, சென்னை, கல்கத்தா, பம்பாயில் உள்ள சிறு காரண நீதிமன்றம் நிறைவேற்றக்கூடியது எனக் கருதினால், அந் நீதிமன்றத்திற்குத் தீர்ப்பாணையின் அத்தாட்சி பெற்ற நகலுடன் ஓர் அத்தாட்சிக் குறிப்பும் அனுப்ப வேண்டும். அக்குறிப்பில் அந்தத் தீர்ப்பாணைப் பகுதியோ, முழுமையோ நிறைவேற்றப்பட வில்லை என்ற குறிப்புகள் அடங்கியிருக்க வேண்டும். அத்தீர்ப்பாணை இந்நீதிமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டுமென்ற ஆணையும், அல்லது அவ்வாறு ஆணை பிறப்பிக்கப்படவில்லையானால், அவ்வாறு அத்தீர்ப்பாணை நிறைவேற்றக்கோரும் அத்தாட்சியும் அனுப்பி வைக்கவேண்டும். அவைகளைப் பெற்றபிறகு மேற்குறிப்பிட்ட நகரங்களிலுள்ள சிறு காரண நீதிமன்றம் அத்தீர்ப்பாணையை நிறைவேற்றும் (விதி 4 & 6).

வழங்கப்பட்ட தீர்ப்பாணை அந்த மாவட்டத்திலுள்ள வேறு நீதிமன்றத்தில் நிறைவேற்றப் படவேண்டுமானால் அத்தீர்ப்பாணை வழங்கிய நீதிமன்றத்திலிருந்து நேரே அந் நீதிமன்றத்திற்கு அத் தீர்ப்பாணை அனுப்பப்படும். ஆனால் நிறைவேற்ற வேண்டிய நீதிமன்றம் வேறு மாவட்டத்திலிருக்குமானால் அத்தீர்ப்பாணை, அம்மாவட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு அதன் மூலமாக நிறைவேற்றுகின்ற நீதிமன்றத்திற்கு அனுப்பப்படும் (விதி 5).

இவ்வாறு வேறு நீதிமன்றத்திற்கு அனுப்பித்தான் ஒரு தீர்ப் பாணை நிறைவேற்ற முடியும் என்ற நிலையில் அதை அங்கு மாற்றக் கோரியவர் தீர்ப்பாணை வழங்கிய நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். அவ்விண்ணப்பத்தின் பேரில் அந்நீதி மன்றம் விண்ணப்பதாரர் அத்தீர்ப்பாணை மாற்றுவதற்கான செலவுத் தொகையை அவ்விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஏழு நாள்களுக்குள் கட்டி அதன் பிறகு அத்தீர்ப்பாணை மேற் குறிப்பிட்டபடி வேறு நீதிமன்றத்திற்கு நிறைவேற்றும் பொருட்டு அனுப்பப்படும்.

நிறைவேற்றும் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட பிறகு அத் தீர்ப்பாணையை நிறைவேற்ற அது கிடைத்த 6 மாதகாலத்திற் குள், தீர்ப்பாணைக் குரியவர் மனுச்செய்யவேண்டும். அவ்வாறு

செய்யத்தவறினால், நிறைவேற்றும் நீதிமன்றம் அத்தீர்ப்பாணையை அதை அனுப்பிய நீதிமன்றத்திற்கே திரும்ப அனுப்பி விடும். அத்துடன் அத்தீர்ப்பாணை நிறைவேற்றுவதற்காகத் தீர்ப்பாணைக் குரியவர் மனுச் செய்யவில்லை என்ற குறிப்பையும் அத்துடன் அனுப்பிவைக்கும்.

ஒரு தீர்ப்பாணையை நிறைவேற்றுவதற்காக வேறு நீதி மன்றத்திற்கு அதை அனுப்பும்போது, அத்தீர்ப்பாணையின் அத்தாட்சி பெற்ற நகலும் அத்துடன்ஓர் அத்தாட்சிக் குறிப்பும் எந்த அளவிற்கு அத்தீர்ப்பாணை நிறைவேற்றப்பட்டிருக்கின்றது என்பதாகக் குறிப்பிட்டும் அத்துடன் அத்தீர்ப்பாணை மேற்படி நீதிமன்றத்தில், நிறைவேற்றப் படவேண்டும் எனக் கோரும் ஆணையும் அவ்வாறு ஆணையேதுமில்லாமலில்லையானால் அதற்கான அத்தாட்சியும் அனுப்ப வேண்டும் (விதி 6).

ஒரு தீர்ப்பாணை வேறு நீதிமன்றத்திற்குநிறைவேற்றுவதற்காக அனுப்பப்பட்டால் அந்நீதிமன்றம் அத்தீர்ப்பாணையைத் தானே வழங்கியதுபோல், அதை நிறைவேற்ற வேண்டும். மாவட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டால், மாவட்ட நீதிமன்றமோ அல்லது மாவட்ட நீதிமன்றத்தின் ஆணைப்படி அதற்குக் குறைந்த வேறு தகுதிபடைத்த நீதிமன்றத்திற்கு அது அனுப்பப்பட்டால் அந்நீதிமன்றமோ, அத்தீர்ப்பாணையை நிறைவேற்றும். உயர்நீதிமன்றம் நிறைவேற்ற வேண்டியிருந்தால். உயர்நீதி மன்றமும் அத்தீர்ப்பாணையைத் தன்னுடைய சாதாரண, அசல் அதிகார வரம்பின் கீழ் (ordinary original jurisdiction) நிறை வேற்றலாம் (விதி 8ம் 9ம்).

நிறைவேற்றக் கோரும் விண்ணப்பம் (Application for Execution)

ஏற்கெனவே குறிப்பிட்டபடி ஒரு வழக்கில் தொடக்கம் முதல் தீர்ப்பாணை வழங்கப்படும் வரை ஒரு முக்கிய பாகமாகவும், அதையடுத்துத் தீர்ப்பாணையை நிறைவேற்றுவது என்பது தனித்த ஒரு பாகமாகவும் கருதப்படும். எனவே, வழங்கப்பட்ட தீர்ப் பாணையை நிறைவேற்ற வேண்டுமானால் அந்தத் தீர்ப்பாணைக் குரியவர் தனியாக விண்ணப்பிக்க வேண்டும். அவ்வாறு விண்ணப்பிக்கும்போது, தீர்ப்பாணையின் அத்தாட்சி பெற்ற நகல் அந்த விண்ணப்பத்துடன் வைக்கவேண்டும். தீர்ப்பாணையின் அத்தாட்சி பெற்ற நகல் அந்த விண்ணப்பத்துடன் வைக்க வில்லையானால் நிறைவேற்றும் நீதிமன்றம் அத்தீர்ப்பாணையை

நிறைவேற்றக் கோரும் மனுவை நிராகரிக்கலாம். எனவே, ஒரு தீர்ப்பாணையை நிறைவேற்றுவதற்கு அத்தீர்ப்பாணையின் அத்தாட்சி பெற்ற நகல் அதை வழங்கிய நீதிமன்றத்திலிருந்து முதலில் பெற்றாக வேண்டும்.

நிறைவேற்றுவதற்காக வேறு நீதிமன்றத்திற்கு ஒரு நீதிமன்றத் தீர்ப்பாணை மாற்றப்படும் போது அத்தாட்சி பெற்ற தீர்ப்பாணை மற்றும் மேற்குறிப்பிட்ட அத்தாட்சிகள் அனுப்பப் பட்டு அதன் பிறகு அதை நிறைவேற்றும் நீதிமன்றத்தில் தீர்ப்பாணைக் குரியவர் மனுச்செய்தால் அத்தீர்ப்பாணை நிறைவேற்றப்படும்.

தீர்ப்பாணையை வேறு நீதிமன்றத்தின் மூலம் நிறைவேற்ற விரும்பும், தீர்ப்பாணைக்குரியவர் தீர்ப்பு வழங்கிய நீதிமன்றத்தில் மேற் குறிப்பிட்டபடி, தீர்ப்பாணையை வேறு நீதிமன்றத்திற்கு மாற்றுவதற்கு விண்ணப்பிப்பார். வேறு நீதிமன்றத்திற்குத் தீர்ப்பாணை மாற்றப்பட்டிருக்குமானால் அந்த நீதிமன்றத்திலும், மேற்படி தீர்ப்பாணையை நிறைவேற்றும் வகைக்கு அவர் விண்ணப்பிக்க வேண்டும் (விதி 10).

வாய்மொழி விண்ணப்பம்

வழங்கப்பட்ட தீர்ப்பாணை பணமாகத் திரும்பப் பெறுவதற்காக இருந்து அத்தீர்ப்பு வழங்கப்படும்போது, தீர்ப்புக் கடனாளி நீதிமன்றத்தில் அல்லது அதன் வட்டாரத்தில் இருப்பாரானால், தீர்ப்புக்குரியவருடைய வாய்மொழி விண்ணப்பத்தின் மீது நீதிமன்றம் அத்தீர்ப்பாணையை நிறைவேற்றும் வகையில் தீர்ப்புக் கடனாளியை உடனே கைது செய்ய ஆணையிடலாம். அதற்காகப் பிடி ஆணைகூட எழுத்தால் தயாரிக்கப்பட வேண்டிய அவசியம் கூட இல்லை.

மேற்குறிப்பிட்ட அசாதாரணமான சூழ்நிலை தவிர மற்றபடி எல்லாச் சந்தர்ப்பங்களிலும், தீர்ப்பாணைக் குரியவரோ, அல்லது நீதிமன்றத்திற்குத் திருப்தியளிக்கும் வகையில் தீர்பப்பாணை வழங்கப் பட்ட வழக்குபற்றி நன்றாய் அறிந்தும் அத்துடன் தொடர் புடையவராயிருந்தால், வேறு எவரோ கையெழுத்திட்டு அதற்கென்று வகுக்கப்பட்ட வடிவமைப்பில் அத்தீர்ப்பாணையை நிறைவேற்றுவதற்கான எழுத்தாலான விண்ணப்பம் செய்ய வேண்டும். அவ்விண்ணப்பத்தில் வழக்கு எண் வழக்கிலுள்ள கட்சிக்காரர்கள், தீர்ப்பாணை வழங்கப்பட்ட நாள் அத்தீர்ப்பாணையை எதிர்த்து மேல் வழக்கு ஏதும் தொடரப்பட்டிருக்கின்றதா இல்லையா,

என்ற தகவலும், தீர்ப்பாணைப்படி பகுதியோ அல்லது வேறு விதத்தில் அது தீர்க்கப்பட்டிருக்கின்றதா, அல்லது ஒழுங்கு பண்ணப் பட்டிருக்கின்றதா என்ற தகவலும் முன்னர் ஏதாவது அத்தீர்ப்பாணையை நிறைவேற்றக் கோரி மனு ஏதும் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றதா, அவ்வாறு செய்திருந்தால் அதன் விளைவு என்ன என்ற தகவலும் கொடுக்க வேண்டும்.

அதோடு தீர்ப்பாணைக்குரியவர், அத்தீர்ப்பாணை சம்பந்தப் பட்ட எந்த பாத்தியதையும், வேறு யாருக்கும் மாற்றியிருக்கின் றாரா என்றும், அவ்வாறு மாற்றியிருந்தால் எந்த நாளில் யாருக்கு என்ற விபரமும் அவர் முகவரியும் தரவேண்டும்.

தீர்ப்பாணைப்படி கிடைக்க வேண்டிய பணம் அதற்குச் சேர வேண்டிய வட்டியுடன் குறிக்கப்பட வேண்டும். அத்துடன் எதிர்த் தீர்ப்பாணைப்படி கொடுக்க வேண்டிய பணம் பற்றிய குறிப்பும் கொடுக்க வேண்டும்.

அத்துடன் தீர்ப்பாணைப்படி கிடைக்கவேண்டி நீதிமன்றச் செலவுத் தொகை, யாரை எதிர்த்துத் தீர்ப்பாணை நிறைவேற்றப் பட வேண்டுமோ, அவருடைய பெயரும் முகவரியும் தர வேண்டும்.

எந்தவகையில் தீர்ப்பாணை நிறைவேற்றப் பட வேண்டும் அதற்கு நீதிமன்றத்தின் உதவி எவ்வகையில் வழங்க வேண்டும் என்றும் அதாவது தீர்ப்பாணைக்குட்பட்ட எந்தச் சொத்தைத் திரும்பக் கொடுக்க வேண்டும், அல்லது அந்தச் சொத்தை ஜப்தி செய்து விற்கவேண்டுமா, அல்லது ஜப்தி செய்யாமல் நேரடியாக விற்பனை செய்ய வேண்டுமா என்றும் அல்லது தீர்ப்புக் கடனாளியைக் கைது செய்து, அல்லது அவருடைய சொத்தைப் பரிபாலிக்கக் காப்பாளரை (Receiver) நியமிக்க வேண்டுமா, இவை தவிர நீதிமன்றம் வழங்கிய நிவாரணத்திற்கு ஏற்ப வேறு விதமான பரிகாரம் வழங்க வேண்டுமா என்று கோர வேண்டும் (விதி 10).

நிறைவேற்றக் கோரும் மனுவில் கேட்காத நிவாரணத்தை நீதிமன்றம் அளிக்க முடியாது என்று காண்க. தீர்ப்பாணைக்குரி யவர் நிறைவேற்றக் கோரும் முதல் மனுவுடன் தீர்ப்பாணையின் அத்தாட்சி பெற்ற நகலைத் தாக்கல் செய்திருப்பாரானால் திரும்ப வும் அத்தாட்சி பெற்ற தீர்ப்பாணை நகலை அடுத்துக் கொடுக்கும் மனுவுடன் தாக்கல் செய்யவேண்டுமென்று நீதிமன்றம் வற்புறுத்தாது.

இந்தத் தீர்ப்பாணையை நிறைவேற்றக் கோரும் மனுவில் கூறியபடி அதைத் தீர்ப்புக் கடனாளி, தீர்ப்பதற்கு நீதிமன்றத்தில் பணம் செலுத்துவாரானாலும் அல்லது சொத்தை நீதிமன்றத்தின் கண்காணிப்பில் கொண்டுவருவாரானாலும் அதுபற்றிய அறிவிப்பு தீர்ப்பாணைக்குரியவருக்குக் கொடுக்க வேண்டும்.

தீர்ப்பாணையை நிறைவேற்றக் கோரும் மனுவில் தீர்ப்புக் கடனாளியின் அசையும் சொத்துகளை ஜப்தி செய்ய விண்ணப்பித்தால், அச் சொத்துகள் வேறு யாருடைய உடைமையிலிருந்தாலும் சரி, தீர்ப்பாணைக் குரியவர் ஜப்தி செய்ய வேண்டிய அசையும் சொத்துகளின் பொருத்தமான விவரங்கள் அடங்கிய விளக்கப் பட்டியல் ஒன்று தனியாகக் கொடுக்க வேண்டும் (விதி 12).

அதுபோல அசையாச் சொத்துகளை ஜப்தி செய்வதற்குப் போடப்படும் மனுவில் தீர்ப்புக்கடனாளியின் அச் சொத்துகளின் விவரம் அம் மனுவினடியில் கொடுக்கப்பட வேண்டும். அந்த விவரப்படி அந்தச் சொத்தைச் சரியாகக் கண்டுபிடிக்கத்தக்க விதத்தில் குறிக்க வேண்டும். அதற்கு நாற்புறமுள்ள எல்லைகளையும் குறிக்க வேண்டும். அச்சொத்திலடங்கிய நிலத்தைப் பற்றிய விவரம் (Survey and Settlement numbers) முதலியவை கொடுக்க வேண்டும். அந்தச் சொத்தில் தீர்ப்புக் கடனாளியின் பாத்தியதை முதலியவை விண்ணப்பதாரருக்குத் தெரிந்தவரையில் தெளிவாகக் குறிக்கப்பட வேண்டும் (விதி 13).

மாவட்ட ஆட்சித்தலைவரின் அலுவகத்தில் பதிவான சில சொத்துகள் ஜப்திசெய்ய மனுச் செய்யப்பட்டால் நீதிமன்றம் அச்சொத்து சம்பந்தமான பூரண விளக்கத்துடனான அதன் அத்தாட்சி பெற்ற பதிவேட்டு நகல் கோரும். அதில் அச் சொத்தின் உண்மையான சொத்துக்காரர்கள், அவர்களுக்கு உள்ள அதை வேறு ஒருவருக்கு மாற்றக்கூடிய பாத்தியதை முதலியவை குறிக்கப் பெறும் (விதி 14).

கூட்டுத் தீர்ப்பாணை (Joint decree)

ஒரு தீர்ப்பாணை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்களுக்குச் சாதகமாக வழங்கப் பட்டிருந்தால், அதை நிறைவேற்றக்கோரும் மனு ஒருவரோ, அல்லது பலரோ தாக்கல் செய்யலாம். ஆனால் தீர்ப்பாணையை நிறைவேற்றக் குறிப்பாக யாராவது தான் மனுக்கொடுக்க வேண்டுமென விதித்திருந்தால் அவரே அம்மனுவைத் தாக்கல் செய்ய முடியும். தீர்ப்புக் குரிய

வர்களில் யாராவது இறந்து விட்டால் அவருடைய வாரிசுகளுக்காகவும், அல்லது அவருடைய சொத்தின் சட்டப் பிரதிநிதிகளுக்காகவும், சேர்த்து அந்த மனு தாக்கல் செய்யப்படலாம்.

அவ்வாறு தீர்ப்பாணை நிறைவேற்றும்படி கோரப்பட்ட மனுவில் சேராத கட்சிக்காரர்களின் நலனைக் காக்க நீதிமன்றம் அம்மனுவில் சரியென்று படுகின்ற தக்க ஆணைகளைப் பிறப்பிக்கலாம் (விதி 15).

கூட்டுத் தீர்ப்பாணை நிறைவேற்ற ஒருவரோ, அல்லது பல பேர் இருக்கும் போது சிலரே விண்ணப்பித்தால் அந்த விண்ணப்பத்தின் தீர்ப்பாணைக்குரியவர்கள், அத்தனை பேரும் எழுதிக் கொடுத்த அதிகாரம் பெற்றிருந்தாலன்றி அந்த மனுவின் பேரில் ஏனையவர்களுக்கு நீதிமன்றம் அறிவிப்புக் கொடுத்து அவர்களுடைய கருத்தைத் தெரிந்து கொண்டுதான் மேல் நடவடிக்கைக்குச் செல்லும். அதன்படி குறிப்பிட்ட விண்ணப்பதாரர்கள், பணம் அல்லது சொத்துப் பெறவோ, நீதிமன்றம் வகை செய்யும்.

அந்தத் தீர்ப்பாணையை நிறைவேற்றக் கோரும் மனுவில் நீதிமன்றம் ஏதாவது ஆணைபிறப்பித்தால் அதுபற்றியும், இந்த மனுவில் சேராத ஏனைய தீர்ப்பாணைக் குரியவர்களுக்கு அறிவிப்புக் கொடுக்கப்படும். அதுபோல நீதிமன்றக் காப்பிலுள்ள பணத்தை அல்லது சொத்தை ஒருவர், அல்லது ஒருசிலருக்கு கொடுப்பதானாலும் அதுபற்றிய அறிவிப்பு ஏனைய தீர்ப்புக் குரியவர்களுக்கும் நீதிமன்றம் கொடுக்கும்.

இது போலக் கூட்டுத்தீர்பாணையில் உள்ள பாத்தியதையைத் தீர்ப்புக்குரிய ஒருவர் வேறு ஒருவருக்கு வழங்கி விட்டாலோ, அல்லது சட்டப்படி அது வேறு ஒருவருக்குச் சேரும் நிலைமையிருந்தாலும் அவரும் அத்தீர்ப்பாணையை நிறைவேற்றச் சாதாரணமாக அத்தீர்ப்பாணைக் குரியவர் மனுச் செய்வது போல அதை நிறைவேற்றக் கோரி மனுச் செய்யலாம். அந்த மனுவில் ஏனைய தீர்ப்பாணைக் குரியவர்களுக்கு அறிவிப்புக் கொடுக்கப்பட்டு அத்தீர்ப்பாணை நிறைவேற்றப் படும். அந்தத் தீர்ப்பாணையில் உள்ள பாத்தியதையை ஒருவர் மற்றவருக்கு வழங்கியிருப்பாரானால், அவ்வாறு வழங்கப்பட்டவர் விண்ணப்பத்தின் பேரில் அத்தீர்ப்பாணை நிறைவேற்றப்படவிருக்குமானால், அந்தப் பாத்தியதையை அவருக்கு வழங்கிய மூலத்தீர்ப்பாணைக் குரியவர்களில் ஒருவருக்கும் அறிவிப்புக் கொடுக்கப்பட்டு, அத்துடன்

தீர்ப்புக் கடனாளிக்கும் அறிவிப்புக் கொடுக்கப்பட்டு அவ்விருவர்களுடைய ஆட்சேபணைகளைக் கேட்டபிறகே நீதிமன்றம் அம்மனுவின் மீது ஆணையேதும் பிறப்பிக்கும்(விதி 16).

தீர்ப்பாணை நிறைவேற்றக் கோரும் மனு சட்ட ஒழுங்குக்கு உட்பட்டுச் சரியான முறையில் சமர்ப்பிக்கப்படவேண்டும். அவ்விதம் செய்யாதபடி குறைபாடுகளிருந்தால், நீதிமன்றம் அக்குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்காக அம் மனுவைத் திருப்பி, ஒரு குறிப்பிட்ட கால வரையறை அல்லது நீடிக்கப்பட்டால் அந்தக் கால எல்லைக்குள் அவைகளை ஒழுங்கு செய்ய அவகாசம் தந்து அதன்படி அம் மனு திரும்பவும் சமர்ப்பிக்கப்பட்டுச் சரியாக இருந்தால் நீதிமன்றம் அம்மனு மீது விசாரணை நடத்தவும், ஆணைகள் பிறப்பிக்கவும் செய்யலாம்.

விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட மனுவுக்குத் தனியாக ஓர் எண் வழங்கப்பட்டு அந்த ஆண்டுக்குரிய பதிவு ஏட்டில் குறிக்கப்படும். அதை ஏற்றுக் கொண்ட நாளும், அதில் குறிக்கப் படும் (விதி 17).

நம் பகை நாட்டில் அல்லது பகைவர் கைப்பற்றிய நம் நாட்டுப் பகுதியிலிருக்க நேரிடும் தீர்ப்புக் கடனாளியின் மீதான தீர்ப்பாணையை நிறைவேற்றுவதில், ஏற்கெனவே குறிப்பிட்டபடி அவர் மீது வழக்கு அறிவிப்புக் கொடுக்க நீதிமன்றத்தால் விதிவிலக்களிக்கப்பட்டிருக்குமானால், அவருக்கு விரோதமாகத் தீர்ப்பாணையை நிறைவேற்றும்படி செய்யப்பட்ட மனுமீது உடனே நிறைவேற்றும் ஆணையிடாமல் அதைப் பொதுவாக நீதிமன்றம் நிறுத்தி வைக்கும். அத்தோடு பகை முடிவுற்ற நாளிலிருந்து ஓர் ஆண்டுக் காலம் வரை தீர்ப்புக் கடனாளி மீதுள்ள தீர்ப்பாணைகளையும் அல்லது ஆணைகளையும் நிறைவேற்றாமல் நீதிமன்றம் நிறுத்தி வைக்கும்.

ஆனால் நியாய அடிப்படையில் தீர்ப்பாணை நிறைவேற்றப் பட வேண்டுமானால் அதற்கான பாதுகாப்பு அல்லது வேறு சில நிபந்தனைகள் நியாயமானதாகக் கருதப்படுபவைகளை, அந்தக் குறிப்பிட்ட தீர்ப்பாணையை அல்லது ஆணையை நிறைவேற்ற நீதிமன்றம் உத்தரவிடலாம்.

தீர்ப்பாணைகள் ஒருவருக் கொருவர் எதிராக உள்ளதை நிறைவேற்றுவதில் அவைகள் ஒரே நீதிமன்றத்தின் பணியாகுமானால், அதற்கான மனுக்கள், அந்நீதிமன்றத்தில் தாக்கலாகியிருக்குமானால் அவைகளை ஒன்றுக்கொன்று சரிக்கட்டிக் கொள்ளலாம்.

சரிசமமான தீர்ப்பாணைகளாயிருந்தால் கணக்குத் தீர்ந்ததாகக் கொள்ளலாம் ஒன்றுக்கொன்று மிகையாயிருந்தால் மிகையாயிருக்கும் அளவிற்கு மட்டும் அதை நிறைவேற்ற ஆணையிடலாம். அத்துடன் குறைந்ததைத் தீர்த்து விட்டதாகக் கொள்ளலாம்.

இந்த விதி ஒரு தீர்ப்பாணையின் பாத்தியதை வேறு ஒருவருக்கு வழங்கப்பட்டிருக்குமானால் அவருக்கும் இதே விதத்தில் பயன்படுத்தப்படும்.

இவ்விதியைக் கையாள வேண்டுமானால், தீர்ப்பாணைக்குரியவரும், தீர்ப்புக் கடனாளியும், எதிரிடையாக ஒருவருக்கொருவர் வழக்குகளில் தீர்ப்பாணைக்குரியவர் தீர்ப்புக் கடனாளியாகவும், தீர்ப்புக் கடனாளி தீர்ப்பாணைக்குரியவராகவும் இருந்திருக்க வேண்டும். அப்போதுதான் இந்த விதி பொருந்தும்.

தீர்ப்பாணைக்குரிய ஒருவர் பலருக்கு எதிராகக் கூட்டுத் தீர்ப்பாணை பெற்றிருப்பின், அவர்களில் ஒருவர் இந்தத் தீர்ப்பாணைக் குரியவருக்கு எதிராக ஒரு தீர்ப்பாணை பெற்றிருப்பாராயின் மேற்கூறியபடி தீர்ப்பாணை நிறைவேற்றும் வகையில் சரிக்கட்டிக் கொள்ள முடியும்.

உதாரணமாக அ,ஆ,இ,ஈ, ஆகியவர்களுக்கு எதிராக 'உ' என்பவர் ரூபாய் 1000/-க்கு ஒரு தீர்ப்பாணை பெற்றிருப்பாரானால் ஒட்டு மொத்தமாகவோ, அல்லது தனித்தனியாக அதைத் தீர்க்க வேண்டுமென்ற வகையிலிருந்து அவர்களில் 'ஈ' என்பவர் 'உ' என்பவருக்கு எதிராக ரூ 100/-க்கு ஒரு தீர்ப்பாணை பெற்றிருப்பாரானால், இந்தத் தீர்ப்பாணையை 'ஈ' யும் 'உ' வும் ஒருவருக்கொருவர் எதிராக நிறைவேற்றிக் கொள்வதில் மேற்குறிப்பிட்ட விதி பொருந்தும். அதன்படி அவைகள் சரிக்கட்டிக் கொள்ளப்படும். மேற்குறிப்பிட்ட விதிக்கு விளக்கமாகக் கீழ்க்காணும் உதாரணங்களைக் கொடுக்கலாம்.

1. 'அ' என்பவர் 'இ' என்பவருக்கு எதிராக ரூ. 1000/-க்கு ஒரு தீர்ப்பாணை பெற்றிருக்கின்றார். அதுபோல 'இ' என்பவர் 'அ' விற்கு எதிராக ஒரு தீர்ப்பாணை பெற்றிருக்கின்றார். ஆனால், அந்தத் தீர்ப்பாணைப்படி ஒரு பொருளைக் குறிப்பிட்ட ஒரு காலத்திற்குள் கொடுக்க வேண்டும். அது தவறினால் 'இ', 'அ' வுக்கு ரூ 1000/- கொடுக்க வேண்டுமென்றிருந்தால், இந்தத் தீர்ப்பாணைகளை மேற்குறிப்பிட்டபடி சரிக்கட்டிக் கொள்ள முடியாது.

2. 'அ', 'ஆ' இருவரும்ஒரு வழக்கில் வாதிகள். இருவரும் ஒரு தீர்ப்பாணை 'இ' என்பவருக்கு எதிராக ரூ. 1000/-க்கு பெற்றிருக்கின்றார்கள். ஆனால் 'இ' என்பவர் 'ஆ' வுக்கு எதிராக ரூ.1000/-க்கு

ஒரு தீர்ப்பாணை பெற்றிருப்பாரானாலும், இவைகள் ஒன்றுக் கொன்று சரிக்கட்ட முடியாதவை. மேற் கூறபட்டப் விதியின்படி இந்தத் தீர்ப்பாணை எதிர் தீர்ப்பாணை (Cross decree) யாகக் கருதப்பட மாட்டாது.

3. 'அ' என்பவர், 'ஆ' என்பவருக்கு, எதிராக ரூ. 1000/-க்கு ஒரு தீர்ப்பாணை பெறுகின்றார். 'இ' என்பவர் 'ஆ' வின் பொறுப்பாளராக (trustee) 'அ' என்பவருக்கு எதிராக ரூ. 1000/-க்கு ஒரு தீர்ப்பாணை பெற்றிருப்பாரானாலும், இந்த விதிப்படி இவை இரண்டும் ஒன்றுக்கொன்று சரிசெய்துகொள்ளக் கூடிய தீர்ப்பாணைகளாகா (விதி 18).

தீர்ப்பாணையை நிறைவேற்றுவதில் பல முறைகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. அவைகளில் ஒன்றுக்கும் மேற்பட்ட முறை களில் அதை நிறைவேற்றக் கோரலாம். ஆனல் நீதிமன்றம், தன்னுசிதம் போல், தீர்ப்புக் கடனாளியைக் கைது செய்வதையும் அவருடைய சொத்தை ஜப்தி செய்தல், விற்பது போன்ற இரு செயல் முறைகளையும் ஒரே நேரத்தில் நிறைவேற்ற அனுமதிக்காது (விதி 21).

ஒரு தீர்ப்பாணை வழங்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் கழித்து மேற்படித் தீர்ப்பாணையை நிறைவேற்றும்படி கோரும் மனு மீது ஆணையிடுமுன் நீதிமன்றம் தீர்ப்புக் கடனாளிக்கு அறிவிப்புக் கொடுத்து, ஏன் இந்தத் தீர்ப்பாணையை நிறைவேற்றும் ஆணை யிடக் கூடாது என்று காரணங்கூறுமாறு கேட்கலாம். இந்த முறையில் முதலில் நிறைவேற்றக் கோரிய விண்ணப்பத்திற்குப் பிறகு கடந்து விட்ட இரண்டு ஆண்டுகள் கழித்து மனுச் செய்தாலும் அறிவிப்புக் கொடுக்க வேண்டியிருக்கும். ஆனல் அவ்விரண்டு ஆண்டுகளுக்குப் பின் மனுச் செய்தால் அறிவிப்புக் கொடுக்க வேண்டி வராது.

ஆனல் தீர்ப்பாணை வழங்கப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்குள் அதை நிறைவேற்ற வேண்டுமானல் தீர்ப்பாணைக்குரியவர் விண்ணப்பத்தின் பேரில், அதை நிறைவேற்ற எதிர்த்தரப்பின ருக்கு அறிவிப்பேதும் கொடுக்காமலே நீதிமன்றம் ஆணையிட லாம்.

தீர்ப்பாணையைத் தீர்ப்புக் கடனாளியின் சொத்துக்குச் சட்டப்படி பிரதிநிதியின் பேரில் (legal Representative) அல்லது வெளி நாட்டுத் தீர்ப்பாணையை நம் நாட்டில் நிறைவேற்ற வேண்டுமாயினும், நீதிமன்றம் எதிர்த்தரப்பாளருக்கு இது

பற்றி அறிவிப்புக் கொடுத்து அவருடைய ஆட்சேபணைகளைக் கேட்டபின்தான் நிறைவேற்றும் அல்லது அதன்மீது வேறு ஆணை பிறப்பிக்கலாம்.

தீர்ப்புக் கடனுளியான ஒருவர் வக்கற்றவராகப் பிரகடனப் படுத்தப்பட்டிருந்தாலும், அவருடைய நொடிப்பு நிலையர் சொத்தாட்சி அதிகாரிக்கு (Official Assigree or Offcial receiver) அறிவிப்புக் கொடுத்து ஒரு குறிப்பிட்ட நாளில் ஏன் இந்தத் தீர்ப்பாணையை நிறைவேற்றக் கூடாது என்று காரணம் கூறுமாறு கேட்டு அதன் பிறகு அந்த மனு மீது ஆணைபிறப் பிக்கலாம்.

தீர்ப்பாணை பெற்றவர் அத்தீர்ப்பாணையின் பகுதியை வேறு ஒருவருக்கு உரிமை மாற்றம் செய்திருப்பாரானால், அந்தத் தீர்ப்பாணையை நிறைவேற்றக் கோரும் மனு மீது அவ்வாறு உரிமை மாற்றம் பெற்றவருக்கு அறிவிப்புக் கொடுத்ததுத்தான் தொடர் நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.

நீதியின் முடிவைப் பாதிக்கும் வகையிலோ, அல்லது அநியாய மான கால தாமதம் ஏற்படும் என்று நீதிமன்றம் கருதுமானுலோ, அக்காரணங்களைப் பதிவு செய்து கொண்டு நீதிமன்றம் தீர்ப்பாணை நிறைவேற்றக் கோரும் மனுவில் எதிர்த்தரப்பாளருக்கு அறிவிப்புக் கொடுக்காமலே, தீர்ப்பாணையை நிறைவேற்ற ஆணையிடலாம்.

அவ்வாறு காரணங்களைக் குறிக்காமல் இடும் ஆணையும் செல்லுபடியாகாமல் போகாது. ஆனுல் அவ்வாறு காரணங்களைக் குறிக்காமலிடும் ஆணையின் விளைவாகத் தீர்ப்புக் கடனுளிக்குப் பெருத்த உரிமைத் தீங்கு (injurv) விளையுமானுல் அவ்வாணை செல்லாததாக ஆக்கப்படும் சங்கடம் உண்டு (விதி 22).

தீர்ப்பாணையை நிறைவேற்றக் கோரும் மனுவில் மேற் குறிப்பிட்டபடி எதிர்த்தரப்பாளருக்கு அறிவிப்புக் கொடுக்கப் பட்டு அதன்படி அவர் வந்து மறுப்பேதும் கூறவில்லையானுல் தீர்ப் பாணை நிறைவேற்ற நீதிமன்றம் ஆணையிடலாம், அல்லது எதிர்த் தரப்பாளர் நீதிமன்றத்திற்கு வந்து மறுப்பு ஏதும் கூறுவாரானுல் அதைப் பரிசீலனை செய்த பிறகு அதன்மீது நீதிமன்றம் சரியென்று கருதுகின்ற ஆணையிடலாம் (விதி 23).

தீர்ப்பாணை நிறைவேற்றக் கோரும் மனு மற்றெல்லா வகை யிலும், ஒழுங்காக இருந்தால் நீதிமன்றம், அவ்வாணையை நிறை

வேற்றக் கட்டளை பிறப்பிக்கும். அவ்வாணையில் நீதிமன்ற முத்திரையுடன் நீதிபதியோ, அல்லது நீதிமன்றம் அதற்கென்று நியமித்த அதிகாரியோ, கையொப்பமிட்டு, அதை நிறைவேற்றும் அதிகாரியிடம் அது வழங்கப்படும்.

அவ்வாறு நிறைவேற்ற இடும் ஆணையில் ஒரு நாள் குறிப்பிட்டு அந்த நாள் அல்லது அதற்கு முன் அவ்வாணை நிறைவேற்றப்பட்டு, அதற்குப் பிறகு குறிப்பிட்ட நாள் அல்லது அதற்கு முன் அவ்வாணை திரும்பவும் அதே நீதிமன்றத்திற்கு வந்து சேர வேண்டும் (விதி 24).

அத்தீர்ப்பாணையை நிறைவேற்றச் செல்லும் அதிகாரி அதில் எந்த நாளில் எந்த முறையில் அவ்வாணை நிறைவேற்றப்பட்டது என்று குறிக்க வேண்டும். அவ்வாணை குறிப்பிட்ட நாளில் நீதிமன்றத்தில் திரும்பவும் சேர்க்கப்படவில்லையானால், ஏன் நிறைவேற்றப்படவில்லை என்ற காரணத்தைக் குறித்து அவ்வாணையை நீதிமன்றத்தில் திரும்பச் சேர்க்க வேண்டும்.

தீர்ப்பாணைப் பணம் செலுத்துவதற்காக இருந்தால் அவ்வாறு செலுத்த வேண்டிய பணம் கட்டித் தீர்ப்பாணை தீர்க்கப்பட்டிருந்தால் அதற்கான மேலெழுத்துக் குறிப்பை (endorsment) அவ்வாணையில் தீர்ப்பாணை பெற்றவரின் கையெழுத்துடன் தீர்ப்பாணை பெற்றவரை அடையாளம் காட்டக் கூடிய இரண்டு பொறுப்பான சாட்சிகளின் சான்றுக் கையெழுத்தும் (attest) பெற்று நீதிமன்றத்திற்கு அவ்வாணையைத் திரும்பச் சேர்க்க வேண்டும்.

தீர்ப்பாணையை நிறைவேற்ற வேண்டிய அதிகாரியினுடைய மேலெழுத்துப்படி அதை அவர் நிறைவேற்ற முடியவில்லை என்று குறித்திருந்தால், நீதிமன்றம் அவரை அது எப்படி என்பதாக விசாரிக்கும் அல்லது வேறு நீதிமன்றத்தின் அதிகார எல்லைக்குள் அதை நிறைவேற்ற வேண்டியிருந்திருந்தால், அந்நீதிமன்றத்தையும் அது பற்றி விசாரிக்க ஏற்பாடு செய்யலாம். தேவை என்று கருதினால் அவ்வதிகாரி தீர்ப்பாணையை ஏன் நிறைவேற்ற இயலவில்லை என்பதற்கான காரணங்குறித்து, சாட்சிகளை, அழைத்தும் விசாரித்து அதன் முடிவைப் பதிவு செய்து கொள்ளும்.

தீர்ப்பாணையை நிறைவேற்ற முடியாமைக்குக் காரணம் ஏற்கெனவே தீர்ப்பாணைக் கடன் தீர்க்கப்பட்டுவிட்டதனால், என்று குறிக்கப்பட்டு, அவ்வாணை நீதிமன்றத்திற்குத் திரும்பி வந்திருந்தால் அது பற்றித் தீர்ப்பாணைக்குரியவர்க்கு அறிவிப்புக்

கொடுத்துக் குறிப்பிட்ட நாளில் ஏன் தீர்ப்பாணை தீர்க்கப்பட்டு விட்டது என்று நீதிமன்றத்தில் அத்தாட்சிப் பதிவு செய்யக் கூடாது என்று கேட்டு அதன் பேரில் நீதிமன்றம் அதைப் பதிவு செய்து கொள்ளும் (விதி 25).

தீர்ப்பை நிறைவேற்றுதலைத் தடைசெய்தல்

தீர்ப்பாணை வழங்கிய நீதிமன்றமோ அல்லது மேல் வழக்கு நீதிமன்றமோ தீர்ப்பாணையை நிறைவேற்றக் கூடாது என்று தகுந்த காரணங்கள் காட்டப்பட்டால், அதை நிறைவேற்று வதற்கு இடைக்காலத் தடை விதிக்கலாம். அது போலத் தீர்ப்பாணையை நிறைவேற்றும் பொருட்டு வேறு நீதிமன்றத் திற்கு அத்தீர்ப்பாணை மாற்றப்பட்டிருக்குமானால் அங்கு அத் தீர்ப்பாணையை நிறைவேற்ற மனுச் செய்யப்பட்டிருந்தால் அந்த நீதிமன்றமும் தீர்ப்புக் கடனாளி தகுந்த காரணங் காட்டுவா ரானால், அந்தத் தீர்ப்பாணையை நிறைவேற்றுவதற்கு இடைக் காலத் தடைவிதித்து அக்காலத்திற்குள் மேற்படித் தீர்ப்பாணையை வழங்கிய அல்லது அதை எதிர்த்து, மேல் வழக்கு ஏற்றுக் கொள்ளும் மேல்நீதிமன்றத்திலிருந்து தகுந்த தடையுத்தரவு பெறும் வகையில் ஆணையிடலாம்.

தீர்ப்பாணையை நிறைவேற்றும் வகையில் தீர்ப்புக் கடனாளி யின் சொத்தைக் கைப்பற்றியோ, அல்லது அவரைக் கைது செய் திருக்கும் போது, தீர்ப்பாணை நிறைவேற்றும் நீதிமன்றம் தீர்ப்பாணையை நிறைவேற்றக் கோரும் மனுவின் முடிவு தெரியும் வரை அச்சொத்தையும் விடுவித்துத் திரும்ப அவரிடம் ஒப்படைக்கலாம்; அவரையும் விடுவிக்கலாம்.

அவ்வாறு அவரை விடுவிப்பதற்கும், அல்லது கைப்பற்றப் பட்ட சொத்தைத் திரும்ப ஒப்படைப்பதற்கும் தீர்ப்புக் கடனாளி தகுந்த பிணை கொடுக்கவும், அல்லது அவர் மீது வேறு நிபந்தனை களை விதித்துக் கைப்பற்றப்பட்ட சொத்தைத் திரும்பக்கொடுக்க லாம். அவ்வாறு திரும்பிக் கொடுத்தாலும் பிறகு அவற்றைக் கைப் பற்றவும், அல்லது அவர் விடுவிக்கப்பட்டால் திரும்பவும் கைது செய்யவும் முடியும் (விதி 26&27).

தீர்ப்பாணையை வேறு நீதிமன்றம் நிறைவேற்றுவதானாலும், முதலில் தீர்ப்பாணை வழங்கிய நீதிமன்றமோ, அல்லது அங்கிருந்து மேல் வழக்கு ஏற்றுக் கொள்ளும் மேல் நீதிமன்றமோ கொடுக்கும் கட்டளைத் தீர்ப்பாணையை நிறைவேற்றும் நீதிமன்றத்தைக் கட்டுப் படுத்தும் (விதி 28).

தீர்ப்பாணை பெற்றவர் மீது வேறு ஒரு வழக்குத் தொடரப்பட்டு அது விசாரணையிலிருந்தால் அதில் தீர்ப்புக் கடனாளி வாதியாக இருப்பாரானால் அந்த வழக்கு முடியும் வரை மேற்குறிப்பிட்ட தீர்ப்பாணையை நிறைவேற்றுவதை நிறுத்திவைக்கலாம். அவ்வாறு நிறுத்தி வைக்கக் கோரும் போது அதற்குத் தகுந்த பிணை, அல்லது நீதிமன்றம் சரி எனக் கருதுகின்ற நிபந்தனைகளை விதித்து அதை நிறுத்தி வைக்கலாம் (விதி 29).

பணம் பெறுவதற்கான தீர்ப்பாணையை நிறைவேற்றுவது தீர்ப்புக் கடனாளியின் சொத்தை ஜப்தி செய்து விற்பது மூலமும் அல்லது அவரைச் சமூக உரிமைச் சிறைக் கூடத்திலிடுவது மூலமும் நிறைவேற்றலாம் (விதி 30).

அசையும் பொருளுக்கான அல்லது அதிலுள்ள பாத்தியதைக்கான தீர்ப்பாணையை நிறைவேற்றுவது, அப்பொருளைக் கைப்பற்றி அதற்குரியவரிடம் ஒப்படைக்கவும், அல்லது தீர்ப்பின்படி அப்பொருளுக்குரியவர் அதைப் பெற்றுக்கொள்வதற்கு யாரை நியமிக்கின்றாரோ, அவரிடம் ஒப்படைக்கவும் அல்லது அத்தீர்ப்புக் கடனாளியைச் சமூக உரிமைச் சிறைக் கூடத்திலிடுவதன் மூலமும் தீர்க்கலாம். அல்லது அந்தப் பொருளை ஜப்தி செய்தோ, அல்லது அவரைச் சிறையிலிட்டோ, அத்தீர்பாணையை நிறைவேற்றலாம்.

அவ்விதம் ஜப்தி செய்யப்பட்ட அசையும் பொருள் நீதிமன்றத்தில் அந்த ஜப்தியின் கீழ் 3 மாதங்களுக்கு மேலிருந்தும் தீர்ப்புக் கடனாளி தீர்ப்பாணைக்குக் கீழ்ப்படியவில்லையானால் தீர்ப்பாணைக்குரியவர் அந்தப் பொருளை விற்க விண்ணப்பிக்கலாம். அத்தீர்ப்பாணையில் அப்பொருளுக்கு ஈடாகத்தீர்ப்பாணைக்குரியவருக்கு எவ்வளவு தொகை கொடுக்கலாம் என்று குறிப்பிட்டிருந்தால், அந்தப் பொருள் விற்கப்பட்டு அதன் வருவாய், தீர்ப்பாணைக்குரியவருக்கு வழங்கப்படும். சில சமயம் அவர்களுக்கு வேறு நட்ட ஈடும் சேர்த்து வழங்கப்படும். எஞ்சியது தீர்ப்புக் கடனாளியிடம் அவருடைய விண்ணப்பத்தின் பேரில் திரும்பிக் கொடுக்கப்படும்.

தீர்ப்புக் கடனாளி, தீர்ப்பாணையை ஏற்றுக் கொண்டு விட்டாலோ, அல்லது செலுத்த வேண்டிய தொகையை நீதிமன்றச் செலவுத் தொகையுடன் கட்டி விடுவாரானாலும், அல்லது ஜப்தியின் 3 மாதம் முடியும் வரை அந்த ஜப்தி செய்யப்பட்ட பொருளை விற்பதற்கான விண்ணப்பமேதும் தீர்ப்பாணைக்குரியவர்

கொடுக்கவில்லையானாலும் அல்லது விண்ணப்பிக்கப்பட்டு அது நிராகரிக்கப்படுமானாலும், மேற்குறிப்பிட்ட ஜப்தி அத்துடன் முடிந்து விடும். ஆனால் தீர்ப்புக்குரியவர் விண்ணப்பத்தின் பேரில் சரியென்று கண்டால் அந்த மூன்று மாத காலத்தை நீதி மன்றம் நீடிக்கலாம். அவ்வாறு நீடிக்கும் போது ஜப்தியின் காலம் மொத்தத்தில் 6 மாதத்திற்கு அதிகப்படக் கூடாது (விதி 31).

ஒப்பந்தப்படி குறிப்பிட்ட செயல் செய்வதற்காகவும் (decree for specific performance of the Contract) பிரிந்த மணமக்கள் கலந்துறவு உரிமை தந்து தீரவேண்டு மென்ற (Decree for restitution of conjugal rights) செயலுறுத்துங் கட்டளைக்கான (Infurctions) தீர்ப்பாணைகளை நிறைவேற்றப் போதுமான வசதி யிருந்தும் யாருக்கு எதிராகத் தீர்ப்பாணை வழங்கப்பட்டதோ அவர் வேண்டு மென்றே அத்தீர்ப்பாணைக்குக் கீழ்ப்படியத்தவறி விட்டால், அதுபோலக் கலந்துறவு உரிமைக்காக வழங்கப்பட்ட தீர்ப்பாணையாயிருப்பின் யாருக்கு எதிராகத் தீர்ப்பாணை வழங்கப் பட்டதோ அவருடைய சொத்தை ஜப்தி செய்வதின் மூலம் அத் தீர்ப்பாணையை நிறைவேற்றி வைக்கலாம். அது தவிர மேலே குறிப்பிட்ட ஏனைய தீர்ப்பாணைகளை நிறைவேற்றுவதில், தீர்ப் பாணைக்குப் பணியாதவரை சமூக உரிமைச் சிறைக் கூடத்திலிட வும், அல்லது அவருடைய சொத்தை ஜப்தி செய்யவும் அல்லது இரண்டையும் செய்து அத்தீர்ப்பாணையை நிறைவேற்றலாம்.

அதுபோக ஒப்பந்தப்படி குறிப்பிட்ட செயலைச்செய்தலுக்காக இடப்பட்ட தீர்ப்பாணை அல்லது செயலுறுத்துக் கட்டளைக்கான (injunctions) ஒரு கூட்டு வியாபாரத்திற்கு (Corportion) எதிராய் வழங்கப்பட்டதாயிருக்குமானல் மேற்படித் தீர்ப்பாணை கூட்டு வியாபாரத்திற்குச் சொந்தமான சொத்துகளை ஜப்தி செய்வதன் மூலம் நிறைவேற்றவும், அல்லது நீதிமன்றத்தின் அனுமதியுடன் அக்கூட்டு வியாபாரத்தின் இயக்குநர்கள் (Directors) அல்லது முக்கிய அதிகாரிகளைக் கைது செய்து சமூக உரிமைச் சிறைக் கூடத்தில் வைப்பதன் மூலம் அல்லது அவருடைய சொத்தை ஜப்தி செய்வதின் மூலம் அல்லது அவ்விரண்டையும் செய்வதன் மூலமும் நிறைவேற்றலாம்

மேற்குறிப்பிட்டபடி செய்யப்பட்ட ஜப்தி மூன்று மாத காலம் நீடித்திருந்தாலும், தீர்ப்புக் கடனாளி அத்தீர்ப்பாணைக்குப் பணியவில்லையானாலும், தீர்ப்பாணைக்குரியவர் ஜப்தி செய்யப் பட்ட சொத்தை விற்க மனுச் செய்திருந்து அதன் பேரில் அந்தச்

சொத்து விற்கப்பட்டு அதில் கிடைத்த பணத்திலிருந்து தீர்ப்பாணைக்குரியவருக்கு எவ்வளவு நட்ட ஈடு கொடுப்பது சரியென்று நீதிமன்றம் கருதுகின்றதோ, அந்தத் தொகையைக் கொடுத்து விட்டு எஞ்சிய தொகை ஏதாவதிருந்தால் அதைத் தீர்ப்புக் கடனாளிக்கு அவருடைய விண்ணப்பத்தின் பேரில் கொடுக்க வேண்டும். மேற்குறிப்பிட்ட மூன்று மாதக் காலத்தை, விண்ணப்பத்தின் பேரில் சரியென்று கருதினால் நீதிமன்றம் மொத்தத்தில் ஓர் ஆண்டுக்கு மிகைபடாமல் நீடிக்கலாம்.

ஆனால் ஜப்தி செய்யப்பட்ட பிறகு தீர்ப்புக் கடனாளி தீர்ப்பாணைக்குப் பணிந்து அதை நிறைவேற்றுவதற்கான நீதி மன்றச் செலவுத் தொகையைச் சேர்த்துக் கட்டிவிட்டாலும் அல்லது குறிப்பிட்ட மூன்று மாத ஜப்தி காலத்திற்குள்ளோ, தீர்ப்புக்குரியவர் ஜப்தி செய்த சொத்தை விற்பதற்கு மனுச் செய்யாமல் விட்டு விட்டாலும் அல்லது விற்பதற்கு மனுச் செய்திருந்து அம்மனு நிராகரிக்கப்பட்டிருந்தாலும், மேற்படி ஜப்தி முடிவுக்கு வந்து விடும்.

ஒப்பந்தபடி செய்ய வேண்டிய குறிப்பிட்ட செயலுக்கான தீர்ப்பாணை அல்லது உறுத்துக் கட்டளையான (injunction) தீர்ப்பாணை மதிக்கபடவில்லையானால் அதற்குப் பதிலாக அத்துடன் சேர்த்துச்செய்யப்பட்ட நீதிமன்ற ஆணைகளுடன் நீதிமன்றம், அவ்வாணைப்படி, செய்யப்பட வேண்டிய காரியத்தை, எவ்வளவு தூரம் செய்ய முடியுமோ, அந்த அளவு செய்யக் கோரலாம். தீர்ப்பாணைக்குரியவரோ, அல்லது அவரால் நியமிக்கப் பட்டவரோ, தீர்ப்புக் கடனாளியின் செலவில் அதை நிறை வேற்றச் சொல்லலாம். அவ்வாறு செய்யப்பட்டால் அதற் காகச் செய்யப்பட்ட செலவு நிர்ணயிக்கப்பட்டு, நீதிமன்ற ஆணைப்படி அச்செலவும், தீர்ப்பாணைப்படி சேர வேண்டிய தொகையாகக் கருதப்பட்டுத் தீர்ப்புக் கடனாளியிடமிருந்து திரும்பப் பெறப்படும் (விதி 32).

மேற்குறிப்பிட்டபடியில்லாமல் கலந்துறை உரிமை மீட்டடைவிப்புக்கான தீர்ப்பாணை (Decree for restitution of Conjugal rights) ஒரு கணவனுக்கு எதிராக வழங்கப்பட்டிருந் தால், அத் தீர்ப்பாணை வழங்கும்போது, அல்லது அதற்குப் பின்னரும் எந்த வேளையிலும் அவ்வாணையைச் செயலாக்க அவ்வாணையில், குறிப்பிட்ட நாளுக்குள் கணவனை, தீர்ப்பாணைக் குரிய மனைவிக்குக் குறிப்பிட்ட இடை வேளைகளில் நீதிமன்றம்

நியாயம் என்று கருதுகின்ற ஒரு குறிப்பிட்ட தொகையைக் கட்ட வேண்டுமென ஆணையிடலாம்.

அவ்வாறு கட்ட வேண்டுமென ஆணையிடப்பட்ட தொகையைக் கட்ட வேண்டிய காலத்தையும் நீதிமன்றம் அவ்வப்போது மாற்றியமைக்கும், அல்லது தாற்காலிகமாக நிறுத்தி வைக்கவும் அதைத் திரும்ப கொடுக்கவும் ஆணையிடலாம்.

இந்த முறைப்படிப் பணம் கட்ட வேண்டுமென ஆணையிடப்பட்ட தொகை, அல்லது தீர்ப்பாணைப்படி செலுத்தப்பட வேண்டிய தொகையைப் பெற்றுத் தரும் விதத்தில் எவ்வகையில் அது நிறைவேற்றப்படுமோ அந்த வகையில் அவ்வாணை நிறைவேற்றப்படும் (விதி 33).

ஒரு அசையாச் சொத்தின் உடைமையை ஒருவருக்குக் கொடுக்க வேண்டுமெனத் தீர்ப்பாணையிருக்குமானால், தீர்ப்பாணை நிறைவேற்றுவதில் அந்த உடைமைக்குரியவருக்கு அது வழங்கப்பட வேண்டும். அல்லது அவர் நியமித்த ஆள், அவர் சார்பில் அதைப் பெறுவதற்கு வகை செய்யப்படும். அந்த உடைமையி லிருப்பவர் அவ்விடத்தினின்று நகர மறுத்தால் அவரை அந்த இடத்திலிருந்து அகற்றவும், ஏற்பாடு செய்யப்படும்.

கூட்டு உடைமை (Joint Possession) வழங்கப்பட்டிருக்குமானால் அந்தத் தீர்ப்பாணையை நிறைவேற்றுவதில் அந்த உடைமையாளரிடம் வழங்கப்பட வேண்டும் என்று குறித்த எழுத்து ஆணை அந்தச் சொத்தில் வெளிப்படையாகத் தெரிகின்ற இடத்தில் ஒட்டப்பட்டு அதோடு அவ்வாணையைப் பிரகடனப் படுத்தும் விதத்தில் தண்டோராப் போட்டு அல்லது வேறு வழக்கப்படிப் பொது மக்களுக்கு அத்தீர்ப்பாணைச் சுருக்கம் அறிவிக்கப்படும்.

ஒரு கட்டடத்திலிருந்து கொண்டு தீர்ப்பாணைபடி உடைமை கொடுக்க மறுத்தார்களானால், அவர்கள் பலவந்தமாக வெளியே அனுப்பப்பட்டு அங்குள்ள அறைகள் பூட்டப்பட்டிருந்தால் அவைகளும் உடைக்கப்பட்டு, உடைமைக்குரியவரிடம் அது ஒப்படைக்கப்படும். அங்கு நம் நாட்டு வழக்கப்படி வெளியில் வராத பெண்களிருப்பார்களானால், அவர்களும் எச்சரிக்கப்பட்டுத் தகுந்த முறையில் அவர்கள் வெளியேறுவதற்கு அவகாசம் வசதி செய்து கொடுக்கப்பட்டு அவ்விடம் கைபற்றப்பட்டு உடைமைக்குரியவரிடம் அது ஒப்படைக்கப்படும் (விதி 35).

உடைமை வழங்கப்பட வேண்டிய கட்டடத்தில் யாராவது வாடகைக்குக் குடியிருப்பாரானால் அவர் இந்தத் தீர்ப்பாணைப்படி

காலி செய்ய வேண்டியதில்லையானால் அந்தக் கட்டடத்தின் உடைமை, உரியவருக்கு ஒப்படைப்பது, தீர்ப்பாணைச் சுருக்கம் அந்தக் கட்டடத்தில் வெளிப்படையாக தெரியுமிடத்தில் ஒட்டப்பட வேண்டும். அதோடு அவ்வீட்டில் குடியிருப்பவருக்கு தண்டோராப் போட்டோ, அல்லது வேறு வழக்கப்படி பகிரங்கமாகத் தெரிவிக்கின்ற முறைப்படி தெரிவிக்கவும் வேண்டும் (விதி 36).

கைதுசெய்தலும் சிறையிலிடலும்

தீர்ப்பாணைப்படி பணம் தரவேண்டியவரை அதை நிறைவேற்றும் போது சிறையிலிடவேண்டுமென்று விண்ணப்பிக்கப்பட்டால் நீதிமன்றம் உடனடியாகக் கைது செய்வதற்கான பிடி ஆணை கொடுக்காமல் அத்தீர்ப்புக் கடனாளிக்கு அறிவிப்புக் கொடுத்துக் குறிப்பிட்ட நாளில் நீதிமன்றத்திற்கு வரும்படி கட்டளையிட்டு அவரை ஏன் கைது செய்து சிறையிலிடக் கூடாது என்று காரணம் காட்டும்படி கேட்கும்.

தீர்ப்பாணைக்குரியவருடைய சத்தியவாக்கு மூலத்தின் மூலம் தீர்ப்புக் கடனாளி, தீர்ப்பாணை நிறைவேற்றக் கால தாமதப்படுத்தும் நோக்கத்தோடும் அல்லது அந்த அளவு விளைவு தரக் கூடிய விதத்தில், நீதிமன்றத்தின் எல்லையைத் தாண்டி ஓடிவிட இருக்கின்றார் அல்லது சென்று விடுவார் என்ற நிலையிலிருப்பாரானால் அதைத் தடை செய்யப் பிடி ஆணை பிறப்பிக்கலாம்.

மேற்குறிப்பிட்டபடி அறிவிப்புக் கொடுத்தும் நீதிமன்றத்திற்கு வரவேண்டிய நாளில் தீர்ப்புக் கடனாளி வரத்தவறிவிட்டாரரானல், அதனால் தீர்ப்புக் குரியவருடைய வேண்டுகோளின்படி தீர்ப்புக் கடனாளியைக் கைது செய்ய பிடி ஆணையிடலாம் (விதி 37).

பிடி ஆணை கொடுக்கப்பட்டு கைது செய்யும் பணியை மேற்கொண்ட அதிகாரி தீர்ப்புக்கடனாளியை நீதிமன்றத்தில் எவ்வளவு முடியுமோ, அவ்வளவு விரைவில் கொண்டு வந்து நிறுத்த ஆணையிடப்படும். தீர்ப்பாணைபடிக் கட்டவேண்டிய பணமும் அதற்கான வட்டி, மற்றும் நீதிமன்றச் செலவுகள் உட்பட தீர்ப்புக்கடனாளி கட்டு வாரானாலும் அல்லது தீர்ப்பாணைக்குரியவர் அந்தப்பிடி ஆணையில் தீர்ப்பாணைக் கடன் தீர்க்கப்பட்டு விட்டதாக எழுதிக் கையெழுத்திட்டாலும் பிடி ஆணை நிறைவேற்றப்படாமல் அவ்வாணை நீதிமன்றத்திற்குத் திருப்பப்படும் (விதி 38).

தீர்ப்பாணைக்குரியவர் நீதிபதி போதுமானது என்று கருதத் தக்க உணவுச்செலவுக்கான படியை நீதிமன்றத்தில் கட்டினு லொழிய தீர்ப்புக் கடனாளியைக் கைது செய்ய நீதிமன்றம் பிடி ஆணை பிறப்பிக்காது. அந்தப்படி கைது செய்வதிலிருந்து நீதி மன்றத்திற்கு அவரைக் கொண்டுவரும் நாள்களுக்கான உணவுப் படி (Subsistence allowance) யும் கட்டியிருக்க வேண்டும்.

தீர்ப்புக் கடனாளி சிறைக்கூடத்தில் வைக்கப்பட வேண்டு மானால் அதற்கான மாதாந்தர உணவுப்படியை நீதிமன்றம் நிர்ணயிக்கின்றபடி முன்பணமாகக் கட்டினால்தான் அவரைச் சிறையிலிட நீதிமன்றம் ஆணையிடும். அந்த மாதாந்தர உணவுப் படியைச், சிறையிலிடக்கோரும் மனுதாரர் கட்டியாக வேண்டும்.

உணவுப்படியுடன் தீர்ப்புக் கடனாளி கைது செய்யப்பட்ட விடத்திலிருந்து நீதிமன்றம் வரவேண்டிய பிரயாணப்படியும், திரும்ப நீதிமன்றத்திலிருந்து சிறைக்கூடம் போவதற்கான, மற்றும் சிறைக்கூடத்திலிருந்து தீர்ப்புக் கடனாளி அவர் வீட்டுக்குச் செல்வதற்கான பிரயாணப்படியும் நிர்ணயிக்கின்றபடி சேர்த்துக் கட்டப்பட வேண்டும்.

தீர்ப்பாணைப்படி நீதிமன்றச் செலவாக மேற்படி உணவுப் படியும், பிரயாணப்படியும், சேர்த்துக் கொள்ளப்படும் (விதி 39).

கொடுக்கப்பட்ட அறிவிப்புப்படி தீர்ப்புக் கடனாளி நீதி மன்றத்திற்கு வந்து, தான் ஏன் கைது செய்யப்படக் கூடாது என்று காரணம் காட்டுவாரானால் அல்லது பணம் கொடுப்பதற்கான தீர்ப்பாணையை நிறைவேற்றுவதில் பிடி ஆணைப்படி கைது செய்யப்பட்டு நீதிமன்றத்திற்குக் கொணரப் படுவாரானால் தீர்ப் பாணைக்குரியவரை, நீதிமன்றம் விசாரித்து அவர் கொடுக்கும் ஆதாரங்களைப் பதிவு செய்து கொண்டு தீர்ப்புக் கடனாளிக்கு மேலும் ஒரு சந்தர்ப்பம் வழங்கி ஏன் அவரைச் சிறைக்கூடத் திற்கு அனுப்பக் கூடாது என்பதற்குக் காரணம் காட்ட நீதி மன்றம் கேட்கும்.

நீதிமன்ற விசாரணையிலிருக்கும் போது தீர்ப்புக் கடனாளியின் சொந்தப் பிணையிலும் அல்லது நீதிமன்றத்தின் உசிதப்படியும் விடுவிக்கலாம் அல்லது நீதிமன்ற அதிகாரியின் பொறுப்பிலும் அவரை நிறுத்தி வைக்கவும் கூடும்.

மேற்படி விசாரணை முடிந்து தீர்ப்புக்கடனாளியை, சிறையி லிட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டால் அவரைக் கைது

செய்து சிறையிலிட ஆணையிடலாம். கைது செய்யப்பட்ட தீர்ப்புக் கடனாளிக்குச் சந்தர்ப்பம் கொடுத்து அவர் தீர்ப்பாணையைத் தானே நிறைவேற்றுவதற்காக அவரை உடனே சிறையிலிடாமல் நீதிமன்ற அதிகாரியின் பாதுகாப்பில் 15 நாள்களுக்கு மிகை படாமல் அவருடைய சொந்தப் பொறுப்பில் நீதிமன்றம் விடுவிக்கவும் செய்யலாம். அதன்படி அந்த நாள்களுக்குள் தீர்ப்பாணை அவரால் நிறைவேற்றப்படாவிட்டால் குறிப்பிட்ட நாளில் அவர் நீதிமன்றத்திற்கு வந்தாக வேண்டும்.

இந்த வகையில் விடுவிக்கப்பட்டவர் திரும்பவும் உடனே கைது செய்யப்படலாம். விசாரணைக்குப் பிறகு நீதிமன்றம் தீர்ப்புக் கடனாளியைச் சிறைக்கூடத்திற்கு அனுப்ப வேண்டியதில்லையெனக்கருதினால் அவரை விடுதலை செய்து விடலாம் (விதி 40).

பற்றுகைப் பொருள் வைத்திருப்பவர் (Garnishee)

தீர்ப்புக்கடனாளிக்குச் சேரவேண்டிய பணம், கடன், சாதாரணக் கடனும் அல்லது மாற்று முறையாவணத்தால் (Negotiable instrument) பாதுகாக்கப்படாதிருந்த கடனோ, அது போலக் கூட்டு வியாபாரத்திலுள்ள பங்காக இருந்தாலோ, அல்லது தீர்ப்புக் கடனாளியின் அசையும் சொத்து அவர்வசமில்லாமலோ, அல்லது நீதிமன்றக் காப்பிலுமில்லாமல் வேறு ஒருவருடைய உடைமையிலிருக்குமானால் அவைகளை நீதிமன்றத்தின் தடை ஆணைமூலம் (Prohibitory Order) ஜப்தி செய்து விடலாம்.

தீர்ப்புக் கடனாளியின் மேற்குறிப்பிட்ட அசையும் சொத்து மற்றவருடைய உடைமையிலிருக்குமானால், அவ்வுடைமையிலிருக்கும் அவர், பற்றுகைப் பொருள் வைத்திருப்பவர் (Garnishee) என்று அழைக்கப்படுகின்றார்.

ஒரு கம்பெனியில் பணிபுரிகின்ற ஒருவர் தீர்ப்புக் கடனாளியாக இருக்க நேரிடின் அக் கம்பெனி அவருக்குக் கொடுக்கும் சம்பளம் அல்லது மேலூதியம் (Bonus) முதலியவையும் ஜப்திக்குரியவை. அதனால் அந்தக் கம்பெனியைப் பற்றுகைப் பொருள் வைத்திருப்பவர் (Garnishee) என்று அழைக்கலாம். சம்பளமோ, அல்லது மேலூதியமோ, பணிபுரிகின்றவர்க்குக் கொடுக்கப்படவிருப்பதால், அதைக் கம்பெனி அதன் ஊழியர்களுக்குக் கொடுக்க வேண்டிய கடனாகக் கருதப்படும்.

இந்த வகையில் ஜப்தி செய்வது, பற்றுகைப் பொருள் வைத்திருப்பவருக்குத் தடை ஆணை (Prohibitory Order) கொடுத்துத் தீர்ப்புக் கடனாளிக்கு ஒருவர் பணம் செலுத்த வேண்டியவராயிருப்பின் அவரை அக் கடனை அவருக்குச் செலுத்தாமல் நீதிமன்றத்தில் கட்டச் சொல்லி ஆணையிடுவதோடு தீர்ப்புக் கடனாளியை அந்தக் கடனைப் பெறக்கூடாது என்றும் தடை விதிக்கலாம். அல்லது நீதிமன்றத்தின் மறு ஆணை பிறப்பிக்கும் வரை அதைக் கட்டாமல் நிறுத்திவைக்கவும் தடைவிதிக்கலாம்.

கூட்டு வியாபாரத்திலுள்ள பங்காக இருந்தால் அதைத் தீர்ப்புக் கடனாளியின் பேரிலிருந்து வேறு ஒருவருக்கு மாற்றுவதற்கு அதிலிருந்து கிடைக்கக் கூடிய பங்கு ஆதாயம்(Dividend) அவருக்குக் கொடுக்கக் கூடாது என்றும் தடை ஆணை விதிக்கலாம்,

அது தவிர வேறு தீர்ப்புக் கடனாளியுடைய அசையும் பொருளாயிருந்து அவை வேறு ஒருவருடைய உடைமையிலிருக்குமானால் அப்பொருளைத் தீர்ப்புக் கடனாளிக்குக் கொடுக்கத் தடை ஆணை போடலாம்.

இவ்வாறு வழங்கப்படும் தடை ஆணையின் நகல் நீதிமன்றத்தில் ஒரு வெளிப்படையான ஒருபிரதான இடத்தில் ஒட்டப்படும். அதன் மற்ற நகல் தீர்ப்புக்கடனாளிக்குக் கொடுக்க வேண்டிய கடனை வைத்திருப்பவருக்கு அல்லது கம்பெனியின் பங்காக இருந்தால் அந்தக் கம்பெனியின் முக்கிய அதிகாரிக்கு அல்லது வேறு அசையும் பொருளின் உடைமையுடையவராயிருந்தால் அவருக்கு அனுப்பப்படும்.

இவ்வாறு தடை விதிக்கப்பட்ட கடனாளி தான் தீர்ப்புக் கடனாளிக்குச் செலுத்த வேண்டிய தொகையை நீதிமன்றத்தில் கட்டிவிடுவாரானால் அக்கடனிலிருந்து அவர் விடுவிக்கப்படுவார் (விதி 46).

பற்றுகைப் பொருள் வைத்திருப்பவரைத் தீர்ப்புக் கடனாளியின் கடனாளி என்றும் சில சமயங்களில் அழைக்கலாம். பற்றுகைப் பொருள் வைத்திருப்பவர் (Garnishee) கைவசமுள்ள பணமோ, பொருளோ, ஜப்தி செய்யப்பட்டிருப்பின் அதை நீதிமன்றத்தில் கொடுக்க வேண்டும் என்று தீர்ப்பாணைக்குரியவர் விண்ணப்பத்தின் பேரில் நீதிமன்றம் அறிவிப்புக் கொடுத்து, ஏன் அதை நீதிமன்றத்தில் சேர்க்கக் கூடாது என்றும் கேட்கப்படும்.

அந்த அறிவிப்புப்படிப் பற்றுகைப் பொருள் வைத்திருப்பவர், நீதிமன்றத்திற்கு வராமலிருந்து அல்லது பதில் கூறாமலிருந்து தன்னிடம் தீர்ப்புக் கடனாளிக்குச் சொந்தமான பணமோ அல்லது பொருளோ இல்லை என்று மறுக்காமலிருந்தால் நீதிமன்றம் தீர்ப்புக்கடனாளி செலுத்த வேண்டிய பணமோ அல்லது பொருளோ நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டுமென்று அதிகார ஆணையிடும்.

ஆனால் அவர் தம்மிடம் இருப்பதாகக் கூறப்படும் பொருள் தம்வசம் இல்லை என்று கூறினால் அதைப்பற்றி விசாரணை செய்து முடிவு செய்யப்படும். அவரிடமுள்ளது தீர்ப்புக்கடனாளி செலுத்த வேண்டிய தொகைக்குக் குறைவானதாயிருந்தாலும் நீதிமன்றம் அதை ஒப்படைக்கச் சொல்லிக் கட்டளையிடலாம். அதுவுமில்லாமல் அந்தப் பொருளில் அல்லது பணத்தில் வேறு ஒருவருக்கும் பாத்தியதை யிருக்கின்றது என்று அவர் கூறுவாரானால் அந்த மூன்றும் நபருக்கும் அறிவிப்புக் கொடுக்கப்பட்டு விசாரணை செய்து முடிவெடுக்கப்படும்.

மேற்கூறப்பட்ட விசாரணை முதலியவை மிகச் சிக்கலாகத் தோன்றினால் நீதிமன்றம் இந்த முறை நடவடிக்கையைக் கைவிடும்.

பற்றுகைப் பொருள் வைத்திருப்பவர் (Garnishee) என்ன செய்ய வேண்டும் என்று நீதிமன்றம் இடும் ஆணைகளை அவர் நிறைவேற்றவில்லையானால் பொதுவாகத் தீர்ப்பாணைகள் நிறைவேற்றப்படுவதுபோல் அவ்வாணைகளும் நிறைவேற்றப்படும் (விதி 46. a to i).

தீர்ப்புக் கடனாளிக்குப் பாத்தியதையுள்ள அசையும் பொருள் ஒரு வேளை இருவருக்கு அல்லது அதற்கும் மேற்பட்டவருக்குச் சொந்தமாக இருப்பின் அதையும் நீதிமன்றம் ஜப்தி செய்து தீர்ப்புக் கடனாளிக்கு ஜப்திக்கட்டளை அனுப்பி, அதன்படி அதிலுள்ள பாத்தியதையை யாருக்கும் மாற்றவோ, விற்கவோ கூடாது என்று தடை விதிக்கலாம் (விதி 47).

அரசு, ரயில்வே ஊழியர்கள் சம்பளத்தை ஜப்தி செய்தல்

அரசு, ரயில்வே, அல்லது ஊராட்சித்துறை அதிகாரிகள் அலுவலர்கள் சம்பளம் ஜப்தி செய்யப்படுவதானால், அவர்கள் தீர்ப்புக் கடனாளியாயிருந்து அவ்வாணையை நிறைவேற்றும் நீதி

மன்றத்தின் அதிகார எல்லைக்குள், அல்லது அதற்கு வெளியிலிருந்தாலும் பிரிவு 66-ல் மேலே குறிப்பிட்ட விதிவிலக்குகளின் கீழ் எவ்வளவு பணம் எஞ்சியதோ, அதைச் சம்பளம் அளிக்கும் அதிகாரிக்கோ, அல்லது வேறு அதிகாரியை அரசு இது காரணத்திற்காக நியமித்து அரசு இதழில் பிரசுரம் செய்திருப்பின், அவருக்குக் கொடுக்கும் அறிவிப்பில் அந்தப் பணம் மொத்தமாகவோ, அல்லது மாதாந்தரமாகவோ, பிடிக்க வேண்டுமென்று ஜப்தி ஆணையிட்டால் அதன்படி அந்த ஜப்தி நிறைவேற்றப்படும். அவ்வாறு நிறைவேற்றப்பட்ட ஜப்திப்படி அந்தப் பணம் பிடிக்கப்பட்டு ஆணையிட்ட நீதி மன்றத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

கூட்டாண்மைச் சொத்தை ஜப்தி செய்தல் (Attachment of Partnership property)

கூட்டாண்மை அல்லது அதன் கூட்டாளிகள் மீது வழங்கப்பட்டத் தீர்ப்பாணையன்றி வேறெந்தத் தீர்ப்பாணையையும் கூட்டாண்மைச் சொத்தின்மீது தொடரப்பட்டு ஜப்தி செய்ய முடியாது.

தனிப்பட்ட முறையில் ஒரு கூட்டாளியின் மீது உள்ள தீர்ப்பாணையைச் செயல்படுத்த விண்ணப்பிக்கப்பட்டால், நீதிமன்றம் அந்தக்கூட்டாளியின் கூட்டாண்மைச் சொத்திலுள்ள பாத்தியதை மீதும் அதனின்று அவருக்குக் கிடைக்கும் இலாபத்தையும் அத்தீர்ப்பாணையை நிறைவேற்றுவதற்குப் பொறுப்பாயிருக்க ஆணையிடும். அதே ஆணையிலோ, அல்லது அதற்குப்பின் வழங்கப்பட்ட ஆணைப்படியும் அவருடைய அச்சொத்தின் பாத்தியதைக்கும் அதிலிருந்து கிடைக்கும் இலாபத்திற்கும் ஒரே காப்பாளரை (பேணுநரை) நியமித்து அவருடைய சொத்துக் கணக்கு முதலியவை பார்க்கவும் அல்லது அதை விற்பதற்கு ஏற்பாடு செய்யவும் வழி செய்யப்படும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மற்றக் கூட்டாளி யாரும் தீர்ப்புக் கடனாளியான கூட்டாளியின் சொத்தை மீட்கலாம். அதன் பாத்தியதை விற்கப்படுமானாலும் அதை வாங்கிக் கொள்ளவும் செய்யலாம். ஆதலால் ஜப்தியோ மற்ற ஆணையோ, பிறப்பிக்கப்படும் போது ஏனைய கூட்டாளிகளுக்கும் அதுபற்றிய அறிவிப்புக் கொடுக்கப்படும். அவ்வாறு வேறு கூட்டாளி தீர்ப்புக் கடனாளியான கூட்டாளியின் பங்கை வாங்குவதற்கு அல்லது மீட்பதற்கு விரும்பினால் அதன் பேரில் எல்லாக் கூட்டாளிகளுக்கும் தீர்ப்பாணைக் குரியவருக்கும் அறிவிப்புக் கொடுக்க வேண்டும் (விதி 49).

ஆனால் கூட்டாண்மையை எதிர்த்துப் பெறப்பட்ட தீர்ப்பாணை அக்கூட்டாணைச் சொத்தின்மீது நிறைவேற்றப் படலாம். கூட்டாண்மையில் கூட்டாளிகளிலொருவர் என்று நீதிமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்தவர் மீதும் தீர்ப்பாணை நிறைவேற்றப்படலாம். அதோடு அந்தக் கூட்டாண்மையில் ஒரு கூட்டாளி என்ற முறையில் ஒருவருக்கு அழைப்பாணை கொடுத்தும் அதை ஏற்று அவர் நீதிமன்றத்திற்கு வந்து பதில் கூறுதவராயிருப்பினும் அவர் மீதும் மேற்படித் தீர்ப்பாணை நிறைவேற்றப் படலாம்.

மாற்று முறை ஆவணம் ஜப்தி (Attachment of Negotiable instruments)

நீதிமன்றத்திலோ, அல்லது குறிப்பிட்ட அரசு அதிகாரியிடமோ, பாதுகாப்பில் இல்லாத மாற்று முறை ஆவணத்தை (Negotiable Instrument) ஜப்தி செய்து அறிக்கை பற்றி நீதிமன்றத்தில் அதை ஒப்படைத்து நீதிமன்றத்தின் பின் ஆணைப் படி அதை வைத்துக் கொள்ளலாம் (விதி 51).

நீதிமன்றத்தின் அல்லது குறிப்பிட்ட அரசு அதிகாரியின் காப்பிலிருக்கும் சொத்துகளை ஜப்தி செய்வதானால் ஜப்திக்கான அறிவிப்பை அந் நீதிமன்றத்திற்கோ, அல்லது அந்த அதிகாரிக்கோ கொடுக்கலாம்.

நீதிமன்றத்தீர்ப்பாணைகளையும் ஜப்தி செய்யலாம். அவ்வாறு தீர்ப்பாணை வழங்கிய நீதிமன்றம் அதனுடைய தீர்ப்பாணையையும் ஜப்தி செய்ய ஆணையிடலாம். அவ்வாணையை அறிவிப்பு மூலம் அத் தீர்ப்பாணை வழங்கிய அந்த நீதிமன்றத்திற்கு அனுப்பி அத்தீர்ப்பாணையை நிறை வேற்றாமல் பார்த்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளலாம்.

அசையாச் சொத்தை ஜப்தி செய்தல்

ஓர் அசையாச் சொத்தை ஜப்தி செய்வதானால் அந்தக் சொத்துக்குரிய தீர்ப்புக்கடனாளியை அந்தச் சொத்தை வேறு யாருக்கும் மாற்றவோ, விற்கவோ, அல்லது அந்தச் சொத்தின் மீது எந்த வில்லங்கத்தையும் ஏற்படுத்தி அதன் மூலம் எந்தப் பலனும் அடையக் கூடாது என்று தடைசெய்து விடலாம்.

அவ்விதமான ஜப்தி ஆணை அந்தச் சொத்திலோ, அல்லது அதன் அருகிலோ, தண்டோராப் போடுவதன் மூலமும் அல்லது

வழக்கமாக வேறு வகையில் பிரகடனப்படுத்த முடியுமானால் அவ்விதமோ பிரகடனப்படுத்தப்படும். அந்த ஜப்தி ஆணை நகல் நீதிமன்றத்தில் சாதாரணமாகப் பார்வை படும் இடத்திலும் ஜப்தி செய்யப்பட்ட சொத்திலும் ஒட்டப்படும். மேற்படிச் சொத்து அரசுக்கு வருவாய் கட்டக் கூடிய நிலமாயிருந்தால் அந்த ஜப்தி ஆணை நகல் அம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திலும் ஒட்டப்படும். அவ்விதமாக மாநகராட்சி அல்லது நகராட்சிக் குட்பட்ட எல்லையாயிருக்குமானால், அந்த அலுவலகத்திலும், இராணுவ சம்பந்தப்பட்ட இடமானால் (Cantonment) அங்குள்ள ஊராட்சி அலுவலகத்திலும், இராணுவ நிலச்சொத்து அதிகாரியின் அலுவலகத்திலும், அந்த ஜப்தி ஆணை நகல் ஒட்டப்பட வேண்டும்.

மறுபலன் கருதாமல் ஒப்படைப்பு அல்லது ஜப்தி செய்யும் ஆணையிட்ட நாளுக்குப் பிறகு தீர்ப்புக்கடனாளியின் சொத்து வேறொருவருக்கு மாற்றப்பட்டால் அது செல்லுபடியாகாது. அதனால் அவ்விதம் மாற்றப்பட்டிருக்குமானால் யாருக்குக் கைமாறியதோ, அவர் மீதும் மேற்படி ஒப்படைப்பு மேற்கொள்ளப்படும்.

மற்றவர்களுக்கு அதாவது பணம் கொடுத்து அல்லது பயன் கருதித் தீர்ப்புக்கடனாளியின் சொத்து மாற்றப்பட்டிருக்குமானால் அவர்கள் மீதும் ஒப்படைப்பு ஆணை செய்யப் பட்டதாகக் கொள்ளப்படும். அவர்கள் அந்த ஜப்தி ஆணையிலிருப்பது தெரிந்து அச் சொத்தை வாங்கியிருந்தாலும், அல்லது அந்த சொத்தின் மீது தண்டோராப் போட்டோ அல்லது வேறு வழக்கத்துக்குகந்த வழியில் ஜப்தி ஆணைபிரகடனப்படுத்திய நாளிலிருந்து அவர்கள் மீதும் ஒப்படைப்பு ஆணை நிறை வேற்றப்பட்டதாகக் கொள்ளப்படும்.

தீர்ப்பாணை தீர்க்கப்பட்டு விட்டால் ஒப்படைப்பு நீக்கப்படும்.

தீர்ப்பாணையில் குறிப்பிட்ட படியான தொகையும் அத்துடன் சேர்க்கப்பட்ட நீதிமன்றச் செலவுகள் அத்துடன் ஒப்படைப்புக்கான செலவுத் தொகையும் சேர்த்து நீதிமன்றத்தில் கட்டி விட்டால் ஒப்படைப்பு உடன் நீக்கப்படும்.

அல்லது தீர்ப்பாணை வேறுவகையில் நீதிமன்றத்தின் மூலம் தீர்க்கப்பட்டிருந்து, அது நீதிமன்றத்தால் அத்தாட்சி செய்யப் பட்டிருந்தாலும், ஒப்படைப்பு உடன் நீக்கப்படும்.

அல்லது தீர்ப்பாணை தள்ளி வைக்கப்பட்டாலும் மாற்றப் பட்டாலும் அதன்படி ஒப்படைப்பு உடனே நீக்கப்படும்.

மேற்குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் ஒப்படைப்பு நீக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படும். ஆனால் தீர்ப்புக்கடனாளி விரும்பு வாரானால் வெளிப்படையாகவும், ஒப்படைப்பு நீக்கப்படும். அதன்படி அவருடைய செலவில் அது பிரகடனப் படுத்தப்பட்டு அவ்வாறு செய்யப்பட்ட பிரகடனத்தின் நகல் அந்தச் சொத்தில் வெளிப்படையாகத் தெரியக்கூடிய இடத்தில் ஒட்டப்படும். ஒப்படைப்புச் செய்யப்பட்டது ரொக்கப் பணமாயிருந்தால் அந்த ஒப்படைப்பு நீடிக்கும் காலத்தில் நீதிமன்றம் தீர்ப்பாணைக்குரிய வருக்குச் சேரவேண்டிய பணத்தை ரொக்கமாகக் கொடுக்கும்படி ஆணையிடலாம் (விதி 56).

ஒரு தீர்ப்பாணை நிறைவேற்றப்படும்போது ஒரு சொத்து ஒப்படைப்பதாயிருந்தால் அந்த நிறைவேற்றக் கோரிய விண்ணப் பம் விசாரணையிலிருக்கும் போது அந்த விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்டாலும், அல்லது வேறு நாளுக்கு ஒத்திவைக்கப் பட்டாலும், நீதிமன்றம் மேற்படி ஒப்படைப்பு நீடிக்கின்றதா, அல்லது முடிந்து விடுகின்றதாவென குறிக்க வேண்டும்.

ஆனால் மேற்படி விண்ணப்பம், தீர்ப்பாணைக் குரியவருடைய தவற்றினால் தள்ளுபடி செய்யப்படுமானால் அவ்வாணைப்படி ஒப்படைப்பு முடிவுக்கு வந்துவிடும் (விதி 57).

ஒப்படைப்பான சொத்தில் பாத்தியதை கோருதலும் அதை எதிர்த்தலும் (Claims and objections)

ஒரு தீர்ப்பாணையை நிறைவேற்றுகையில் ஒருவருடைய சொத்து ஒப்படைப்பு செய்யப்பட்டிருக்குமானால், அந்தச் சொத்தில் மூன்றும் நபர் ஒருவர் பாத்தியதை இருப்பதாகக் கோருவாரானாலும் அல்லது ஏதாவது காரணத்தால் அந்தச் சொத்தை ஒப்படைப்புச் செய்ய முடியாது என்று எதிர்ப்புத் தெரிவித்தாலும், அவ்விரண்டையும் நீதிமன்றம் தீர்க்கமாய் விசாரணை செய்யும். அவ்வாறு விசாரணை செய்யும்போது அந்த மூன்றும நபர் வழக்கில் கட்சிக்காரர் போலக் கருதப்பட்டு, விசாரணைக்கான தகுந்த சந்தர்ப்பம் அளிக்கப்படுவார்.

அவ்விதமாக ஒப்படைப்புச் செய்த சொத்தில் பாத்தியதை கோருதல் அல்லது ஒப்படைப்புச் செய்யக் கூடாது என்று எதிர்ப்புத் தெரிவித்தல், அநாவசியமாகவும், தவறான எண்ணத் திலும் செய்யப்பட்டதாக நீதிமன்றம் கருதினால் அதுபற்றிய விசாரணை ஏதும் செய்யப்படமாட்டாது.

ஒப்படைப்புச் செய்யப்பட்ட சொத்து விற்பனைக்கு விளம்பரம் செய்யப்படுமானால், அந்நேரம் மேற்குறிப்பிட்டபடி மூன்றும் நபர் பாத்தியதை கோரல், அல்லது அதற்கு எதிர்ப்பிருக்குமானால், நீதிமன்றம் அவ்விற்பனையைத் தள்ளிப்போடும். (விதி 58).

பாத்தியதை கோரும் மனு அல்லது எதிர்ப்பு மனு செய்யும் விதம் சாதாரணமாக வழக்குரை போல அமைதல் வேண்டும். அம் மனு விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டால் ஏழு நாள்களுக்குள் அல்லது நீதிபதியின் உத்தரவுப்படி நீடிக்கப்பட்ட நாளுக்குள் அம்மனுதாரர் சொத்தை ஒப்படைப்புச் செய்வதற்கு அறிவிப்புக் கொடுக்கத் தக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அதன் பேரில் அவருக்கு அறிவிப்பு சார்புசெய்யப்பட்டு பின் விசாரணை தொடரும். அதில் அத்தாட்சிகள் பதிவு செய்யப்பட்டு அதன் பேரில் அது பற்றி முடிவு செய்யப்படும்.

அதன்படி கோருபவர் (claimant) அல்லது எதிர்ப்பவர் (objector) மேற்படிச் சொத்தில் ஒப்படைப்பான நாளில் தனக்குப் பாத்தியதை இருந்ததையும், அதோடு அச் சொத்து தன் உடைமையில் இருந்ததாகக் காட்டும் ஆதாரங்களைத் தாக்கல் செய்யவேண்டும் (விதி 59).

மேற்குறிப்பிட்டபடி பாத்தியதை கோரும் மனு அல்லது மறுப்பு மனுவின் மீதான விசாரணையில், தீர்ப்புக் கடனாளிக்கு அந்தச் சொத்தில் பாத்தியதையில்லை. அல்லது ஒரு குறிப்பிட்ட அளவுதான் பாத்தியதையிருக்குமானால் அந்த அளவுக்கு மட்டும் ஒப்படைப்பை நீடித்து விட்டு, மேற்படி மனுவை ஏற்று ஒப்படைப்பான ஏனைய சொத்தை நீதிமன்றம் விடுவித்துவிடும் (விதி 60).

அம் மனு விசாரணையில் ஒப்படைப்பான மேற்படிச் சொத்து தீர்ப்புக் கடனாளிக்குரியது என்று கண்டு பிடிக்கப்பட்டால் மேற்படி பாத்தியதை கோரும் மனு அல்லது மறுப்பு மனு தள்ளுபடி செய்யப்படும். மனுதாரர் அம் மனுவுக்கான நீதிமன்றச் செலவுத் தொகை கட்டவும் ஆணையிடலாம் (விதி 61).

நீதிமன்றம், ஒப்படைப்புச் செய்த சொத்து உடைமையற்ற அடைமானம் அல்லது வேறு வில்லங்கத்தின் கீழ் இருக்குமானால், அதற்குட்பட்டு அந்த ஒப்படைப்பை நீடிப்பது சரியென்று நீதிமன்றம் கருதினால் அதை நீடிக்கலாம் (விதி 62).

இந்தப் பாத்தியதை கோரும் மனு அல்லது எதிர்ப்பு மனுவில் யாருக்காவது பாதகமாகக் கொடுக்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்துப் பாதிக்கப்பட்டவர் தனிப்பட்ட முறையில் வழக்குப் போட்டுத் தன் உரிமையை நிலைநாட்டிக் கொள்ளலாம். அந்த வழக்கின் தீர்ப்புக்குட்பட்டு மேற்படி மனுவில் கொடுக்கப்பட்ட தீர்ப்பு முடிவானது அல்லது தீர்க்கமானதாகும் (விதி 63).

ஒப்படைப்பான சொத்து விற்கப்படுதல்

தீர்ப்பாணையை நிறைவேற்றும் நீதிமன்றம் ஒப்படைப்புச் செய்யப்பட்ட சொத்தை விற்று, அல்லது அதில் ஒரு பகுதியை மட்டும் விற்றால் தீர்ப்பாணைக்குரிய தொகையை ஈடுகட்டி விடப் போதுமானது எனக் கருதினால் அந்தப் பகுதியை மட்டும் விற்று அதில் வந்த தொகையைத் தீர்ப்பாணைப்படிப் பெறக் கூடிய வருக்குக் கொடுக்கும் (விதி 64).

இந்த முறையில் செய்யப்படும் சொத்து விற்பனை, நீதிமன்ற அதிகாரி அல்லது நீதிமன்றம் நியமிக்கும் ஒருவரால் பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படும் (விதி 65).

நீதிமன்றம் தீர்ப்பாணையை நிறைவேற்றுவதில், பொது ஏலத்தில் ஒரு சொத்தை விற்கக் கட்டளையிட்டிருந்தால், அவ்வித மாக விற்பதற்குக் குறிக்கப்பட்ட சொத்தைப்பற்றிப் பிரகடனம் செய்யுமாறு, ஏற்பாடு செய்யப்படும். அந்தப் பிரகடனம் குறிப் பிட்ட நீதிமன்ற மொழியில் இருத்தல் வேண்டும் (விதி 66).

அந்தப் பிரகடனம் தயாரித்தல், தீர்ப்பாணைக்குரியவர், தீர்ப்புக் கடனாளி ஆகியவர்களுக்குத் தகுந்த அறிவிப்புக் கொடுத்த பின் செய்யப்படும். அதில் துல்லியமாக விற்கப்படக் கூடிய சொத்து, அந்தச் சொத்து சம்பந்தமாக நிர்ணயிக்கப்பட்ட அரசு வருவாய் அல்லது ஏதாவது வில்லங்கத்திற்குட்பட்டிருந்தால் அதையும், எவ்வளவு தொகை அதிலிருந்து பெறுவதற்கிருக்கிறது, அல்லது மீட்கப்படவிருக்கிறது. அத்துடன் மேற்படிச் சொத்தின் மதிப்பு ஒன்று தீர்ப்பாணைக்குரியவர் கூறுகிறபடியும் மற்றது தீர்ப்புக் கடனாளி கூறுகிறபடியும் அதோடு நீதிமன்றத்தின் கருத்துப்படி சொத்தின் மதிப்பை அறிய உதவும் வேறு விவரங் களும் கொடுக்கப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட விவரங்கள் அடங்கிய மனு விண்ணப்ப தாரரின் கையெழுத்துடன் அந்த விவரங்கள் சரிபார்க்கப்பட்ட தாகவும் இருத்தல் வேண்டும் (விதி 66).

விற்பனைப் பிரகடனத்தில் கூறப்பட்டவை சரிதானு என்று பார்க்க நீதிமன்றம் யாரையும் அழைத்து விசாரிக்க விரும்பினு லும் அதன்படி செய்யலாம். அது சம்பந்தமான எழுத்து ஆதாரங்கள் (documents) அவரிடமிருக்குமானுல் அவைகளையும் நீதிமன்றத்தில் காட்டும்படி கேட்கலாம்.

பொது ஏல விற்பனைக்குரிய சொத்துப்பற்றிய விவரங்களை விண்ணப்பதாரரோ, அல்லது அச் சொத்தை நன்கு அறிந்த வரோ, சத்தியவாக்கு மூலம் தெரிவிக்க வேண்டும். அதை விற்பதற்குரிய அவர் அபிப்பிராயப்படி தகுந்த காலம் இடம் எந்த வகையில் விளம்பரம் செய்ய வேண்டும் என்பதும் விற்பனைக்குரிய சொத்து எந்த வகையில் பிரிக்கப்பட வேண்டும் என்பதுமெல்லாம் அந்த வாக்கு மூலத்தில் அடங்கியிருக்க வேண்டும்.

நீதிமன்ற அதிகாரி நியமிக்கப்படவில்லையானுல் தனிப்பட்ட ஏலதாரருடைய தகுதி பற்றியும், சொத்து நகராட்சிக் எல்லைக் குட்பட்டிருந்தால், அந்த மனுவில் வரி செலுத்துவதற்கான விவரம் அடங்கிய அத்தாட்சியும் வைக்கப்பட வேண்டும். அதோடு வில்லங்க அத்தாட்சியும் வைக்கப்படவேண்டும்.

அந்த விவரங்களைப் பரிசீலனை செய்து நீதிமன்றம் அதை விற்பதற்கான ஒரு தனிப்பட்ட ஏலதாரரை நியமிக்கலாம்.

விற்பனைப் பிரகடனம் நீதிபதியால் கையெழுத்திடப்படும். அதைத் தொடர்ந்து விற்பனைக்கான ஆணையும், பிறப்பிக்கப் படும். அத்துடன் விற்பனைக்காகக் குறிக்கப்பட்ட நாளிலிருந்து 31 நாள்களுக்குள் அம் மனு மீதான விசாரணைக்கு நாள் நிர்ணயிக்கப்படும்.

விற்பனைக்கான பிரகடனம் சாதாரணமாகத் தண்டோராப் போட்டோ அல்லது வேறு சாதாரணமாக, ஏற்றுக் கொள்ளப் பட்ட வழக்கபடி செய்யப்படும்.

அது தவிர நீதிமன்றம் கருதினுல், அரசு இதழில் அல்லது செய்தித் தாளிலும் விற்பனைப் பிரகடனம் செய்ய ஆணையிடலாம்.

நீதிமன்றம் விற்பனைப் பிரகடனத்தின் நகலை தீர்ப்புக் கடனாளிக்கு அனுப்ப வேண்டுமென கட்டளையிட்டாலொழிய, அதை அவருக்கு அனுப்ப வேண்டிய அவசியமில்லை (விதி 67).

எளிதில் கெட்டுப் போகக் கூடிய பொருளாக இருந்து அது ஒப்படைப்புச் செய்யப்பட்டிருந்தால், முன் குறிப்பிட்ட விதி

விலக்குப்படி உடனே விற்று விடலாம். அது வல்லாமல் சாதாரண மாக, ஒப்படைப்புச் செய்யப்பட்ட அசையாச் சொத்தா யிருந்தால் தீர்ப்புக் கடனாளியின் எழுத்து மூலமான அனுமதி யிருந்தாலொழிய அச் சொத்து பொது ஏலத்தில் விற்பனை செய்யப் பட வேண்டுமானால், விற்பதற்கான பிரகடனம் செய்யப்பட்டு விற்பனைப் பிரகடன நகல் எந்த நீதிபதி விற்பனைக்கு ஆணை யிட்டாரோ, அங்கு அவருடையநீதிமன்றத்தில் அவ்வாணையின் நகல் ஒட்டப்பட்ட நாளிலிருந்து 30 நாள்கள் கழித்துச் செய்யப் படவேண்டும் அதுபோல அசையும் சொத்தாயிருந்தால், 15 நாள்கள் கழித்து அதன் பிறகுதான் விற்பனை நடைபெறலாம் (விதி 68).

நீதிமன்றமோ அல்லது அதற்கென நியமிக்கப்பட்ட அதிகாரியோ, உசிதம் போல விற்பனைக்குக் கொண்டு வரப்பட்ட சொத்தை விற்பதற்குக் குறிப்பிட்ட நாளை விடுத்து வேறு நேரத்திற்கும் தள்ளிப் போடலாம். ஆனால் அவ்வாறு விற்பனையைத் தள்ளிப் போடுவதானால், அதற்கான காரணங் களைப் பதிவு செய்த பிறகுதான் தள்ளிப் போட முடியும்.

அவ்வாறு செய்யப்படும் விற்பனை நீதிமன்றத்தின் எல்லைக் குள்ளிருக்குமானால் நீதிமன்றத்தின் அனுமதியில்லாமல் விற்பனையைத் தள்ளிப்போட முடியாது.

விற்பனை ஒருமாத காலத்திற்குமேல் தள்ளிப்போடப்படு மானால், திரும்பவும் விற்பனைப் பிரகடனம் முதலியவை வழக்கம் போல் செய்தாக வேண்டும். ஆனால் தீர்ப்புக் கடனாளி அவ்விதம் மறு விற்பனைப் பிரகடனம் செய்யத் தேவையில்லையென ஒப்புதல் மூலம் விட்டுக் கொடுப்பாரானால் மறு விற்பனைப் பிரகடனம் தேவையில்லை.

தீர்ப்பாணைப்படி சேர வேண்டிய தொகை, நீதிமன்றச் செலவு, மற்றும் விற்பனை வரை ஏற்பட்ட செலவு முழுவதும் பொது ஏலத்தில் விற்பனைக்குக் கேட்டு முடிக்கு முன் விற்பனை நடத்தும் அதிகாரியிடம் செலுத்தப்படுமானால் விற்பனை நிறுத்தப் படும். அல்லது அந்த அதிகாரியின் திருப்திக்குத் தீர்ப்புக் கடன் தொகை மற்றும் அத்துடன் சம்பந்தப்பட்ட சகல செலவுத் தொகையும் விற்பனைக்கு ஆணையிட்ட நீதிமன்றத்தில் கட்டியாகி விட்டது என்ற அத்தாட்சி கொடுத்தாலும் மேற்படி பொது ஏல விற்பனை நிறுத்தப்படும் (விதி 69).

முதல் ஏல விற்பனையில் ஒருவர் வாங்குவதற்காக ஏலம் கேட்டபடி தொகையைச் செலுத்தி விற்பனையை முடிக்காததால்,

மறு விற்பனை நடைபெற்றதில், ஏலத்தொகை குறையுமானால், முதலில் ஏலத்தில் வாங்க முனைந்தவர் அந்த நட்டத்தை ஈடு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றார். அவ்வாறு குறைந்துவிட்ட தொகையைக் குறித்து ஏலம் நடத்திய அதிகாரி ஓர் அத்தாட்சி நீதி மன்றத்திற்குத் தாக்கல் செய்ய வேண்டும். அதன் பேரில் தீர்ப்பாணைக்குரியவருடைய ஏற்பாட்டினாலோ அல்லது தீர்ப்புக் கடனாளியின் ஏற்பாட்டினாலோ, அவ்வாறு நட்டத்திற்குக் காரணமாயிருந்த முதல் ஏலம் கேட்டவரிடமிருந்து அந் நட்டத்தைச் சரிக்கட்ட அந்த நட்டத்தொகை வசூலிக்கப்படும். அதை வசூலிப்பதற்கு, அந்த தொகைக்கு அவர் மீது பணம்தர வேண்டுமென்ற தீர்ப்பாணை இருப்பது போலக் கருதப்பட்டு அது நிறைவேற்றப்பட்டுப் பணம் வசூல் செய்யப்படும் (விதி 71).

தீர்ப்பாணைக்குரியவர் யாரும் பொது ஏல விற்பனையில் நீதிமன்றத்தின் எழுத்து மூலமான அனுமதியில்லாமல் தன்னால் விற்பனைக்குக் கொண்டு வரப்பட்ட சொத்தை வாங்குவதற்கு ஏலத்தில் கேட்கக் கூடாது.

ஆனால் நீதிமன்றத்தின் அனுமதியுடன் ஏலத்தில் தீர்ப்புக்குரியவர் தன்னால் ஏலத்திற்குக் கொண்டு வரப்பட்ட அந்தச் சொத்தை வாங்குவாரானால், தனக்குச் சேர வேண்டிய பணத்திற்கு ஈடானது போக மேற்கொண்டு கொடுக்க வேண்டியிருந்தால் அல்லது குறைவாயிருந்தால் அல்லது சரிக்குச் சரியாக இருந்தால் அதன்படி தீர்ப்பாணை தீர்க்கப்பட்டதாகப் பதியப்பட்டு முடிவுறும்.

நீதிமன்ற அனுமதியில்லாமல் தீர்ப்பாணைக்குரியவர் தானோ அல்லது வேறு ஒருவர் மூலமோ அந்தச் சொத்தை ஏலத்தில் வாங்குவாரானால், அவ்வாறு அச்சொத்து வாங்கப்பட்டதால், தன்னுடைய நலன் பாதிக்கப்பட்டதாகக் கருதக் கூடியவரின் விண்ணப்பத்தின் பேரில் நீதிமன்றம் சரி என்று கருதினால் அந்த விற்பனையைத் தள்ளுபடி செய்து விடலாம். அதைத் தள்ளுபடி செய்யக் கோரிய மனுவுக்கான செலவுத் தொகையும் அவ்வாறு கேட்டதால் ஏலத்தில் சொத்துக்குக் கிடைக்கூடிய தொகை குறைபட்டாலும் அதையும் சேர்த்து அத்துடன் அவைகளுக்கான செலவுகளையும் சேர்த்துத் தீர்ப்பாணைக்குரியவர் கொடுக்க வேண்டியிருக்கும் (விதி 72).

பொது ஏல விற்பனையை நடத்தும் அதிகாரி அல்லது இந்த ஏலம் நடத்துவதற்கான கடமை ஏதும் செய்ய வேண்டிய ஒருவர் நேரடியாகவோ, அல்லது மறைமுகமாகவோ, ஏலம் கேட்கவோ,

அல்லது அச்சொத்தை அடையவோ, அல்லது விற்பனை செய்யப் பட்ட அந்தச் சொத்தில் பலன் ஏதும் அடைய முயற்சிப்பதுகூடக் கூடாது (விதி 73).

அசையும் சொத்து விற்பனை

தீர்ப்பாணை நிறைவேற்றுகையில் விவசாயப் பொருளான வளரும் பயிரை விற்க வேண்டியிருக்குமானால் அதை அது விளையும் நிலத்திலோ, அல்லது அதற்கருகிலோ விற்க வேண்டும்.

அந்தப் பயிர் அறுவடையாகி, ஒப்படிக்கு வந்து விட்டால், ஒப்படியில் அல்லது அதற்கருகில் அல்லது அந்தத் தானியம் விற்பனைக்குரிய இடம் அல்லது பாதுகாக்கப்பட்டிருக்கும் இடத்திலோ, விற்பனை செய்யப்பட வேண்டும்.

சந்தைபோன்ற இடங்களில் விற்பது இலாபகரமாயிருக்கு மானால் நீதிமன்றம் ஆணையிட்டு அங்கு விற்பனையை நடத்தச் செய்யலாம்.

அவ்வாறு விற்பனை நடத்தும் போது, அங்கு விற்பனையை நடத்தும் அதிகாரியின் அபிப்பிராயத்தில் நியாயமான விலை அப் பொருளுக்குக் கிடைக்கவில்லையானாலும், அல்லது அந்தப் பொருளை, உற்பத்தி செய்தவரோ அல்லது அவரால் அனுமதிக்கப் பட்ட வேறு ஒருவர் விண்ணப்பத்தின் பேரிலோ, மறு நாளைக்கு அல்லது மறு சந்தைக்கு விற்பனையைத் தள்ளிவைக்கப்படும். ஆனால் அப்படித் தள்ளி வைக்கப்பட்ட நாளில் என்ன விலை கிடைத்தாலும் விற்பனை முடிந்தாக வேண்டும் (விதி 74).

வளரும் பயிரை ஏலத்தில் விற்பதானால் அது அறுவடைக்குத் தயாரான காலத்தில்தான் சாதாரணமாக, விற்கப்படும்படி நீதிமன்றம் ஆணையிட வேண்டும். ஆனால் பயிர் முற்றாத காலத் தில் விற்பதனால் அதிக இலாபத்திற்கு விற்க முடியும் என்ற நிலையிருந்தால், அந்த நிலையிலும் அதை விற்பனை செய்ய ஆணை யிடலாம். அவ்வாறு விற்கப்பட்டால் அவ்வாணையும் பயிரை வாங்கியவர் அவ்விளை நிலத்தில் பயிர் முற்றாத நிலையிலும், புகுந்து அறுவடை செய்யவும், அதைச் சேர்க்கவும், ஆவன செய்ய உரிமை உண்டு (விதி 75).

எழுத்து வாக்குறுதி கடனாயிருந்தாலும் அல்லது கம்பெனி யில் உள்ள பங்காக இருந்தாலும் தீர்ப்பாணை நிறைவேற்றுவதில் விற்கப்பட வேண்டுமானால் நீதிமன்றம் பொது ஏலத்தில்

விற்பதற்குப் பதிலாகத் தரகர் மூலம் அதை ஏற்பாடு செய்யலாம் (விதி 76).

அசையும் பொருள்களாயிருந்து பொது ஏலத்தில் விற்கப்படுமானல் அந்தப் பொருள் ஒன்றின் விலை ஏலத்தின் போது உடனே கட்டப்பட வேண்டும். அல்லது ஏலம் நடத்துபவர் அனுமதிக்கும் காலக் கட்டத்துக்குள் கட்டியாக வேண்டும். இல்லாவிட்டால், மறு ஏலத்தில் உடனே அது விற்கப்படும். அவ்வாறு விலைக்குக் கொடுக்கப்பட்டவுடன், ஏலம் நடத்தும் அதிகாரி அதற்கான ரசீது கொடுக்க வேண்டும் அப்போது, விற்பனை பூர்த்தியாகி விடுகின்றது.

விற்கப்படும் அசையும் பொருளில் பங்குள்ள எவரும் ஏலம் கேட்டு வாங்கிக் கொள்ளலாம் (விதி 77).

அசையும் பொருளை ஏலத்திற்கு விளம்பரப் படுத்துவதிலோ, அல்லது விற்பனை செய்வதிலோ, ஒழுங்கீனம் எதாவது இருக்குமாஞல், அது விற்பனையைப் பாதிக்காது. ஆனல் அதனல் பாதிக்கப் பட்டவர் அதற்கான நட்டஈடு கோரி தனி வழக்குப்போடலாம், அந்தப் பாதிப்புக்குக் காரணமானவர் அதற்கான நட்ட ஈடோ, அல்லது அவர் அந்தப் பொருளை வாங்கியவராயிருந்தால் அதைத் திருப்பித் தரும்படியும், அது முடியாவிட்டால் அதற்கான நட்ட ஈடு கொடுக்கும்படியும் கேட்கலாம் (விதி 78).

அசையும் பொருள் விற்பனைக்கு முன் கைப்பற்றப்பட்டிருந்தால் விற்றவுடன் வாங்கியவரிடம் அது ஒப்படைக்கப்படும். ஆனல் விற்பனை செய்யப்பட்ட பொருள் வேறு ஒருவருடைய உடைமையில் இருக்குமானல் உடைமை வைத்திருப்பவருக்கு அந்தப் பொருளை வேறு யாரிடமும் கொடுக்காமல் அதை வாங்கியவரிடம் மட்டும் ஒப்படைக்க வேண்டும் என்று அறிவிப்புக் கொடுக்கப்படும் (விதி 79).

அசையாச் சொத்து விற்பனை

அசையாச் சொத்துகளைத் தீர்ப்பாணையை நிறைவேற்றும் வகையில் விற்பனை செய்யச் சிறுகாரண நீதிமன்றம் தவிர வேறு எல்லா நீதிமன்றங்களும் ஆணையிடலாம் (விதி 82).

அசையாச் சொத்து விற்பனைக்கு வந்த பிறகு தீர்ப்புக் கடனாளி அந்தச் சொத்தை விற்ருே அல்லது வில்லங்கத்துக்குட் படுத்தித் தீர்ப்பாணைக்குச் சேர வேண்டிய தொகை கட்டி விடுவதாக மனுச் செய்வாரானல், அதன் பேரில் நீதிமன்றம் திருப்தி

யடையுமானல், விற்பனையை நிறுத்தி வைத்து அவருக்குச் சில நிபந்தனைகளின் பேரில் அந்த அவகாசம் அளிக்கப்படலாம்.

அவ்வாறு அவகாசம் அளிக்கப்படும் போது, அதற்கான அத்தாட்சி, நீதிமன்றம் வழங்கும். அதன்படி தீர்ப்புக் கடனாளி அந்தச் சொத்தை அடைமானம் வைத்து அல்லது குடிக் கூலிக்கு விட்டு அல்லது விற்பனை செய்து தீர்ப்பாணைக்குரிய பணம் கட்டி விடலாம். ஆனுல் அவர் அவ்விதம் எழுப்பிய பணத்தை நேரடியாகப் பெற முடியாது. அதற்குப் பதில் அது தீர்ப்பாணைக் குரிய தொகை கட்டுதல் முதலியவைகளுக்கு முதலில் பயன்பட வேண்டுமாதலால் அந்த விற்பனை அல்லது அவர் ஏற்படுத்திய வில்லங்கங்கள் நீதிமன்றத்தில் உறுதி செய்யப்பட்டாலொழிய அச்சொத்தைக் கட்டுப்படுத்தாது (விதி 83).

அசையாச் சொத்து விற்றவுடன் அச்சொத்தை வாங்கிய தாக அறிவிக்கப்பட்டவர் விற்பனைத் தொகையில் 25 சதவீதம் பாதுகாப்புத் தொகையாக அந்த விற்பனை நடத்துபவரிடம் கட்ட வேண்டும். அவ்வாறு கட்டத் தவறினுல் அச் சொத்து மறு ஏலத்தில் அப்போதே விற்கப்படும்.

நீதிமன்ற அனுமதியுடன் தீர்ப்புக்குரியவர் அச்சொத்தை ஏலத்தில் வாங்குவாரானுல் தீர்ப்பின்படி சேர வேண்டிய தொகையிலிருந்து அந்தப் பாதுகாப்புத் தொகையின் 25 சத வீதம் ஈடாகக் கருதப்படும். அதனுல் அவர் உடனே அந்தப் பாதுகாப்புத் தொகை ரொக்கமாகக் கட்டவேண்டியதில்லை (விதி 84).

பாதுகாப்புத் தொகை போக, விற்பனைத் தொகையில் பாக்கி பூராவும் நீதிமன்றத்தில் விற்பனை நடந்த 15 நாள் களுக்குள் கட்டியாக வேண்டும்.

தீர்ப்பாணைக்குரியவர் வாங்கியிருந்தால் பாக்கியாகக் கட்ட வேண்டியது. ஈடு செய்யப்பட்ட தொகை முதலியவை கணக்கிடக் குறிப்பிட்ட காலதாமதம் ஏற்பட்டால் அந்தத் தாமதத்திற்குள் பாக்கியைக் கட்ட வேண்டும் (விதி 85).

பொது ஏலத்தில் அசையாச் சொத்தைக் கேட்டுக் குறிக்கப் பட்டபடி 25 சதவீதம் பாதுகாப்புத் தொகை கட்டிவிட்டுப் பிறகு குறிப்பிட்ட நாளுக்குள் பாக்கித் தொகை பூராவும் ஏலம் கேட்டவர், கட்டத்தவறினுல் நீதிமன்றம் சரியென நினைத்தால் அந்தப்பாதுகாப்புத் தொகையில் நீதிமன்றச் செலவு நீங்கலாக, மிஞ்சியதை இழக்க வேண்டுமென உத்தரவிடலாம். அதன்படி

தவறி விட்ட ஏலம் கேட்டவர் அந்தத் தொகையை அரசுக்கு இழந்து விட வேண்டிவரும். அதோடு ஏலம் எடுக்கப்பட்ட சொத்து மறு ஏலத்தில் விற்கப்படும். அது மட்டுமல்லாது அவர் அந்தச் சொத்தில் எல்லாப்பாத்தியதையும் இழக்க வேண்டி வரும் (விதி 86).

முதல் ஏலம் எடுத்தவரின் பிழையால் மறு ஏலத்திற்குக் கொண்டு வரப்படும் சொத்து திரும்பவும் விற்பனைக்கு, விளம் பரம் செய்யப்பட்டு அதன் பிறகு தான் விற்கப்படும் (விதி 87)

ஒரு அசையாச் சொத்து தீர்ப்பாணையை நிறைவேற்றுகையில் ஏலத்தில் விற்கப்பட்டுவிட்டால் தீர்ப்புக் கடனாளி, அல்லது அவரிடமிருந்து உரிமை பெற்ற வேறு ஒருவர் அல்லது அந்தச் சொத்தில் பாத்தியதையுள்ள வேறு ஒருவர் அந்த விற்பனையைத் தள்ளுபடி செய்ய மனுச் செய்யலாம். அவ்வாறு மனுச் செய்யும் போது நீதிமன்றத்தில் அச்சொத்தை ஏலத்தில் வாங்கியவருக்குக் கட்டத்தக்க வகையில் விற்ற பணத்திற்கு 5 சதவீதத்திற்கு ஈடான தொகை கட்டியும் அதோடு தீர்ப்பாணைக்குரியவருக்கு விற்பனைப் பிரகடனத்தில் குறிப்பிட்ட தொகையும் அதற்கிடை யில் அவர் ஏதாவது தொகை பெற்றிருப்பாரானால் அதைக் கழித்ததுபோக மீதியைச் செலுத்தி விட வேண்டும் (விதி 89).

தீர்ப்பாணை நிறைவேற்றுவதில் ஓர் அசையாச் சொத்து விற்கப்படுமானால் தீர்ப்பாணைக்குரியவர் அல்லது அந்தச் சொத்தில் பாத்தியதைக்குரியவர் அல்லது இந்த விற்பனையினால் வேறொருவ ருடைய நலன் ஏதும் பாதிக்கப்படுமானால் அவரும், விற்பனையைப் பிரகடனப்படுத்துவதிலும், விற்பனையை நடத்துவதிலும் பெரிய ஒழுங்கீனம் அல்லது திருட்டுத்தனம் நடந்திருக்குமானால் அந்த விற்பனையை நீக்கிவைக்க மனுச் செய்துகொள்ளலாம்.

இந்த மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொள்ள வேண்டுமனால் விண்ணப்பதாரர் நீதிமன்றத்தின் திருப்திக்கு ஏற்பத் தகுந்த பாதுகாப்புத் தொகையாக அதாவது விற்பனை ஆணையில் குறிப்பிட்ட தொகை அல்லது, விற்பனை மூலம் கிடைத்த தொகை இவை இரண்டில் குறைந்த தொகையை நீதிமன்றத்தில் கட்ட வேண்டும்.

மேற் கூறப்பட்ட ஒழுங்கீனத்தின் காரணமாக விற்பனை நீக்கி வைக்கப்பட்டுவிட்டாலும் அவ் ஒழுங்கீனத்தினல் பெரிய அளவி லான தீங்கு விளைந்திருக்குமானல் விற்பனை நீக்கி வைக்கப்படலாம். (விதி 90).

பொது ஏலத்தில் ஒரு சொத்து விற்கப்பட்ட பிறகு அச் சொத்தை ஏலத்தில் வாங்கியவர், தீர்ப்புக் கடனாளி அந்தச் சொத்தை விற்கக்கூடிய பாத்தியதை இல்லாதிருப்பாரானால் நீதிமன்றத்தில் அந்த விற்பனையைத் தள்ளி வைக்கும்படி மனுச் செய்து கொள்ளலாம் (விதி 91).

பணம் செலுத்திச் சொத்தை ஏலத்தில் விற்றதை நீக்கி வைக்கவும் அல்லது ஏலம் நடத்துவதில் அல்லது விற்பனை விளம்பரம் செய்ததில் ஒழுங்கீனம், ஏமாற்று வேலை இருந்திருந் தால் அந்த விற்பனையை நீக்கி வைக்கக் கோரும் மனு செய்யப் படாமலிருந்தாலும், அல்லது அவ்வாறு விண்ணப்பிக்கப்பட்ட மனு தள்ளுபடி செய்யப்பட்டாலும், அந்த விற்பனை முழுமை யானதாகும்.

மேற்குறிப்பிட்ட மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டால் விற்பனை நீக்கிவைக்கப்படும். அவ்வாறு நீக்கிவைக்கப்பட்ட விற்பனையை எதிர்த்து யாரும் வழக்குப் போட முடியாது. அதனால் அத் தீர்ப்பு முடிவானது (விதி 92).

முன் கூறியதுபோல் விற்பனை நீக்கி வைக்கப்பட்டால் அச் சொத்தை வாங்கியவர், தாம் கட்டிய பணத்தைத் திரும்ப பெறத் தக்கவர். நீதிமன்றத்தின் உசிதம்போல் அப் பணத்தை வட்டி யுடனே அல்லது வட்டியில்லாமலோ, அவர் திரும்பப் பெற்றுக் கொள்வார் (விதி 93).

விற்பனை முழுமையாகி விட்டால் (absolute) நீதிமன்றம் ஒரு அத்தாட்சி வழங்கும். அதில் விற்பனையான சொத்தின் விவரமும் விற்ற நேரத்தில் யார் வாங்கியது என்று அறிவிக்கப்பட்டதோ, அவர் பெயரும் குறிப்பிடப்பட்டிருக்கும்.

அந்த அத்தாட்சியில் சொத்தின் விவரம் சர்வே (Survey) எண் இருந்தால் அதுவும் அத்துடன் அச்சொத்தின் பதிவு மாவட் டம் பதிவுத் துணை மாவட்டம் (Registration District and Sub-district) குறிக்கப்பட வேண்டும்,

ஆனால் இந்த விற்பனை அத்தாட்சி பதிவு செய்யப்பட வேண்டியதில்லை (விதி 94).

விற்பனை செய்யப்பட்ட சொத்தில் தீர்ப்புக் கடனாளி தொடர்ந்து உடைமை வைத்திருப்பாரானால், அல்லது அவர் சார்பில் வேறு யாராவது அச்சொத்தின் உடைமையிலிருப்பாரா

ஞல் அல்லது தீர்ப்புக் கடனாளி ஒப்படைப்புக்குப் பிறகு (Attachment) ஏற்படுத்திய உரிமையினால் அதில் இருப்பவரானால் மேலே குறிப்பிட்டபடி விற்பனை அத்தாட்சி கொடுக்கப்பட்டிருக்கு மானால், அச்சொத்தை வாங்கியவருடைய விண்ணப்பத்தின் பேரில் அவருக்கு உடனே உடைமை கொடுக்க வேண்டும் என்றும் அதற்காக அவர் உடைமை எடுக்கவும், அல்லது அவரால் நிய மிக்கப்பட்டவர் உடைமை எடுக்கவும், அவசியம் ஏற்பட்டால் அந்தச் சொத்திலிருப்பவர் வெளியேற மறுத்தால் அவர்களை அங்கிருந்து வலுக்கட்டாயமாக அகற்றி அச்சொத்தை வாங்கியவ ருக்கு உடைமை கொடுக்கப்படும் (விதி 96).

அசையாச் சொத்தின் உடைமைக்காகத் தீர்ப்பாணைக் குரியவரோ, அல்லது அச் சொத்தை தீர்ப்பாணை நிறைவேற்றுகை யில் வாங்கியவரோ, அச் சொத்தின் உடைமையை எடுக்காத படிக்குத் தடுக்கப்பட்டால் அல்லது எதிர்க்கப்பட்டால் அவர் அதைப் புகார் செய்து நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

அவ்விண்ணப்பத்தின் பேரில் நீதிமன்றம் அதுபற்றி விசாரிக்க, அந்த எதிர்ப்பாளருக்கு அழைப்பாணை அனுப்பி அவரை நீதி மன்றத்திற்கு வந்து பதிலளிக்கும்படி கட்டளையிடப்படும் (விதி 97).

அவ்வாறு தீர்ப்புக்கடனாளியோ, அல்லது அவர் தூண்டு தலில் வேறொருவர் எதிர்ப்பதும் மறுப்பதும் தகுந்த காரண மில்லாமல் செய்யப்பட்டிருப்பதாக நீதிமன்றம் கருதினால், உடனே மனுதாரருக்கு அந்த சொத்தின் உடைமை கொடுக்கும் படி ஆணையிடும். அவ்வாணையையும் மதியாமல் திரும்பவும் உடைமை கொடுக்க மறுத்தால், நீதிமன்றம் தீர்ப்புக்கடனாளி யையோ, அல்லது அவர் தூண்டுதலினால், அவ்வாறு எதிர்ப்பு, மறுப்புத் தெரிவிப்பவரை, சமூக உரிமைச் சிறைக்கூடத்தில் 30 நாள்களுக்கு அதிகப்படாமல் வைக்க ஆணையிடலாம் (விதி 98).

ஆனால் தகுந்த காரணத்தால் எதிர்ப்பும் மறுப்பும் தெரிவிக் கப் படுமானால் உடைமைக் கோரித் தாக்கல் செய்யப்பட்ட மனு தள்ளுபடி செய்யப்படும். (விதி 99).

மேற்கோள் நூற்பட்டியல்
(Bibliography)

1. Mulla on Code of the Civil Procedure by T. L. Venkatarama Aiyar, 1965.

2. The Code of Civil Procedure by R. Satyamurthy Aiyar, M.A.,M.L., revised and brought out up-to-date by S. Krishnamurthy, Bar-at-law, 1958.

3. Lectures on the Code of the Civil Procedure by A. K. Pavithran, B.A.,B.L., 1955.

கலைச்சொற்கள்

அடைமானம் சம்பந்தமான வழக்கு	—	Suit on Mortgage
அரசு வழக்குரைஞர்	—	Government Pleader
அசையும் சொத்து	—	Moveable Property
அதிகார எல்லை	—	Jurisdiction
அசல் திருமண அதிகார வரம்பு	—	Original Matrimonial Jurisdiction
அசல் நொடிப்பு அதிகார வரம்பு	—	Original Insolvency Jurisdiction
அசல் அதிகார வரம்பு	—	Original Jurisdiction
அனுமதி	—	Leave
அத்தாட்சி	—	Certify
அறிவித்தல்	—	Declaration
அறங்காவலர்	—	Trustee
அறிவிப்பு	—	Notice
அசல் நீதிமன்றம்	—	Original Court
அறுதியான சான்றுறுதி	—	Conclusive proof
அரசியல் ஓய்வு கால ஊதியம்	—	Political Pension
அங்கீகரிக்கப்பட்டது	—	Recognised
அசல் வழக்கு	—	Original Suit
அடைமானம் சம்பந்தமான வழக்கு	—	Mortgage Suits
அடைமானம் எடுத்தவர்	—	Puisne Mortgage
அடைமானத்தை மீட்க	—	Fore closure
அதிகார பூர்வமான அரசிதழ்	—	Official Gazette
ஆங்கிலப் பொதுச் சட்டக் கொள்கைகள்	—	British Common Law Principles
ஆராய்தல்	—	Inspection
ஆணையாளர்	—	Commissioner
ஆதாயம்	—	Dividend
இந்தியக் குற்றவியல் சட்டம்	—	Indian Penal Code
இந்தியத் திருமண ரத்துச் சட்டம்	—	Indian Divorce Act

இந்திய கால வரையறைச் சட்டம்	—	Indian Limitation Act
இந்தியக் கூட்டரசு	—	Union of India
இசைவு	—	Consent
இயக்கு	—	Direct
இசைவுத் தீர்ப்பு	—	Arbitration
இடைக்கால ஆணைகள்	—	Inter Recutary Orders
இழப்பீடு	—	Damages
இயல்பான அதிகாரம்	—	Inherent jurisdiction
இரண்டாவது மேல் வழக்கு	—	Second Appeal
ஈவுத் தொகை	—	Contribution
உச்சி நீதிமன்றம்	—	Supreme Court
உயர் ஆணையாளர்கள்	—	High Commissioners
உரிமையியல் வழக்கு	—	Civil Suit
உண்மையான கேள்வி	—	Question of fact
உச்சி நீதிமன்ற மேல் வழக்குகள்	—	Appeals to the Supreme Court
உண்டியல்	—	Hundi
உடைமைக் காப்பாளரை நியமித்தல்	—	Appointment of Receiver
உதவிப் பணம்	—	Stipends
உரிமை மீட்டடைவிப்புக்கான தீர்ப்பாணை	—	Decree for restitution of conjugal rights
ஊழியக் கைமாறு	—	Gratuity
எல்லை மீறுதல்	—	Trespass
எழுத்து ஆதாரங்களைத் திருப்பித் தருதல்	—	Return of Documents
எழுத்துச் சான்றுகள்	—	Documents
எழுத்து ஆவணங்கள்	—	Records
எளியவர்	—	Pauper
எளியோர் மேல் வழக்கு	—	Pauper Appeals
எதிர்த்து	—	Versus
ஏமாற்றுதல்	—	Fraud
ஒப்படைப்பான சொத்தில் பாத்தியதை கோருதலும் எதிர்த்தலும்	—	Claims and objections
ஒப்பந்தத்தைச் செயலாக்கக் கோரும் வழக்கு	—	Suit for specific performance of the contract
ஒப்புதல்	—	Acknowledgement

ஒழுங்கின்மை	—	Irregularity
ஓய்வு பெற்ற குற்றவியல் நீதிபதிகள்	—	Retired Magistrates receiving pension
ஓய்வுக் கால ஊதியம்	—	Pension
கட்டுப்பட்ட	—	Liable
கணிப்பாளர்கள்	—	Assessors
கட்சிக்காரர்களைத் தவறுதலாகச் சேர்த்தல்	—	Mis joinder Parties
கணக்குக்கான வழக்கு	—	Suit for Accounts
காண்பித்தல்	—	Production
காரணக் குறிப்பு	—	Cause tittle
காரண காரியம்	—	Grounds
காரணங்களின் முடிவு	—	Decision
காலவரை	—	Limitation
குத்தகைக்காரர்கள்	—	Tenants
குறை	—	Defect
குறுக்கு எதிர்ப்பு	—	Gross objection
குறை	—	Default
குறிக்கப்பட்ட சாட்சிகள்	—	Evidence in Record
குறிக்கோள்	—	Point
கூட்டு நிறுவனம்	—	Corporation
கூடுதல் நீதிபதிகள்	—	Additional Judges
கூட்டுத் தீர்ப்பாணை	—	Joint Decree
கூட்டாண்மைச் சொத்தைப் பறிமுதல் செய்தல்	—	Attachment of Partnership Property
கேள்வித் தொகுப்பு	—	Interrogatories
கோருதல்	—	Claim
சட்டத் தொகுப்பு	—	Code
சட்டப்படியான சொத்துப் பிரதிநிதி	—	Legal Representative
சமூக உரிமை நீதிமன்றம்	—	City Civil Court
சரிபார்த்தல்	—	Verification
சத்திய வாக்கு மூலம்	—	Affidavit
சட்டப்படியான முன் அறிவிப்பு	—	Statutory Note
சமூகக் கேடு	—	Public Nuisance
சமூக உரிமைச் சிறை	—	Civil prison
சமரசத் தீர்ப்பாணை	—	Consent Decree
சட்டத்திற்குப் புறம்பாக	—	Illegal

சட்டப் பிரதிநிதி	Attorney
சரிசெய்	Set off
சம்பந்தப்பட்ட	Contonment
சிறப்பு வழக்கு	Special case
சிறப்பு அனுமதி	Special leave
சிறு காரண நீதிமன்றம்	Small Cause Court
சீராக்கும் அதிகார வரம்பு	Revisional Jurisdiction
சீராய்வு செய்யும் நீதிமன்றம்	Revisional Court
செல்லுபடியாகாது	Void
செலவுத் தொகை	Costs
செய்ய வேண்டிய பணிக்கான உரிமை	Right of personal service
செயலுறுத்துக் கட்டளை	Injections
செய்முறை	Experiment
சொத்துகளைப் பகிர்த்தளித்தல்	Distribution of Assets
தன்னிலையான பாகம்	Substantive part
தவறான பலன்	Mesne Profit
தடைவிதிக்கக், கோரும் வழக்கு	Injection Suits
தன்னிச்சையாக	Suo Mattu
தள்ளுபடி	Dismiss
தவிர்க்க முடியாத நிபந்தனை	Condition precedent
தவறு	Error
தற்காலத் தடை	Temporary injunction
தடை ஆணை	Prohibitary order
தடை செய்யும் அதிகாரம்	Stay of Execution Decree
தாமதம்	Delay
திரும்புதல்	Return
திரும்பப்பெறப்பட்ட	Withdrawn
தீர்ப்பாணை	Decree
தீர்ப்பு	Judgement
தீர்ப்புக் கடனாளி	Judgement Debtor
தீர்ப்பளிக்கப்பட்ட காரியம்	Res Judicata
தீர்ப்புக் கடனாளிக்குக் கடனாளி	Garnishee
தீர்ப்பிற்கு முன் கைது	Arrest before Judgement
தீர்ப்பிற்கு முன் ஜப்தி	Attachment before Judgement
தீர்த்தல்	Satisfaction

தீர்ப்பாணையின்கீழ் பணம் கட்டுதல் — Payment under Decree

தீர்ப்பாணையை நிறைவேற்றும் நீதிமன்றம் — Court Executing Decrees

தீங்கு — Injury

துணைப் பதிவாளர் — Sub-registrar

துணை நீதிபதிகள் — Assistant

துன்புறுத்தும் தன்மை — Vexations

துணைத் தூதுவர்கள் — Envoys

துணை நீதிமன்றங்கள் — Sub-courts

துணைச் சமூக உரிமை நீதிமன்றம் — Assistant City Civil Court

தூதுவர்கள் — Ambassadors

தொந்தரவு — Vexations

நட்பு வழக்கு — Friendly Case

நஷ்ட ஈடு — Compensation

நல்ல மனச்சாட்சிப்படி — Good Conscience

நட்புறவு கொண்ட நாடு — Reciprocating territory

நிறுத்துதல் — Stay

நிறைவேற்றும் நீதிமன்றம் — Executing Court

நிர்ணயம் — Adjudication

நியாயம் — Justice

நிறைவேற்றல் — Execution

நிறைவேற்றலுக்கு எதிர்ப்பு — Resistance of Execution

நிறைவேற்றக் கோரும் விண்ணப்பம் — Application for Execution

நீதி, நேர்மை-மனச்சாட்சி — Equity, justice and good conscience

நீதிமன்றக் கட்டணம் — Court fees

நீதிமன்றத் தீர்ப்பின் அத்தாட்சி நகல் — Certified copy of the Judgement

நீதிமன்றத்தின் கூடுதல் நடவடிக்கைகள் — Supplemental proceedings

நீதிபதி — Magistrate

நுட்பக் குறைபாடுகள் — Technical defects

பலன் — Relief

பதிலாள் — Agent

பதிவு — Records

பட்டம் — Title

பணம் கொடுப்பதற்கான தீர்ப்பாணை	— Money Decree
பங்காளிகள்	— Partners
பற்றுஆணை	— Precept
பற்றுகைப் பொருள் வைத்திருப்பவர்	— Garnishee
பாகப் பிரிவினை வழக்கு	— Suit for partition
பாதுகாப்பு நிறுத்தி வைத்தல்	— Impounding
பாதுகாப்பு	— Security
பாகுபாடற்ற தன்மை	— Equity
பாதுகாப்பாளர்	— Guardian
பிரதிவாதி	— Defendant
பிரச்சினை	— Issue
பிணையம்	— Security
பிரதிவாதிக்கு அழைப்பாணை	— Summons to the Defendant
பிரதான ஒழுங்கீனம்	— Material irregularity
பிரதிவாதியின் மறுப்பு மனு	— Written Statement by the Defendant
பிரச்சினையின் உண்மை	— Issue of fact
புறநகர்	— Provincial
பொருளின் பண்பு விளக்கம்	— Definitions
பொது மேல் நீதிமன்றம்	— Common Appellate Court
பொது நிர்வாகி	— General Manager
பொறுப்பேற்றுதல்	— Charge
பொது அறங்காவல், மதரீதியான	-Public trusts of charitable and religious nature
மதிப்பீடு	— Valuation
மறுப்பு மனு	— Memorandums of objection
மனுதாரர் குறிப்பு	— Memo of appearance
மறு ஆய்வு	— Review
மாவட்டத் துணை நீதிமன்றங்கள்	— Sub-courts (or)Court of the sub-ordinate judges
மாநில நகரங்கள் நொடிப்புச் சட்டம்	— The Presidency Towns Insolvency Act
மாவட்டக் கல்வி மன்ற உறுப்பினர்	— District Educational council
மாற்றுமுறை யாவணம் ஜப்தி	— Attachment of Negotiable Instruments
மாற்று முறி	— Bill of Exchange
மாவட்ட முனிசிப் நீதிமன்றம்	— District Munisiff's Courts

மீட்டளிப்பு	—	Restitution
மீட்டளிப்பு விண்ணப்பம்	—	Application for restitution
முதல் சமூக உரிமைச் சட்டம்	—	First Civil Procedure Code
முன்னோடித் தீர்ப்பாணை	—	Preliminary Decree
முடிவுத் தீர்ப்பாணை	—	Final Decree
முதல்வர்கள்	—	Principals
முடிக்கும்	—	Determine
முதல் சட்ட இணைப்பு	—	First Schedule
முன் சேமிப்புத் தொகை	—	Provident fund
மேல் வழக்கு அதிகார வரம்பு	—	Appellate Jurisdiction
மேல் வழக்கு	—	Appeal
மேல் வழக்காளர்	—	Appellant
மேல் நீதிமன்றம்	—	Appellate Court
மேற்கோள் விசாரணை	—	Reference
மோசம்	—	Breach
மொத்தத் தீர்வான வழக்கு	—	Summary Procedure
வரையறுக்கப்பட்ட	—	Limited Jurisdiction
வழக்குக்கான காரணம்	—	Cause of Action
வழக்கை நிறுவுதல்	—	Institution of Suit
வழக்கறிஞர் தலைவர்	—	Advocate General
வழக்கின் நடவடிக்கை	—	Further proceedings
வழக்குப் பிரச்சினை	—	Issue
வழக்குரை	—	Plaint
வயது வராதவர்	—	Minor
வக்கில்லாதவர்கள் வழக்கு	—	Pauper Suits
வருவாய் மீட்புச் சட்டம்	—	Revenue Recovery Act
வாதி	—	Plaintiff
வாக்குறுதிச் சீட்டு	—	Promissary Note
வாதிக்குச் சாதகமாக தீர்ப்பாணை தந்த	—	Exparte Decree
விட்டுக்கொடுத்தல்	—	Waive
விதிகள்	—	Rules
விதிமுறை	—	Regulation
விதிக்குழு	—	Rule Committee
விடுவிப்பு	—	Discharge
விற்பனை	—	Sale
வெளிநாட்டு நீதிமன்றம்	—	Foreign Court
வெளிநாட்டவர்கள்	—	Foreigners
வெளிநாட்டரசர்கள்	—	Rulers of Foreign Countries